www.padippakam.com

# வள்ளுவம்



தி.ஆ.2032 தை-மாசி

படிப்பகம்


www.padippakam.com



www.padippakam.com

# அப்போது கேட்பேன்

ஈரோடு தமிழன்பன்



நிலாவுக்கு
அர்த்தம் சொன்னார்கள்
முகம்என்றும் முறுவல் என்றும்
கன்னம் என்றும் புரிந்து
நிலா என்னவென்று புரியாமல்
போனது.

கடல் என்பதற்குக்
கருத்துரை கேட்டேன்;
கவிதை, காதலி உள்ளம்
உப்புத்திடல், கப்பல்வீதி
இப்படிக்
கடல் எனக்குத் தெரியாதபடி
கண்டதைக் கொட்டி
மூடிவிட்டனர்.

பூ
என்ன என்பது எனக்குப்
புரிந்த போதும்

பொருள் சொல்ல வந்தவர்கள்
'குழந்தைகள் கன்னம்'
குமரிகள் சிரிப்பு
வண்டின் படுக்கை
மதுக்கிண்ணம், வாச விடுதி...
என்னென்னவோ சொல்லிப்
பூவுக்கு
நெடுந் தொலைவில்
என்னை
இழுத்துக்
கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

போய்
நிறுத்தினார்கள்,

'அம்மாவை'
அர்த்தப்படுத்தி வார்த்தைகளால்
கூறுபோட்டுக் கொடுத்தார்கள்,
துண்டு துணுக்குகளாய்த்
தெறித்து விழுந்தவளைத்
திரட்டிச் சேர்க்க முடியாமல்
திணறினேன்.

இப்படித்தான்
வள்ளுவர்க்குப் பொருள் சொல்ல
வந்தவர்கள்
வள்ளுவர்க்குப் பொருள்
பரிமேலழகர் என்றார்கள்
மணக்குடவர் என்றார்கள்
வள்ளுவர்க்குப் பொருள்
மற்றமற்ற மற்றையவர்கள்
என்றார்கள்,
வள்ளுவர்க்குப் பொருள்
வள்ளுவர் இல்லை என்றானபின்
வள்ளுவரை
ஏன் நான் படிக்கவேண்டும்?

தண்ணீரின் பொருள்
தண்ணீராக இல்லாவிட்டால்
அது
என் தாகத்தைத் தணிக்குமா?

எப்போது
எனக்கு வள்ளுவரின் வள்ளுவர்
கிடைப்பார்?
அப்போது வள்ளுவரைக் கேட்பேன்
"எப்போது
எனக்கு நான் கிடைப்பேன்?"

✧ ✧ ✧



படிப்பகம்

www.padippakam.com

சிறப்பாசிரியர்
ச. மெய்யப்பன்

ஆசிரியர்
பல்லடம் மாணிக்கம்
இ. சுந்தரமூர்த்தி

நெறியாளர் குழு
தமிழண்ணல்
ச.வே. சுப்பிரமணியன்
இரா. இளங்குமரன்

ஆசிரியர்குழு
க.ப. அறவாணன்
ஈரோடு தமிழன்பன்
இரா. இளவரசு
சிற்பி பாலசுப்பிரமணியம்
கி. நாச்சிமுத்து

அச்சாக்கம்
இரா. குருமூர்த்தி

விலை : **25** உரூபாய்

பல்லடம் மாணிக்கம்
**திருக்குறள்**
**பண்பாட்டு ஆய்வு மையம்**
கவிதா நிலையம்
31, பணிபூண்டார் வீதி
(திருமுதுகுன்றம்) விருத்தாசலம் - 606 001

# வள்ளுவம்

(இருதிங்கள் இதழ்)

'பண்புடையார்ப்பட்டுண்டு உலகு'

தி.ஆ. 2032 தை-மாசி. சனவரி-பிப்ரவரி 2001

1. அப்போது கேட்பேன்
- ஈரோடு தமிழன்பன் 1
2. திருக்குறளும் சங்க இலக்கியங்களும்
- கொ. இலக்குமணசாமி 7
3. திருக்குறளில் நாடகப் பாங்கு
- ஆறு. அழகப்பன் 15
4. பாடலாம் திருக்குறளை
- ம. இராசேந்திரன் 23
5. குறளின் செய்தி
- ப. அருணாசலம் 27
6. தமிழர்களும் திருவள்ளுவரும்
- ச. சண்முகசுந்தரம் 38
7. திருக்குறளில் உயிர் இனங்கள்
- பாலூர் கண்ணப்பர் 49
8. வள்ளுவரின் வழிப் பயணம்
- திருக்குறளார் வி. முனிசாமி 60
9. தெய்வ நெறியாளர் போற்றிய திருக்குறள்
- ம.ரா.போ. குருசாமி 66
10. திருக்குறளும் - கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களும்
- ஆர்.கே. அழகேசன் 72
11. அற இலக்கியம் : மார்க்சிய ஆய்வுகள்
- கோவைவாணன் (சு. துரை) 75
12. வள்ளுவம் 2000 86
13. திருக்குறள் பதிப்புகள் - ஆண்டுநிரல்
- இ. சுந்தரமூர்த்தி 89
14. திருக்குறள் உரையாசிரியர்கள் 94
15. திருவள்ளுவருக்கு ஆயுள் சந்தா
- சு. நாகம்மை 95

**13**

| | | |
|---|---|---|
| புரவலர் | - ரூ.2000/- | 100 டாலர் |
| நிறுவன உறுப்பினர் | - ரூ.1000/- | 50 டாலர் |
| ஆண்டு உறுப்பினர் | - ரூ.150/- | 15 டாலர் |
| தனி இதழ் | - ரூ.25/- | 2 டாலர் |

படிப்பகம்

www.padippakam.com

# வள்ளுவம்! வள்ளுவம்! வள்ளுவம்!

உங்கள் அன்புக் கைகளில் தவழும் இந்த இதழ் வள்ளுவத்தின் மூன்றாமாண்டின் முதல் இதழ்! ஆம்! வள்ளுவம் இரண்டாண்டுகளைக் கடந்து மூன்றாமாண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்த நல்ல நேரத்தில் வள்ளுவத்தோடு தொடர்பும் உறவும் உடைய அனைவரையும் நன்றி பாராட்டி வணங்குகிறோம். வள்ளுவம் மேலும் வளர்ந்தும் தொடர்ந்தும் தமிழ்ப்பணி ஆற்ற வாழ்த்துங்கள்!

மானிட சாதியை வாழ வைக்கவும், மானிடப் பண்பாட்டை மேன்மைப் படுத்தவும், மானிடத்தின் வல்லமையும், ஆளுமையும் இந்த மாநிலத்திற்குப் பயனுற வேண்டும் - இந்த மாநிலம் மானிடத்திற்குப் பயன்பட வேண்டும் என்ற கருதுகோளில்தானே 'வள்ளுவம்' திருவள்ளுவரால் படைக்கப்பட்டது!

வானம் வசப்படக் கனவுகண்ட வள்ளுவனின் கனவு, மெய்ப்பட வேண்டும் என்று நாங்கள் கண்ட கனவின் வெளிப்பாடுதான் இந்த 'வள்ளுவம்' என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த வள்ளுவத்தைப் போலவே இந்த வள்ளுவத்துக்கும், மனித சமூகம் பற்றியும், மனித வாழ்க்கை பற்றியும், மனிதகுல மேம்பாடு பற்றியும் ஆகப்பெரிய எதிர்பார்ப்பும், அதிகப்படியான அக்கறையும், பொறுப்பும் உண்டு! வாழ்க்கையைச் செப்பனிடவும், சீரமைக்கவும், வாழ்க்கையை அர்த்தமுடையதாகவும், அழகுடையதாகவும் ஆக்கிக்கொள்ளவும், வள்ளுவம் பயன்படவேண்டும். வள்ளுவத்தைப் பயன்படுத்த வேண்டும்!

வாழ்க்கையின் தொடக்கமும் முடிவும் மனிதனின் கைகளில் இல்லாமல் இருக்கலாம்! ஆனால் ஆக்கமும் அழிவும் பட்டறிவும் பயன்பாடும் அவன்வசம்தான் இருக்கிறது.

வாழ்க்கையின் அர்த்தமும் புரியாமல், அழகும் தெரியாமல், அதைச் சிலுவையாக்கிச் சுமந்து சுமந்து தோள்கள் துவண்டு சோர்ந்து கிடக்கிறான் மனிதன்.

ஆசை வயப்பட்டு அவல நாடகத்தின் பாத்திரமாகிவிட்ட அந்த மனிதனை மீட்டெடுக்கவும், தேற்றித் தெளிய வைத்துத் திசைகாட்டவும்தான் அந்த வள்ளுவத்தின் கைபிடித்து அதன் அடியொற்றி நடக்கிறது இந்த 'வள்ளுவம்'.

வள்ளுவத்துக்காக இதுவரை வந்த இதழ்களிலிருந்து இந்த 'வள்ளுவம்' - உங்கள் வள்ளுவம் - வடிவமைப்பிலும், உள்ளடக்கத்திலும், இன்னபிற வகைகளிலும் தன்னை முற்றிலும் புதுப்பித்துக்கொண்டு வித்தியாசமாக வந்துகொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

இந்த வள்ளுவம், அந்த வள்ளுவத்தின் பீடு நிறைந்த பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாகவும், அதன் உன்னதத் தன்மைக்கு உயர்வு தருவதாகவும், இருப்பதோடு அதன் விலைமதிப்பற்ற தகுதிப்பாட்டை மலினப்படுத்திவிடக் கூடாது என்பதிலும் மிகமிகக் கவனமாக இருக்கிறோம்!





படிப்பகம்

www.padippakam.com

இந்த நிலையில் வள்ளுவத்தின் ஈராண்டுப் பணிகள் குறிப்பிட்டுச் சொல்லும் படியாகவும், தனித்தன்மை வாய்ந்ததாகவும் இருப்பதாகப் பலரும் பாராட்டிச் சொல்லும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

பன்னிரண்டு இதழ்களையும் ஒருசேரத் தொகுத்து வைத்துப் பார்க்கும்போது, ஏற்பட்ட இழப்புகளும், எதிர்கொண்ட சின்னஞ்சிறு இன்னல்களும் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து போகிறது. எழுதுங்கால் கோல்காணாத் தலைவியின் கண்களைப்போல் ஆகிவிடுகிறோம்.

வள்ளுவத்தின் உருவாக்கத்தில் பங்கு கொண்ட அனைவர்க்கும் இது மகிழ்ச்சி தந்தாலும், மனநிறைவும் உண்டாகும்படி வள்ளுவத்தின் பணி அமையவில்லை என்பதும் எங்களுக்குத் தெரிகிறது.

வரும் இதழ்களில் வள்ளுவத்தை இன்னும் தரமுடையதாக ஆக்க நாங்கள் எண்ணித் திட்டமிட்டு வருகிறோம்.

வாசகப் பெருமக்களாகிய நீங்களும் இன்னும் வள்ளுவத்தின் தரம்உயர முன்கை எடுக்க வேண்டும்.

வரவு செலவைக் கணக்கிட்டோ, லாபநட்டம் பார்த்தோ வள்ளுவம் நடத்தப்படவில்லை. வரவு செலவு பார்த்து வள்ளுவத்தை வணிகப் பொருளாக்க நாங்கள் விரும்பவில்லை. லாபநட்டம் பார்க்கச் சொல்லும் சந்தைச் சரக்கும் அல்ல வள்ளுவம். வள்ளுவத்தை நாங்கள் தமிழுக்குச் செய்யும் ஒரு தவமாகவே நினைக்கிறோம்.


வள்ளுவத்தின் வடிவமைப்பின் தரத்தைப் பேணுவது எங்களின் கடமையென்றால் வள்ளுவத்தின் உள்ளடக்கத் தரத்தைக் காப்பது வாசகப் பெருமக்களாகிய தமிழறிஞர்களின் கடமையல்லவா?

தமிழறிஞர்கள், குறிப்பாகக் குறள் ஈடுபாடு உடையவர்கள் தங்கள் பங்களிப்பைத் தொடர்ந்து மறவாமல் செய்தால் வள்ளுவம், வானம் அளந்ததனைத்தும் அளந்திடும் வன்பொருளாக ஆகிவிடாதா? பேசிப் பேசியும், பேசாமலும் பொழுதைக் கழிக்கும் தமிழ்க்குடிப் பெருமக்கள் அனைவரும் ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு கட்டுரைகள் எழுதினாலே வள்ளுவம் வானுயர வளர்ந்துவிடும்.

வள்ளுவத்தில் எழுதாத தமிழறிஞர்களே இல்லை என்னும்படியும் - இன்னும் கொஞ்சம் அழுத்தமாகச் சொன்னால் வள்ளுவத்தில் எழுதாதவர் தமிழறிஞரே இல்லை என்னும்படியான ஒருநிலை ஏற்படுமாறும் பார்த்துக்கொள்ளுங்கள்.

வள்ளுவத்துக்குக் கட்டுரைப் பஞ்சம் ஏற்படாதவாறு நீங்கள் பார்த்துக் கொண்டால் பிறவற்றை நாங்கள் கவனித்துக் கொள்வோம்.

பழைய கட்டுரைகள் - மூத்த தமிழ்க் குடிமக்களின் கட்டுரைகள் மீண்டும் வெளியிடுவது பற்றி ஒருசிறு விளக்கம்.





படிப்பகம்

www.padippakam.com

பலரும் பார்த்திராத பழைய கட்டுரைகளை அதன் பொருட் சிறப்புக் கருதி இப்போதுள்ளவர்களின் பார்வைக்கு வைக்க விரும்புகிறோம். ஏதேதோ மலர்களிலும், நூல்களிலும் இதழ்களிலும் வரும் கட்டுரைகளைக் குறளன்பர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். குறள் பற்றிச் சிந்தித்த அனைவரின் பெயர்களையும், படைப்புக்களையும் வள்ளுவத்தில் பதிவு செய்துவிட முயல்கிறோம்.

வள்ளுவம் இதழ்களைத் தொகுத்து வைத்துப் பார்க்கும்போது வள்ளுவத்தைத் தொட்டுச் சுவைத்தவர்கள் அனைவரும் ஒருவர்கூட விட்டுப்போகாமல் பதிவு செய்திருக்க வேண்டு மென்று தீர்மானித்திருக்க முடியும்.

வள்ளுவம் இதழ்களை முழுமையாகத் தொகுத்துப் பார்க்கும்போது அந்தத் தொகுப்பு திருக்குறள் களஞ்சியமாகத் திகழவேண்டும்.

வள்ளுவத்தைத் தொடங்கியதன் நோக்கங்களில் இது மிக முக்கியமானது. வள்ளுவச் சிந்தனையாளர்கள் அனைவரையும் வள்ளுவம் படிக்கும் வாசகர்களாகப் பதிந்துகொள்ள வேண்டாமா? முன்னோர் சிந்தனைகளைப் பொன்னேபோல் போற்றவேண்டியதும் நமது கடமையல்லவா?

வள்ளுவத்துக்கென்று தனி அலுவலகம், தனி அலுவலர்கள், புதிய முகவரி ஆகியன விரைவில் அமைய இருக்கிறது. அப்போது இப்போதுள்ள காலத்தாழ்வும், வினியோகக் குறைபாடுகளும் இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

வள்ளுவம் வாசகர்கள் அனைவரும் ஒருவரை அல்லது பலரை வள்ளுவத்துக்கு அறிமுகப்படுத்துவதைக் குறளுக்குச் செய்யும் தொண்டாக எடுத்துக்கொள்ளுங்கள்.

வள்ளுவம் படிப்பவர்கள் முடிந்தவரை புரவலராகுங்கள் - அல்லது நிறுவன உறுப்பினராகவாவது ஆகுங்கள். ஆண்டு உறுப்பினராவதைக் குறைந்த பட்சத் திட்டமாக மேற்கொள்ளுங்கள்.

தமிழை வளப்படுத்தவும், வள்ளுவத்தை நிலைப்படுத்தவும், இவைமூலம் தமிழ் இனத்தை முதன்மைப்படுத்தவும் முயல்கிறோம். இதற்கு ஆறுகோடித் தமிழரின் ஒரு ஐந்தாயிரம் பேராவது முன்வந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யக் கூடாதா? செய்யுங்கள்! தமிழை அறிந்தவர்களும், வள்ளுவத்தைத் தெரிந்தவர்களும் தங்கள் வாழ்நாள் கொடையாக ஒரு தொகையைத் தருவதால் அவர்கள் வசதியில் எந்தக் குறைவும் நேர்ந்துவிடாது.

தங்கு தடையில்லாமல் தமிழகத்து ஊர்தோறும் வள்ளுவனின் ஞானரதம் உலா வரவும் பொங்கு கடலெனத் தமிழின் - தமிழரின் பெருமையைப் பூவுலகமெங்கும் எடுத்துச் செல்லவும் மொழிஇன உணர்வுள்ளவர்கள் உதவி செய்யுங்கள்! உதவ உறுதி மேற்கொள்ளுங்கள்!

**நன்றி! வணக்கம்!**





படிப்பகம்

www.padippakam.com



# திருக்குறளும் சங்க இலக்கியங்களும்

கொ. இலக்குமணசாமி



திருக்குறளும் சங்க இலக்கியங்களும் என்ற தலைப்பு மிக விரிந்த செய்திகளைக் கொண்டது. ஆதலின், இச்சிறு கட்டுரையில், திருக்குறளிலும் புறநானூற்றிலும் வரும் 'அறம்' பற்றிய செய்திகளை மட்டும் சிறிய அளவில் சொல்ல முற்படுகிறேன்.

'ஆன்முலையறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய[1] கொடுமை யோர்க்கும்
வருவாய்மருங்கில் கழுவாயும் உள' என
'நிலம்புடை' பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி இல்என
அறம் பாடிற்றே – ஆயிழை கணவ!

(புறநா. 34: 1 – 7)

இவ்வாறு பாடுகின்றார் ஆலத்தூர் கிழார். சோழ மன்னன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் செய்த நன்றியை மறவாது பாடுகின்றார் அவர். ஆவினைக் கொல்லல் முதலாக மேல்குறிக்கப்பெற்ற செய்திகளைப் பற்றி 'அறம்பாடிற்று' என அவர் சுட்டும் 'அறம்' என்பது எது? இது ஆயத்தக்க தொன்றாகும்.

*புறநானூற்றில் முப்பத்தியைந்து பாடல்களில் அறம் என்னும் சொல் அமைந்து உள்ளது.*

1. சிறப்புடைமரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல (31:1–2)
2. நிலம்புடைபெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்குய்தி இல்லென
அறம்பாடிற்றே (34:16–17)
3. அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறை வேண்டு பொழுதிற் பதன்எளியோர் (35:14–15)
4. மறங்கெழுசோழர் உறந்தை அவைபத்து
அறம் நின்று நிலையிற்று ஆதலின் (39:8–9)
5. நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம் (55:9–10)
6. ... ... ... ... ... ... ... ... ... நீயே
அறம் துஞ்சும் உறந்தைப் பொருநனை, இவனே (58:8–9)
7. அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர் (62:7)

1. பார்ப்பார்த் தப்பிய என்பதும் பாடம்.



படிப்பகம்

www.padippakam.com


**அற்நூல் என்பது திருக்குறளைக் குறிக்கும் எனத் திரு. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் குறிப்பிடுவர்.**

8. அறம்புரி கொள்கை நான்முறை முதல்வர் (93:7)

9. ... ... ... ... ... ... ... அறம்பூண்டு பாரியும்,
பரிசிலர் இரப்பின் வாரேன் என்னான் (108:5–6)

10. அறவிலை வாணிகன் ஆஅய் அல்லன் (134:2)

11. அறம் செய்தீமோ அருள்வெய் யோய்என (145:2)

12. மாசொடு குறைந்த உடுக்கையன், அறம்பழியாத்
துவ்வாள் ஆகிய என்வெய்யோளும் (159:13–14)

13. மறம் கடிந்த அரும் கற்பின்
அறம் புகழ்ந்த வலைசூடி (166:13–14)

14. பலர்புர வெதிர்ந்த அறத்துறை நின்னே (175:10)

15. அறம் அறக்கண்ட நெறிமாண் அவையத்து (224:4)

16. அறம்குறித்தன்று பொருள் ஆகுதலின் (362:10)

17. அவி உணவினோர் புறம்காப்ப
அறநெஞ்சத்தோன் வாழாநாள் என்று (375:5–6)

18. அறத்துறை அம்பியின் மான மறப்பு இன்று (381:24)

19. நெடுங்கை வேண்மான் அருங்கடிப்பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும (395:20–21)

20. அறுதொழில் அந்தணர் அறம்புரிந்தெடுத்த
தீயொடு விளங்கும் நாடன் (397:20–21)

21. அன்புகண் மாறிய அறனில் காட்சியொடு (210:2)

22. அறனில் கூற்றம் திறனின்று துணிய (237:9)

23. அறவர் அறவன் மறவர் மறவன் (399:19)

24. அறவையாயின் நினது எனத் திறத்தல் (44:11)

25. அறவை நெஞ்சத்து ஆயர் (390:1)

26. அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே (221:3)

27. அறவோன் மகனே மறவோர் செம்மல் (366:6)

28. அறன் இலள் மன்ற தானே (336:8)

29. இன்னாதுற்ற அறனில் கூற்றே (255:4)

30. நீஇழந் தனையே அறனில் கூற்றம் (230:11)

31. அறன் நிலைதிரியா அன்பின் அவையத்து (71:7)

32. புறம் சிறை மாக்கட்கு அறம் குறித்து (28:11)
அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் 28:15)

33. அறம் துஞ்சும் செங்கோலையே (20:17)

34. அறனோ மற்றிது விறல் மாண்குடுமி (12:3)

35. அறத்தாறு நுவலும் பூட்கை (9:6)

இப்பகுதிகளில் அறம் என்பது தருமம் என்னும் பொருளையும் அறநூல் என்னும் பொருளையும் தருதலை அறியலாம். நாட்டகத்துள்ள அரசன் முதல் யாவரும் மேற்கொண்டொழுக வேண்டிய சமூக அரசியல், பொருளாதார நடைமுறைகளையும், விரும்பிச்செய்யும் ஈகையையும் தருமம் என வழங்குவர். இவைபற்றி விளக்க மாகப் பேசும் நூல் அறநூலாகும். ஆகவே தொடக்கத்தில் குறிக்கப்பெற்ற பாக்களுள்ள 'அறம்பாடிற்றே' என்பதற்கு அற நூல் கூறிற்று எனப் பொருள்கொள்ளல் பொருந்துவதே. உரையாசிரியர்கள் அவ்வாறே பொருள் கொண்டுள்ளனர். அவ்வாறாயின் அறநூல் என்று சுட்டப்பெறும் நூல் எந்நூல்?

அறநூல் என்பது திருக்குறளைக் குறிக்கும் எனத் திரு. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் குறிப்பிடுவர்[1]. திரு. ப. அருணாசலம் அவர்கள் 'குறளின் செய்தி' என்னும் தம் நூலுள் 'ஆலத்தூர்கிழார் தருமத்தையே அறம் என்று சுட்டினாராதல் வேண்டும்' என்பர்[2]. அவ்வாறு சுட்டுவதற்கு அவர் காட்டும் காரணங்கள் பின்வருவன:

1. புறநானூற்றுப் பாடல் சில பெரும் பாவங்களை முதலில் சுட்டி, அவற்றிற்குக் கழுவாய் உண்டு என்றும், பின் ஒருவன் செய்த நன்றி மறக்கும் செயலைச் சுட்டி அதற்குக் கழுவாய் இல்லையென்றும் அறம் பாடியதாகத் தெரிவிக்கிறது. ஆதலின், இவை இவை பாவங்கள் என்றும் இவை இவை அவற்றிற்குக் கழுவாய்கள் என்றும் கூறும் ஒரு நூலைத்தான் அதுகுறித்ததாதல் வேண்டும். மநுதரும நூல் இவ்விருவகைப் படவும் அமைந்துள்ளதால் அவ்வாறமைந்த புறநானூற்றுப் பாடல் சுட்டும் அறம் என்பதும் மநு தருமநூலே.

2. திருக்குறள் முதலில் பாவங்களை வரிசைப்படுத்தவும் இல்லை, பின் அவற்றிற்குத் தனித்தனியாகவோ, தொகுப்பா



1. திரு.டி.வி. சதாசிவ பண்டாரத்தார்
– தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.250 – 600) ப. 12
2. திரு. ப. அருணாசலம் – திருக்குறளின் செய்தி பக். 291



படிப்பகம்

www.padippakam.com


கவோ கழுவாய்களைப் பற்றிக் கூறவும் இல்லை.

3. எந்நன்றி கொன்றார்க்கும் என்பதைத் திருக்குறள் விளக்கவில்லை.

4. எந்நன்றி என்பதற்குப் புறநானூற்றையே கொண்டு விளக்கம் கூறுகிறதாகவும் உள்ளது.

இவ்வாறு அறம் என்பது திருக்குறளைச் சுட்டவில்லை என்பது அவர் கருத்து.

திரு. பண்டாரத்தாரவர்கள், சங்க நூல்கள், திருக்குறள் கருத்துக்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளன என்றும் அம்முறையில் இப்புறநானூற்றுப் பாட்டிலும் அறம் என்ற சொல்லால் திருக்குறளையே சுட்டுகிறது என்றும் கருதுவர்.

இனி இவ்விருவர் கூற்றும் பொருந்துமா என ஆய்ந்து பார்த்தல் வேண்டும். சங்கப் பாடல்கள் பல மிகப் பழமையானவை. நந்தர்கள் பாடலி நகரிலிருந்து ஆட்சி புரிந்ததையும் அவர்கள் பெரும் நிதியத்தைக் கங்கை யாற்றின் அடியில் புதைத்து வைத்ததையும் அகப்பாடல் ஒன்று புலப்படுத்துகிறது.

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ?' ( அகம். 265:4 – 6)

நந்தர்க்குப் பின் ஆட்சி செய்த மோரியர் பற்றிய செய்திகளையும் சங்கப் பாடல்கள் அறிவிக்கின்றன.

'வின்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறை இறந் தகன்றனர்' **(அகம். 69 :10 – 12)**

'நந்தன் வெறுக்கை எய்தினும் மற்று அவண்
தங்கலர் வாழி, தோழி! வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொல் மூதாலத்து அரும்பனைப் பொதியில்
இன்இசை முரசம் கடிப்புஇகுத்திரங்க
தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழுதானை வம்ப மோரியர்' **(அகம். 251:5–12)**

'முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனிஇருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறைஇறந் தவரோ சென்றனர்' **(அகம். 281:8–12)**

'விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்'
**( புறம் 175:6)**

இவைகளால் நந்தரைப் பற்றிய செய்திகளையும் அவர்க்குப்பின் மைசூர்ப் பகுதியுட்பட இந்திய நாட்டுப் பெரும்பகுதியை ஆண்ட பேரரசர் மோரியர் செய்திகளையும் அப்பாடல்கள் பாடப்பெற்ற காலத்துத் தமிழ் மக்கள் அறிந்திருந்தனர் என்பது நன்கு புலப்படும்.

வடஇந்தியாவில் நந்தர்க்குப்பின் மோரியரும், மோரியர்க்குப்பின் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சுங்க மரபினரும், அவர்க்குப் பின் கி.மு. முதல் நூற்றாண்டில் கண்வ மரபினரும் ஆண்டனர். இச்சங்க மரபினையோ, அம்மரபினரான புஷ்யமித்திரன், அக்கினிமித்திரன், தேவபூதி முதலியோரையோ, கண்வ மரபினையோ அம்மரபினரான வாசுதேவன் முதலியோரையோ பரந்துபட்ட அகப்பாடல்களும் புறப்பாடல்களும் யாண்டும் குறிப்பிடவில்லை. ஆதலின் இம்மரபினர்க்கு முந்திய காலத்துப் பாடல்கள் இப்பாடல்கள் என்பது தெளிவு.

வடக்கே கடைசி மன்னனாக ஆண்ட மௌரியப் பேரரசனைக் கொன்று சுங்க மரபினைப் புஷ்யமித்திரன் தொடங்கியதற்கு முன்பே அசோகன் இறந்தவுடன் தெற்கே ஆந்திரப் பகுதியிலும் சாதவாகனக் குடும்பத்தினனான சிமுகன் என்பவன் மாநில ஆட்சியைக் கைப்பற்றிச் சாதவாகன மரபினைத் தொடங்குகிறான். இம்மரபின் மூன்றாவதரசனே சதகர்னி என்பவன்[1]. இவனைப் பற்றியும் இவன் மரபினைப் பற்றியும் இப்பாடல்களில் குறிப்புக்கள் காணப்படவில்லை. நூற்றுவர் கன்னர் என இளங்கோவடிகள்தான் தம் காப்பியத்தில் இவ்வரசரைச் சுட்டுகின்றார். இச்செய்திகளால் புறம், அகம் இவற்றிலுள்ள பாடல்கள் கிறித்துக்கு முற்பட்ட காலப் பாடல்கள் என்பது போதரும்.

ஆந்திரப் பகுதியையொட்டி வடக்கேயிருந்த கலிங்கப் பகுதியும் மோரியர் வலுவிழந்தவுடன் தன்னுரிமை கொண்ட நாடாயிற்று. இதனைச் சிறப்புடனும் வலிமையுடனும் ஆண்ட காரவேலன் என்னும் பெருமன்னன் தனது 'அதிகும்பா' கல்வெட்டில் தெற்கே 110 ஆண்டுகள்



1. **Prof. L. Mukherjee - History of India (Hindu Period) p. 6**


படிப்பகம்

www.padippakam.com


வலிமையுடன் இருந்த தமிழரசர் கூட்டினை உடைத் தழித்தவன் எனத் தன்னைக் கூறிக் கொள்கிறான்[1]. இச்செய்தி சொல்லும் கூட்டு மௌரியர் படையெடுப்பால் சேர சோழ பாண்டியர் மூவரும் அமைத்துக் கொண்ட கூட்டணியையேயாகும். இவ்வாறு புகழ் பெற்ற மூவேந்தர் கூட்டினை நினைப்பூட்டுவதாக உள்ளது காவிரிபூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாட்டு.

'இன்றே போல்க நும் புணர்ச்சி
வென்று வென்று அடுகளத்துயர்கநும் வேலே'

என விரும்பி வாழ்த்துகின்றார் அவர். இதில் சோழ மன்னனும் பாண்டிய மன்னனும் குறிக்கப்படுகின்றனர். மேல்சுட்டிய முக்கூட்டின் தொடக்கமோ இறுதியோ இஃதென்பது விளங்கவில்லை. இவ்வாறு மூவரும் சேர்ந்த கூட்டினை அழித்ததையே அதிகும்பா கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வாறு பழமையுடையவை அகப்புறப் பாடல்கள். ஒரு சில பிந்தியனவாகலாம். எனினும் பல மிகப் பழையன. ஆதலின் பெரும்பாலானவை கி.மு.வைச் சேர்ந்தவை.

டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரி அவர்கள் தமது வடமொழி நூல் வரலாற்றில் மனுதரும சாஸ்திரம் கி.பி.200ல் எழுதப்பட்டது என்பர்.[2] மனுதரும நூலிலுள்ள குறிப்புக்கள் சில அந்நூல் இவ்வடிவில் அமைந்த வரலாற்றினை ஓரளவு உணர்த்தக் கூடியன. தொடக்கத்தில் பிரமன் விராட் புருஷனைப் படைத்தான். விராட்புருஷன் சுவாயம்பு மனுவைப் படைத்தான். இம் முதல் மனுவினையணுகி இருடிகள் நான்கு வருணத்தார்க்குரிய தருமங்களைத் தெரிவித் தருளுமாறு வேண்டினர். மனு ஓரளவு சொல்லி முடித்தபின், பிருகுமுனிக்கு நான் யாவும் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போலவே பிருகுமுனி சொல்வான் என்று அவர்களைப் பிருகுமுனியிடம் அனுப்பு கிறார். அதன்படி பிருகு சொல்லத் தொடங் கினார். இச்சுவாயம்பு மனுவின் மரபின ராகச் சுவாரோசிஷன், உத்தமன், தாமசன், ரைவதன், சாக்ஷுஷன், வைவசுவதன் என்னும் அறுவர் தோன்றினர். தத்தம் காலத்தில் மக்களை யுண்டுபண்ணிக் காத்து வந்தார்கள்.[3]

இச்செய்திகளும், இந்நூலின் இடையிடையே பழைய பெரியோர்கள் சொன்னார்கள் என்னும் கருத்துடையனவும் இம் மனுவால் இம் மனுதரும நூல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இவ்வாறமைந்து முடிந்ததன்று என்பதும் பல பெரியோர்களால் பல காலங்களில் சொல்லப்பட்ட அறங்கள் பின்னர் கி.பி. 200-ல் மனு என்னும் ஒருவரால் ஒழுங்குற இன்றுள்ளவாறு அமைக்கப்பட்டதென்பதும் புலனாகும்.

ஆகவே இவ்வாறு கி.பி.200-ல் அமைந்த மனுதரும நூலிலுள்ள செய்திகளை இதற்கு முந்திய புறநானூற்றுப் பாடலில் எவ்வாறமைக்க முடியும் என்றும் ஐயம் உண்டாகிறது. ஆயினும் சிலர், 'புறநானூறு தொகுப்பு நூல், கி.பி.யில் பாடப்பட்ட பாடல்களும் இதன்கண் சேர்ந்திருத்தல் இயல்பு; ஆலத்தூர் கிழார் பாடல் அத்தகையது' எனக் கொண்டு மனுதருமநூற் செய்திகள் இதில் அமைந்திருத்தல் கூடும் எனலாம். அவ்வாறே கொள்ளினும் வேறொரு செய்தி இதற்கு இடையூறாகின்றது.

புறநானூற்றுப்பாடல்,

'........ ...... ....... ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்திஇல் என
அறம்பாடிற்று'

என்கிறது. அதாவது எப்பெரும் பாவத்திற்கும் கழுவாய் உண்டு, செய்நன்றி கொன்றவருக்கும் கழுவாயோ பிராயச் சித்தமோ - இல்லை எனத் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் மனுதரும சாத்திரம், பதினோராவது அத்தியாயம் 190 ஆவது சுலோகத்தில்,

'சிசுஹத்தி ஸ்த்ரிஹத்தி செய்தவன், நன்றிகெட்டவன் சரணம்
அடைந்தவனைக் கொன்றவன், இவர்கள் விதிப்படி பிராயச்சித்தம்
செய்துகொண்டாலும் அவர்களோடு சகவாசம் செய்யக்கூடாது'[1]

1. **Hathoigumpha Inscription of Kharavela (176 B.C)**
2. டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரியவர்கள் வடமொழி நூல் வரலாறு பக். 209
3. இளையவல்லி இராமாநுஜாச்சாரியார் மொழி பெயர்ப்பு மனுதர்ம சாத்திரம் பக். 6

1. இளையவல்லி இராமாநுஜாச்சாரியார் மொழிபெயர்ப்பு 1924, மநுதர்ம சாஸ்திரம் – அத்தி. 11:190


படிப்பகம்

www.padippakam.com



என நன்றி கெட்டவனுக்கு விதிப்படி பிராயசித்தம் உண்டு எனத் தெளிவாகப் பேசுகிறது. இவ்விதி கழுவாயே இல்லை என்னும் புறநானூற்று விதிக்கு நேர்மாறாக வன்றோ உள்ளது. இதற்கு நாம் என்ன அமைதி கொள்ளமுடியும்? முடியாது. ஆகவே ஆலத்தூர்கிழார் குறிப்பிடும் அறம் என்பது மனுதர்ம நூலினின்று வேறுபட்டதொன்று என்பது நன்கு தெளிவாகும்.

இனி, அறிஞர் பண்டாரத்தாரவர்கள் தமது இலக்கிய வரலாற்றில், இப்புறநானூற்றுப் பாடலைச் சுட்டி இதன்கண் கூறப்பட்டுள்ள அறம் என்பது அறநூலாகிய திருக்குறளாகும் என்பதைப் பற்றி ஆய்வோம். தமிழிலக்கியங்கள் பலவற்றிலும் அறங்கள் ஆங்காங்கே பேசப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் எனப்படும் பழைய நூல்களிலும் பிறநூல்களிலும் அவற்றைக் காணலாம். திருக்குறளிலும் மிகப்பல அறங்களைக் காண்கிறோம். திருக்குறளறங்கள் பலவும் மக்கட்குலத்துக்குப் பொதுவானவை. இம்முறை மனுநூல் முறைக்கு வேறுபட்டது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள்,

'வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற
நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொருநீதி'

எனப் பாடுவார். எனினும் பலவகை மக்களுக்கும் அவர்தம் இடம் பொருள் ஏவல்கட்கேற்பத் தெளிவாக இவை இவை நல்லன; இவை இவை செய்யத்தக்கன; இவை இவை செய்யத்தகாதன; இவை இவை குற்றம்; அக்குற்றங்களுக்கு இவை இவை தண்டனை என்று கூறும் கௌடலியர் பொருணூல் போன்றோ மநுதர்ம நூல் போன்றோ பேசப்படவில்லை. திருக்குறளை நாம் இலக்கியம் என்றே கருதுகிறோம். இலக்கியமும் சட்டநூலும் ஒன்றாகா தன்றோ? ஆதலின் இதனைத் தனி அறநூல் என்று கொள்வது பொருந்துமா?

திருக்குறளுக்கு வழங்கும் பெயர்கள் பல. திருக்குறளாசிரியர்க்கும் பெயர்கள் பல. அவற்றுள் அறம் என்பதும் சொல்லடிப்படையில் அமைந்த ஒரு பெயரைக் காணவில்லை. இதுவும் ஆலத்தூர்கிழார் திருக்குறளையே அறம் எனக் கருதிப் பாடினார் என்பதற்குத் தடை செய்யும்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் திருவள்ளுவரே,

'புறம் கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறம் கூறும் ஆக்கம் தரும்' **(குறள் 183)**

என அறம் ஒன்றையும் அது கூறும் விதியொன்றையும் சுட்டியிருக்கின்றார். உரையாசிரியர் பரிமேலழகரும் அறம் கூறும் ஆக்கம் தரும் என்பதற்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும் என உரை செய்துள்ளார். இதனால் திருவள்ளுவரும் ஆலத்தூர் கிழாரும் ஒரே குரலாக,

'அறம் கூறும்'
'அறம் பாடும்'

எனக் குறிப்பிடுவது ஒருவர் மற்றவரைச் சுட்டிக் கொள்வதே எனக் கொள்ள முடியுமா என்றெண்ணிப் பார்த்தல் வேண்டும். எண்ணிப் பார்ப்பின் இவ்விருவர் உள்ளத்தும் தங்கி வெளிப்பட்ட அறநூல் வேறொன்றே எனத் தோன்றும். இவ்வறநூல், நன்றி கொன்றதற்குக் கழுவாய் இல்லை என்பது போலவே புறங்கூறுதற்கும் உயிருடனிருத்தற்கேற்ப கழுவாய் இல்லை, சாதலே கழுவாய் என்கிறது.

இவ்வாறு ஆலத்தூர் கிழார் திருக்குறளையும் சுட்டவில்லை, மனுதரும நூலையும் சுட்டவில்லை, எனின் அவர் சுட்டுவது எதனை? அவ்வாறே திருவள்ளுவர் அறம் எனச் சுட்டுவது எதனை? என்னும் வினாவெழுதல் இயற்கை.

தொல்காப்பியம்,

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை' **(களவியல் – 1)**

என்பதில் உறுதிப்பொருள்கள் மூன்றினை அமைத்துள்ளார். இவ்வமைப்புமுறை வடநூல்களில் உள்ள 'தர்மார்த்த காம மோட்சம்' என்னும் முறைக்கு மாறுபாடாக உள்ளது. உறுதிப் பொருள்களை



படிப்பகம்

www.padippakam.com


எண்ணியமைப்பதில் தமிழர் ஒருமுறையைப் பின்பற்றியுள்ளனர் என்பது தெரிகிறது. பிறக்கும் உயிர்கள் யாவற்றிற்கும் இன்பம் என்பது இயல்பூக்கம். இவ்வுண்மையை மேற் கொண்டனர் தமிழர். தொல்காப்பியரும்,

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான்அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்' (பொருள். 29)

என உரைத்தார். இவ்வியல்புக்கேற்ப இன்பம் பொருள் அறன் எனப் படிப்படியாக அமைத்தார். இன்பம் உறப்பொருள் வேண்டும், பொருள் பெறுவதற்காக உலகெங் கணும் பலவகைச் சமூக நடைமுறைகள் ஏற்பட்டன. அந்நடைமுறை தனி மனிதனுக் கும் அவன் வாழும் சமுதாயத்துக்கும் முர ணிழைக்காத தாயிருத்தல் வேண்டும். ஆன் றோர்கள் தம் ஆழ்ந்தகன்ற அறிவாலும் பாட்டுணர்வாலும் அந்நடைமுறைகளை அமைத்து வந்தனர். அந்நடைமுறைகள் காலப்போக்கில் எழுத்து வடிவம் பெற்றன. சில பகுதிகளில் எழுதா இலக்கியம் போல் வரி வடிவில் இல்லாமல் ஒலிவடிவில் மட்டுமே இருந்திருக்கலாம். வேதம் பல்லாண்டுகள் வாய்வழியாகவே வந்து எழுதாச்சுருதி என்று பெயர் பெற்றுள்ள தன்றோ? அவ்வாறே மிகப்பரந்த திராவிடச் சமுதாயமும் சிறப்பாகத் தமிழ்ச் சமுதாய மும் பல நடைமுறைகளைப் பலகாலங் களில் அமைத்து ஒழுங்குபடுத்தியிருக்கும். அவ்வமைப்பு இன்பமும் பொருளும் அறனும் என்ற முறைக்கேற்றதா யிருந்திருக் கும். தமிழிலக்கியங்களே இதற்குச் சான்றா கும். காலப்போக்கில் எழுத்து வடிவத்தை யும் பெற்றிருக்கும். அதனால் 'அறம்பாடிற்றே' என அவ்வறம் பாடல் வடிவில் உள்ளதா கவே கூறுகிறார் ஆலத்தூர்கிழார்.

புறநானூறு, உறையூர்க்கண் அறம் கூறவையம் இருந்ததனைத் தெரிவிக்கும். அவ்வவையத்தார் எவ்விதிகளுமின்றி எவ்வாறு வழக்குகளை ஆய்ந்து நீதிகூற முடியும்? சிலப்பதிகாரம்,

'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று
வெள்வேற் கொற்றம் காண்' **(சிலப். 20:64 – 65)**

எனப் பாடியிருப்பது இன்ன குற்றத்திற்கு இன்ன தண்டம் என்னும் விதியினை யுட்கொண்டதாகவன்று உள்ளது. மதுரைக் காஞ்சி வணிகர் நடைமுறையை,

'அறநெறி பிழையாது ஆற்றின் ஒழுகி' **(பத். மது. 500)**


என அறநெறிப்பட இருத்தல் வேண்டும் என்கிறது. மேலும் அது,

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோல் அன்ன செம்மைத்தாகி
சிறந்த கொள்கை அறம் கூறவையம்' **(பத். மது. 489–492)**

என அறங்கூறும் பெரியோர், அவையத்தா ராய்ச் செயல்படும் இயல்பினைக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

கௌடலியர் தம் பொருணூலில் அறம் கூறவையம்பற்றிச் சொல்வனவும் ஈண்டு நினையத்தகும். ஏனெனில் அவர் தென்னாட் டவர். அவர் தென்னாட்டுப் பொருள் இயல்பு களையும் அறிந்திருப்பர். அவர் நூலுக்கு இவ்விந்தியப் பெருநாட்டில் அக்காலத் திருந்த எல்லா நடைமுறைகளும் மூலங் களாகும். ஆதலின் அவர் கூறுவன நினையத் தகுவன. 'அறங்கூறவையத்தையும் (நீதி மன்றம்) பொருள்வினைஞர் நிலையத்தை யும் ஆடவர் மகளிர்க்கு வேறு வேறமைந்த இடங்களையுடையதும், வலிய காவல் அமைந்த போக்கு வரத்து வழிகளையுடை யதும் ஆகிய சிறைக்கோட்டத்தையும் தனித் தனியே அமைத்தல் வேண்டும், எனவும்,

'அறங்கூறவையத்தார், (அரசனால் நிய மிக்கப்பட்டவர்) நாட்டின் எல்லை, சங்கிர கணம் (பத்து ஊர்களைத் தன்னுட்கொண்டு நடுவன அமைந்த பேரூர்), துரோணமுகம் (நானூறு ஊர்களைத் தன்னுட் கொண்டு நடுவண் அமைந்த பேரூர்), தானியம் (எண் ணூறு ஊர்களைத் தன்னுட் கொண்டு நடுவண் அமைந்த தலைநகரம்) என்னும் இவ்விடங்களில் மூவர் மூவராகக் கூடி யிருந்து வழக்கைப் பற்றிய காரியங்களை நடத்துதல் வேண்டும் எனவும், அறங்கூற வையம் அமைக்கும் இடத்தையும் அவையத் தார் எண்ணிக்கையையும் பற்றி அது கூறி யுள்ளது.[1]



1. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு – கௌடலீயம் (தமிழ்) பொருணூல் ப. 157, 405


படிப்பகம்

www.padippakam.com



சேரமான் கணைக்காலிரும்பொறை,

'தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்திரீஇய'[1]

என்பது விலங்கிட்டுச் சிறைசெய்தல் இருந்த தனை யுணர்த்தும்.

சிலப்பதிகாரத்தில், வார்த்திகன் புதை பொருளை எடுத்து அரசுக் கறிவிக்காது மறைத்துவைத்து உண்பன உடுப்பனவற்றில் ஈடுபட்டான் எனச் சிறைசெய்யப்பட்ட செய்தி அறிந்ததொன்றே[2].

இவற்றால் சிறிதும் பெரிதுமான பல வகைக் குற்றங்களைச் செய்வோரைக் காவலர் குற்றம் சாற்றிச் சிறையில் அடைப் பதும், பின் அறங்கூறவையத்தாரும் அவ ரன்ன பிறரும் அரசரும் வழக்குகளை ஆய்ந்து ஏற்ற தண்டம் விதிப்பதும் தமிழ்ச் சமுதா யத்தில் இருந்துவந்தமை நன்கு தெளி வாகும். இப்படியே பலவகை சமூக நடை முறைகட்கும் எழுத்து வடிவத்திலும் கேள்வி வடிவிலும் பலவகை அறமுறைகள் ஈண் டிருத்தல் வேண்டும் என்பதும் எளிதில் உணரமுடியும்.

பழந்தமிழ் நாட்டில் போர் செய்ய முற் படுங்கால் பகைவரிடத்துள்ள ஆனிரை களுக்கு ஊறுண்டாகாதவாறு அவற்றைக் கவர்ந்து பாதுகாத்தல் உண்டு அல்லது அவை காப்புள்ள இடம் சேர்தல் வேண் டும் என முன்னறிவிப்புச் செய்வர்[3]. இளங்கோ வடிகள் 'ஆகாத் தோம்பி' என்பர். ஆக்களே பெருஞ்செல்வம். மாடு என்பதற்கே செல்வம் என்று பொருள் அமைந்துவிட்டது. ஆதலின் அதனைப் பொன்னே போல் போற்றுதல் முக்கியம் ஆயிற்று. இத்தகு சிறப்புத் தரும் ஆவினைக் கொல்லுதலைத் தமிழகம் எவ் வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்? ஆக் கொலையைப் பெரும்பாவமென்று கருதினர்.

பெண் கொலையையும் தமிழக மக்கள் பெரும்பாவம் என்றே கருதினர். புலவர் பெருமான் பரணர் பாடிய

1 புறநானூறு 74

2 சிலப்பதிகாரம் 23: 98 – 103

3 புறநானூறு – 9

பெண்கொலை புரிந்த நன்னன்போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ' (குறுந். 292)


என்பது பெண்கொலை, நீங்குதற்கரிய நிரை யத்துட் சேர்க்கும் பெரும்பாவம் என்ப தனை நன்கு உணர்த்துகிறது. புனல் தந்த பச்சைக்காயைத் தின்றுவிட்டாள் அப்பெண். அதற்கு மாறாக ஒன்பதிற்றொன்பது களிற் றுடன் அவள் நிறையளவு பொன்னாற் செய்த பாவையைக் கொடுப்பவும் அதனை ஏற்றுக் கொண்டு அமையாது கொலைச் செயல் நிகழ்த்தியுள்ளான் நன்னன். அவனுக் குரியது மீளா நரகு என்பர் பரணர்.

கருவுற்ற பெண்ணைக் கொல்வது இன்னும் கொடும் பாவமன்றோ!

தாய் தந்தையரை இருமுதுகுரவர் என்பது தமிழ் மரபு. ஆசிரியரையும் குரவன் என்னும் மரபுண்டு. இவர்கள் கொலை யைத் தமிழகம் எவ்வளவு கடுமையாகக் கருதியிருக்கும் என்பதனைக் கூற வேண்டு வதேயில்லை.

இவற்றால் புறநானூற்றுப் பாடலில் வரும் முப்பெருங் கொலைகளையும் பழந் தமிழ்ச் சான்றோர் பெரும் பாவங்களாகவே கருதினர் என்பதும் இப்பெரும் பாவங் களைப் புரிந்தவர்களுடைய வழக்குகளை ஆய்தற்கு அறங்கூறவையங்கள் இருந்தன என்பது கருதுதல் எல்லாவற்றானும் ஏற்புடையதாகும். ஆகவே அவ்வவையார்க்கு வழிகாட்டும் அறநெறிகளும் இருந்திருக்க வேண்டுமன்றோ? இல்லையெனில் பரந்து பட்ட நாட்டின்கண் நிகழும் வழக்குகளை எவ்வாறு ஒரே முறையாகத் தீர்க்க முடியும்? கரிகாலன் நரை முடித்து முறை செய்தது, அறங்கூறவையத்தார் புறத்தோற் றத்தினையும் நினைப்பிக்கும். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினம் கூறி வருங்கால்,

'அறன் நிலைதிரியா அன்பின் அவையத்து
திறன் இல் ஒருவனை நாட்டி முறை திரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக' (புறம். 71:7 – 9)



எனக் கூறுவதில் நீதிபதியை அரசன் நிய மித்தலும் அதில் தப்பு நிகழ்தல் கூடா



படிப்பகம்

www.padippakam.com


தென்பதில் அவன் கண்ணும் கருத்துமாக இருத்தலும் ஆகிய செய்திகள் நன்கு புலப் படும்.

மேலும் மநு தரும நூலுக்கும் பிற வடநூல் முறைகளுக்கும் மாறுபட்ட நடை முறைகள் தமிழகத்தில இருந்து வந்துள் ளன என்பதனையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

ஆகாத்தோம்பல் பேரறமாயினும்,

'ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்'

என்கிறார் திருவள்ளுவர். அவரே,

'ஈன்றாள் பசிகாண் பானாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'

எனப் பிறிதோரிடத்தில் பாடுகிறார். இத்தகைய மரபுகளை ஒருபக்கத்தும்,

'பசியினால் துன்பப்படுகிற தாய், தகப்பன், குரு, வேலைக்காரன் இவர்களைக் காப்பாற்றுகிறவனாகவும், தேவர், அதிதி இவர்களைப் பூசிக்கிறவனாகவும் இருக்கிறவன் யாரிடத்திலும் தானம் வாங்கலாம்.'[1]

என்னும் மனுதரும மரபுகளை ஒரு பக்கத் தில் கொண்டு ஆய்ந்தால் இவற்றிடையே அடிப்படை வேறுபாடுகள் இருத்தல் புலப் படும். அவ்வேறுபாடுகட்குக் காரணம் அவ் வம்மரபுகள் வளர்ந்த காவல் இடம் பொருள் ஏவல்களே யாகுமென்பதன்றி வேறு சொல் வதற்கொன்று மில்லை. இப்பின்னணியில் ஆலத்தூர் கிழாரும் திருவள்ளுவரும் அடை மொழியேதுமின்றி ஒரே குரலில்,

'அறம் பாடிற்றே'

என்பதும், 'அறம் கூறும்'

என்பதும் மனுதரும நூலாக இருக்க முடி யுமா என்றெண்ணிப் பார்க்கின் இருக்க முடியாதென்றே தோன்றுகிறது. தனி வேறு பாடுகள் பல இருப்பினும் ஒரே வகைப் பொருள்களை ஓரிடத்தில் மேற்போக் காகப் பார்க்கும்போது ஒன்றெனவே

1. இளையவல்லி இராமாநுஜாச்சாரியார் மனுதரும சாத்திரம் அத் 4 : 251

திருக்குறளிலும் பிற பழந்தமிழிலக் கியங்களிலும் நாட்டிலும் உள்ள அறமுறைகளையும், மனுதரும நூலிலுள்ளவற்றையும் ஒப்பாய்வு செய்தல் வேண்டும். அவ்வாய்விற் காணும் இருதிறத்துப் பொதுவறங்கள் போகச் சிறப்பானவற்றைப் பிரித்தறியின் அப்போது தமிழகத் திருந்த பழைய அறநூல் வடிவினைக் காணுதல் இயலும்

தோன் றும். நுணுகி ஆயும்போதுதான் பொருள்கள் வேறு வேறெனத் தோன்றும். அவ்வாறே இப்போது கைக்குக் கிடைக்கும் அறநூல், மனுதரும நூலேயாதலாலும், பழந் தமிழ் அறநூல் கிடைக்கவில்லை யாதலாலும் அற எண்ணத்தில் மேற்போக்காகப் பார்க்கும் போது இரண்டும் ஒன்றெனவே தோன்று கிறது. நுணுகிக் காணுங்கால் தனிச் சிறப்புக்கள் அல்லது வேறுபாடுகள் புலப் பட்டுத் தமிழ் அறநூலை நினைக்கச் செய் கிறது. ஆதலின், இவ்விரு தமிழ்ச் சான் றோரும் குறிப்பிடும் அறம் என்பது தமிழ் மக்களிடையே தோன்றி வளர்ந் தமைந்த ஓர் அறநூலே ஆகும் என்பது தெளிவாகும். அதுபற்றியறிவதற்குப் போதிய சான்றுகள் இன்று கிடைக்காமல் இருக்கலாம். ஆனால் திருவள்ளுவர் காலத்தும் ஆலந்தூர் கிழார் காலத்தும் அவையிருந்தன. அக்கால அரசர்கள் அறங்கூறவையங்களில் அவற்றைப் பேணிக் காத்தனர். அவையே அறங்கூறுவோர்க்கும் பிறர்க்கும் வழிகாட்டு வனவாயின. இவ்வுண்மைகளை இன்னும் தெளிவாகக் காண வேண்டின், திருக்குறளிலும் பிற பழந்தமிழிலக் கியங்களிலும் நாட்டிலும் உள்ள அறமுறை களையும், மனுதரும நூலிலுள்ளவற்றையும் ஒப்பாய்வு செய்தல் வேண்டும். அவ்வாய்விற் காணும் இருதிறத்துப் பொதுவறங்கள் போகச் சிறப்பானவற்றைப் பிரித்தறியின் அப்போது தமிழகத்திருந்த பழைய அறநூல் வடிவினைக் காணுதல் இயலும் என்று நம்பிக்கையுடன் இதனை முடிக்கின்றேன்.




படிப்பகம்

www.padippakam.com



# திருக்குறளில் நாடகப் பாங்கு

ஆறு. அழகப்பன்



நாடகக்கூறுகள் அல்லது பாங்கு என்பது இலக்கியங்களில் மட்டும் காணக் கூடியவை என்று எண்ணிடக் கூடாது. இப்பாங்கு அனைவரிடமும் குடிகொண்டுள்ள ஒரு குணம். நாடகமே உலகம், நாம் அனைவரும் நடிகர்கள் என்றார் ஷேக்ஸ்பியர். வீதிகளில் சிறுபிள்ளைகள் சிலநேரம் விளையாடும் விளையாட்டுக்களிலே நாம் அனைவரும் பார்த்து ரசிக்கும் ஒரு விளையாட்டினை இதற்குச் சான்றாகக் கூறலாம். சிறார்கள் சில நேரங்களில் பொருள்களை வைத்துத் தாய் சமைப்பது போலச் சமைத்தும் அப்பொய்ச் சமையலிலிருந்து உணவுப் பொருள்களை எடுத்து அங்கு அமர்ந்திருக்கும் ஒரு தந்தைச் சிறுவனுக்கு உணவு பரிமாறுவதையும் காண்கின்றோம். இந்தக் குழந்தைகளுக்கு இப்படி ஒப்பச் செய்யும் நாடகப்பாங்கு எப்படி வந்தது? அதுதான் நமக்கு இயற்கையாகப் படைப்பிலேயே சேர்ந்து அமைந்துள்ள ஒரு இயல்பு. நாடகங்களை நடாத்திக் காட்டிடும் கூட்டமாகப் பாணர், விறலியர், கூத்தர் என்ற இனங்கள் இருந்து வந்தாலும் பல குழுக்கள் இதற்கென்று இயங்கி வந்தாலும் இவ்வுணர்வு அனைவருக்கும் பொருந்தக் கூடிய ஒரு பொது உணர்வாகும். ஆகையால்தான் இந்த உணர்வும் இந்தக் கலையும் இவ்விலக்கியப் பிரிவும் உலக மக்கள் அனைவரிடமும் அமைந்துகிடக்கக் காண்கின்றோம்.

தமிழ் நாடக வளர்ச்சியில் நாடகத்திற்கென்று தனி இலக்கியமோ நாடக இலக்கண நூலோ தோன்றியது மிக மிகப் பிற்பட்ட காலமாகும். திருக்குறள், சங்க இலக்கியங்கள் இவை முகிழ்த்த காலங்களில் உலகில் பல நாடுகளில் செம்மையான நாடக நூல்கள் தோன்றி அவை வாழும் இலக்கியங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, வடமொழியில் கி.மு. 400-க்கு முன்பே இக்கலை தழைத்து வளர்ந்திருக்கிறது. கிரேக்கத்தில் கி.மு. 470-ல் துன்பியல் நாடகங்கள் நன்கு வளர்ந்திருக்கின்றன. இத்தாலியில்



படிப்பகம்

**திருக்குறள் ஓர் நாடகம் அல்ல என்பதும் சமூகத்திற்குக் கோணலற்ற உண்மைகளைச் சொல்ல வந்த ஒரு வாழ்க்கை நூல் என்பதும் நாம் நன்கு அறிந்ததாகும். திருவள்ளுவர் காலத்தில் தனி ஒரு நாடக இலக்கியம் தோன்றவில்லை என்பது முடிந்த முடிபாக இருந்தாலும் நாடகங்கள் நாட்டியங்கள் கூத்துக்கள் அவர் காலத்தில் இருந்து வந்த கலைகளாகும்.**

கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஆண்டரானிக்ஸ் என்னும் கிரேக்கர் சில நாடகங்கள் எழுதியுள்ளார். நேவியல் என்னும் ரோமானியக் கவிஞர் சில நாடகங்கள் செய்துள்ளார். ரோமானிய நகைச்சுவை நாடக ஆசிரியருள் தலைசிறந்தவரான பிளாட்டஸ் (கி.மு.254 - 184) எழுதிய இருபது நாடகங்கள் வரை கிடைத்திருக்கின்றன. தமிழில் இவ்விலக்கியம் இவ்வகையில் தோன்றாமையால்தான் நாம் பழந்தமிழ்களில் காணக்கூடிய நாடகக்கூறுகளை எடுத்து நாடக இலக்கியத்திற்குச் சமமான ஓர் நிறைவினைக் காண்கின்றோம். அந் நிறைவுக்காகத் தமிழ் இலக்கியங்களிலுள்ள சில பாடல்களை நாடகமாக்கிடவும் அல்லது சில காப்பியங்களை நாடக வடிவத்திற்கு மாற்றிடவும் முயல்கிறோம். இம்முறையில் நாடகப் பாங்கு கண்ட நாடக நூற்களே திரு. தெ.பொ.மீ. அவர்களின் நற்றிணை நாடகங்கள், புலவர் கு. திருமேனி அவர்களின் சிலப்பதிகார நாடகம், திரு. கி.ஆ.பெ. அவர்களின் தமிழ்ச்செல்வம் நாடகம், திரு. ஆறு. அழகப்பனின் நாடகச் செல்வம் முதலிய நாடக நூல்களாகும்.

திருக்குறள் ஓர் நாடகம் அல்ல என்பதும் சமூகத்திற்குக் கோணலற்ற உண்மைகளைச் சொல்ல வந்த ஒரு வாழ்க்கை நூல் என்பதும் நாம் நன்கு அறிந்ததாகும். திருவள்ளுவர் காலத்தில் தனி ஒரு நாடக இலக்கியம் தோன்றவில்லை என்பது முடிந்த முடிபாக இருந்தாலும் நாடகங்கள் நாட்டியங்கள் கூத்துக்கள் அவர் காலத்தில் இருந்து வந்த கலைகளாகும். இதனடிப்படையில் இவ்வுணர்வுகள் அல்லது நாடக உத்திகள் திருக்குறளில் நாம் காணமுடியுமா என்று நோக்கும் பொழுது எல்லாப் பொருளும் இதன் பாலுள என்ற புகழ் மொழிதான் நமக்கு விடையாக அமைகின்றது. நாடகத்திற்கு வேண்டிய அடிப்படை இலக்கணங்கள், நாடக இலக்கணங்கள், நாடக அமைப்புகள் முதலியன திருக்குறளில் எவ்வண்ணம் அமைந்து கிடக்கின்றன என்பது நமக்கு திருக்குறள் ஓர் அறநூல் என்ற முடிவிலிருந்து வேறுபட்டு நோக்குகின்ற முரண்பட்ட ஆய்வாகக் கொள்ளக்கூடாது. அவ்வெண்ணத்தில் இப்பொழுது நூலில் இக்கலையின் சில கூறுகள் எப்படியுள்ளன என நோக்கலாம். நாடக இலக்கியங்களை இன்பியல் நாடகம் என்றும் துன்பியல் நாடகம் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பதனை அனைவரும் ஏற்றுக் கொண்ட வகைகளாக இருந்தாலும் நாடகங்களுக்கு அடிப்படை நாடகம் ஓரங்க நாடகந்தான் என்பது ஒப்ப முடிந்த முடிவாகும். இவ்ஓரங்க நாடகம் திருக்குறளில் எவ்வகையில் நிறைந்து உள்ளது என்பதனைக் காண்போம்.

## ஓரங்க நாடகம்

நாடக வகைகளில் மூத்த பிரிவான இவ்வினத்திலிருந்துதான் பின்னீடு பல அங்கங்கள் கொண்ட பெரு நாடகங்கள் வளர்ந்தன என்பது நாடக வரலாறு காட்டும் உண்மை. நாவலுக்கும் சிறுகதைக்கும் கூறிடும் இலக்கண வேற்றுமையை நீண்ட நாடகத்திற்கும் ஓரங்க நாடகத்திற்கும் கூறிடலாம். ஒரு சம்பவத்தை மட்டும் சித்திரிப்பது இந்நாடகத்திற்கு மிக முக்கியமெனினும் கருத்து முக்கியம். சம்பவத் தொடர்ச்சி உரையாடல், கதை, நாடகப் பண்பாகிய உணர்ச்சிப் போராட்டம், அனைத்தும் இதற்கு இன்றியமையாதன. இவ் ஓரங்க நாடகத்தில் இவைகளன்றி மேலும் சில அடிப்படைகள் அவசியம். அவை




www.padippakam.com


**கதையின் உட்பொருள் (Morals)**
**கதையின் அமைப்பு (Plot)**
**பாத்திரங்களின் படைப்பு (Characters)**
**நிகழ்ச்சிகளின் ஒருமைப்பாடு**
**(Unity of place, time & action)**
**சிறந்த உரையாடல், நடை, செய்யுட்சிறப்பு**

முதலியன.

இவ்விலக்கணங்கள் புலவி நுணுக்கம் என்னும் அதிகாரத்தில், திருக்குறளில் எவ்வண்ணம் அமைந்துள்ளன என்பதற்குப் பின்னிணைப்பில் (அ) காட்டியுள்ள ஓரங்க நாடகம் நமக்கு நன்கு காட்டிடும். அவ் ஓரங்க நாடகத்தில் கதையின் உட்பொருளாக அன்பின் ஐந்திணையும், கதையின் அமைப்பாகத் தலைவனின் கள்ள உறவும் பாத்திரங்களின் படைப்பாக அறியாமை, அல்லது ஐயமே உருக் கொண்ட தலைவியும் நிகழ்ச்சிகளின் ஒருமைப்பாடாக இரு தலைவர்களும் சந்திக்குமிடமும் இருக்கக் காண்கின்றோம். ஓரங்க நாடகத்திற்கு வேண்டிய கருத்து முக்கியம். இனிய உரையாடல், சம்பவத் தொடர்ச்சி முதலியனவும் பொதிந்திருக்கக் காண்கின்றோம்.

இவ்வகையான ஓரங்க நாடக அமைப்பு நம் தமிழ் இலக்கியங்களில் பலவற்றிலும் உண்டு என்பதற்கு மற்றும் ஒரு ஓரங்க நாடக அமைப்புடைய ஒன்றினைச் சான்றாக எடுத்துக் காட்டுவது இதற்கு வலிவூட்டுவதாக அமையலாம். இதற்கு அடிக்கடி எடுத்துக்காட்டிடும் நாடக இலக்கியமென வருணிக்கப்படும் சிலப்பதிகாரத்தில் எடுத்துக் காட்டுவதனைவிட நாடகக்கூறுகள் மலிந்த கொத்தெனப் போற்றப்படும் கலித்தொகையில் ஒரு காட்சியைச் சான்றாகக் கருதலாம். திருக்குறளில் நாம் சந்திக்கும் தலைவர்களுக்கும் கலித்தொகையில் நாம் சந்திக்கும் தலைவர்களுக்கும் கார்த்திகைத் திங்களுக்கும் பங்குனித் திங்களுக்கும் உள்ள வேறுபாடு போல வேறுபாடுகள் உண்டு. மருதக் கலியில் கூனியும் குறளனும் காதல் கொள்வதாக அமைந்த ஒரு பாடல் இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டுள்ளது (பின்னிணைப்பு - ஆ). திருக்குறளில் சந்தித்த தலைவர்களோடு கலித்தொகைக் கூனியையும் குறளனையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது புலவர்கள் இந்நாடகக் கூறுகளை இலக்கியங்களில் செல்வாக்கு மிக்க தலைவர்களுக்கு மட்டும் ஏற்றிக் காட்டிடாமல் இப்படிப்பட்ட அடியவர்கள் கொண்ட காதல் மீதும் அக்கூறுகளை ஏற்றிக் காட்டியிருக்கின்றார்கள் என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.



## தனிமொழி

நாடகங்களில் உள்ள உரையாடல்களில் இதற்குத் தனிச் சிறப்புண்டு. ஒரு பாத்திரம் தனியாக நின்று பேசிடும் இதனை ஆங்கிலத்தில் Soliloquy என்பர். வடமொழியில் இதனை **'ஸ்வகதம்'** என்றும் **'ஆத்மகதம்'** என்றும் அழைக்கின்றனர். இதனை நாடக இயல்நூல் பின்வருமாறு இயம்புகிறது.

**'தானே தனக்குறை செய்யுந் தனிமொழி**
**தற்கூற் றாமெனச் சாற்றினர் புலவர்'** (நா. 195)

எடுத்துக்காட்டுக்காக மனோன்மணிய நாடகத்தில் நடராஜன், குடிலன் இவர்களின் தனிமொழிகளையும் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் இத்தனிமொழி பெறும் செல்வாக்கினையும் இங்கு நினைவுகூரலாம். திருக்குறளில் பல அதிகாரங்கள் தனி மொழியமைப்பில் நாடகக் கூறுகள் நிரம்பியதாய் உள்ளன. எடுத்துக்காட்டாகக் காமத்துப் பாலில் ***'படர் மெலிந்து இரங்கல்' (117), 'தனிப்படர் மிகுதி' (120), 'நினைந்தவர் புலம்பல்' (121), 'பொழுது கண்டு இரங்கல்' (123), 'நெஞ்சொடு புலத்தல்' (130)*** முதலிய அதிகாரங்கள் நல்ல தனிமொழிப் பகுதிகளாகும்.

## சுவைகள்

நாடகத்திற்குப் பல்சுவை, பார்ப்பதற்கும் படித்து உணர்வதற்கும் வேண்டிய ஒரு அமைப்பாகும். சிலப்பதிகாரம் மூன்று சுவைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதனை மூன்று காண்டங்களும் விளக்குகின்றன. பண்டத்திற்கு உப்பு


படிப்பகம்

www.padippakam.com


போல, ஒரு கதைக்குச் சுவையாகும். திருக்குறள் ஒரு தமிழ்ப் பண்பாட்டுக் களஞ்சியம் என்றாலும் அது ஓர் சுவைக்களஞ்சியம் ஆம். நாடகத்திற்கு வேண்டிய சுவைகளை நாடக இயல் பின்வருமாறு காட்டுகிறது.

**'மனனிகழ் பெற்றி வெளியிற் றோன்றுமா**
**றியலுஞ் சுவைய ... துவகை பெருமிதம்**
**நகைசமம் வெகுளி வீயப்பிழிப் பவல**
**மச்ச மென்மனா ராரியப் புல வோர்'** (நா. 39)

என்று குறிப்பிடுகின்றது. இச்சுவைகளில் பலவற்றிற்கு எத்தனையோ திருக்குறள் களை எடுத்து நாடகங்கள் அமைத்திட முடியும். உதாரணமாக, இச்சுவைகளில் பெருமிதச் சுவையை நாடக இயல் பின்வரு மாறு கூறுகிறது.

**'கல்வி தறுக விசைகொடை யடியா**
**வெஞ்சா வுரனு மஞ்சா முரணும்**
**விஞ்சா நிற்பது விளையும் பெருமிதம்'** (நா. 43)

என்று குறிப்பிடுகின்றது. எல்லோரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்கும் பெருமிதத்திற்குப் பின்வரும் இரு குறட் பாக்களிலும் இருபெருந் தானைத் தலைவர் களைக் காணலாம்.

**'என்ஐமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர்என்ஐ**
**முன்னின்று கல்நின் றவர்** (படைச்செருக்கு - 1)

**கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்'** (படைச்செருக்கு - 4)

இவ்விரு குறள்களிலும் தமிழ் மறவரின் பேராண்மையையும் பெருமிதத்தைதயும் வீரம் கொப்பளித்திட அழகிய நாடகங் களாக ஆக்கிக் காட்டிட முடியும்.

## பாத்திரங்கள்

நாடகங்களில் உறுப்பினர்கள் என்பது வரையறுக்கப்பட்ட குணச்சித்திரங்களைக் கொண்ட அமைப்பாக இருத்தல் வேண்டும். நாடகங்களில் அசுரர்கள், தேவர்கள், அரக்கர்கள், முனிவர்கள், யோகியர்கள் முதலியோர்களும் நம்மைப் போன்ற குணமுள்ளவர்களும் குற்றமுள்ளவர்களும்

**கயமை அதிகாரத்தில் அடுத்தடுத்து இரண்டு குறள்களில் திருவள்ளுவர் இரண்டு பாத்திரங்களை நமக்கு அறிமுகப்படுத்து கின்றார். முரண்பட்ட அவ் இரு பாத்திரங்களை நாம் முழுக்க உணர்ந்து ஒரு இலக்கியத்தைப் படைப்பதற்கு உரிய இரு குறட் பாக்களாக அவ் இரண்டு குறள்களும் உள்ளன.**

உறுப்பினர்களாக வந்து செல்வார்கள். இவ்வுறுப்பினர்களைப் பெரும் பாத்திரங் களாகவும் (Major Characters) சிறு பாத்திரங் களாகவும் (Minor Characters) பிரிப்பர். நாடகங் களுடைய கருப்பொருள்கள் நம் மனதில் ஆழப்பதிந்து விடுவதுபோல இவ்வுறுப்பினர் களும் பதிந்து விடுவது உண்டு. திருக்குறளில் இவ்வகை உறுப்பினர்கள் எண்ணற்றவர் களைத் தேடிப் பார்க்காமலே எளிதாகப் பெற்றுவிட முடியும். கண்டவர்களை வைத்துக் கதை எழுதுவதும் உண்டு. கற்பனையால் ஒருசில குணங்களை அடிப்படையாக வைத்து அதற்குரிய உறுப்பினர்களை உருவாக்குவதும் உண்டு. அவ்வகையில் திருக்குறளில் திருவள்ளுவர் சுட்டிச் சென்ற மாந்தர்கள் இவ்விருவழிப்பட்டவர்களாகவும் இருக்க லாம். அவர்களை மையமிட்டுப் பல அங்கங்கள் கொண்ட நாடகங்கள் எழுது வதற்கு உரிய குணாதிசயம் கொண்டவர் களாக அவ்வுறுப்பினர்கள் ஒரு குறளிலோ அல்லது ஒரு அதிகாரத்திலோ திருவள்ளுவரால் அங்கு நன்கு படம் பிடித்துக் காட்டப்படுகிறார்.

டாக்டர். முவ. அவர்களின் 'கயமை' நாவல் நாம் அனைவரும் நன்கு அறிந்த புகழ்பெற்ற இலக்கியமாகும். தாம்


படிப்பகம்

www.padippakam.com


சந்தித்த போலிப் பெரிய மனிதர்களிடம் கண்ட அனுபவங்களை வைத்து உருவான நாவல் என்று கூறுவர். அவ்வகையில் 'கயமை' என்றதொரு அதிகாரம் திருக்குறளில் வருகின்றது. இவ் வதிகாரம் நாடகம் எழுதுவோர்க்குக் கிடைத்த அழியாக் கருவாகும். படைப்பிலக்கியங்களில் இரண்டு முரண்பட்ட பாத்திரங்கள் வரும்பொழுது படிப்பார்க்கும் பார்ப்பார்க்கும் அது விருந்தாகும். நீண்ட கோட்டிற்கு அருகில் ஒரு சிறு கோடு கிழிக்கப்படும்பொழுதும், கருப்பு நிறத்திற்குப் பக்கத்தில் வெண்மை நிறத்தைத் தீட்டும் பொழுதும் நாம் வேறுபாடுகளை நன்கு அனுபவிக்கின்றோம். அதுபோலக் கயமை அதிகாரத்தில் அடுத்தடுத்து இரண்டு குறள்களில் திருவள்ளுவர் இரண்டு பாத்திரங்களை நமக்கு அறிமுகப் படுத்துகின்றார். முரண்பட்ட அவ் இரு பாத்திரங்களை நாம் முழுக்க உணர்ந்து ஒரு இலக்கியத்தைப் படைப்பதற்கு உரிய இரு குறட்பாக்களாக அவ் இரண்டு குறள்களும் உள்ளன. முதல் உறுப்பினரை அறிமுகப் படுத்தும் குறள்,

**'மக்களே போல்வர் கயவர் அவர்அன்ன**
**ஒப்பார் யாம்கண்டது இல்'**


இக்குறளில் ஒரு கயவனை நமக்குத் திருவள்ளுவர் ஒப்பனையில்லாமல் ஒழுங்கு படுத்திக் காட்டுகிறார். இக்குறளில் ஒரு கயவனையும் அவனைவிட ஒரு நல்ல கூட்டம் என்று கருதப்படுகின்ற மக்கள் திரளையும் இக்குறளில் நாம் பார்க்கின்றோம். அடுத்த இரண்டாவது குறளில் அந்தக் கயவனைவிட மோசமான ஒரு உறுப்பினனை அறிமுகப்படுத்துகின்றார். அம்மோசமான உறுப்பினன் வேறு யாரும் அல்லன். சமூகத்தில் நல்லவன் என்று கருதக்கூடியவன் தன்னுடைய குணச் சேட்டைகளால் அக் கயவனைவிட மோசமானவன் என்று கணக்கெழுதப்படுகிறான். அவனை விளக்கிடும் குறள்தான் இது.

**'நன்றிஅறி வாரின் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்'**

இக்குறள்களில் நாம் கண்ட இவ் இரு பெரும் பாத்திரங்களும் அலாவுதீன் என்றோ அலிபாபா என்றோ கூறிட முடியாது. நாம் சந்திப்பவர்கள், இதுவரை சந்திக்காமலிருந்தால் இனி சந்திக்கப் போகின்றவர்கள். பாத்திரங்கள் எவ்வாறு பின்னப்படல் வேண்டும் என்பதற்கு இந்த இரண்டு குறள்களும் உரைகல் அல்ல. அவைகளை வரையறுத்திடும் இலக்கண நூற்பாக்கள். தங்கம் என்று கருதிடுகிறோம். அது பித்தளையாகக் கூட இல்லை. குப்பை என்று ஒதுக்கிவிட்டவை கோபுரத்தில் வைத்து அழகு பார்த்திடும் உன்னதத் தன்மையை அடைகின்றன. இப்படிப்பட்ட பாத்திரங்கள் நாடகங்களுக்கு மெருகு கூட்டிடும் அழியாத பாத்திரங்களாகும். எடுத்துக்காட்டுக்காகக் காட்டப் பட்டவை. இவையிரண்டும். இவைகளைப் போல இன்னும் எத்தனையோ பெரும் பாத்திரங்களும் சிறுபாத்திரங்களும் திருக்குறளில் நிறைய உண்டு.

## முடிவுரை

இவ்வண்ணம் ஒரு நாடகத்திற்கு வேண்டிய மேலே கண்ட இலக்கண அமைப்புகளன்றி நாடகக் கலைக்கு வேண்டிய சுட்டிக் காட்டாத பொருள் பொருத்தம், நடை மெய்ப்பாடுகள் திருக்குறளில் அதிகாரங்களில் கோவையாகவும் பல குறள்களில் சிதறியும் கிடக்கின்றன. திருக்குறள் ஓர் தமிழ் மறை என்பர் தமிழில் மறை வேண்டும் என்பார். திருக்குறள் ஒரு தேசீய நூல் என்பர் தேசிய ஒருமைப்பாடு கொண்டார். திருக்குறள் ஓதற்கு எளிது, உணர்தற்கு அரிது என்பர் உரையார். கடுகிலும் அணுவிலும் துளைத்தும் கண்டகடலென்பார் காதலுடையார். பூவிற்குத் தாமரை, பாவிற்குக் குறளென்பார் பாவலர் பெருந் தேவனார். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்பார், பாட்டுக்கொரு புலவர். நாடக மாடிட நயம்பல அங்குண்டு என்பர் நாடக வாணர். வள்ளுவம் ஒரு வாழ்க்கை நூல்தான். ஆனால் வாழ்க்கை ஓர் நாடகம்



என்பது தான் மனிதனின் வரவு செலவுக் கணக்கில் எழுதப்படும் சுத்தமான கணக்காகும்.



படிப்பகம்

www.padippakam.com


*பின்னிணைப்பு - 1*

# வேங்கைமான்

காட்சி 1

**உறுப்பினர்கள்** : தலைவி மான்விழி

**தலைவன்** : வேங்கைமார்பன்

**இடம்** : காவிரி ஆற்றுமணல்

**காட்சியமைப்பு** : கூந்தலென நெளிந்து கிடக்கும் ஆற்று மணலில் சிற்பி செதுக்கிய சித்திரப்பாவை என மான்விழி இருக்கின்றாள். இமயத்தின் சிறகொத்த மார்பும் அம்மார்பிலே வழிந்து ஓடும் பனியெனச் சந்தனச்சேறும் மாலையும் சூடிய வேங்கைமார்பன் தேனெடுக்கும் வேடனென, தினவொத்த தோள்களுடன் வருகிறான். மான்விழியின் அமுது உமிழ் நிலவுமுகம் வாடிய பாங்கு கண்டு வருத்தமடைகிறான். முன்பு மார்பைத் தொட்டிலாக்கி மகிழ்ந்த மான்விழி அவன் மார்பினை வேம்பென வெறுத்து வேறு புறம் நோக்குகிறாள். அவளது தோள் யாழில் வேங்கைமார்பனின் விரல்கள் மேவுகின்றன. கண்களால் மார்பில் சாய மாட்டாயோ என்று சாடை செய்கிறான். மான்விழி மாட்டேன் எனத் தலையசைக்கின்றாள். ஆற்று மணலில் அவள் கால்விரல்கள் கோலமிட கண்கள் அக்கோலத்தினைக் கணக்கிடப் பொழுது கழிந்திடும் அவ்வேளையில்,

**மான் :** பரத்த! உன் மார்பு பொது உடைமை. யார் பூசிய சந்தனச்சேறு? எக்கள்ளி சூடிய மாலை?

**வேங் :** (மெல்ல நகைத்து) ஓ! உடைமைப் பொருளில் ஏற்பட்ட ஊடுருவலில் வந்த ஊடலா! உனக்காகப் பொதியமலைச் சந்தனமும் அம்மலையில் மண்டிக் கிடந்த மலைப்பூக்களில் தெரிந் தெடுத்த பூக்களில் தொடுத்த மாலையையும் அணிந்து வந்திருக்கின்றேன்.

**மான்:** பொய்க்கு நீ நாயகன். அது புரியாத புதியவள் அல்லள். உன்னை என்றோ நான் அறிவேன். (அவன் மாலையைத் தொட்டு) உண்மையை நவின்றிடு. உனக்கு வாளெடுக்கத் தெரியும். பூத்தாள் பறித்து பூத்தொடுக்கத் தெரியாது. பகைவர்களின் சினம் தெரியுமே தவிர வனப்பூக்களின் குணம் அறியாய். எவள் பறித்த பூக்கள், எவள் தொடுத்த மாலை?[1].

**வேங் :** (திகைத்து) பொங்கிவரும் புது அலையே. பன்மலர் பறித்ததும் இவ் விரல்கள். தொடுத்ததும் உன்தோள் கண்ட கரங்கள். வம்பு செய்கின்றாய். வாடாத மாலை கண்டும் வருத்தமுறுகிறாய். மாலை வாடியிருந்தால் நீ மயங்கியது நன்று. புது மாலை கண்டும் மான் ஐயமேனோ?

**மான்:** பொய்! எனக்குச் சூடிய மாலையென ஏமாற்றிடுகிறாய். திரண்டிடும் காவிரியாற்றில் புதியவளோடு புணையாடவோ புனல் விளையாட்டு விளையாடவோ இப்புதுமாலையுடன் வந்த நீ வெண்ணெய் திருடிய கள்வக் கண்ணன் போல என்னைக் கண்டதும் புரண்டு பேசுகிறாய். வெட்கப்பட வேண்டாம். வேண்டியவர்களுடன் ஓடம் விடு. இக்கணமே நான் ஒழிகிறேன்.

(காவிரிக் காட்டில் மான் துள்ளி நடக்கின்றாள். வேங்கை மானைத் தழுவுகிறது. மலையில் மயில் சதிராடுவது போல வேங்சை"யின் மார்பில் மான் புரள்கிறாள், அச்சுந்தரச் சூழலில்)

**வேங் :** (கூந்தல் நீவி) மான்! (மார்புச் சுகம் கண்ட மான் மயங்கிக் கிடக்கிறது, மறுமொழியில்லை)

**வேங் :** மான்விழி. (தாளினை உயர்த்தி) நான் உன்னிடம் யாரையும்விட மிகுந்த காதல் உடையேன்.[2]

(துள்ளித் தள்ளி நிற்கிறாள்)

1. கோட்டுப்பூச் சூடினும் காயும், ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று

2. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள் யாரினும் யாரினும் என்று



படிப்பகம்

www.padippakam.com


மான் : தெரியுமே உங்களை? சொன்னீர்களே சற்றுமுன். உம், மீண்டும் சொல்லுங்கள். யாரைவிட, யாரைவிட?

(வேங்கை மார்பன் கலங்கிப் போனான். பின் சற்று நிதானித்து)

**வேங் :** ஓ! யாரைவிட என்பதால் ஏற்பட்ட கோபமோ, என் தாயைவிட அன்புடையேன். பிறக்கப் போகும் பிள்ளையை விடக் காதலுடையேன். போயிற்றா ஐயம்.

(அருகில் வருகிறான். ஆடிய அழகு அமைதியாக இருக்கிறது. பஞ்சுக் கரங்களை விரித்து ஓடும் வரிக்கோடுகள் கண்டு மகிழ்ந்து பேசுகிறான்.)

மான், இந்தக் கரத்தில் சூள் ஒன்று செய்து தரப்போகிறேன்.

**மான்:** சூள் உங்களுக்குக் கடைச்சரக்கு. வித்தைக்காரனுக்கு மாங்காய் மாணிக்கமாம். கோடிச்சூள் செய்தகோ இது ஒரு கோடி! என்ன சூளோ? பேடிக்குரை.

**வேங் :** உன்னைப் பிரிந்திருந்த போதெல்லாம்.........

**மான் :** என்னைப் பிரிந்திருந்த போதெல்லாம்..........

**வேங் :** உன்னையே நினைத்தேன்[3]. இந்தப் பிறவியிலும் உன்னைப் பிரியக்கூடாது[4] என்று என் தலையில் நானே அடித்துக் கொண்டு சூள் செய்து கொண்டேன்.

(வேங்கையைத் தள்ளி, மான்விழி துள்ளி நிற்கிறாள். குறுகுறு விழிகளில் பனித்திரைகள் படர்கின்றன. கூவிய குயில் கேவுகிறது)

**வேங் :** (புரியாத நிலையில்) மான்! ஏன் கேவுகிறாய். செய்த பிழை என்ன?

**மான் :** (கேவி) இனியுமுண்டோ பிழைகள் செய்வதற்கு?

**வேங் :** நான் அறியாமல் செய்த பிழைகள் தான் என்னவோ? சொல்லிடுவாய். திருந்திடுவேன்.

**மான் :** உன்னையே நினைத்தேன் என்றீர். நினைக்காமலும் இருந்திருக்கிறீர். இந்தப் பிறவியில் பிரியமாட்டேன் என்று நெஞ்சாரப் புகன்றீர். வருபிறவிக்குக் கூட்டிச் செல்ல எவளைத் தேர்ந்தெடுக்கின்றீர்? அடியவள் கேட்கின்றாள், அவளெங்கே?

(வேங்கை அவள் அறியாமையை எண்ணி மகிழ்ந்து சேயள்ளும் தாயென அள்ளிக் கொள்கிறான். அவள் இயந்திரக் கரும்பானாள். காவிரித் தென்றலில் கருங் கூந்தல்கள் வேங்கைமார்பனுக்குச் சாமரையாகின்றன. பேரின்ப நாயகனுக்கு இடையூறாய்த் தும்மல் தோன்றுகிறது. தும்மியும் விட்டான். அவன் தும்மி முடிந்தவுடன்)

மான்: கையுங் களவுமாய்ப் பிடித்துவிட்டேன். யாரை நினைக்கத் தும்மினீர். உம் காதலியர் கூட்டம் நினைக்கத்தானே?[5]

**வேங் :** (அயர்ந்து) அடடா! நீ என்னை நூறாண்டு வாழி என்று வாழ்த்துவாய் என்று தும்மினேன்?

**மான் :** அத்தனையாண்டுகளோடும் அவளோடு ஆண்டு அனுபவிக்க நான் நூறாண்டு வாழ்க என வாழ்த்தவேண்டுமென்று நீர் தும்மினீரோ?[6] பேராசைப் பித்தர். தொட்டது போதும், விட்டது குறை, தூரப் போங்கள்.

(வலையில் அகப்பட்ட வாளைமீன் நழுவுவது போல நெளிந்து செல்லும் அவளைத் தன் கை வலைகளுக்குள் சிறையிடுகிறான். மறுபடியும் அப்பூத் தென்றல் புறப்பட்டு மான்விழியின் கூந்தலைக் கலைக்கிறது. அதே தும்மல்

3. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக் கனள்.
4. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக் கண்நிறை நீர்கொண் டனள்.
5. வழுத்தினாள் தும்மினேன்ஆக, அழித்து அழுதாள் யார்உள்ளித் தும்மினீர் என்று.



6. ஊடி இருந்தேமாத் தும்மினார், யாம்தம்மை நீடுவாழ் கென்பாக்கு அறிந்து.
7. தும்முச் செறுப்ப அழுதாள், நுமர்உள்ளல் எம்மை மறைத்திரோ என்று.
8. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர் இந்திரர் ஆகுதிர் என்று.



படிப்பகம்

www.padippakam.com


வந்து முட்டுகிறது. மோதுகிறது தும்மக் கூடாது[7] என்று தேள் கொட்டிய கள்வன் போல துடியாய்த் துடிக் கிறான். தும்மலை அடக்க ஆடிடும் அவனைக் கண்டு)

**மான் :** ஓ! புரிகிறது. நும் காதலிகள் நும்மை நினைப்பதை வெளிப்படுத்தும் தும்மலை எனக்குக் காட்ட மறைக்கிறீர் களோ? அந்தக் காமக் களவுக்கூட்டம் உம்மை நன்கு நினைக்கட்டும். ஏன் இந்தக் கூத்து. தும்மித் தொலையும்.

(வேங்கை அவளின் அறியாமையைக் கண்டு உளம் மகிழ்ந்து தங்கமேனிக்கு மெருகிடும் தட்டானாகவும் இசை மீட்டும் பாணனாகவும் மாறுகிறான்.)

**மான் :** ஓ! இப்பயிற்சி யாரிடம் கற்றுக் கொண்டது? முன்பில்லையே? எங்கோ செய்ததை இங்கும் வித்தையெனக் காட்டுகிறீர் போலும்![8]

(ஊடலில் பந்தலில் படரும் கொடி யென அவளைத் தன் கைகளால் பந்த லிடுகின்றான். வெளியில் சிரித்திட அஞ்சி உள்ளுக்குள் நகைத்த வேங்கை அமுதால் செய்த அணங்கென வானமுதத் தில் பளிச்சிடும் அவள் அவயங்கள் கண்டு மகிழ்கிறான்[9]).

**வேங் :** மாவடு பிளந்தன்ன கண்கள்!
நிரல்பட்ட வலம்புரிப் பற்கள்
அரைவட்ட நிலா நெற்றி!
மாம்பழக் கதுப்பெனக் கன்னங்கள்!
செம்மை படர்ந்த செந்தமிழ்த்தேன்
இதழ்கள்!
கருங்கூந்தல் காடு!
இவை அத்தனையும் தாங்கிய.....

**மான் :** நிறுத்துங்கள் போதும்! எவள் அழகை இங்கே ஒப்புவிக்கிறீர்? ஒத்தி கைக்கு நானா கிடைத்தேன்? இவளுக்கு என்று ஓர் மனம் உண்டு.

**வேங் :** என் மனமே? என்ன மனம்?

**மான் :** உம்மைப்போல அடுத்தவரை நினைக் காத தமிழ்ப் பெண் மனம். இத்தமிழ் நிலத்தின் தன்மானம். அம்மானத்திற்கு இம்மானம் எம்மானம். போகிறேன். பொழுதுபட்டதால் போகவில்லை. உன் புனைந்துரை கேட்டு வெட்கிப் போகிறேன். வாழ்ந்தவரைக்கும் மகிழ் கிறேன். எப்பிறவியிலும் உமக்குத் துணை யாகத் தவம் கிடக்கும் இப்பேதை.

(பொன்னி மணலில் கன்னி நடக்கிறாள். காளை தொடருகிறான். புகலிடம் தேடிப் பறந்திடும் பறவையின் வேகத்தைத் தடுத் திடும் அம்பாகிறான் வேங்கை. பழங் கதை போல ஆட்டனத்தி ஆதிமந்தி யாக மாற வேண்டிய அவர்கள் வாழ்வு அக்காவிரியாற்றில் புதுக் காவியமாகத் துவங்குகிறது. காவிரியில் நனைந்து விட்ட தையலுக்குத் தன் கைகளைத் தொட்டிலாக்குகிறான். முட்டி மோதிச் செல்லும் காவிரியில் ஒருவர் அச்சத்தை ஒருவர் கட்டித் தழுவிப் போக்கிடு கின்றனர். அவர்கள் மேனிகள் காவிரி யாற்று நீரால் பொன்னிறமடை கின்றன. அந்நீரோட்டத்தில் பாலும் தேனும் கலந்துவிட்டதை[10] எப்படித் தான் காவிரிப் பெண் கண்டுகொள் ளாமல் விட்டாளோ? அவளின் முகம் அவனுக்கு ஏடாகிறது, வேங்கை இலக் கியம் எழுதத் தொடங்குகிறான்.)

(காட்சி முடிவு)

9. நினைத்திருந்து நோக்கினும் காயும், அனைத்துநீர் யார்உள்ளி நோக்கினீர் என்று.

10. பாலொடு தேன்கலந்து அற்றே, பனிமொழி வால்எயிறு ஊறிய நீர்.



படிப்பகம்

www.padippakam.com


# பாடலாம் திருக்குறளை!

ம. இராசேந்திரன்



திருக்குறளுக்கு 1945ஆம் ஆண்டிலேயே பண் அமைத்துச் சுர தாளக் குறிப்புகளையும் தந்திருக்கிறார், மயிலாடுதுறை விசுவநாதசாஸ்திரி.

அண்மையில் (18-11-2000) நாரத கான சபாவில் முத்தமிழ்ப் பேரவையின் இசை விழாத் தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக முதல்வரிடம திருக்குறள் மதுர கீர்த்தனையின் முதல் தொகுதியை, செம்மங்குடி சீனிவாச ஐயர் காட்டியிருக்கிறார். இந்நூலை வெளியிட தமிழ் வளர்ச்சித் துறை உடனே நடவடிக்கை மேற்கொள்ளும் என்று விழா மேடையிலேயே முதல்வர் அறிவித்தார். முதல்தொகுதியில் அறத்துப் பாலின் 19 அதிகாரங்களுக்கு 41 கீர்த்தனைகள் அமைக்கப்பட்டிருந்தன. விசுவநாத சாஸ்திரியின் தம்பி வைத்தீசுவரனிடமிருந்து (வயது 91) மதுர கீர்த்தனையின் இரண்டாவது பகுதி கிடைத்தது. நூலின் முன்னுரையில், திருக்குறள் முழுமையும் கீர்த்தனைகளாக அமைக்கப்பட்டிருக்கும் குறிப்புக் கிடைத்தது. குறிப்பைக் கொண்டு தேடிப்பிடித்துப் பொருட்பாலைப் பெற முடிந்தது. அதில் 70 அதிகாரங்களுள் 29 அதிகாரங்களுக்கே சுர தாளக் குறிப்புகள் கிடைத்தன. விசுவநாத சாஸ்திரியின் இன்னொரு தம்பி குப்புசாமியிடம் (வயது 100) சென்று விசாரித்து அவரது மகன்கள் இராஜாமணி (சென்னை), பாலசுப்பிரமணியம், இராமநாதன் (பெங்களூர்) ஆகியோருடன் தொடர்பு கொண்டு மீண்டும் தேடிப் பார்த்ததில் பொருட்பால், காமத்துப்பால் அடங்கிய விசுவநாத சாஸ்திரியின் கையெழுத்துப்படி பெங்களூரிலிருந்து கிடைத்தது. ஏற்கெனவே வெளிவந்துள்ள அறத்துப்பாலின் இரண்டு பகுதிகளையும் ஒரே நூலாகத் தமிழ் வளர்ச்சித்துறை தற்போது வெளிக்கொணர்ந்துள்ளது. பொருட்பாலும் காமத்துப்பாலும் அச்சாகிக் கொண்டிருக்கின்றன. இந்நூல்களை இசைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடமாக வைத்திட முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற பக்தி இலக்கியங்களுக்கு ஏற்கெனவே இசையமைத்திருக்கிறார்கள். பாரதியார், பாரதிதாசன் கூடத் தமது


படிப்பகம்

திருக்குறளில் 'குழலினிது யாழினிது' என்பதில் இசையும் 'கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே' என்பதில் கூத்தும் குறிப்பிடப் படுகின்றன. திருவள்ளுவருக்கு இசை பற்றியும் கூத்து பற்றியும் தெரிந்திருக்கிறது என்பதோடு இசையில் ஆழமான புலமையும் இருந்திருக்கிறது என்பதற்குப் 'பண் என்னாம் பாடற்கியையபின்றேல்' எனும் குறள் சான்றாகிறது. பண் என்பது பாடலோடு பொருந்தி இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

கவிதைகளுக்கு இசைக்குறிப்புகள் தந்துள்ளனர். ஆனால் திருக்குறள் போன்ற இலக்கியத்துக்கு இசையமைத்து சுர தாளக் குறிப்புகள் தந்திருக்கிற விசுவநாத சாஸ்திரியின் முயற்சி வியப்பளிக்கிறது.

திருக்குறளில் 'குழலினிது யாழினிது' என்பதில் இசையும் 'கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே' என்பதில் கூத்தும் குறிப்பிடப் படுகின்றன. திருவள்ளுவருக்கு இசை பற்றியும் கூத்து பற்றியும் தெரிந்திருக்கிறது என்பதோடு இசையில் ஆழமான புலமையும் இருந்திருக்கிறது என்பதற்குப் 'பண் என்னாம் பாடற் கியையபின்றேல்' எனும் குறள் சான்றாகிறது. பண் என்பது பாடலோடு பொருந்தி இருக்க வேண்டும் என்று கூறுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, பண்ணிற்கு முதன்முதலில் விளக்கம் தந்துள்ளார் திருவள்ளுவர்.

அதிகாரத்துக்குப் பத்துப்பாடல் என்று ஒரே பொருள் மேல் அடுக்கிவரும் அமைப்பு இசைப்பாடலுக்குரிய பண்பு.' இந்த அமைப்பு முறையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். மங்கல வாழ்த்து எனும் பொருள் மேல், திங்களைப் போற்றுதும் தொடங்கி, பூம்புகார்ப் போற்றுதும் என்று நான்கு பாடல்கள் வரும். மூவர் தேவாரப் பாடல்கள் பத்துப்பத்துப் பாடல்களைக் கொண்ட பதிகங்களாக இருக்கும்.



திருக்குறளுக்கு இசையமைக்கும் போது பொருளின் தன்மைக்கேற்ப ராகங்களும் யாப்புக்கேற்ப தாளங்களும் அமைக்கப்பட வேண்டும். இரண்டையும் மிகச் சிறப்பாகச் செய்துள்ளார் விசுவநாத சாஸ்திரி.

திருக்குறளுக்கு இசையமைக்கும்போது பொருளின் தன்மைக்கேற்ப ராகங்களும் யாப்புக்கேற்ப தாளங்களும் அமைக்கப்பட வேண்டும். இரண்டையும் மிகச் சிறப்பாகச் செய்துள்ளார் விசுவநாத சாஸ்திரி.

திருக்குறளுக்கு இவ்வாறு இசையமைத்துப் பாடும் போக்கு தொடர்ந்து வந்திருக்கிறது. கவிஞர் தஞ்சை இராமையா தாஸ், அதிகாரத்துக்கு ஒரு குறளை எடுத்துப் பல்லவியாக்கி அதற்கேற்ப அனுபல்லவி, சரணம், முடுகு என்று தன் கற்பனையில் பாடல்களை அமைத்து, 'திருக்குறள் இசையமுதம்' என்று 1961இல் வெளியிட்டுள்ளார், (ரவீந்திரா பதிப்பகம், சென்னை).

அறத்துப்பால், பொருட்பால் இரண்டிலிருந்தும் ஒவ்வொரு அதிகாரத்தின் கருத்தையும் விளக்கும் வகையில் புலவர் பொ. முனியப்பன் காவடிச்சிந்தாக 1977இல் வெளியிட்டுள்ளார். (கழக வெளியீடு)

ஆனால் விசுவநாத சாஸ்திரி திருக்குறளுக்கு இசையமைத்து சுர தாளக் குறிப்புகளையும் தந்துள்ளார். இவர் திருக்குறளைப் பொருள் விளங்கும்படியாக இசைப் பாடலாக்கியுள்ளார். சான்றாக முதல் குறளை 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று தொடங்காது 'பகவன் முதற்றே உலகு' எனும் இரண்டாவது அடியில் தொடங்கியுள்ளார்.

விசுவநாத சாஸ்திரி, மயிலாடுதுறைக்கு அருகில் கம்பர் பிறந்ததாகக் கூறப்படும் திருவழுந்தூரில் (தேரழுந்தூர்) 1892-ல் பிறந்தவர். தொடக்கக் கல்வியைத் திருவையாற்றிலும் மயிலாடுதுறையிலும்



படிப்பகம்

www.padippakam.com


திருச்சியிலும் பெற்றிருக்கிறார். இளமைக் காலம் தொட்டே இசையில் பெருவிருப்பம் கொண்டு தேவகோட்டை வெங்கடராம ஐயங்கார், நாமக்கல் நரசிம்ம ஐயங்கார், சிமிழி சுந்தரம் ஐயர் ஆகியோரிடம் சங்கீதம் கற்று வாய்ப்பாட்டில் சிறந்து விளங்கியிருக்கிறார். இராக ஆலாபனையிலும் சுரம் பாடுவதிலும் தேர்ந்த புலமை பெற்றிருக்கிறார்.

தாமே கீர்த்தனைகள் இயற்றியிருக்கிறார். வடமொழியில் 118 கீர்த்தனைகளும் தமிழில் 308 கீர்த்தனைகளும் 'ஜயதேவர் தசாவதாரம்' போன்ற நாடகங்களுக்கு 124 உருப்படிகளுமாக 550 கீர்த்தனைகளை, இவர் இயற்றியுள்ளார்.

இவை தவிர திருக்குறள் கீர்த்தனைகள், அச்சுத தாஸர் கீர்த்தனைகள், திருவாய் மொழிப்பிரபந்தம், திருப்பாவை, பாரதியார் பாடல்கள், திருப்புகழ், திருவருட்பா என்று மற்றவர்களின் பாடல்களையும் கீர்த்தனைகளாக்கியுள்ளார். பல நூல்கள் எழுதியுள்ளார். இன்னும் சில நூல்கள் அச்சாகாமலேயே உள்ளன.

இவருடைய கீர்த்தனைக்கு 1931ஆம் ஆண்டு மியூசிக் அகாதெமி விருதளித்துப் பாராட்டியுள்ளது. இவர் புராண நாடகங்களும் சமூக நாடகங்களும் எழுதியிருக்கிறார். சிலவற்றில் நடித்தும் இருக்கிறார். புராணக் கதை இசை நிகழ்ச்சி நடத்தியதோடு ஆர்மோனியம், கோட்டு வாத்தியங்கள் ஆகியவற்றை இசைக்கும் திறனும் பெற்றிருந்தார். திருக்குறளை இவர் இசைப் பாடலாக்க விரும்பியதன் நோக்கம் குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்:-


'மக்கள் எல்லோருமே நல்வாழ்வு வாழ வேண்டும். அதற்குரிய பேரறிவைத் தந்து பண்படுத்துவது திருக்குறள். ஆகவே, இக்குறள் ஒவ்வொருவருடைய நாவிலும் எப்பொழுதும் இருந்து, தக்க சமயங்களில் ஊக்க வேண்டும். அதற்குக் குறள்களை மனப்பாடம் செய்ய வேண்டும் - பொருள் தெரிந்து கொண்டுதான்.

மனப்பாடம் செய்வதற்கு வசன நடைகளைவிட இனிய இசைவடிவங்கள் மிக எளியவை. மறந்தும் போகாது. பாடப் பாட பொருள்களும் விளங்கும். கேட்போர்க்கும் இன்பம். இசையின் இனிமைக்காகவேனும் இவை அடிக்கடி பாடவும் கேட்கவும் பெறுமாகையால் பயன்மிகப் பெரிதே. மேலும் இசையிலக்கண முகமாக ஆராய்ந்ததில், இந்தத் திருக்குறளும் பூர்வீக சங்கீதப் பெரியோர்களின் உருப்படிகளைப் போல் சிறந்த கௌரவமான சாஸ்த்ரீய இசைக்கு மிக வாய்ப்பாக இருக்கும் பொழுது, இது இனிய இசை வடிவங்களில் தோன்ற வேண்டியது அவசியமல்லவா?

திருக்குறள் நூல் முழுவதையும் கவனித்தால், கீர்த்தனைக்குரிய இலக்கணங்கள் - அதாவது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகளுக்கேற்ற சிறந்த வாய்ப்புகள், அதியற்புதமான எதுகை பிராசங்கள் ஒவ்வொரு கீர்த்தனத்திலும் ஒரு தனிக் கருத்தின் விவரம், பல்லவியுடன் அனுபல்லவி சரணங்களுடைய கருத்துகளின் ஆச்சரியமான இணைப்பு ஆகிய சிறந்த முறைகள் பொருந்தி இலங்குவதைக் காணலாம். ஆகவே எல்லோரும் இந்நூலைப் பாடியும் உய்யட்டும் என்று கருதி இதனைத் திருவள்ளுவர் இசைத்தார் போலும். அவரே தம் குறள்களைப் பாட்டுகளாகப் பாடியுமிருப்பார்" என்று முன்னுரையில் விசுவநாத சாஸ்திரி குறிப்பிட்டுள்ளார்.

விசுவநாத சாஸ்திரியார் திருக்குறளை இசைப் பாடலாக்கியதோடு நின்றுவிடவில்லை. தாமே பல ஊர்களுக்கும் பள்ளிகளுக்கும் சென்று மாணவர்களின் மத்தியிலும் பொதுமக்களிடமும் பாடிக்காட்டிப் பாடும் முறை பற்றி விளக்கிக் கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு மட்டுமின்றி தமிழர்கள் வாழும் பிற மாநிலங்களுக்கும் சென்று திருக்குறளை இசையுடன் பரப்பும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். 1958 நவம்பரில் கல்கத்தா சென்று அங்குள்ள பாரதி தமிழ்ச்சங்கத்தில் தொடர்ந்து




படிப்பகம்

www.padippakam.com


திருக்குறள் இன்னிசைக் கச்சேரியும் சொற்பொழிவும் நடத்தியுள்ளார். அங்கிருந்து பிகார் மாநிலத்தைச் சேர்ந்த ஜாம்ஷெட்பூருக்கு (இப்போது டாட்டா நகர்) சென்று அங்குள்ள தமிழ்ச் சங்கத்தில் திருக்குறள் இன்னிசைக் கச்சேரி நடத்திக் கொண்டிருக்கும்போது, டிசம்பர் குளிர் தாங்காமல் நோய்வாய்ப்பட்டு அங்கேயே 31-12-1958-ல் இறந்து போயிருக்கிறார்.

திருக்குறள் மதுரகீர்த்தனையை 1945ஆம் ஆண்டிலேயே விசுவநாத சாஸ்திரி எழுதி முடித்திருந்த போதும், வெளியிட வசதி இல்லாமல் பலரிடம் உதவி கேட்டுள்ளார். அப்போது தமிழக அரசியலிலும் மக்களிடத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தவர்களில் சிலர் கூட, 'இதில் எல்லாம் எனக்கு ஈடுபாடு கிடையாது' என்று இவருக்கு எழுதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

திருக்குறள் மதுரகீர்த்தனையை 1945ஆம் ஆண்டிலேயே விசுவநாத சாஸ்திரி எழுதி முடித்திருந்த போதும், வெளியிட வசதி இல்லாமல் பலரிடம் உதவி கேட்டுள்ளார். அப்போது தமிழக அரசியலிலும் மக்களிடத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தவர்களில் சிலர் கூட, 'இதில் எல்லாம் எனக்கு ஈடுபாடு கிடையாது' என்று இவருக்கு எழுதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

தில்லி சங்கீத நாடக அகாதெமி இவருக்கு 1953 முதல் ஐந்தாண்டுக்காலம் மாதா மாதம் நூறு ரூபாய் ஓய்வூதியமாக வழங்கி வந்திருக்கிறது. ஒவ்வொரு மாதமும் தான் உயிரோடு இருப்பதை நிரூபித்து ஓய்வூதியம் பெற்று வந்திருக்கிறார். தனக்குக் கிடைத்த ஓய்வூதியத்தில் இரண்டு வேட்டி, இரண்டு சட்டைகளுக்கு மேல் வைத்துக் கொள்ளாமல் சிக்கனமாக வாழ்ந்து, சேமித்த தொகையைக் கொண்டு திருக்குறள் மதுர கீர்த்தனைகள் முதல் பகுதியை மூவாயிரம் ரூபாய் செலவு செய்து அச்சேற்றி வெளியிட்டிருக்கிறார். இந்நூலை அப்போது அமைச்சராக இருந்த எம். பக்தவத்சலம் 1875 8-ல் வெளியிட்டிருக்கிறார். சங்கீத நாடக அகாதெமியிடம் நூல் வெளியீட்டுக்கு உதவி கேட்டுள்ளார். ஆயிரம் ரூபாயை அகாதெமி அவருக்கு 1961-ல் வழங்கியபோது அவர் உயிருடன் இல்லை.

திருக்குறளை இசைப்பாடலாக்கி, ராகம், தாளம், சுர இசைக்குறிப்புகள் அமைத்திட, விசுவநாத சாஸ்திரி பாடிப்பாடி முயற்சி செய்ததையும் அச்சிட்டு வெளிக்கொணர அவர் பட்ட பாட்டினையும் ஒவ்வொரு ஊராக அலைந்து அதைப் பரப்பிட அவர் எடுத்துக் கொண்ட முயற்சியையும் நினைவு கூர்கின்றனர் அவரது தம்பியரும் மகன்களும்! எதுவும் கூறாமல் கூடவே இருந்து அவருக்கு அவர்கள் உதவி வந்துள்ளனர். அவர்களுக்கும் தனக்கும் ஆறுதலாக விசுவநாத சாஸ்திரியார் அப்போது அடிக்கடி கூறுவாராம்.

"ஒரு நாள் இதன் அருமை தெரிந்த ஒருவர் வருவார். அப்போது இதன் பெருமை வெளிப்படும்."

முதல்வரின் ஆணையைப் படித்தபோதும் தமிழ் வளர்ச்சித்துறை வெளியிட்டுள்ள திருக்குறள் மதுர கீர்த்தனையைப் பார்த்த போதும், விசுவநாத சாஸ்திரியின் வார்த்தைகளை அவரது தம்பி மகன்கள் இராமநாதனும் பாலசுப்பிரமணியனும் ராஜாமணியும் திரும்பத் திரும்பக் கூறி நெகிழ்ந்து போயினர்.

(கட்டுரையாளர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்)


நன்றி : தினமணி


படிப்பகம்

www.padippakam.com


# குறளின் செய்தி

## ப. அருணாசலம்



திருவள்ளுவர் என்றவுடன் ஆழ்ந்தகன்ற பேரறிவும் அருள் பழுத்த நெஞ்சமும் கொண்ட முனிவர் ஒருவரின் தோற்றமே நம் கண்முன் வந்து நிற்கின்றது. மன்பதை உய்ய நமக்குச் சிறந்த அறநூலை யாத்தளித்த அப்பெருமான், உலகியலில் ஒருவரோடு ஒருவர் உறவாடும் போது மேற்கொள்ள வேண்டிய நியதிகளையே எடுத்துக் கூறினாரல்லர். அவர் சிந்தனை இன்னும் ஆழமானது. அவர் வகுத்தளித்த அறநூல் இந்திய நாட்டில் தோன்றிய பெரும் முனிவர்கள் சுட்டிக்காட்டிய உயர்ந்த குறிக்கோளை நோக்கியே நம்மை அழைத்துச் செல்கிறது. உண்மையில் அறம் என்பதும் சமுதாய நடைமுறை, அரசியல் நீதி என்ற அளவில் அடங்கியதுமன்று. இவை அறத்தின் சில புறத்தோற்றங்களே. வாழ்க்கை நெறிமுறைகள் அனைத்தையும் உள்ளடக்கிய வாழ்க்கைத் தத்துவமே அறம் என்பது. நாம் இன்று சமயம் என்று கூறும் போது அப்பாலைய உலகச் சிந்தனை என்ற அளவில் சுருங்கிய பொருளிலேயே வழங்கி வருகின்றோம். அவ்வாறு கொண்டால் சமயத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகவே அறத்தைக் கொள்ள வேண்டும்.

பொதுவான சில சமுதாயவறங்களே திருக்குறளில் உள்ளன என்ற கருத்தையே பலரும் கூறுகின்றனர். மக்களைப் பல வாறாகப் பிரித்து, ஒரு குலத்துக்கொரு நீதி என்ற நிலையில் பேசாது, மானிட ஈடுபாட்டோடு அடிப்படையான சில நீதிகளைக் கூறுகிறார்[1] வள்ளுவர் எனக் கூறுவதோடு, சமய நூற்கள் கூறும் வீட்டைப் பற்றித் திருவள்ளுவர் தனியாகக் கூறவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதில் ஆர்வமிக்கவர்களாகவும் சிலர் உள்ளனர். ஆயின் திருக்குறளைப் பயிலும்போது இச்சிந்தனை தானா தோன்றுகிறது? சமய நூற்கள் பயன்படுத்தும் மொழியினை, உலகியலுக்கு அப்பாற்பட்ட இறை இயலுக்குத் தொடர்பான மொழியினைப் பேரளவில் திருவள்ளுவர் பயன்படுத்தவில்லை என்பது துண்மையே. கண்ணன் கூறிய கீதை போன்றோ, தேவாரம், நாலாயிரம், திருமந்திரம்





படிப்பகம்

www.padippakam.com


போன்றோ இந்நூல் அமைப்பில்லை என்பதும் உண்மையே. ஆயின் தனக்கென்று ஒரு தெளிந்த நெறியை மேற்கொண்டு, சமய உலகச் சொல்லாட்சிகள் மிகுதியாக விரவப் பெறாது, தெளிந்த மொழியில் இறைவன் திருவடிப் பேற்றை நோக்கமாகக் கொண்டே இந்நூல் எழுந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவர்[2] எனக் கல்லாடம் கூறுவதும் கருதத் தக்கது. இந்து சமயம், இந்து மதம் எனக் கூறாது, "இந்து தருமம்" என்றே காந்தியடிகள் கூற விழைந்ததும்[3] தருமம் என்பது இச்சிந்தனைகளை யெல்லாம் உள்ளடக்கிய ஒன்று என்று கருதியதாலேயாம்.

இறைவன் திருவடிப் பேற்றையே சமய நூற்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அதனை அடைதற்குரிய நெறிகளாகச் சில வற்றைக் கூறுவர். அன்பு நெறி, அறிவு நெறி, தொண்டு நெறி, யோக நெறி என்ற நான்கினையும் வேத ஒழுக்கத்தவர்கள் சிறப்பாகக் கூறுவர். கீதை என்னும் தெய்வ நூலில் இதனைக் காணலாம். இந்நான்கு நெறிகளும் கிளைத்தெழுவதற்கு ஏற்ற நிலையிலமைந்த வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமே அறம். இந்நான்கு நெறிகளும் உதவும் குறிக்கோளை அடைவதற்கே இத் தத்துவமும் உதவுகிறது. "கல்லை மென்கனி ஆக்கும் விச்சை கொண்டு என்னை நின்கழற் கன்பனாக்கினாய்"[4] என்று பாடினார் மாணிக்கவாசகர். நம்மைக் கனிவித்து இறைவன் திருவடிப் பேற்றுக்கு ஆளாக்குவதே அறம். பயன் கருதாது பிறருக்குச் செய்யும் பணிகளை வற்புறுத்துவதோடு நின்றுவிடாது, தன்னலத்துறவால் ஆன்ம ஒளியினைப் பெருக்கி மலரச் செய்வதையே இவ்வற நூல் தன்னிறுதி நோக்கமாகக் கொண்டுள்ளது. உலகியலில் தொடங்கும் வாழ்க்கை, உலகியலைத் துணையாகக் கொண்டே, தன் வாழ்க்கையை உலக நலன் நாடித் துறக்கிறது. இதனைப் பிறிதொரு வகையில் கூறுவதென்றால் உலக நலனில் தன்னைக் கரைத்துவிடுகிறது. அறத்தின் முதிர்ந்த நிலை உலகினைச் 'சடம்' என்ற நிலையில் காட்டாது, இறைவன் ஊடுருவி ஒளிரும் ஒன்றாகக் காட்டவல்லது. இதனையே,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

என்றார் வள்ளுவர். ஆகவே வள்ளுவர் கருத்துப்படி உலக நலனில் தன்னைக் கரைத்தலும் இறைவனோடு கலத்தலும் வேறு வேறன்று என்பது தெளிவு.

திருக்குறளின் அமைப்புச் சிலருக்கு இவ்வெண்ணத்தை விளக்காதிருக்கலாம். ஆயின் திருக்குறள் கூறும் செய்தியனைத்தையும் முழுமையாகக் கொண்டு சிந்தித்துப் பார்க்கும்போது இவ்வெண்ணமே தோன்றுகிறது. இந்நூல் கூறும் பொருளால் இதனை முப்பால் என வழங்குவர். அறம், பொருள், காமம் என்பன முப்பால் என வழங்கப் படும். வடமொழிவாணர் இவற்றைத் திரிவர்க்கம் என்பர். திருக்குறளில் காமம் பற்றி இருபத்தைந்து அதிகாரங்களும், பொருள் பற்றி எழுபது அதிகாரங்களும், அறம் பற்றி முப்பத்தெட்டு அதிகாரங்களும் உள்ளன. அறத்துப்பாலில் சில அதிகாரங்களே இறையுலகச் சிந்தனைகளாக உள்ளன; ஏனைய உலகியற் சிந்தனைகளே. ஆகையால் ஆறுவரியில் பொருளீட்டி இன்பந் துய்த்தலே திருவள்ளுவருடைய எண்ணமாகவிருந்தது என்பர். வாழ்க்கையே இந்த அளவில் முடிந்துவிடுவதுதானா? அதுவும் இன்பம் என்பது காம இன்பத்தைச் சுட்டுவது[5] என அறியும்போது, இக்கருத்து வேடிக்கையாகவே தோன்றுகின்றது.

இங்குப் பிறிதொரு வினா எழுகிறது. திருக்குறள் திருவடிப்பேற்றையே குறிக் கோளாகக் கொண்டுணர்த்தும் நூல் என்றால், சமயச் சிந்தனைக்கு, இறை இயல்பாகக் கூறுவனவற்றிற்கு மிகுந்த இடம் அளித்திருக்கலாமே? ஒரு நூலில் கூறப்படும் பொருளின் பெரும்பான்மை சிறுபான்மை குறித்து அந்நூலை மதிப்பிடுவது என்பது ஒரு முறை; பிறிதொன்று அந்நூல் உயிர் நிலையாகப் பேசும் பொருள்பற்றி மதிப்





படிப்பகம்

www.padippakam.com


பிடுவது. பண்டை அகத்திணைப் பாடலைக் கொண்டு இதனை விளக்க முடியும். பத்துப் பாட்டுள் பட்டினப்பாலை என்பது ஓர் அகத்திணைப் பாடல். முந்நூற்றோரடிகளை யுடைய இப்பாடலில் அகம்பற்றி எழுந்த அடிகள் நான்குதாம்.[6] ஏனைய பிற செய்திகளையே விளக்குகின்றன. இருப்பினும் இதனை அகத்திணைப் பாடல் எனக் கூறுவது, இப்பாட்டின் உயிர்நிலையாக அகப்பொருள் விளங்குவதாலேயே. இதைப் போன்றுதான் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ள திருக்குறளில் அறத்துப்பாலில் வரும் ஒன்பது (பத்து) அதிகாரங்களே இறை இயல் பற்றியன. ஏனைய உலகியல் பற்றியன என்று கூறினாலும், நூல் முழுமைக்கும் உயிர்நிலையாக விருப்பன இறை இயல் பற்றிய செய்திகளே. ஆதலின் இதனை ஒரு சமய நூல் எனக் கூறுவதிலும் தவறில்லை.

திருக்குறளை ஓர் அறநூல் என்கிறோம். வடமொழி வாணர்கள் தருமம் என்று கூறுவதும், தமிழறிஞர்கள் அறம் என்று கூறுவதும் ஒன்றே. வடமொழியில் தருமம் பற்றி எழுந்த சிறந்த நூல் மனு தர்ம சாத்திரம் என்பது. ஜெர்மன் தத்துவஞானி நீட்ஷே (Nietzshe) என்பார், "விவிலிய நூலை மூடிவிட்டு மநுதருமத்தைத் திறந்து பாருங்கள்" எனக் கூறினார் என்பர்.[7] இக்கூற்றும் மனு தருமம் ஒரு சமய நூல் போன்றதே என்ற எண்ணத்தை நமக்குத் தருகிறது. இந்நூல் உலகப் படைப்பில் தொடங்கி, இறையோடு இரண்டறக் கலத்தலில் முடிவுறுவதுபோல், அறத்துப்பால் உலகம் தோன்றுவதற்குக் காரணனாக விளங்குகின்ற இறைவனில் தொடங்கிப் 'பேரா இயற்கை' அடைவதில் முடிகிறது. எனவே அறம், தருமம் என்று நாம் கூறுவது, உலகியல் வாழ்வு அளவில் அமைந்துவிடும் நெறியன்று. உலகில் நாம் இன்பமாக வாழ உதவுவதோடு, இறையுலகிலும் நம்மைக் கொண்டுய்க்கும் நெறியாகும். இம்மைக் குரியது நீதி, மறுமைக்குரியது அறம் என்ற பொருளில் பரிமேலழகர் குறிப்பிடுவர்.[8] உண்மையில் நீதியை உள்ளடக்கி நிற்பதே அறம் என்பது.



திருக்குறள் இறை உலகச் சிந்தனைகளை முதன்மையாகக் கொண்டுள்ளதென்றால் அறத்துப் பால் அளவில் நின்று விடலாம்; பொருட்பால், காமத்துப்பால் என்பன இறையுலகச் சிந்தனைகளோடு எத்தகைய தொடர்பும் உடையவல்லவே? என்ற வினா எழுகிறது. காமத்துப் பாலைத் திருவள்ளுவர் பாடியிருக்க முடியாது என்று பரிந்துரை கூறியவர்களுமுண்டு. இம்மூன்றற்கு முள்ள இயைபினைச் சிந்திப்பது பயனுடையது. அறம் வீட்டிற்கு, இறையுலகிற்கு உய்க்கும் கருவி; பொருளும் இன்பமும் உலகியல் வாழ்க்கை பற்றியன. ஆகவே இம்மூன்றனையும் இறைஇயல் பற்றியன, உலகியல் பற்றியன எனப் பாகுபடுத்த முயல்வர். உண்மையில் உலகியல், இறையியல் என்பன ஒன்றினின்றொன்று வேறுபட்ட இரு வேறு வாழ்க்கைகளா? இறை இயல், உலகியல் என வாழ்க்கையைப் பிரித்தலும், ஒன்றினொன்று வேறுபட்டது என்னுங் கருத்திலன்று. எடுத்து வற்புறுத்தும் நிலையில் இவ்வாறு கூறப்பட்டாலும் வாழ்க்கை ஒன்றே. பாரமார்த்திகம், லௌகிகம் என வடமொழி வாணரும் கூறுவர். வாழ்க்கையை முழுமையாகச் சிந்தியாமல், பல்வேறு வகையாகப் பாகுபாடு செய்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு ஒழுக்கம் என எண்ணுவது வாழ்க்கைச் சீரழிவுக்கே காரணமாகும். இதனை நன்குணர்ந்தே வாழ்க்கை முழுமையினையும் சிந்திக்கிறார் திருவள்ளுவர். இதனைச் சிறிது விரிவாகவே ஆராய்வோம்.

அறம், பொருள், காமம் பற்றி எழுந்த நூற்கள் சாத்திரங்களாகவே உள்ளன. மநுதரும சாத்திரம், கௌடல்யர், வாத்சாயனர் காம சாத்திரம் (இந்நூல் காம சூத்திரம் என வழங்கப்படுகிறது) என்பனவற்றைச் சிறப்பாகக் கூறலாம். வாழ்க்கை நோக்கங்கள் இவ்வாறு தனித்தனியாகப் பெரியோர்களால் விளக்கப்பட்டமையில், அது இறைவன் திருவடிப்பேற்றை நோக்கமாகக் கொண்டு அமையவேண்டும் என்பதில் நாட்டமில்லாதவர்களாகச் சென்றுவிட்டனர். எடுத்துக் காட்டாக, அறத்தையும் பொருளையும்


படிப்பகம்

www.padippakam.com


எண்ணாது, இன்பம் ஒன்றையே பொருளாகக் கொண்டெழுந்த நூல், பரத்தையர் இன்பத்தையும் பலபடப் பேசியது; பிறன் மனை நயத்தலையும் இன்பக் கூறாகக் கொண்டு விளக்கத் தலைப்பட்டுவிட்டது. உயர்ந்த குறிக்கோளோடு அமையவேண்டிய வாழ்க்கை சீரழிக்கப்பட்டது. இங்கு அறவுணர்வு மில்லை; பொருளுணர்வுமில்லை. வள்ளுவரும் இதுபற்றியே,

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கள் இல் (141)

எனக் கூறினார்.

இக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரும், "இன்பம் ஒன்றையே நோக்கும் இன்ப நூலுடையார், இத்தீயொழுக்கத்தையும் பாக்யம் என்று கூறுவராதலின், 'அறம் பொருள் கண்டார்கண் இல்' என்றார்; எனவே அப்பேதைமை உடையார் மாட்டு அறமும் பொருளும் இல்லை என்பது பெறப் பட்டது" எனக் குறிப்பிட்டார்.

இதைப்போன்று பொருள் (அருத்தம்) பற்றி எழுந்த நூற்களும் ஊதியம் ஒன்றையே எண்ணி அதனை அடையும் நெறிபற்றிய அளவில் அறவுணர்வுக்கு மாறானவற்றிலும் நாட்டம் கொண்டு வாழ்க்கையின் குறிக்கோளை அறிந்தோ அறியாமலோ சிதைத்துவிட்டன. கௌடல்யத்தை ஒருமுறை பயின்றாலே இது தெளிவாக விளங்கும். திருவள்ளுவரோ,


அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் (755)

என்றும்,

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (754)

என்றும் கூறுவர்.

எனவே வாழ்க்கையை உலகியல், இறையியல் எனப் பாகுபாடு செய்து, இறை இயலுக்கு ஒரு நெறி, உலகியலுக்குப் பிறிதொரு நெறி எனக் கூறுங் கருத்துத் திருக்குறட் கருத்தன்று என்பது தெளிவு. இறை இயலுக்கு இட்டுச் செல்லாத உலகியல் உலகியல் அன்று. முரணின்றி இறை இயலுக்கேற்ற உலகியலைப் படைத்துத் தரும் எண்ணத்தோடுதான் இந்திய அறிஞர்கள் தனித்தனியாக ஆராய்ந்த இவ்வுறுதிப் பொருள்களை ஒன்றாகக் கொண்டு ஆராய்ந்து, எத்தகைய வாழ்க்கையை நாம் மேற்கொண்டிருப்பினும், இறுதி நோக்கத்தை மறவாது வாழ நம்மைத் தூண்டுகிறார் வள்ளுவர்.



வாழ்க்கை முழுமையினையும் எண்ணும் திருவள்ளுவரைப் பிறிதொரு நிலையிலும் காண்கிறோம். தனி வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, உலக வாழ்வு என்ற சிந்தனைகள் திருக்குறள் பயிலும் போது நமக்குப் பிறக்கின்றன. தன்னைப் பெற்ற தந்தைக்குப் பெருமை தேடிக் கொடுக்கும் அளவுக்கு ஒருவன் தன் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும், என்று வள்ளுவர் விரும்புகிறார்? இத்தகைய ஒருவன், சிறந்த பெண் ஒருத்தியை வாழ்க்கைத்துணையாகப் பெற்று இன்புறுகிறான்.

கண்டுகேட் டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (1101)

ஐம்புல இன்பத்தையும் ஒருங்கு துய்த்த தலைவன் மகிழ்ந்து கூறும் கூற்று இது. முதன் முறையாகத் தலைவியயடைந்து இன்புறும் நிலையிலும் அவன் உள்ளம் புலன் இன்பத்திலேயே மூழ்கிவிடவில்லை. சமயத் தலைவர்கள் கூறும் வைகுந்த இன்பத்தையும் எண்ணுகிறான்; அதனோடு எண்ணிப் பார்த்துத் தான் பெற்ற இன்பத்தில் மூழ்குகிறான்.

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு (1103)

தன் வாழ்க்கையில் அமைந்துள்ள அறவொழுக்கத்தையும் தான் பெறும் புலன் இன்பத்தோடு சேர்த்து எண்ணிப் பார்க்கிறான். அறவொழுக்கத்தால் தான் பெறும் இன்பம் போன்று தோன்றுகிறது பெண்ணின்பம்.

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு (1107)


படிப்பகம்

www.padippakam.com


தெய்வ உலகில் பெறும் இன்பத்திலும் உயர்ந்ததாகக் கருதியவன் அற உணர்வால் பெறும் இன்பத்திலும் உயர்ந்ததாகக் கருதவில்லை. குறிக்கோள், தெய்வ உலகு - அவன் அடையாத ஒன்று; அற உணர்வு அவன் பெற்றவொன்று; ஆகையால் இவ்வாறு கூறுகின்றானா? உயர்ந்த இலட்சியத்தை நோக்கிச் செல்லும் அற உணர்வில், அவன் உள்ளம் எந்த அளவுக்கு இன்பம் கண்டது என்பதனையும் இப்பாடல்கள் உணர்த்தும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் மனைவி பால் பெறும் புலன் இன்பத்தினையும் அறத்தால் அடையும் உணர்வின்பம், தெய்வ உலகில பெறும் ஆன்ம இன்பம், இவற்றோடு எண்ணியே அவன் உள்ளம் மகிழ்கிறது என்பது தெளிவு.


இதற்கேற்பவே பல மலர்களிலும் தேனை உண்டற்குச் சுற்றித் திரியும் வண்டுகள் போலப் பல பெண்களையும் இன்பப் பொருளாக எண்ணிச் சுற்றித் திரியும் ஆண் மகனாகக்[10] காமத்துப் பாலில் வரும் தலைவனை நாம் காணவில்லை. வள்ளுவர் காட்டும் தலைவன் தூய ஒழுக்கத்தவன். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் ஊடல் ஒழுக்கத்துக்குக் காரணமாகப் பரத்தையர் பிரிவைக் கூறும். காம இன்பத்தை மிகுப்பது என்ற அளவில் ஊடலை ஏற்றுக் கொண்ட வள்ளுவர், அதற்குக் காரணமாகப் பரத்தையர் பிரிவைக் கூறவில்லை. பரத்தை என்ற சொல் தானும் திருக்குறளில் இல்லை. இன்பத்தை மிகுப்பதற்காகக் காரணமின்றியே ஊடுகிறாள் தலைவி என்பதுதான் திருவள்ளுவர் கருத்து.

இல்லை தவறு அவர்க்காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு (1321)

எனவே மனமாசில்லாத அறவுணர்வு அடிப்படையாகவமைய இன்பத்துப் பாலை ஆக்கித் தந்துள்ளமை காணலாம்.

சமுதாய வாழ்வு பற்றிப் பேசும் பொருட்பாலும் இறுதி நோக்கத்திற்கு மாறு படாத சிந்தனைகளைக் கொண்டுள்ளனவே. அரசன் சிறப்பை விளக்கும் போது,

அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு (384)



எனக் கூறியவர் கல்வி கேள்விகளால் ஒருவன் அடைகின்ற அறிவு, அறத்தில் அவன் வாழ்வைச் செலுத்துவதாக இருக்க வேண்டும் என்றும் கருதுகிறார்.

சென்ற விடத்தாற் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு (422)

ஓர் அரசன் எத்தகைய பெரியோரைத் தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும் என்று கூறும்போதும் “அறனறிந்து மூத்த அறிவுடையோரைக் கொள்க” (441) என்பர்; அதனால் மறுமை நலன் விளையும் என்பதையும் சுட்டிக் காட்டுவர்.

மனநலத்தி னாகும் மறுமை மற்றஃதும்
இனநலத்தி னேமாப் புடைத்து (450)

சமுதாய வாழ்விலும் மறுமை பற்றிய சிந்தனை வள்ளுவரிடமிருந்தது என்பதனை,

மனையாளை யஞ்சு மறுமை யிலாளன்
வினையாண்மை வீறெய்த லின்று (904)

இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இம்மையு மின்றி வரும் (1042)

என்னும் பாடல்களாலு மறியலாம். இவ்வாறு பொருட்பாலிலும் அறவுணர்வு, மறுமைச் சிந்தனை மறக்கப்படாதிருத்தல் கருதத்தக்கது.

இனி, அறம் இறைவன் திருவடிப் பேற்றுக்கு நம்மை எவ்வாறு ஆளாக்குகிறது? என்பதை ஆராய்வோம். பொதுவாக அறத்தை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பாகுபடுத்துவர். ஒரு சிலர் இல்லறம் பெரிதா? துறவறம் பெரிதா? என்ற வினாவை எழுப்பி, வள்ளுவர் இல்லறத்தையே பெரிதும் பாராட்டுகிறார் எனக் கூறுவதில் ஆர்வமிக்கவர்களாக உள்ளனர். ஆயின் திருக்குறளை ஆய்ந்து பயிலும்போது, இல்லறம், துறவறம் என்பன இரு வேறு அறங்களல்ல என்பதும், அறம் என்ற ஒன்றின் இரு வேறு நிலைகள் - படிகள் - என்பதும் தெரியவரும். இல்லறம் அன்பின் அடிப்படையில் தொடங்கப் பெறுகிறது. துறவறம் அருளுடைமையில் தொடங்குகிறது. அன்பும் அருளும் இரு வேறு உணர்வுகளல்ல; ஒன்றன் மலர்ச்சியே பிறிதொன்று.


படிப்பகம்

www.padippakam.com


துறவுக்கோலம் மிகவும் மதிக்கத் தக்கது; ஆயின் அதற்கேற்ற அக வளர்ச்சி இன்றி யமையாதது. துறவுக்கோலம் ஒன்றே துறவு நிலையை அறிவுறுத்தாது.

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. (757)

என வள்ளுவரே இதனைக் கூறுவர்.

இதனைச் சிறிது விரிவாகவே ஆராய் வோம். துறவறவியலில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களைச் சிந்தித்தால், அவை இல்லறத்தாருக்கு வற்புறுத்தப்பட்ட கடமை களின் வேறானவை எனக் கூற முடியவில்லை. இல்லறத்தார்களுக்கு வற்புறுத்தப்பட்ட கடமைகளே முதிர்ந்த நிலையில், துறவறத் தார்களுக்கும் வற்புறுத்தப்படுகின்றன என்னலாம். அருளுடைமையைப் பற்றிக் குறிப்பிட்டோம். அருளுடைமையை அடுத்துப் புலால் மறுத்தலைக் கூறுவர். இது அருளுடைமைக்கு மாறான செயலைக் கடிவதே. அருளுடைமையை எதிர்மறை வாய்பாட்டான் வற்புறுத்துவதே.

பொருள் ஆட்சி போற்றாதார்க்கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு (252)

என்பது குறள். அடுத்த அதிகாரம் தவம். இதுவும் உயிர்க்கு உறுகண் செய்யாத, அருளாட்சியால் மலர்வதே.

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு (261)

என்னும் பாட்டு இதனை விளக்கும்.

தவத்தை அடுத்துக் கூடாவொழுக்கம் என்ற ஒன்றைக் கூறுவர். தாம் விட்ட காம இன்பத்தை உரன் இன்மையான், மீண்டும் விரும்பத் தான் ஏற்றுள்ள கோலத்துக்கு அவ்விருப்பம் ஏலாத தாகப்படவே, சமுதா யத்தை வஞ்சிப்பதற்காக மறைந் தொழுகு தல் கூடா ஒழுக்கம். இல்லறத்தான் தன் காம இன்பத்தை மனைவிபால் பெற்று நிறைவடைதல் வேண்டும். அவனும் மனைவிபால் நிறைவுகொள்ளாது பிறன் மனை நயத்தல் அறமன்று.

அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவாமை நன்று (147)

அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில் (142)

பல பெண்களையும் காமுற்று வாழும் கயமை வாழ்க்கையை வென்றவனே, புலன் இன்பத்தையும் வரையறையில் நின்று பெறு கின்றவனே, இல்லறத்தில் வாழ்கின்றவ னாவன். வரையறையில் நின்று பெற்றுவந்த புலன் இன்பத்தையும் ஒருவன் வென்று உயர்ந்து துறவு நிலையை அடைகிறான். துறவு என்ற படியை அடைந்தவன், நெஞ்சில் துறவாது துறந்தார் போல் வஞ்சித்து வாழ்தல் கொடிது. பலரறியத் தன் இல்லாளையும் துறந்து, உலகத்திற்குக் காமத்தை வென்று உயர்ந்தவன் என்று அறிவித்துவிட்டுத் தன்னெஞ்சறியப் பிறன் மனையை விரும்புதலே கூடாவொழுக்கம். இதுபற்றியே,


வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின் (272)

என்றார். எனவே பிறனில் விழைவுதான் கூடாவொழுக்கமாக வளர்வதைக் காண் கிறோம். இவ்வாறு வளர்ந்துவிடக் கூடாது என்று உணர்த்துவதையே இவ்வதிகாரத் தில் காண்கிறோம்.

துறவுக்கோலம் மிகவும் மதிக்கத் தக்கது; ஆயின் அதற்கேற்ற அக வளர்ச்சி இன்றி யமையாதது. துறவுக்கோலம் ஒன்றே துறவு நிலையை அறிவுறுத்தாது.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (280)

என்று இவ்வதிகாரத்தை முடிக்கிறார். இப்பாட்டுத் துறவுநிலையை எதிர்ப்ப தன்று; இல்லறத்தாரின் வேறாகத் துறவறத் தாருக்கென்று ஒரு தனிக்கோலம் உண்டு; தகுதி யில்லாத நிலையில் மேற்கொள்ளும் கோலம் பயனற்றது என்பதை வற்புறுத்துவதே. வள்ளுவர் வடிவுக்கு மதிப்பளிப்பவரல்லர் என்பது திருக்குறளில் பலவிடங்களிலும் காண்பதே.




படிப்பகம்

www.padippakam.com


போலித்துறவை அறநூல் ஆசிரியர்கள் பலரும் கடியவே செய்கின்றனர். ''துறவு வேடங்கள் மட்டுமே ஒருவனைத் துறவி யாக்குவதில்லை; வேடங்கள் இன்றியே உயிர்ப் பொதுமை உணர்வுடன் இருப்பதே சாலும்,'' என்பது மநுதரும சாத்திரம்."

கூடா ஒழுக்கத்தின் பின்னர்க் காண லாகும் கள்ளாமை என்னும் அதிகாரமும் இல்லறத்தாருக்கு விதித்த வெஃகாமையின் வளர்ச்சியே. இன்ப நாட்டம் கூடா வொழுக்கத்துக்குக் காரணமாவது போல், பொருள் நாட்டம் களவுக்குக் காரணமா கின்றது. இங்குக் களவு என்பது இன்று நாம் வழங்கும் திருட்டு என்ற பொருளை உடையதன்று.

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும் (176)

என்று வெஃகாமையில் இல்லறத்தானுக்குக் கூறினார். (இங்கு இல்லறமும் அருளாகிய அறத்தை விரும்பி நடத்தப்படுவதே என்ப தனைத் தெளிவாகக் கூறுகிறார்) இல்லறம் நிகழ்த்துவோன் தன் இல்லறத்துக்கு வேண்டு வது என்பதால், நெறியல்லா நெறியில் சென்றாவது பெறுவேன் என்றெண்ணிப் பிறன் பொருளை விரும்பக்கூடாது. வறுமை இவ்வாறு விரும்பத் தூண்டலாம். தெளிந்த அறிவோடு இல்வாழ்க்கையில் தலைப் பட்டவர்கள் வறுமை ஏற்பட்டாலும் பிறன் பொருளை விரும்பார் எனக் கூறிய வள்ளுவர் இல்லறமும் புலனை வெல்லும் ஓர் பயிற்சி நிலையம் என்று கருதியிருப்பர் போலும்.

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர் (174)

என்று இல்லறத்தாரைப் 'புலம்வென்ற புன்மையில் காட்சியவர்' என்கிறார்.

இல்லறத்தில் வாழ்ந்தே புலனடக்கத்தால், பொருள் நாட்டத்தை வென்றுயர்ந்து துறவு நிலையை அடைந்தவர்கள் துறவறத் தினர். துறவறத்துக்குரிய கோலம் கொண்ட பின்பும் பொருள் நாட்டம் முற்றிலும் வெல்லப்படாத நிலையில் பிறர் பொருளை அவரறியாது வஞ்சித்துக் கொள்ளக் கருது தலே களவு. பிறிதொரு வகையில் வெஃகுத லின் வளர்ச்சியே களவு. இதற்கு ஏற்ப வெஃகாமையில் கூறியது போன்றே கள்ளா மையிலும் கூறுகிறார்.

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கள் இல் (285)

என்பது கள்ளாமை பற்றிய பாட்டு. இல்லறத்தான் பிறன் பொருளை விரும்பி அதனை அடைதற்குப் பொல்லாதவற்றைச் சூழ்கின்றான். துறவறத்தான் பிறன் பொருளை விரும்பி வஞ்சித்துக் கொள்ள அவன் சோர்வை எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறான். பொருள் நாட்டம் வெல்லப் படாத நிலையில் துறவினை மேற்கொள்ளு வதால் வெஃகுதல் களவாக வளருதற்கே காரணமாகும். பரிமேலழகர், அருள்கருதி ஆற்றின் கண் நின்றான் என்னுந் தொட ருக்கு விளக்கம் எழுதும் போது, 'இல்லற நெறியால் அறிவு முதிர்ந்துழி யல்லது துறக்கப் படாமையின் அதனைத் துறவறத்திற்கு ஆறு என்றார்' எனக் குறிப்பிடுவர். இக்கருத்தும் ஒன்றன் வளர்ச்சியே பிறிதொன்று என்பதைத் தெள்ளிதிற் புலப்படுத்துகிறது.


கள்ளாமைக்குப் பின் வாய்மை கூறு கிறார். வாய்மை என்பது அகந்தூய்மை யின் வெளிப்பாடு.

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் (298)

என்பது வாய்மையில் வரும் குறள். இதனை இனியவை கூறலின் வளர்ச்சியாகக் கூற லாம்.

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (91)

என்பது இனியவை கூறலின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவது. அன்போடு கலந்து வஞ்சனை இலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாய்ச்சொல்லே இன்சொல் என்பது இதன் கருத்து. இப்பாட்டில் வரும் படிறின்மை என்பதற்குத் தூய்மை




படிப்பகம்

www.padippakam.com


எனப் பொருள் கூற முடியுமாயினும், பரிமேலழகர் வாய்மை எனக் கூறுவது சிந்திக்கத்தக்கது. இன்சொல் என்பதில் இனிமை அகத்தின் பண்பு. அகத்தானும் இன்சொலினதே அறம் (93) என வள்ளுவரும் கூறுவர். இவ்வின் சொல் இம்மை நலத்துக்குரிய நீதியையும் மறுமை நலத்துக்குரிய அறத்தையும் தரவல்லது என்பதனையே,

நயனின்று நன்றி பயக்கும் பயனின்று
பண்பின் தலைப்பிரியாச் சொல் (97)

என்னும் குறள் உணர்த்தும். ஆகவே இல்லறத்தானுக்கு விதித்த கடமைகளிலேயே இம்மை நலனும் மறுமை நலனும் அடங்கிக் கிடத்தலைக் காணலாம். இவ்வாறு மறுமையும் இம்மையும் இன்பம் தரும் இன்சொல் சிறிதும் தீது பயவாத வாய்மையாக, துறவறத்தான் வாயிலிருந்து வருகிறது என்றல் பொருத்தமாகவே தோன்றுகிறது.

துறவறவியலில் அடுத்த வதிகாரம் வெகுளாமை. இது இல்லறத்தார்க்கு விதித்த பொறையுடைமை வளர்ந்து முதிர்வது என்னலாம். தன்னைப் பிறர் இகழும்போது அல்லது தனக்குப் பிறர் கேடு செய்யும்போது, ஒருவன் பிறரை ஒறுக்க எண்ணுகின்றான். இவ்வாறு ஒறுப்பதால்வரும் இன்பம் சிறிது பொழுது நிற்பதே. ஒறுக்க எண்ணாது பொறுப்பதே அறமாவது. இப்பொறுமை துறவு நெறியில் நிற்போரின் ஆற்றலை இல்லறத்தார்க்கும் அளிக்க வல்லது.

துறந்தாரிற் றூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர் (159)

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின் (160)

பொறையுடைமை ஒருவனுக்குத் துறந்தார் போன்ற தூய்மையைத் தருகிறது; உண்ணாது நோற்கும் துறவிகளின் பொறுமையை விடவும், பிறர் இன்னாச் சொல்லைப் பொறுக்கும் இல்லறத்தார் பொறுமை சிறந்தது என்றும் எண்ணுகிறார். பிறர்



**துறவறவியலில் கூறப்படும் இன்னாசெய்யாமை என்பதும், இல்லறத்தானுக்கு விதித்த தீவினை யச்சத்திலிருந்து வளர்ந்து வருவதே. மறந்தும் பிறனுக்குக் கேடு செய்யாதே, தீமையினைத் தன் பகைவர்க்கும் செய்யாதொழிதலே சிறந்த அறிவுடைமை எனத் தீவினை யச்சத்தில் கூறுவர்.**

செய்யும் துன்பத்தைப் பொறுப்பதோடு இயற்கையளிக்கின்ற எத்தகைய இடையூறுகளையும் பொறுக்கும் வல்லமையோடு தவநெறியில் வாழ்கின்றவர்கள் துறவறத்தினர். "உற்ற நோய் நோன்றல்" (261) என்பது தவத்தின் முதல் இலக்கணம். சமுதாயம் தனக்குச் செய்யும் துன்பங்களைப் பொறுத்துயர்ந்து துறவுக்கோலம் கொண்ட துறவியர் மனத்திலே அப்பக்குவத்தை அடையாது புறத்தே அக்கோலத்தைக் கொள்ளும் போது பிறர் செய்யும் தீங்கினைப் பொறாத அவருள்ளத்தில் வெகுளி பிறக்கிறது. பக்குவமடையாத அவர் உள்ளத்தைக் கடிவதே வெகுளாமை. பொறையுடைமைக்கு மாறான வெகுளி அவர் உள்ளத்தில் வளர்தலாகாது என்பதை வற்புறுத்தவே,

இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை (310)

எனக் கூறினார். இல்லறத்தில் வாழ்ந்த போது, வென்று விட்டதாகக் கருதப்பட்ட உணர்ச்சிகள் வேருடன் களைந்தெறியப்படாத நிலையில் துறவறம் மேற்கொண்ட பின்னரும், ஒருவன்பால் மீண்டும் தலைதூக்கி அவனை வஞ்சித்து அழித்தற்குக் காரணமாகும். ஆகையால் வென்ற உணர்ச்சிகளை விழிப்புடனிருந்து ஒழித்தல் வேண்டும். வெகுளி தன் உள்ளத்தில் தோன்றி வளராது விழிப்புடன் தன்னைப் பேண வேண்டும் என்பதற்காகவே வெகுளாமையைத் துறவறத்தானுக்கு விதித்தார்.

துறவறவியலில் கூறப்படும் இன்னாசெய்யாமை என்பதும், இல்லறத்தானுக்கு விதித்த தீவினையச்சத்திலிருந்து வளர்ந்து



படிப்பகம்

www.padippakam.com


வருவதே. மறந்தும் பிறனுக்குக் கேடு செய்யாதே, தீமையினைத் தன் பகைவர்க்கும் செய்யாதொழிதலே சிறந்த அறிவுடைமை எனத் தீவினை யச்சத்தில் கூறுவர்.

அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல் (203)


இவ்வாறு கூறியவர், இன்னாசெய்யாமையில்,

அறிவினா னாகுவதுண்டோ பிறிதின் நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை (315)

என்பர். பிறிதோர் உயிரின் துன்பத்தைத் தனக்கு நேர்ந்த துன்பம் போன்று கருதாத விடத்து ஒருவன் பெற்றுள்ள அறிவால் எத்தகைய பயனுமில்லை என்பது இதன் கருத்து. தீமையைப் பகைவர்க்கும் செய்யாதே என்று ஓரிடத்துக் கூறிவிட்டுப் பின்னர், பிற உயிரின் துன்பத்தையும் தன் துன்பம்போல் ஒருவன் கருதவேண்டும் என்று கூறினால் முன்னையதன் வளர்ச்சியாகத் தானே பின்னையதைக் கொள்ள முடியும்! இன்னா செய்யாமை என்பது எதிர்மறை வாய்பாட்டின் அமைந்திருப் பினும் இனிய செய்தலை வற்புறுத்துவதே அவர் நோக்கம்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (314)

என்னும் குறள் இதனை உணர்த்தும். தனக்குத் தீமை செய்தவனுக்குத் தீங்கு நினைப்பது ஒரு மனநிலை; இல்லறத்தான் அவ்வெண்ணத்தை வெல்ல வேண்டும்; பிற மக்களையும் தன்னைப்போல் கருதி வாழும் மன வளர்ச்சியால் இது கைகூடும். பிற மக்களை மட்டுமின்றி எல்லா உயிர்களையுமே தன்னைப் போல் கருதி உயர்ந்தவன் துறவி. துறவிக்குரிய கோலத்தைக் கொண்ட பின்னால் தனக்குத் துன்பம் செய்யும் ஒரு மனிதனுக்குத் துன்பத்தைத் திருப்பிச் செய்ய எண்ணுவது தன் நிலைக்கு மாறானது என்பதை வற்புறுத்துவதே இவ்வதி காரம். தீவினையச்சத்திற்கும் இன்னாசெய்யாமைக்கும் உள்ள தொடர்பினைப் பிறிதோர் எடுத்துக்காட்டாலும் தெளிவு படுத்தலாம்.



தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான் (206)

என்பது தீவினையச்சம்.

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் (320)

என்பது இன்னா செய்யாமை.

இன்னா செய்யாமையில் அடுத்த வதிகாரம் கொல்லாமை. ஓர் உயிரினை அதன் உடம்பிலிருந்து பிரித்தலைக் கொலை என்கிறோம். அருள் உடைமையில் தொடங்கும் துறவறத்திற்கு இது முற்றிலும் மாறான ஒன்று. ஆகையால் கொல்லாமை என்பது அருளுடைமையினை எதிர்மறை வாய்பாட்டில் வலியுறுத்துவது எனக் கொள்ளலாம். ஆயின், கொல்லாமையில் வரும் பாடல்களைச் சிந்திக்கின்ற போது அருளுடைமை கனிந்து வளர்ந்த ஒரு நிலையாகவும் இதனைக் கொள்ளலாம். காந்தி அடிகளும் அகிம்சையினை ஓர் எதிர்மறைச் சிந்தனை என்ற அளவில் கொள்ளவில்லை[12] என்பதும் இங்குக் கருதத்தக்கது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற் றுள்எல்லாந் தலை (322)

என்பது கொல்லாமையில் வரும் பாட்டு. வள்ளுவர் இதனை அருளின் முதிர்ச்சியாகவே விளக்கக் காணலாம். அருளுடைமையில் வரும்

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை (244)

என்னும் பாட்டோடு ஒப்பிட்டுச் சிந்திக்கும்போது இது புலனாகிறது.

கொல்லாமையினை விளக்கும் இக்குறள் இரண்டு அறங்களை ஒருங்கு தொகுத்துக் கூறுகிறது. ஒன்று பகுத்துண்டல்; பிறிதொன்று பல்லுயிர் ஓம்புதல். ஜீவகாருண்ணியம் மனிதனுடைய துன்பத்தைத் துடைப்பதில் தொடங்கப்பெறவேண்டும் என்று கருதுகிறார் போலும்! பகுத்துண்டல் இல்லறத்தானுக்கு இல்வாழ்க்கையிலும் ஈகையிலும் வற்புறுத்தப்பட்ட கடன்.


படிப்பகம்

www.padippakam.com


பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்று மில் (44)

என்பது இல்வாழ்க்கையில் வரும் பாடல்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது (227)

என்பது ஈகையில் வரும் குறள். இல்லறத் தானுக்கு விதித்த பகுத்துண்டல், துறவறத் தானிடம் பல்லுயிர் ஓம்பலாக மலர்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் கருதுவ தாகக் கொள்ளலாம். இப்பாட்டுக்கு உரை எழுதிய பரிமேலழகரோ உண்பதனைப் பசித்த உயிர்கட்கும் பகுத்துக் கொடுத் துண்டு ஐவகை உயிர்களையும் ஓம்புதல் என்பர். அவ்வாறு கொண்டாலும் மனித சமுதாய அளவில் பரந்த ஒருவன் அன்பு, சிற்றுயிர்களையும் தன்னினமாகக் கொள் ளும் அளவில் அருளாக, கொல்லாமை உணர்வாக மலர்தல் வேண்டும் என்பதுதான் கருத்தாகிறது. இல்லறத்தானுக்கு வற்புறுத்திய அன்பு ஈகையாக மலர்ந்து பகுத்துண்ட லுக்கு உதவுவதுபோல், துறவறத்தானுக்கு வற்புறுத்திய அருள் கொல்லாமையாக முதிர்ந்து, பல்லுயிர் ஓம்பும் வாழ்க்கை யாகக் கனிகிறது.

இவ்வாறு துறவு மேற்கொண்டு வாழ் வோருக்கு விதித்த கடன்களைச் சிந்தித் தால் அவை இல்லறத்தாருக்கு வேறாகப் பிறிதொரு நெறியை மேற்கொண்டவர் களுக்கு விதித்த கடன்களாகத் தோன்ற வில்லை. ஒரே நெறியின் முற்பகுதி, பிற் பகுதி என்றே உள்ளது. ஆகவே திருவள்ளுவர் கூறும் அறம், ஆற்றொழுக்குப் போன்று இடையறவுபடாது சென்று இறுதி நோக் கத்தில் சேர்கிறது என்று கூறுவதே பொருத்த மாகவுள்ளது.

இனி, திருக்குறள் சமயச் செய்திகளாகக் கூறுவனவற்றைச் சிந்திப்போம். திருக்குறள் கருத்தின்படி, உலகியலுக்கு அப்பாற்பட் டுள்ள ஒரு செம்பொருளைத் தேடிச் செல்லும் முயற்சியாகவே வாழ்க்கை உள்ளது. திருக்குறளின் தொடக்க அதி காரங்களே இதனை யுணர்த்தும். முதலில் இறைவனை வாழ்த்திப் பின்னர் அவன் அருள் விளக்கமாக உள்ள மழையின் சிறப்புரைத்துப் பின் அறத்தை உலகிற்குப் படைத்துத் தந்துள்ள நீத்தார் பெருமையை அறிவுறுத்தி, நான்காவதாக அவர்கள் கூறிய அறத்தை வலியுறுத்துகிறது குறள்.

கடவுள் வாழ்த்துப் படர்க்கைப் பரவலாக[13] அமைந்துள்ளது. இறைவன்பால் நம்மைச் செலுத்தி, அவனை வணங்கி உய்ய வற்புறுத்துவதாகவுள்ளது. இறைவன் எத்தகையவன்? அவனை நாம் ஏன் வணங்கவேண்டும்? அவனை அடைவதற் குரிய நெறி யாது? என்றெல்லாம் கடவுள் வாழ்த்தில் சிந்திக்கிறார். உலகிற்கு முதலாக வுள்ளவன், ஆதிபகவன், வாலறிவன், மலர் மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை யிலான், இறைவன், பொறிவாயி லைந்தவித் தான், தனக்குவமை யில்லாதான், அறவாழி யந்தணன், எண்குணத்தான் எனப் பலவா றாகக் கடவுள் இயல்புகளை விளக்குகிறார். இத்தொடர்களை விளக்கும் உரையாசிரி யர்கள், தங்கள் தங்கள் சமயக் கோட் பாடுகளுக்கேற்ப விளக்கம் கூறுகின்றனர். இறைவன் இயல்பும் நம்மால் வரையறுத்து விளக்க முடியாததுதானே? இவ்வுண் மையைப் புலப்படுத்துவதற்காகவே பலருக் கும் பொதுவான தொடர்களால் குறித் தார்போலும். இறைவன் இயல்புகளை இத்தகைய தொடர்களால் குறித்தாலும், வடிவுடைய ஒருவனாக, குணங்களுடை யவனாக, இந்து மக்கள் கூறும் சகுணப் பிரம்மமாகவே இறைவனைக் காட்டுகிறார் என்பது தெளிவு. இறைவன் திருவடிப் பேற்றையே குறிக்கோளாக வற்புறுத்துவ தாலும் இதனைத் தெளிவாக உணரலாம்.

இறைவன் திருவடிகளை அடைவதால் வரும் பயனும் அவனை வணங்குவதற்குரிய நோக்கமும் வேறு வேறாக விருக்கமுடியாது. அவன் திருவடிகளை அடைந்தால் இடும்பை இல்லை, மனக்கவலை இல்லை, துன்பத்துக்குக் காரணமான இருவினை களும் நம்மை வந்தணுகா, எனவே அவ் வினைகளால் வரும் பிறவித் துன்பத்தி



லிருந்து விடுபடலாம், நீடு வாழலாம். இவ் வாறுதான் திருக்குறள் சொல்கிறது. இந்திய நாட்டில் தோன்றிய பல சமயங்களும் இந் நோக்கங்களைக் கூறுவனவே.


படிப்பகம்

www.padippakam.com



## குறிப்புகள்

1. மனோன்மணீயம்; பாயிரம் 11

2. கல்லாடம்; செய்யுள் 13

3. 'இந்து தருமம்; காந்தியடிகள் – தமிழில் – சங்கு சுப்பிரமணியன்'

4. 'திருவாசகம்' திருச்சதகம் – பாடல் 94

5. காமம் – இன்பம் இவற்றின் பொருள் வேறுபாட்டினைக் காமம் பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

6. பட்டினப்பாலை, 217 – 9

7. மநுதரும சாத்திரம் அறிமுகம், பக் 12.

8. குறள்; 97.உரை

9. குறள், 70

10. கலித்தொகை – மருதம் 1

11. மநுதரும சாத்திரம், VI. 66

12. 'மகாத்மா காந்தி நூல்கள்' (2ஆம் பகுதியில் விளக்கமாகவுள்ளது) காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், சென்னை.

13. இறைவனை முன்னிலைப் படுத்தி வாழ்த்துவதற்கு வேறாகப் படர்க்கையில் வைத்துப் பரவுதல்; சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை 35–7 படர்க்கைப் பரவலே.

"சமுதாயத்திற்கு நான்கு அடிப்படைத் தேவைகள் உள்ளன. அவற்றைத் திருவள்ளுவர் பாயிரமாகச் செய்துள்ளார். கடவுள் நம்பிக்கை, மழை, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர், நீத்தார், சான்றோர் கூறும் அறிவுரைகள், அறன் வலியுறுத்தல் ஆகியன. இந்நான்கும் மானுடம் வளர, வாழ வாயில்களாக அமைந்துள்ளன. மனிதன், மிருகமல்ல; மனிதனுமல்ல, விலங்குத் தன்மையிலிருந்து விலகி மனிதனாக வேண்டியவன். மனித நிலையிலிருந்து இறைமைப் பண்பு நிலைக்கு வளர வேண்டியவன் என்று திருவள்ளுவர் உணர்த்துகின்றார்."

– தவத்திரு குன்றக்குடி அடிகளார்

*(குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை : தொகுதி 1 திருக்குறள், மணிவாசகர் பதிப்பக வெளியீடு)*





படிப்பகம்

www.padippakam.com


# தமிழர்களும் திருவள்ளுவரும்

**ச. சண்முகசுந்தரம்**



'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்று தமிழர்களைப் பற்றி கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்கள் பாடினார்கள். கவிஞரவர்கள் கண்டறிந்த அந்த தனிக்குணங்கள் எவை என்று யாரும் முழுவதுமாக ஆராய்ந்து பார்த்தார்களா என்பது தெரியவில்லை. ஒருக்கால் சங்ககால இலக்கியங்களில் பெரிதும் புறப்பொருளாகப் பேசப்படுகின்ற மானம், வீரம், கொடை, புகழ் மற்றும் அகப்பொருளாகப் பேசப்படுகிற களவு, கற்பு என்பனவாக இருக்கலாம். அல்லது சங்ககாலத்தை அடுத்து வந்த காலத்தின் கலை நாட்டமாக இருக்கலாம். அல்லது அதற்கு அடுத்து வந்த பக்திக் காலத்தில் மானம், வீரம், கொடை, புகழ், களவு, கற்பு என்பவைகளைத் தொலைத்துத் தலைமுழுகி இறைவனிடத்தில் சரணாகதியான குணமாக இருக்கலாம். அல்லது அதற்குப் பின்பு வந்த காலத்தில் மக்களிடத்தில் மேலோங்கி நின்ற யாவருக்கும் இடமளித்துத் தம்மைத் தாராளமாகப் பிறர்க்கு ஈயும் 'உலகநேயக்' குணமாக இருக்கலாம். கவிஞரவர்கள் வேறு எந்த இனத்திற்கும் இல்லாத தனிக்குணம் என்பதாகக் கூறுகிறார். எனவே மேற்கண்ட குணங்களில் வேறு எந்த இனத்திலும் காணப்படாத குணமாகத் தெரிவது 'உலக நேயம்' மட்டுமே. 'உலகநேயம்' தவிர்த்த மற்ற குணங்கள் யாவும் தமிழர்க்கு மட்டுமே உரித்தானவை எனக்கொள்ள முடியாது. இந்த தனிக்குணத்திற்குத் தமிழர்கள் கொடுத்த விலை பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உயிர்க் குலங்கள் யாவும் தமது நோக்கங்களை முன்னிறுத்திப் போராட வேண்டியுள்ளது. வெற்றி பெற்றவைகள் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுவிடுகின்றன. தோற்றவைகள் மடிந்துவிடுகின்றன. உயிர்க் குலங்கள் முன்னிறுத்தும் நோக்கங்கள் பல வகையின. கீழ்நிலை உயிர்க் குலங்களுக்கு உயிர்வாழ்க்கை மட்டுமே நோக்கமாகிறது. அவைகள் 'உள்ளது சிறத்தல்' என்னும் வளர்ச்சியினால் எய்திய மேல்நிலை




படிப்பகம்

www.padippakam.com


களுக்கு ஏற்ப அவைகளின் நோக்கங்கள் பலவாக விரிகின்றன. மேல் நிலையில் வைத்து எண்ணப்படுகிற மனித குலத் திடையே சமூக, பொருளாதார, அரசியல் என்ற பரிமாணங்களில் நோக்கங்கள் விரியும். இவைகளெல்லாம் இயற்கையின் நியதிகளால் அரங்கேறு கின்றன.

ஆதி காலத்து மனித குழுக்கள் நில வேறுபாடுகளால் வெவ்வேறாகப் பிரிந்து பின்னர் தமக்கெனத் தனி நோக்கங்களை வகுத்துக்கொண்டு காலப்போக்கில் பல்வேறு இனங்களாக வாழத் தலைப்பட்டன. இவ்வாறு தோன்றிய மனித இனங்களை இரண்டு பெரும் வகையினராகப் பிரிக்க லாம். தாம் அடிப்படையாகத் தேர்ந் தெடுத்துக் கொண்ட நிலத்தில் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் வாழ்பவர் ஒரு வகை. தாம் அடிப்படையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட நோக்கத்தில் தம்மை நிலைப்படுத்திக்கொள்ள வாழ்பவர் இன்னோர் வகை. இரண்டாம் வகையினர் எந்தவொரு நிலத்தின் கண்ணும் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள இயலாமல் தொடர்ந்து புலம் பெயர்ந்தனர். அவர்களது புலம் பெயரும் பயணங்களின்போது முதலாம் வகையினரை எதிர்கொள்ள வேண்டி யிருந்தது. இந்தச் சந்திப்பு இருவகைப்பட்ட இனத்தவர்களுடைய நோக்கங்களின் சந்திப்பாகவும் ஆயிற்று. இருவகையினரது நோக்கங்களின் இசைவுகள், முரண்கள், ஒற்றுமை, வேற்றுமை ஆகியவைகளைப் பொறுத்து இனங்களுக்குள் சங்கமங்களும் மோதல்களும் நிகழ்ந்தன.

இதுகாறும் பலவாக இருந்த இனங்கள் தமக்குள் கூடிக்கொண்டபோது ஓர் இனமாக சங்கமமாகி, பெரியதொரு இனமாக விரிந்து வலுப்பெற்றுக் கொண்டன. மாறாக, தமக்குள் மோதிக்கொண்ட இனங்கள் மனித உயிர்கள், கொள்கைகள் எனும் இருவித இழப்புகளுக்கு உள்ளாயின. இழப்புகள் மனித உயிர்கள் என்றானபோது தமது ஆள் எண்ணிக்கையில் வலுவிழந்த



இனம் ஆள் எண்ணிக்கையில் மிகுந்த இனத்திடம் அடிபணிந்து வாழ நேர்ந்தது. அதுநாள் வரையில் காப்பாற்றி வந்த கொள்கைகளில் இழப்புகள் என்றான போது தமது எண்ணிக்கையில் பெரும்பான்மையைக் கொண்டிருந்தாலும் கூட கொள்கைகளை இழந்த இனங்கள் வெற்றி பெற்ற இனத்திற்கு அடிமைப்பட்டு வாழ நேர்ந்தது.

## திராவிட - ஆரிய மோதல்கள்

மேற்கண்ட வரலாற்று நிகழ்ச்சிகள் இந்திய துணைக்கண்டத்தில் மிக விரிவாகவே நடந் தேறின. தொடக்க கால நிகழ்ச்சிகள் துணைக் கண்டத்தின் வடபுலத்தில் மையம் கொண்டு நடைபெற்றன. நிலம்பற்றி வாழ்ந்த இனங்களில் முன்னிலை வகித்தவர்கள் திராவிடர்கள் என்றும் நிலம் பெயர்ந்து வந்து திராவிடர் களோடு போர் தொடுத்த இனங்களில் முன்னிலை வகித்தவர்கள் ஆரியர்கள் என்றும் பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். தொடக்க காலங் களில் திராவிடர் - ஆரியர் மோதல்கள் இரு தரப்பினரிடையேயும் பெருமளவில் மனித இழப்புகளை ஏற்படுத்தின. குறைவான மக்கள் எண்ணிக்கையுடன் ஆனால் தங்கள் போர்த் திறமையை நம்பிக்கொண்டு நேரடிப் போர்களில் ஈடுபட்ட ஆரியர்களது மக்கள் இழப்பு அவர்களை நிலைகுலைய வைத்து விட்டது. யாதொரு இன மக்களையும் அவர் களுடைய மொழி, வாழ்வியல் கொள் கைகள் மற்றும் நடைமுறைகள் இவை களைச் சீரழிப்பதன் மூலம் வெல்ல முடியும் என்ற அரசியல் உண்மையை ஆரியர்கள் தங்கள் கருத்தில் கொண்டனர். எனவே ஆரியர்கள், திராவிடர்களை வெல்ல மக்கட் போருக்குப் பதிலாக நன்கு திட்டமிட்டு ஒரு சித்தாந்தப் போரைத் திராவிடர்க்கு எதிராகத் தொடங்கி வைத்தனர்.

இப்போரில், திராவிடர்க்கும் ஆரியர்க்கும் இடையே உள்ள சித்தாந்த வேறுபாட்டின் அடிப்படையைக் கூற வேண்டியுள்ளது. ஒரு கொள்கை (சித்தாந்தம்) திராவிடர் களுடையதா அல்லது ஆரியர்


படிப்பகம்

www.padippakam.com



களுடையதா என்பதைக் கண்டறிய இந்த அடிப்படை துணை புரியும். நிலத்தின் அதாவது பூமியின் மீதான தொடர்புகளை மதிக்க வலியுறுத்தும் சித்தாந்தங்கள் திராவிடர்களுக்கு உரியன. மாறாக, நிலத்தின் அதாவது பூமியின் மீதான தொடர்புகளை அறுத்துக் கொள்ள வலியுறுத்தும் சித்தாந்தங்கள் ஆரியர்களுக்கு உரியன. இந்த அடிப்படைக்கு மாற்றமாக சித்தாந்தக் கூறுகள் ஏதேனும் எதிர் நிலையில் காணப் பட்டால் அவை இரு இனங்களுக்குள்ளும் ஏதோ சில கட்டாயத்தினால் ஏற்பட்ட சமாதானத்தால் விளைந்ததாகவே இருக்க முடியும்.

ஆரியர்கள் தொடங்கி வைத்த சித்தாந்தப் போரின் காரணமாக திராவிடர்களுக்கு (ஆரியர்களுக்கும்கூட) தங்களுடைய முந்தைய சித்தாந்தங்களை மறுபரிசீலனை செய்யும் கட்டாயம் நேர்ந்தது. அவரவர் குழுக்களின் தலைவர்கள் மற்றும் சிந்தனை யாளர்கள் இந்தச் சித்தாந்த மறுபரிசீலனை யில் ஈடுபட்டுத் தத்தம் முடிவுகளை வெளி யிட்டார்கள். தலைவர்கள் அல்லது சிந்தனை யாளர்கள் சமயத் தலைவர்களாக மலர்ந் தார்கள். இந்தத் தலைவர்களின் சித்தாந்த முடிவுகளுக்கு ஏற்ப புதிய சமயங்கள் இந்திய துணைக்கண்டத்தில் தோன்றின. ஆரியர்கள் தங்கள் குழுவின் நன்மையைக் நோக்கமாகக் கொண்டு திராவிடர்களுக்கு முற்றிலும் புதிய தான - அவர்கள் இதுகாறும் போற்றி வந்தவைகளுக்கு நேர்மாறான - சித்தாந்தங் களை திராவிடர்களிடையே உலவவிட்டதே இந்திய துணைக்கண்டத்தில் பல திறப் பட்ட சமயத் தோற்றங்களுக்கு மூல காரணமாக விளங்குகிறது.

## திராவிட – ஆரிய சித்தாந்தங்கள் – எதிரும் புதிரும்

சமயம் என்பதன் இலக்கணம் யாது? உயிர்த் தோற்றமும் வாழ்க்கையும் புற உலக ஆற்றல் ஒன்றினால் நிர்ணயிக்கப் படுகிறது என்று கருதும் சிந்தனையைச் சார்ந்ததே சமயம் என கருதிக் கொண்டால் தொடக்க கால திராவிடர்களுக்குச் சமயம் என்பது கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் மக்களின் வாழும் நெறிகளும் சமயம் என்று பொருள்படும் என்பதானால் திராவிடர்களுக்குச் சமயம் என்பது உண்டு. காதல், இல்வாழ்க்கை, மக்கட்பேறு, முன்னோரை வழிபடுதல், இறந்தோரைப் புதைத்தல், இறந்தவர்கள் உயிர்பெற்று மீண்டும் பிறப்பார்கள் என்று நம்புதல், தம் குழுமக்களுடன் கூடிவாழ்தல் என்னும் நிலச் சூழலை அடிப்படையாகக் கொண்ட உலகியல் வாழ்க்கையான இவைகளே திராவிடர்களின் வாழும் நெறியாக அமைந் தவை. ஆரியச் சித்தாந்தங்களோ நிலத்தினின் றும் புறத்தே நின்று வாழ்க்கையை நோக்கும் தன்மையானவை. ஆகவே நிலத்தின் மீதான தொடர்பினை அவைகள் வலியுறுத்துவ தில்லை. உயிர், உடல், இயற்கை இவை மூன்றிற்கும் இடையிலான உறவுகள், தொடர்புகள் பற்றி மட்டும் உணர்ந்திருந்த வர்கள் திராவிடர்கள். கடவுள், ஆன்மா, உலகம் இவைகளுக்கான தொடர்புகள் மற்றும் உறவுகள் என்பவை ஆரியம் அறிமுகப் படுத்திய சித்தாந்தங்களால் விளைந்தவை. ஆரியச் சித்தாந்தங்களின் கூறுகளான ஆத்மா, பரமாத்மா, பிரமன், போன்றவை களுக்குத் திராவிட - ஆரியர்கள் செய்து கொடுத்த சமரசங்களாக கடவுள், ஆன்மா என்னும் கோட்பாடுகள் பிறந்தன. இவை தொடர்பான சித்தாந்த அடிப்படைகள் விவாதிக்கப்பட்ட வரலாற்றுக் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. முதல் நூற்றாண்டு முடியப் பெற்றது. பின்னர் நடைபெற்ற சித்தாந்த விவாதங்கள் யாவுமே மேற்சொல்லப்பட்ட அடிப்படை களை ஒட்டியே நடைபெற்றவை எனலாம்.

இந்த ஆரிய, திராவிட சித்தாந்தச் சிந்தனைகளின் மோதல்களினால் ஏற்பட்ட கருத்துக் குழப்பங்கள் எங்கும் மலிந்தன.



இந்தக் குழப்பங்கள் மக்கள் வாழ்க்கையை அவர்களுக்குள் இதுகாறும் இருந்து வந்த உறவுகளைப் பெரிதும் பாதித்தன. இந்தச் சூழலில் மக்கள்பால் அக்கறை கொண்டு


படிப்பகம்

www.padippakam.com


பல புதிய சிந்தனையாளர்கள் உலகிற்கு அறிமுகமானார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் அவர்களது சிந்தனைகள் வேதச் சார்பு, வேதமறுப்பு என்னும் இருகூறாகப் பிரிந்தன. அவ்வாறு தோன்றிய இந்திய துணைக்கண்டத்து வடபுலத்துச் சிந்தனை யாளர்களில், கபிலர் (தமிழர் என்பாரும் உண்டு) சார்வாகன், மகாவீரர், கோசாலர், புத்தர் போன்றவர்கள் முதன்மையானவர்கள். இவர்களது காலம் கி.மு. ஐந்து - மூன்று நூற்றாண்டுகள். இதே காலகட்டத்தில் புதிய சிந்தனையாளர்கள் உலகில் பல பகுதி களிலும்கூடத் தோன்றினார்கள். அவ்வாறு உலகில் பிற பகுதிகளில் தோன்றிய சிந்தனை யாளர்களில் கிரேக்கத்தின் சோலோ, சாக்ரட்டீஸ், பிளாட்டோ, சீனத்தின் லாவோட் - ஷே, குங்-ஷியு (கன்ஃப்பூஷியஸ்), பாலஸ்தீனத்தின் இயேசு கிறிஸ்து போன்ற வர்கள் முதன்மையானவர்கள்.

இந்தக் காலகட்டத்தின் தமிழ்ப் புலத்துச் சிந்தனையாளர்களில் அகத்தியர், தொல் காப்பியர், நன்கணியார், கணியன் பூங்குன்ற னார், நந்தாசிரியன் போன்றோர் தலைமை யானவர்கள். (இவர்கள் யாவருமே வேத எதிர்ப்பு கருத்துடையவர்கள்தானா?) அவர் களுக்குப் பிறகு கி.பி. முதல் நூற்றாண்டு காலகட்டத்தில் தமிழ் மக்களை இந்தச் சித்தாந்தக் குழப்பங்களிலிருந்து விடுவிக்க முயன்றவர்கள் யாவருள்ளும் சிறப்பிடத்தைப் பெற்று இமயமாக உயர்ந்து நிற்பவர் திருவள்ளுவர் மட்டுமே.

## திருவள்ளுவர் – ஒரு சிந்தனை இமயம்

வேதங்கள் தோற்றுவித்த சிந்தனைக் குழப்பங்களிலிருந்து மக்களை விடுவிக்க திருவள்ளுவர் கைக்கொண்ட அணுகு முறை ஏனைய சிந்தனையாளர்களின் அணுகுமுறையினின்றும் முற்றிலும் வேறு பட்டது. எப்பொருள் பற்றி எங்கெல்லாம் சிந்தனைக் குழப்பங்கள் நிலவினவோ அந்தப் பொருள்களைப் பட்டியலிட்டு, அவைகளை வகைப்படுத்தி, ஒவ்வொரு வகையினுள் அடங்கும் பொருள்களைத் தொகைப்படுத்திக் கொண்டு பின்னர் அவை ஒவ்வொன்றின் மீதான தம் தீர்ப்புகளையும், தீர்வுகளையும் சொல்லிச் செல்கிறார். அவ்வாறு சொல்லிச் செல்கையில் யாதொரு வட்டார, சமய, சிந்தனைச் சாயல் தோற்றம் தம்மீது ஏற்பட்டு விடாதபடி மிக மிகக் கவனமாக இருக்கிறார். அதேநேரத்தில அவரது முடிபுகள் உலகத்தின் ஏனைய இனத்தார்கள் எவரும் எட்டமுடியாத, திராவிடர்களது இயற்கையோடு இயைந்த நடைமுறை வாழ்வியல் கோட்பாடுகளை நிலைநிறுத்து வதை நோக்கமாகக் கொண்டவையாகவும் உள்ளன. எனவே திருவள்ளுவரது கருத்து முடிபுகள் தமிழர்களுக்குச் (தமிழர்களுக்கு மட்டுமே) சொல்லப்பட்டவை என உறுதி யாகக் கூறலாம்.

சில கருத்து முடிபுகள் வேறு சிந்தனை யாளர்களுடன் ஒத்ததாக (அவர்கள் சொன்ன கருத்துகளை படி எடுத்தாற்போலவே) காணப் படுகின்றன என்பர். அந்தக் குறிப்பிட்ட கருத்துக்களில் உண்மை இருந்ததெனில் அவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டிருக் கிறார். அவர் ஏற்றுக் கொண்ட கருத்துக் களுக்குச் சொந்தக்காரர்கள் இந்திய வட புலத்து சிந்தனையாளர்கள் மட்டுமல்ல. (மனு, கௌடில்யர் - மனுவும் திராவிடர் தாம் என்பார் மறைமலை அடிகளார்), உலகின் வேறு புலத்துச் சிந்தனையாளர்களும் உண்டு. (கிரேக்கத்துச் சோலோ, சீனத்து கன்ஃப்பூஷியஸ், எகிப்தின் தா-ஒதை). சுருங்கக் கூறின், தேர்ந்த நேர்மையான மேன்மை மிகுந்த ஒரு அறங் கூறும் அவைத் தலைவர் போல திருவள்ளுவர் செயல்பட்டிருக்கிறார் என்பதே அவரைப் பற்றிய சரியான மதிப்பீடாக இருக்கும்.

திருவள்ளுவர் வழங்கிய தீர்ப்புகளும், தீர்வுகளும் பின்னாளில் மற்ற எவராலேயோ தொகுக்கப்பட்டு இன்றைக்கு நாம் அறியும் வடிவில் நமக்கு கிடைத்துள்ளன என்று கருதவேண்டும். அச்சுக் கோர்ப்பாளர் களது பேய் போன்ற, தொகுப்பாளர்களது பேய் ஏதும் திருக்குறளில் இல்லை என்று உறுதிபடக் கூறிவிட முடியாது.




படிப்பகம்

www.padippakam.com


## திருவள்ளுவர் - ஒரு தோல்வியின் விளக்கம்

திருவள்ளுவரும் வடபுலத்துச் சிந்தனை யாளர்களும் தங்கள் கொள்கைகளை நிலை நாட்டுவதில் எந்த அளவிற்கு வெற்றிபெற் றார்கள் என்பதை ஆய்வு செய்வோம். இவர்கள் யாவருமே வேதங்களின் கொள்கை களை மறுப்பதை நோக்கமாகக் கொண்ட வர்கள். அவ்வாறு நிலைநாட்டுவதின் வாயி லாக ஆரிய மக்களின் ஆதிக்கத்திலிருந்து மண்ணின் மக்களை மீட்க எண்ணியவர்கள். கபிலர், மகாவீரர், கோசாலர், புத்தர் போன் றோரின் கருத்து முடிபுகள் வடபுலத்து மக்களுக்காகச் சொல்லப்பட்டவை. வடபுலத் தில் அவர்களுடைய வேத மறுப்புக் கொள் கைகள் மக்களது ஆதரவினைப் பெருமளவில் பெற்றன. ஆனால் திருவள்ளுவருடைய கொள்கைகள் தமிழ் மண்ணில் ஆதரவு பெறவில்லை.

வடபுலத்துச் சிந்தனையாளர்க்கு வெற்றி எவ்விதம் சாத்தியமாயிற்று? திருவள்ளு வர்க்கு ஏன் சாத்தியம் இல்லாது போயிற்று?

அதற்குக் காரணம், வடபுலத்துச் சிந்தனை யாளர்கள் தங்கள் நோக்கத்தினை அடையும் பொருட்டு முதலில் தங்கள் கருத்துக்களுக்கு சமய வடிவம் அமைத்தார்கள். கொள்கைகள் ஒரு சமயமாக உருவெடுப்பதில் பல நன்மைகள் உண்டு. சிந்தனைகள் அல்லது கோட்பாடுகள் சமயமாக உருவெடுக்கும் போதுதான் அவை மக்களது வாழ்க்கை யுடன் கலந்து வேர்பிடிக்கச் சாத்திய மாகிறது. இல்லாவிடில் அவை அறிஞர் களின் மத்தியில் மட்டிலும் விவாதப் பொருளாக முதலில் தேங்கி, பின்னர் மங்கி மறைந்து விடும். அதன் அடிப்படையில் சமயமென்னும் நிறுவனத்தின் 'வாயி லாகவே தங்கள் நோக்கத்தை வெற்றி கரமாகச் சாதிக்க இயலும் என்பதை வடபுலத்துச் சிந்தனையாளர்கள் உணர்ந்திருந்தார்கள். எனவே தாம் தேர்ந்தெடுத்த கோட்பாடுகளுக்குச் சமயவடிவம் கொடுத்தார்கள். சாருவாகருடைய கொள்கைகள் சாருவாகம் என்றும், கபிலருடைய கொள் கைகள் சாங்கியம் என்றும், மகாவீரருடைய கொள்கைகள் சமணம் என்றும், கோசால ருடைய கொள்கைகள் ஆசீவகம் என்றும், புத்தருடைய கொள்கைகள் பௌத்தம் என்றும் சமயப் பெயர்களைப் பெற்றன.



சமயம் என்னும் நிறுவனத்தின் வாயிலாக அவர்கள் தங்கள் கருத்துக்களை மக்கள் முன் கொண்டு சென்றார்கள். அப்படிக் கொண்டு செல்வதற்கு அவர்களுக்குச் சிறந்த சீடர்கள், கொள்கைத் தூதுவர்கள் கிடைத் தார்கள். (சமய வடிவம் கொடுப்பதில் பெரும் பங்கு வகித்தவர்கள் அவர்தம் சீடர்களே) அந்தச் சீடர்கள் - கொள்கைத் தூதுவர்கள் தத்தம் தலைவர்களது கோட்பாடுகளைத் தமது தருக்கத் திறமையினால் மக்களை ஏற்றுக்கொள்ள வைத்தனர். அதற்கும் மேலாகச் சென்று அவர்கள் வாழ்ந்த காலத்து அரசர்களின் செல்வாக்கைப் பெற்று தம் தலைவர்களின் கொள்கைகளுக்கு அரசியல் அந்தஸ்து கிடைக்க வழிகோலி னார்கள். அரசியல் அந்தஸ்து மற்றும் செல்வாக்கு பெறும் எந்தக் கொள்கை களுக்கும் மக்களுக்கும் வெகு விரைவில் முன்னேற்றம் கிட்டும். எனவே இந்தச் சிந்தனையாளர்களின் கொள்கைகளுக்கு வெற்றி சாத்தியமாயிற்று.

கபிலருக்கு, அவரது சிந்தனைகளை மக்கள் முன்பாக எடுத்துச் சொல்லி அவரது கொள்கைகளை (சில காலங்களாவது) உயிருடன் உலவச்செய்ய வழிகோலியவர் களில் முதன்மையானவர்களாக அமைந்த வர்கள் ஈஸ்வரகிருஷ்ணா, கௌதப் பாதா, அநிருத்தா, மகாதேவா ஆகியோர். மகாவீர ருக்கு, புஷ்பநந்தா, குந்தகுந்தா, சமந்தபத்திரா, இன்னும் அவருடைய பதினொரு ஞான தாரர்கள் (சீடர்கள்) குறிப்பாக சுதர்மா, மற்றும் ஸ்வேதாம்பரர்கள், திகம்பரர்கள் என்னும் கொள்கைப் பிரிவினர்களும், கோசாலருக்கு மகாஞிமித்தம் இயற்றிய ஆசிரியர்களும் (பெயர் தெரியவில்லை), புத்தருக்கு புத்ததத்தா, புத்தகோசா,


படிப்பகம்

www.padippakam.com


திகநாகர், தருமபாலா, வஜ்ஜிரபோதி, நாகார்சுனா, போன்றவர்களும் சீடர்களாக அமைந்தார்கள். அவர்கள் யாவரையும்விட சிறந்த சீடர்களை வாய்க்கப்பெற்றவர் இயேசுபிரான். கிரேக்கத்தின் சோலோ, சாக்ரட்டீஸ், பிளாட்டோ போன்றவர்களுக்கும் சரியான சீடர்கள் கிடைக்காமல் போய்விட்டது. சீனத் தின் லாவோட் ஷேவும் (தாவோயிஸம்) கன்ஃபூஷியசும் தம் கொள்கைகளைச் சமய அந்தஸ்திற்கு உயர்த்துவதில் ஓரளவே வெற்றிபெற்றார்கள். இதில் மாபெரும் வெற்றியை நிறுவியர் பாலஸ்தீனத்தின் இயேசுபிரான் மட்டுமே. மிகச் சிறந்த (எக்காலத்தும், எம் மக்களுக்கும் பொருந்தும் கோட்பாடுகள் என்று தமிழர்கள் இன்று பெருமைப் பட்டுகொள்ளும்) தம் கோட்பாடுகளைச் சமயமாக நிறுவுவதில் பெரும் தோல்வியைச் சந்தித்தார் திருவள்ளுவர்.


**திருவள்ளுவருக்குக் கொள்கைத் தூதுவர்கள் என்று யாருமே அமையாமற் போனதே அவருடைய கோட்பாடுகள் சமயமாக உருவெடுக் காமல் போனதற்கு அடிப்படைக் காரணமாகும்.**

## கொள்கைகளின் நிலைபேறு

ஒரு சமயத்தைத் தோற்றுவித்தால் மட்டுமே போதுமானதாகாது. அச்சமயத் தைத் தொடர்ந்து காலம் காலமாக நிலை நிறுத்திக் கொள்வதற்குச் சமயக் கொள்கை களை மக்களிடையே பரப்புவதில் இடையறா முயற்சியும் எதிர்வரும் சமயங்களுடன் போராடுவதில் திறமையும் வேண்டும். அவ்வாறு சமயத்தை நிலைநிறுத்துவதை யும் செய்யவேண்டியவர்கள் அந்தச் சீடர் களே. எந்தெந்தச் சமயங்களுக்கெல்லாம் சீடர்கள் பஞ்சம் ஏற்படுகின்றதோ அந்தச் சமயங்கள் காலப்போக்கில் மறைந்துவிடு கின்றன. அல்லது ஓரளவு ஒத்த கொள்கை களுடைய சமயங்களுடன் சங்கமித்து விடுகின்றன. அதன் காரணங்களால் கபில ருடைய சாங்கியம் மகாவீரருடைய சமணத்துடன் சங்கமித்துவிட்டது. கோசாலருடைய ஆசீவகம் சில நூற்றாண்டுகள் வரை தென்னாட்டில் தாக்குப்பிடித்துவிட்டுப் பின்னர் மறைந்து போயிற்று.

சீடர்களின் காரணம் ஒருபுறம் இருக்க, சமயமாக உருக்கொண்ட சிந்தனைகள் அல்லது கோட்பாடுகள் நிலைத்திருக்க வேண்டுமாயின் அந்த சமயக் கோட்பாடு களை ஏனைய சமயக் கோட்பாடுகளுடன் போரிட்டும் வெற்றிகளை ஈட்டவேண்டும். கிருத்துவம் சிலுவைப்போர் தொடுத்துத் தான் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. இதைப் போலவே இஸ்லாமும் போர் நடத்தித் தான் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. சமயக் கோட்பாடுகள் என்றில்லை. சமூக பொருளியல் கோட்பாட்டுச் சிந்தனையாளர்களும் போராடித்தான் தமது கருத்துக்களை நிலைநாட்ட வேண்டியிருந்தது. காரல் மார்க்ஸ் ஒரு எடுத்துக்காட்டு.

போராட்டம் நடத்தாமல் தமது கொள்கை களை, எண்ணங்களை நிலைநாட்டிய சிந்தனையாளர்கள் எவரேனும் உண்டா? அவர்களது வரலாற்றைப் பாருங்கள். போராட்டத்திற்கு, ஒன்று அந்தச் சிந்தனை யாளர்களே தலைமையேற்பார்கள். அல்லது அவர்களின் சீடர்கள் - கொள்கைத் தூது வர்கள் தலைமையேற்பார்கள். போராட்டத் தில் கிடைத்த வெற்றியைப் பார்த்து அவர்கள் ஓய்ந்து விடுவதில்லை. கிடைத்த தங்கள் வெற்றியை நழுவவிடாமல் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வதும் அவசியம். எனவே, போராட்டக் களத்தைவிட்டு அவர்கள் எக்காலத்திலும் எக்காரணம் கொண்டும் வெளியேறுவதில்லை. வெற்றியாளர்களுக்கு இந்த அடிப்படை வெற்றித் தந்திரம் அல்லது நுணுக்கம் தெரிந்திருக்கவேண்டும். தெரியாத வர்கள் எவராயினும் அவர்களது சிந்தனைகள் எத்துணை சிறப்பானதாக இருந்த போதிலும் கூட தோற்றுப்




படிப்பகம்

www.padippakam.com


**தமிழர்கள் வேற்றார்களை - அவர்களின் நடைமுறைகள் யாதாயினும் வியப்பவர்கள். அவர்களது கொள்கைகள், பழக்கங்கள் தம்முடையதைக் காட்டிலும் சிறப்பானது என்று எண்ணிக் கொள்ளும் தன்மையினர், தமது சிந்தனைகள் சிறப்பானவையாகவும், மற்றும் வலிமையானவையாகவும் இருந்தாலும்கூட. மேலும் ஒருபடி சென்று வேற்றார்களின் முகம் கோணுவதைத் தமிழர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.**

போகிறார்கள். ஆரியர்களுக்கு இந்த அடிப்படை வெற்றித் தந்திரம் அல்லது நுணுக்கம் கைவந்த கலை மட்டுமல்ல, அதில் மற்ற எந்த இனத்தவரைக் காட்டிலும் மிகவும் தேர்ந்தவர்கள் அவர்களே.

திருவள்ளுவருக்குக் கொள்கைத் தூதுவர்கள் என்று யாருமே அமையாமற் போனதே அவருடைய கோட்பாடுகள் சமயமாக உருவெடுக்காமல் போனதற்கு அடிப்படைக் காரணமாகும். அதாவது திருவள்ளுவரின் கோட்பாடுகள் சமயமாக உருவெடுக்காமற் போனதற்குக் காரணமானவர்கள் தமிழர்கள் மட்டுமே. ஒரு போராட்டத்தை நடாத்தி திருவள்ளுவ சமயத்தினை தோற்றுவிக்க தமிழர்களுக்குத் தோன்றவில்லை. தமிழர்கள் அப்படி ஒரு முயற்சியில் ஈடுபடவும் இல்லை. ஈடுபடாததற்குக் காரணம் தமிழர்களின் தனிக் குணங்களே. இந்தப் பின்னணியில் தமிழர்களின் தனிக் குணங்களாக நமக்குத் தோன்றியவை - ஒரு மதிப்பீடு.

## தமிழர்க்கே உரிய தனிக் குணங்கள்

1. இயற்கை, போராட்டக் களத்தில் வைத்துத்தான் ஒரு இனத்தைத் தேர்ந்தெடுக்கிறது. அந்த விதியின் வழியாகவே உயிர்களின் பரிணாம வளர்ச்சி நடைபெறுகிறது. ஆனால் தமிழர்கள் போராடுவதற்கு அஞ்சுபவர்கள். சமரசப் போக்கே அவர்களுக்கு விருப்பமான ஒன்று. உலக அமைதியை அவர்கள் போற்றிப் பேசுவதும்கூட இந்தப் பயத்தின் காரணமாகவே. வேற்றார் போராட்ட நோக்குடன் அணுகும் போதும் தங்கள் இழப்புகளைப் பெரிது படுத்தாமல் மாற்றார்களுடன் சமரசம் செய்துகொண்டு விடுவார்கள். எனவே தமிழர்கள் எப்போதுமே தோல்வியைத் தழுவுபவர்கள். இந்தத் தோல்விதான் திராவிடர்கள் (தமிழர்கள்) தாம் குடியேறிய பல நாட்டினர்க்கும் வாழ்வியல் நாகரிகத்தைக் கற்றுத் தந்துவிட்டு ஆனால் அங்கேயே பின்னர் நிலை பெற்று நிற்க முடியாமல் அந்த நாடு களிலிருந்து விரட்டப்பட்டு வெளியேறக் காரணமாக இருந்தது.



2. தமிழர்க்கு தம்மினக் குழுப்பற்று கிடையாது. மாறாக தமக்குள் போராடிக் கொள்வதைத் தமிழர்கள் இயல்பாகச் செய்வார்கள். தமிழ் இலக்கியங்கள் அவற்றை விரிவாகப் பேசும். தமிழகத்து அரசர்கள் தமக்குள் போரிட்டுக் கொண்ட நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று. அந்தப் போர்களைத் தமிழர்களின் வீரமாகத் தமிழ் இலக்கியங்கள் போற்றிக் கொள்கின்றன.

3. தமிழர்கள் வேற்றார்களை - அவர்களின் நடைமுறைகள் யாதாயினும் வியப்பவர்கள். அவர்களது கொள்கைகள், பழக்கங்கள் தம்முடையதைக் காட்டிலும் சிறப்பானது என்று எண்ணிக் கொள்ளும் தன்மையினர். தமது சிந்தனைகள் சிறப்பானவையாகவும், மற்றும் வலிமையானவையாகவும் இருந்தாலும்கூட. மேலும் ஒருபடி சென்று வேற்றார்களின் முகம் கோணுவதைத் தமிழர்கள் அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே அவர்களின் விருப்பத்திற்கு


படிப்பகம்

www.padippakam.com


முதலிடம் தந்து தம்மைத் தாழ்த்திக் கொள்வதில் பெருமைப்படுபவர்கள். தம்மவர்களுக்குத் துணை செய்வதை விட ஊறுசெய்தும்கூட மாற்றார்க்குத் துணை போவது தமிழர்களுக்கு இயல் பானது.

4. தமிழர்கள் புகழுரைகளை விரும்பு பவர்கள். பிறர் தம்மைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே காரியமாற்று பவர்கள். பாராட்டுரையின் மயக்கத் தில் தமக்கான உரிமையைப் பறி கொடுப்பதானாலும் தயங்காதவர்கள். இந்தக் குணத்தை நன்கு தெரிந்து கொண்டு தமிழர்களைப் பாராட்டித் தமக்கு வேண்டிய எல்லாக் காரியங் களையும் சாதித்துக்கொள்ள மாற்றார் களால் முடிகிறது. தமிழர்களிடத்தில் பெரும்பேறுகள் எவையேனும் கிடைக்கப் பெற்றால் அவைகளைத் தமக்கென வைத்துப் போற்றிப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பதிலாக அதை வள்ள லாக நின்று ஊரார்க்குத் (அதையே விரிவுபடுத்திச் சொல்வதானால்) உலகத் திற்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட விரும்புபவர்கள்.


5. தமிழர்கள் தங்களது அறிவின் வெளிச் சத்தை ஊருக்கும் உலகத்திற்கும் தெரியப் படுத்தக் கூச்சப்படுபவர்கள். அதனால் தமிழர்களது உயரிய கருத்துக்களும் சிந்தனையின் வெளிப்பாடுகளும் இலக் கியமாகவே நிறுத்தப்பட்டு இருட் டடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இலக்கியமாக நின்று போனதற்கும் காரணம் அவைகளைப் பிற மக்கள் முன்பாக எடுத்துச் செல்லும் கெட்டிக்காரத்தனம் அவர்களிடத்தில் இல்லாமல் போனதும், தமிழர்களது போராட்டப் பய உணர்வுகளுமாகும்.

6. தமிழர்கள் கமுக்கமானவர்கள். ஆகவே எதையும் வெளிப்படையாக மனம் விட்டுப் பேசாதவர்கள். தமது மனத்திற்குள் கமுக்கமாக வைத்திருக்கும் எண்ணங்களைத் தனிப்பட்ட சொந்த சொத்தாகக் கருதிக் கொண்டு அவற்றைப் பிறர் எளிதில் கண்டறிய விடாதபடி காத்துக் கொள்பவர்கள். பிறர் எவரேனும் கண்டறிய முயற்சிப்பதையும் வெறுப்பவர்கள்.

7. தமிழர்கள் கற்பனைத் திறமற்றவர்கள். புலன்களால் அறியப்படுவதான உண்மை களில் மட்டுமே தமிழர்கள் பழக்கப் பட்டவர்கள். அவர்களுக்கு உண்மைக்குப் புறம்பான புனைவுகளைச் சொல்லத் தெரியாது. எனவே வெறும் கற்பனைப் புனைவுகளும் புனைவுகள் சார்ந்த காட்சிகளும் அவர்களுக்குப் புதுமை யாகவும் சுவையாகவும் இருக்கின்றன. புனைவுக் காட்சிகளில் பெறப்படும் செய்திகள் அவர்களையே இழிவுபடுத்து வனவாக இருந்தாலும்கூட ரசிப்பார்கள்.

8. தமிழர்கள் நம்பிக்கைவாதிகள். இயல் பாகவே சிந்தனைவழி செயல்படுவதை விட நம்பிக்கை வழியிற் செல்ல விரும்புபவர்கள். தம் நம்பிக்கை தகர்க்கப்படுவதை முழுமூச்சுடன் எதிர்ப்பவர்கள். தம் நம்பிக்கைக்கு மாறாக எதையேனும் ஏற்க நேர்ந்தால் அதைத் தனக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பாகக் கருதிக் கொள்ளும் மனத்தினர்.

9. தமிழர்கள் நல்ல அடிமைகள். சேவ கத்தில் ஆனந்திப்பவர்கள். ஆகவே தலைவருக்காக ஏங்குபவர்கள். தலைவர்களுக்காகக் காத்திருப் பதிலும் சுகப்படுபவர்கள். தலைவர்கள் வேற்றார்கள் என்றால் அவர்களுக்குக் கூடுதலான மகிழ்ச்சியே. தலைவர்களுக் காகத் தம்மை விற்பதற்கும் தயங்காத வர்கள்.



## தமிழர்களும் திருவள்ளுவரும்

மேலே கூறப்பட்ட 'நவ' குணங்களே வெகு தமிழர்களின் சிறப்புக்


படிப்பகம்

www.padippakam.com


குணங்களாகத் தெரிய வருகின்றன. இந்தக் குணங்களால் தமிழர்கள் கொடுத்த விலை பொதுப்பட நோக்கினால் தமிழினத்தின் தாழ்வுகள் என்பதும் சிறப்பாக நோக்கினால் திருவள்ளுவர் என்பதும் விளங்கும். இதை ஒரு உருவமாகச் சொல்லப் புகுந்தால் - தமிழர்களிடத்தே பேரறிவுமிக்க ஒரு குழந்தை பிறந்தது. அதை ஊருக்கு - உலகத்திற்குப் பொதுவென்னும் பெயரில் தாரை வார்க்கிறேன் பேர்வழி எனச் சொல்லி அந்தக் குழந்தையை அனாதையாக அலைய விட்டவர்கள் தமிழர்கள். அந்த அறிவுக் குழந்தைக்கு உலக அரவணைப்பு ஏதும் கிடைக்க வில்லை. புறம் நின்று பெயருக்குப் பாராட்டுச் சொல்லிவிட்டு உலகம் அந்தக் குழந்தையைக் கண்டுகொள்ளவே இல்லை. குழந்தைக்கு வயதானதுதான் மிச்சம். சரியான பெற்றோருக்கு அந்த அறிவுச்செல்வம் பிறந் திருந்தால் இந்நேரம் அக்குழந்தை உலகத் தின் தலைமையைப் பிடிக்க அதன் பெற்றோர்கள் வழி செய்திருப்பர். திருவள்ளுவரின் பாவம் அவர் தமிழர் களிடையே தோன்றியது. அதே பாவம் செய்தவர்கள் இராமலிங்க அடிகளாரும், பெரியார் ஈ.வே.ரா. அவர்களும் ஆவர்.

திருவள்ளுவருக்கு தமிழர்கள் ஆற்றிய மற்றுமொரு துரோகம் அவரது சிந்தனை களை ஆரிய சிந்தனையாளர்களிடம் அடகு வைத்தது. எவற்றின் கொள்கைகளை மறுத்து தம் முடிபுகளை வெளியிட்டாரோ அதே முடிபுகளை மறுக்கப்பட்ட கொள்கை களாகக் காட்ட முயற்சித்தவர்களுடன் துணைபோனது. உரையாசிரியர்கள் என்ற பெயருடன் அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டார்கள். அவர்களில் மணக்குட வரும், பரிமேலழகரும், முன்நின்றவர்கள். அவர்களது முயற்சியை எதிர்த்து நின்ற வர்களின் செயல்பாடுகள் இலக்கிய விமர் சனமாக நின்று போயின. மக்கள் முன்பாக திருவள்ளுவரைக் கொண்டு செல்ல அவர்களும் முயற்சிக்கவில்லை, இயல்பான தமிழர்களைப் போலவே.


## இனியாவது

இனிமேலாவது ஏதாவது செய்து திருவள்ளுவரைக் காப்பாற்ற இயலுமா? இயலும்; தமிழ்மக்கள் கீழ்க்கண்ட காரியங் களை வெற்றிகரமாகச் செய்துமுடித்தால்.

ஆற்றவேண்டிய காரியங்கள் மூன்று பகுதிகளைக் கொண்டவை. அவை :-

**பகுதி 1. தமிழ் மற்றும் தமிழர்களைக் காத்தலும் புரத்தலும்.**

தமிழர்கள் தங்கள் வரலாறு மற்றும் தாய்மொழியின் பிறப்பு வளர்ப்பு பற்றிய அறியாமையில் இருப்பது ஒரு விநோத மாகும். உலகத்தில் வேறெந்த மக்கள் இனத் தாரிடமும் இல்லாத தமிழர்களின் இந்த மனநிலையை நினைக்கும்போது கவலை அளிப்பதாக உள்ளது. (தம்மைப் பற்றிய அறியாமையில் திளைப்பதே தமிழர்களின் தனிக் குணமாக இருக்குமோ!) இந்தப் பின்னணியில் தமிழர்களை தமிழர்களிடத் தில் அறிமுகப்படுத்துவதிலிருந்து காரியங் களைத் தொடங்கவேண்டும். ஏனெனில் தமிழர்கள் அவர்களது அறியாமையினால் தங்கள் வாழ்க்கைப் பாதுகாப்பினை வெளி யார்களிடம் ஏற்கனவே இழந்துவிட்டிருக் கிறார்கள். ஆகவே தமிழ் மற்றும் தமிழர் களின் மானத்திற்கும் மரியாதைக்கும் பாது காப்பு அளிப்பது முதற்பணியாகிறது. தற்போது நிலவிவரும் அரசியல், பொரு ளாதாரச் சூழலில் தமிழ் மற்றும் தமிழர் களின் பாதுகாப்பு என்னும் நோக்கத்தை வென்றடையப் பொருத்தமுடைய சட்ட வடிவிலான வழிமுறைகளால் மட்டிலுமே சாத்தியப்படும். அப்படிச் சட்ட வடிவிலான வழிமுறைகள் எதனையும் வார்த்தெடுக்க முடியாதெனில் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் இனி வேறு விமோசனம் கிடையாது.



இன்றைய நடைமுறைகளில் உள்ள பெரும்பாலான சட்ட வடிவங்கள் அரசின் பாதுகாவலுக்கு ஆங்கிலேயர்களால் வகுக்கப்பட்டவை. நேரடியாக சமூக


படிப்பகம்

www.padippakam.com


மற்றும் பொருளாதார நலம் நோக்கும் சட்ட வடிவங்கள் ஏதும் வகுக்கப்பட்டிருக்கவில்லை. நடப்பில் இருக்கின்ற சமூக அமைதி நோக்கிய சட்ட வடிவங்களும்கூட அரசின் பாதுகாவலுக்கு மறைமுகமாகத் துணை செய்வதற்காக வகுக்கப்பட்டனவே. உண்மையில் இந்திய மக்களின் சமூக மற்றும் பொருளாதார நலங்களின் மீது ஆங்கிலேயர்களுக்கு அக்கறை இருக்க வேண்டும் என நாம் எதிர் பார்க்க முடியாது. நிலையாக ஆளுவதே அவர்களின் முதல் நோக்கமும் இறுதி நோக்கமும் ஆகும். அந்த நோக்கத்திற்கு எவையெல்லாம் துணை செய்யுமோ அவை களில்தான் அவர்கள் அக்கறை காட்டி னார்கள்.


ஆங்கிலேயர்களைத் தொடர்ந்து இன்றைக்கு ஆட்சி செய்பவர்களுக்கும் நிலை யாக ஆளுவதே முதல் நோக்கமும் இறுதி நோக்கமுமாக இருக்கிறது. எனவே அரசின் பாதுகாவலுக்குத் துணைசெய்யும் சட்ட நெறிமுறைகளைக் காப்பாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அவை தொடர்பான காரியங் களில் மட்டுமே அவர்கள் கவனம் செலுத்து கிறார்கள். உண்மையில் நாட்டு மக்களின் சமூக மற்றும் பொருளாதார நலங்களின் மீதும் அக்கறை உள்ளவர்களானால் அரசுப் பாதுகாவலுக்கு இன்று எந்த அளவு சட்டப் பாதுகாப்பு உள்ளனவோ அதற்கும் குறைவில் லாத சட்டப் பாதுகாப்புகள் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நலங்களுக்காகவும் வகுத்திருக்கவேண்டும். அவற்றிற்குத் துணை செய்யும் சட்ட நெறிமுறைகளைக் காப் பாற்றுவதிலும் அவை தொடர்பான காரி யங்களிலும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

**பகுதி 2. தமிழ் மற்றும் தமிழர்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும்**

தமிழ்மொழி மற்றும் தமிழர்களின் பாது காப்பிற்கு அடுத்தபடியாக அவர்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரிய மாற்ற வேண்டும். வளர்ச்சி / முன்னேற்றம் என்றால் என்ன? அவைகளின் இலக்கணம் யாவை? இவற்றிற்கான பதிலை நாம் வகுத்துக் கொண்டாலன்றி தமிழ்மொழி மற்றும் தமிழர் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நாம் ஏதும் பெரியதாகச் செய்துவிட இயலாது. இவைகளின் வளர்ச்சியை / முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யும் வகை தெரிந்தாலன்றி வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கென ஆகும் காரியங்களில் விரும்பிய அளவுக்குச் சாதனைகளை நிகழ்த்தும் சாத்தியமில்லை. பொருளாதார வளர்ச்சியையும் முன்னேற்றத் தையும் மதிப்பிட அளவு கோல்கள் உண்டு. அதுபோன்ற அளவுகோல் களை முதலில் தமிழ்மொழி மற்றும் தமிழர் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நிர்ண யிக்கவேண்டும். இதுகாறும் அப்படி ஒரு அளவுகோல் எதுவும் வகுக்கப்பட்டிருப்ப தாகத் தெரியவில்லை. (வளர்ச்சி என்பதற்கும் முன்னேற்றம் என்பதற்கும் வேறுபாடு உண்டு. இரண்டும் ஒன்றல்ல.)

**பகுதி 3. திருவள்ளுவர் நிறுவனங்கள் (கோட்டங்கள்)**

திருவள்ளுவருடைய கொள்கைகளின் சார்பில் நிறுவனம் (சமயம்) எதையும் அமைக்கப்படாமையே அவருடைய சிந்தனைகள் மக்களிடையே பரவ இயலாமற் போயிற்றென்று பார்த்தோம். அதற்கு தமிழர் களே பொறுப்பேற்க வேண்டியவர்கள். திருவள்ளுவருக்கு இழைத்த அந்தத் தவறுக்கு ஈடுசெய்யும் வகையில் தமிழர்கள் திருவள்ளுவருடைய கொள்கைகள் யாவற் றையும் நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நடைமுறைகளில் கொண்டு வந்து, தமிழ் மக்களின் உள்ளத்தில் பதிக்க வேண்டும். வெகு தமிழர்களுடைய வாழ் வியலுடன் முற்றாக இணைக்கும் வகையில் பரவச் செய்யவேண்டும். அதற்கான செயல் வடிவம் என்பது வள்ளுவத்தைச் சமயமாக மாற்றுவதில் உள்ளது. பின்னர் வள்ளுவ



சமயத்தைக் கொண்டு நம்மிடத்தே கரவாக உலவிக் கொண்டிருக்கும் மாற்றார் சமயத்துடன் சித்தாந்தப்


படிப்பகம்

www.padippakam.com


**வள்ளுவ சமயத்தை மக்களிடத்தே பரவச் செய்ய வேண்டி திருவள்ளுவர் கோட்டங்களை தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்த வேண்டும். திருவள்ளுவர் கோட்டங்கள் வள்ளுவ சமயத்தைப் பரப்பும் நிலையங்களாகச் செயல்படவேண்டும்.**

போரை நடாத்துவதில் உள்ளது. திருவள்ளுவரின் கொள்கைகளுக்குப் புறம்பான அல்லது எதிரான கொள்கைகள் எங்கிருந்தாலும் எந்த வடிவத்தில் இருந்தாலும் அவற்றைப் போரிட்டு அகற்றவேண்டும். அகற்றப்பட்ட அந்த இடங்களில் எல்லாம் திருவள்ளுவரின் கொள்கைகளை நிறுவவேண்டும். இந்தப் போரில் எதிலும் சமரசம் செய்யும் போக்கினை தமிழர்கள் அறவே கைவிட வேண்டும்.

வள்ளுவ சமயத்தை மக்களிடத்தே பரவச் செய்ய வேண்டி திருவள்ளுவர் கோட்டங்களை தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்த வேண்டும். திருவள்ளுவர் கோட்டங்கள் வள்ளுவ சமயத்தைப் பரப்பும் நிலையங்களாகச் செயல்படவேண்டும். கூடவே வள்ளுவ சமயக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பும் திறங்கொண்ட, தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்ட சீடர் பாரம்பரியங்களை உருவாக்கவும் வேண்டும். அதற்கான வழிமுறைகளை வார்த்தெடுக்க வேண்டும்.

- ச. சண்முகசுந்தரம் அவர்களால் 2000 அக்டோபர்த் திங்கள் 5-ஆம் நாள் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் திருவள்ளுவர் பற்றி திராவிட பல்கலைக் கழகமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடாத்திய தேசியக் கருத்தரங்கில் படிக்கப் பட்ட ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்

- தமிழக அரசின் முன்னாள் வனத்துறைத் தலைவர் 1/41 தனம் நகர், முகலிவாக்கம், சென்னை. தொலைபேசி : 044 - 2312942 / 2314161

"திருக்குறள் சமயச் சார்பற்ற நூல். ஆனாலும் சமயநெறி தழுவிய நூல். சார்பு வேறு; தழுவுதல் வேறு. சார்பு என்பது ஒன்றில் பற்றும், பிறிதொன்றில் காழ்ப்பும் காட்டுவதாகும். அதனாலேயே சார்பின்றி வாழ வேண்டும் என்பதை,

**சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரும் நோய்.**

என்று குறள் கூறுகிறது. யான், எனது என்ற சார்புகளின் காரணமாக மனிதன் தன்னலச் சூழலில் சிக்குகின்றான். இந்தச் சார்புகளிலிருந்து மனிதன் விடுதலை பெற்றாலேயே பொதுமை தோன்றும்; மனிதஇனத்தை அரித்து அழிக்கும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பனவாகிய தீமைகள் அழியும். 'எல்லோரும் வாழ்க, இனிதே வாழ்க' என்ற பொதுமை தோன்றும். திருக்குறள் இத்தகைய நெறியினைச் சார்ந்த பெருநூல்; ஒப்பற்ற நூல்."

**- தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

*(குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொகுதி 2 ; திருக்குறள், மணிவாசகர் பதிப்பக வெளியீடு)*


படிப்பகம்

www.padippakam.com



# திருக்குறளில் உயிர் இனங்கள்

## பாலூர் கண்ணப்பர்



பொய்யாமொழியார் தம் பொது மறையாம் திருக்குறளில் எழுவகைப் பிறப்புடைய உயிர் இனங்களைப் பற்றிய குறிப்பு உண்டா என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரை யின் நோக்கம் ஆகும். எழுவகைப் பிறப் புடைய உயிர் இனங்களைப் பற்றிய சிறப்பு முப்பாலில் மொழியப்பட்டிலது எனின், மதுரைத் தமிழ் நாகனார்.

**எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால்**

என்று கூறிய வாக்குப் பொய்யாகும் அன்றோ?

இக்கட்டுரையில் தேவர், மக்கள் ஆகிய இரு உயிர்களைப் பற்றி ஆராயாமல் ஏனைய ஐந்து பிறப்பு உயிர்களாகிய தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு என்பன பற்றியே ஆராயப்படுகின்றன. தேவர், மக்கள் ஆகிய இவ்விரு உயிர் இனங்களைப் பற்றி எழுதப்புகின், ஏடு இடந்தராது. இக்காரணம் கொண்டு அவற்றைப் பற்றி இங்கு ஆராயப்படவில்லை.

உத்தர வேதமாம் திருக்குறளில் பசும்புல், பைங்கூழ், மூங்கில், கரும்பு, வள்ளிக்கொடி, மரம், அனிச்சம் பற்றிப் பேசப்பட்டுள்ளன. வித்து, மலர், காய், கனி முதலானவை களும், பொதுவான தாவர உறுப்புக்களே. ஆயினும், தாவரங்களின் உறுப்புக்களைப் பற்றி ஈண்டு எழுதாமல் சிறப்புப் பொருள் பற்றி மட்டும் அறிவிக்கப்படுகிறது.

**பசும்புல்:-** இதன் பொருள் பசுமையான புல் என்பது. இஃது ஓர் அறிவு உயிர். இந்த ஓர் அறிவு உயிர்க்கும் மழை நீர் இன்றி யமையாதது என்பதை விளக்கவே நாயனார் பசும்புல்லை எடுத்து மொழிந்துள்ளனர். அக்குறள்,

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது.**

என்பது. ஆகாயத்திலிருந்து மழைத்துளி நிலத்தில் விழவில்லை என்றால் ஓர் அறிவு உயிராகிய பசும்புல்லும், தலைகாட்டாது (முளைக்காது) என்பது இக்குறட்பாவின்



படிப்பகம்

www.padippakam.com


கருத்து. இதனால், எல்லா உயிர்கட்கும் மழைநீர், மிகமிகத் தேவையானது என்பது விளக்கப்பட்ட முறையின் அறியவரும் உண்மை ஆகும். இந்தக் குறள் கருத்தைத் தழுவித் தெய்வப் புலவர் சேக்கிழார் **“பைங்கூழ்க்கு வானே என்ன நிரை காக்க வந்தார் மறைச் சிறுவர்”** என்று சண்டேசுவர நாயனார் புராணத்தில் கூறுதல் காண்க.

**பைங்கூழ்:-** இதன் பொருள் பயிர்ப் பச்சையாகும். இது வளர்கிறபோது இத னுடன் புல்பூண்டுகளும் வளரும் அவை வளர்வதனால், பைங்கூழின் வளர்ச்சி வள மாக இருக்காது. ஆகவே, உழவன் பயிருடன் வளரும் புல் பூண்டுகளாகிய களைகளைக் களைந்து எறிவான். இந்தச் செயலை அரசன் மேற்கொள்ள வேண்டிய ஒரு செயலுக்கு உவமையாகக் கூறினார் தெய்வப்புலவர். அதாவது ஒரு நாட்டு மன்னன் தன் நாட்டில் மக்களுக்குத் தீங்கு செய்யும் கள்வர்களையும் வழிப்பறிக் கொள்ளைக் காரர்களையும், தீயிட்டுக் கொளுத்துபவர் களையும், விஷம் இடுகின்றவர்களையும், கருவியால் கொலை செய்பவர்களையும், பிறர் மனைவியரின் கற்பு அழிக்கின்றவர் களையும், கொலைத் தண்டனை விதித்து அழிக்கவேண்டும் என்பதை விளக்கப் பைங் கூழுடன் வளரும் களைகளைக் களைந்து எறிவதை ஒப்புக் காட்டி மொழிந்தனர். இக்கருத்துக் கொண்ட திருக்குறள்தான்,

**கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்**

என்பது. இந்தக் குறட்பாவின் கருத்தைத் தழுவியே,

**நஞ்சம் அன்ன வரைநலிந் தால்அது**
**வஞ்சம் அன்று மனுவழக்கு**

என்று கம்பர் கிட்கிந்தா காண்டத்தும்,

**மிகை செய்தார்களை நாடியே**
**வேந்தொறுத்திடுதல் தகைமையேஎன**
**மனுமுறை நூல்களும்**
**சாற்றும்**

என்று கச்சியப்பர் கந்தபுராண அமைச் சியற்படலத்தும்,

**கருவிநஞ் சாதி தம்மால்**
**காமரார் உயிரைக் கொல்வோர்**
**வெருவரச் சூறை கொள்வோர்**
**மேவிஆ றலைப்போர் கள்வர்**
**உருவளர் பிறனில் வேட்போர்**
**உவர்முத லோரைக் கோறல்**
**பருவரு பாவம் அன்று**
**பயிர்க்களை களைதல் போலாம்**

என்று கச்சியப்ப முனிவர் தம் விநாயக புராணத்து அரசியல் படலத்தும் கூறுதல் காண்க.

**வேய்:-** இது மூங்கில். பச்சை மூங்கிலை மாதர்களின் தோளுக்கு உவமையாகக் கூறு வது மரபு. அதாவது தோளிலிருந்து முழங்கை வரையில் உள்ள பகுதிக்கே வேய் உவமை யாகும். வேரோடு எடுக்கப்பட்ட மூங்கிலின் அடிப்பகுதி சிறிது வளைந்து இருக்கும். அவ்வளைவு போல மாதர்களின் தோளும் சிறிது வளைந்து இருப்பதைக் காணின் இவ் உவமைப் பொருத்தத்தை உணரலாம். இந்த உவமையை உணர்த்தவே நாயனார் **‘வேய்ந்தோள் அவட்கு’** என்று ‘நலம்புனைந் துரைத்தல்’ என்னும் அதிகாரத்தில் குறிப் பிட்டுள்ளனர். புகலியர் கோனாரும் **‘வேயுறு தோளி’** என்று பார்வதி தேவியார் தோளைச் சிறப்பித்திருப்பதைக் காண்க.

**கரும்பு :-** இதனைச் செந்நாப்போதார் கீழ்மக்களுக்கு உவமையாக்கினர். உவமை கூறும்போது ஒரு பொருளின் எல்லாப் பகுதியையும் வைத்து ஒப்பு நோக்குதல் கூடாது. அந்தந்தக் கருத்துக்கு ஏற்ப அப்பொருளின் பகுதியை உவமையோடு பொருத்திப் பார்த்தல் வேண்டும். வள்ளுவர் ஈண்டுக் கரும்பின் வன்மைத் தன்மையினை மட்டும் கொண்டு அதனைக் கீழோருக்கு உவமை கூறினர். கரும்பின் சாற்றை எளிதில் பெறமுடியாது. கரும்பை வாயில் வைத்த தும் சுவைத்துவிடமுடியாது. அதனை இயந்தி ரத்தில் நன்கு நசுக்கினால் தான் தன் சாற்றை வெளிப்படுத்தும், அல்லது நாம் நன்கு கடித்தால்தான் சாற்றினைப் பெற முடியும். இதுபோலக் கீழ்மக்களிடத்திலும் எளிதில் பயன்பெற இயலாது. அவர்களை வருத்தி




படிப்பகம்

www.padippakam.com


**வற்றல் மரமாயினும் ஒரு காலத்தில் வற்றி ஒரு காலத்தில் வளர்ந்து செழிக்கக்கூடும். ஆனால் அந்த வற்றல் மரம் வலிய நிலத்தில் இருக்குமானால், அடியில் ஈரம் இல்லாத காரணத்தால் தளிர்க்கவே மாட்டாது. இது போலத்தான் உள்ளத்தில் அன்பு இல்லாத உயிர் இல்லறத்தில் ஈடுபட்டிருந்தாலும், இல்லறத்தை நடத்துவதனால் பயனை அடையாது என்றனர்.**

னால்தான் பயன் தருவர். ஆகவேதான் பெரு நாவலர் 'கயமை' என்னும் அதிகாரத்தில் **'கரும்பு போல் கொல்லப் பயன்படும் கீழ்'** என்று கூறினார்.

**வள்ளி:-** இக்கொடியை நாயனார் ஊடல் கொண்ட மகளிர்க்கு உவமை காட்டியுள் ளனர். ஊடலாவது காதலி, காதலனிடம் சிறிதுநேரம் மனக்கவலை கொண்டிருத்தல். ஈண்டுத் திருவள்ளுவர் கூறும் வள்ளிக் கொடி பசுமையானது அன்று. வாடி வதங் கிய வள்ளிக்கொடியாம்; தன் ஊடல் காரண மாகக் காதலனைப் புணரப்பெறாத தலைவி வாடி வதங்கித்தானே இருப்பள்! ஆகவே ஊடல் கொண்ட காதலிக்கு வாடிய வள்ளி நல்ல பொருத்தமான உவமையே. வாடிய வள்ளி நீரைப் பெறாத நிலையில் வாடியிருக் கும். நீரைப் பெற்றதும், மீண்டும் வளர்ந்து பச்சைப் பசேரென்று காணப்படும். அது வாடிவிட்டதே என்று அதன் வேரை அறுத்து விட்டால் அது தளிர்க்குமோ? தளிர்க் காது. இந்தக் கருத்தினை, ஒரு தலைவி தன் தலைவனிடம் அன்ப, நீ இப்போது உன் காதற் கிழத்தியை விட்டு என்னிடம் வந்து என் ஊடலைத் தீர்க்க முயல்கின்றாய், அது வேண்டா. உன்னைப் பிரிந்திருப்பதனால் பரத்தை (காதல் கிழத்தி) ஊடியிருக்கின் றாள். அவள் ஊடலைத் தீர்க்காமல் இருப்பது வாடிய வள்ளியை அடிவேரில் அரிவது போலாம் என்றனள். இந்தக் கருத்துக்களைத்தாம் முதற் பாவலர் புலவி என்னும் அதிகாரத்தில்,

**ஊடி யவரை உணராமை வாடிய**
**வள்ளி முதல்அரிந் தற்று.**

என்று பாடியுள்ளனர். உணராமையாவது ஊடலை நீக்காது இங்கு வருதல் என்பது. முதல் என்பது வேரை என்க.

**மரம்:-** நாயனார் மரத்தைப் பற்றிய கருத்தை விளக்க வரும்போது, வற்றல் மரம், பயன்மரம், தப்பா மரம், முள் மரம், நச்சு மரம் என்று பலவாறு குறிப்பிட்டுள்ளனர்.

வற்றல் மரமாயினும் ஒரு காலத்தில் வற்றி ஒரு காலத்தில் வளர்ந்து செழிக்கக்கூடும். ஆனால் அந்த வற்றல் மரம் வலிய நிலத்தில் இருக்குமானால், அடியில் ஈரம் இல்லாத காரணத்தால் தளிர்க்கவே மாட்டாது. இது போலத்தான் உள்ளத்தில் அன்பு இல்லாத உயிர் இல்லறத்தில் ஈடுபட்டிருந்தாலும், இல்லறத்தை நடத்துவதனால் பயனை அடை யாது என்றனர். இந்தக் கருத்தடங்கிய குறளில் தான் வற்றல் மரத்தை நாயனார் எடுத்து மொழிந்துள்ளனர்.



**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம்தளிர்த் தற்று**

என்பது அக்குறள்.

**பயன் மரம் ஒருவன் வீட்டின் தோட்டத்திலோ, புறக்கடையிலோ, தோப்பிலோ இருக்கும். ஆனால் அது தன்னை உரியவனுக்கே பயன் தரவல்லது. அதனை எவரும் பயன்படுத்திக் கொள்ள இயலாது. ஆனால் அத்தகைய பயன்தரும் மரம் பொதுவாக ஊருக்கு நடுவே யாவரும் அதன் பயனைப் பெறத் தக்க முறையில் இருக்குமானால், அந்த மரத்தின் மாண்பைக் கூறவும் வேண்டுமோ?**


படிப்பகம்

www.padippakam.com


**பயன்மரம் :-** மரங்கள் யாவும் பயனுடையனவே என்றாலும், சிறப்பு முறையில் பயன்படும் மரங்களைத்தாம் ஈண்டுப் பயன்மரம் என்றனர் நாயனார். அஃதாவது மரத்தின் எல்லாப் பகுதியும் பயன்தருவதாக இருப்பதையே பயன்மரம் என்று கூறலாம். பயன் மரம் ஒருவன் வீட்டின் தோட்டத்திலோ, புறக்கடையிலோ, தோப்பிலோ இருக்கும். ஆனால் அது தன்னை உரியவனுக்கே பயன் தரவல்லது. அதனை எவரும் பயன்படுத்திக் கொள்ள இயலாது. ஆனால் அத்தகைய பயன்தரும் மரம் பொதுவாக ஊருக்கு நடுவே யாவரும் அதன் பயனைப் பெறத் தக்க முறையில் இருக்குமானால், அந்த மரத்தின் மாண்பைக் கூறவும் வேண்டுமோ? இந்த உண்மையை அறிந்தே திருவள்ளுவர், பிறரால் விரும்பப்படுவானிடத்துச் செல்வம் இருக்குமானால் அது பயனுடைய மரம் ஊர் நடுவுள் பழுத்தது போன்றது என்று கூறினார். இந்த உவமையினால் ஒப்புரவு செய்பவன், தன்னிடம் எவர் எந்த நேரத்திலும் வந்து உதவி வேண்டினும், தருவன் என்பது புலனாகின்றதன்றோ? ஒப்புரவாவது இல்லை என்று கூறிக் கேட்பவர் யாவர்க்கும் கொடுக்கும் வளம் இல்லை என்றாலும் தன் அளவிற்கும், தன் வருவாய்க்கும் ஏற்ப அளிப்பதாகும்.

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்**

என்பதே மேலே கூறிய கருத்துக்களைக் கொண்ட குறள்.

**தப்பா மரம்:-** இம்மரம் ஈண்டு மருந்தாகப் பயன்படும் மரமாகும். இந்த மரங்கள் காட்டுக்குள்ளோ, மலைமீதோ, மறைந்திருக்குமானால், அத்துணைப் பயன் அன்று. இஃது எளிதில் எவரும் பெற்றுத் தம் நோயைப் போக்கிக் கொள்ளும் வகையில் ஊருக்கு நடுவே வளர்ந்து இருக்கும் மரமாகும். இது மறைதல் இன்றி வெளிப்படையாக இருக்கும் மரம் என்பதை உணர்த்தவே நாயனார் தப்பா மரம் என்று அடைகொடுத்துப் பாடியுள்ளனர். தப்பா மரம் என்பதற்கு விளக்கம் தந்த பரிமேலழகர், கொள்ளுதற்குரிய இடங்களில் இருத்தலின் மறையாமை என்றும், மணக்குடவர் தேடுவார்க்கு மறைதல் இல்லாத மரம் என்றும் விளக்கியுள்ளனர். இந்த மரத்தின் ஒரு பகுதி மட்டும் நோய்க்கு மருந்தாகப் பயன்தரக் தக்கதாக இன்றி எல்லா உறுப்புக்களினாலும் பயன்தரக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே திருவள்ளுவரின் கருத்து. இத்தகைய மரத்தையே புறநானூறு "மருந்து கொள் மரம்" என்று கூறுகின்றது. இந்தச் சீரிய மரத்தை நம் பொய்யில் புலவராம் திருவள்ளுவப் பெருந்தகையார் இடம் அமைந்துள்ள செல்வத்துக்கு உவமை காட்டினார். அக்குறளே,


**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்**

என்பது.

**முள்மரம்:-** மரங்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; சில மரங்கள் முள்ளுடன் கூடியதாக இருக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக வேல மரத்தைக் கூறலாம். அத்தகைய மரமே முள் மரம் எனப்படும். முள் மரத்தை வளர ஒட்டாமல், படர ஒட்டாமல் இருக்க விரும்பினால் அதனை முளையும்போதே, அதாவது இளையதாக இருக்கும்போதே களைந்து எறியவேண்டும் என்கின்றார் பொய்யில் புலவர். இதற்குக் காரணம் கூறும் போது நன்கு வளர்ந்த பிறகு களைந்தால் முள் களைவார் கையை வருத்தும் என்பதாம். இவ் விளக்கம் அமைந்த குறள்,

**இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து**

என்பது. இஃது ஒப்புரவறிதல் என்னும் அதிகாரத்தில் உளது. இந்தக் குறள் முள் மரத்தைப் பற்றிக் கூறுவதாகக் காணப்பட்டாலும் இதன் மூலம் நம் பெருநாவலர் கூற வந்த கருத்து நம் பகைவர் வலியவராக வளர்தற்கு முன்பே அவர்களை அடக்க வேண்டும், என்பதாம். இங்ஙனம் இளமையில் அடக்கவில்லை என்றால், அப்பகைவர் வலிமை மிக்கு நம்மையே அடக்க முற்படுவர் என்க.



**நச்சு மரம்:-** நச்சு மரமாவது விடத்தன்மை தன்னிடத்தே கொண்ட மரம். அதாவது அதன் காற்றுப்பட்டாலும் பழத்தை உண்டாலும், மற்றும் பலவற்றாலும் தீங்கு விளைவிக்கும் மரம்.


படிப்பகம்

www.padippakam.com


இதனை முன்பு கூறிய பயன் மரத்திற்கு நேர்மாறான மரம் என்று கூறலாம். இத்தகைய மரத்திற்குக் காஞ்சிரை மரத்தை எடுத்துக்காட்டலாம். இந்த மரம் ஊர்க்கு நடுவே யாவரும் கொள்ளத்தக்க நிலையில் பழுத்திருந்தால் யாது பயன்? அம்மரத்தின் பழம் எளிதில் கிடைக்கிற தென்று எவரேனும் உண்டால் என்னாவர்? இறப்பர் அல்லரோ? இத்தகைய மரத்தைத் தான், மாதானுபங்கி எவராலும் விரும்பப் படாதவனிடத்து அமைந்த செல்வத்திற்கு உவமை கூறினார்.

பிறரால் விரும்பப்படாதவர் ஏழை எளிய வர்களுக்குக் கொடாதவர், பெருஞ்செல்வர் ஊரில் வாழ்ந்திருந்தால் யாது பயன்? செல் வத்துப் பயன் ஈதல் அன்றோ? இதனை உண ராதவனிடத்து இருக்கும் செல்வத்திற்கு நச்சு மரத்தை உவமை கூறியது மிகமிகப் பொருத்தமே ஆகும். இந்தக் கருத்தைத் தான் நாயனார் தம் குறளில், ‘நன்றியில் செல்வம்’ என்னும் அதிகாரத்தில்,

**நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று**

என்று அறிவித்துள்ளனர்.

***அனிச்சம்:-*** இது மிக மென்மை வாய்ந்த மலர். இதன் மென்மைத் தன்மையினைத் திருவள்ளுவர் மோந்த மாத்திரத்தில் வாடி விடும் (மோப்பக் குழையும் அனிச்சம்) என்று கூறியுள்ளனர். இவ்வாறு இதன் தன்மையினை எடுத்துக் காட்டும் முகத் தால் நம்மை நோக்கி வரும் விருந்தினர் தன்மையினையும் நன்கு விளக்கினார். அதாவது விருந்தினர் வருகையில் நாம் முகம் சுளித்துப் பார்த்த அளவில் அவர் களின் முகமும் வாடிவிடும், என்பதாம். இந்தக் கருத்தடங்கிய,

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**

என்பது வருகின்றது.

இந்த அனிச்சத்தின் மென்மையினைத் திருவள்ளுவர் நலம்புனைந்துரைத்தலின்,

**அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை**

யென்றும்,

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்**

என்றும் கூறியுள்ளார். முன் குறளின் கருத்து, அனிச்சப்பூவின் காம்பைக் கிள்ளி எடுக்காமல் தலைவி தன் தலையில் சூடிய தால் இடுப்பு முறிந்துவிடும் என்பதும், இக்குறளின் கருத்து. அனிச்ச மலரும் அன்னத்தின் சிறகும் தலைவியின் பாதங்களுக்கு நெருஞ்சிமுள் போலத் துன்பந் தருவதாம் என்பதும் ஆகும். இவ்விரு குறட்பாக்களின் வழி, தலைவி யின் மென்மைத்தன்மை அனிச்ச மலரி னும் மென்மையதாம் என்பது.

இதுவரையில் தாவரமாகிய உயிர் இனத்தை வள்ளுவர் வாய்மொழியின் மூலம் அறிந்தவற்றைப் பார்த்தோம். இனி, நீர் வாழும் உயிர் இனங்களைப் பற்றியும் ஆய்வோமாக. நீர் வாழ் உயிர் இனங்களாக முதற்பாவலர் கூறி இருப்பவை ஆமை, முதலை, கயல் என்பன. இவை சிறப்பு முறை யில் எடுத்துக் கூறப்பட்டன. மீனைப் பற்றிப் பொதுப்படப் பாடியுள்ளனர். ஈண்டுச் சிறப்பு முறையில் சொல்லப்பட்டிருப்பதைப் பற்றி மட்டும் சிந்திப்போமாக.

***ஆமை:-*** ஐம்புலன் அடக்கத்திற்கு ஆமை உவமையாகத் திருவள்ளுவரால் கூறப்பட் டுள்ளது. ஆமைக்கு நான்கு கால்களுடன் ஒரு தலையும், சேர ஐந்து உறுப்புகள் வெளிப் படையாகத் தெரிய வருவன. ஆமை தனக்கு விபத்து வருகின்றது என்று உணருமா னால், உடனே தன் நான்கு கால்களையும் தலையையும் தன் ஓட்டுக்குள் மறைத்துக் கொள்ளும். இங்ஙனம் ஐந்து உறுப்புக்களை மறைத்துக் கொள்ளுதலையே நாயனார் ஐம்புலன் ஒடுக்கத்திற்கு உவமை காட்டி னார். ஐந்து உறுப்புக்களை ஆமை அடக்கிக் கொள்வதன் கருத்து அதன் உறுப்புக்களுக்கு இடர் புகாமல் இருக்கவே ஆகும். அது போலப்




படிப்பகம்

www.padippakam.com


பாவங்களாகிய ஐம்பொறிகளையும் [மெய் (உடம்பு), வாய், கண், மூக்கு, செவி] பாவம் புகாமல் அடக்கவேண்டும் என்பதே நாயனார் உள்ளக்கிடக்கை. இப்படி ஒரு பிறப்பில் ஐம்புலன்களை ஆமைபோல அடக்கிக் கொண்டால் ஏழு பிறப்பில் அப்பொறியடக்கம் காவலாக அமைந்து நன்மையே தருவதாகும். இந்தப் பொருளையே நாயனார் அடக்கமுடைமை எனும் அதிகாரத்தில்,

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து**

என்று கூறியுள்ளனர்.

***முதலை:-*** இதுவும் நீரில் வாழும் உயிர் இனத்தைச் சேர்ந்தது. இதற்கு நீரில் வன்மை மிகுதி. நீரில் இருந்தால் யானையைக்கூட இழுத்துத் தண்ணீரில் ஆழ்த்தும் வன்மையுடையது. இதுவே நிலத்தில் கிடந்தால் அத்துணை வலியற்றது. இதுகுறித்தே,

**ஆனையைச் சலந்தனில் இழுத்த அக்கரா**
**பூனையைக் கரைதனில் பிடிக்கப் போகுமோ**

என்னும் பாடலும் எழுந்தது. இப்பாடல் எழுதற்கு அடிப்படை ஆதரவான பாடல் திருக்குறளில் இடன் அறிதலில் வரும்.

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற**

என்னும் குறளே ஆகும். இதன் பொருள் அரசர், பகைவர் நிற்றல் ஆற்றா இடன் அறிந்து வினை செய்வர் ஆயின் பகைவர் எளியர் ஆவர் என்பது ஆகும்.

***கயல்:-*** இது மீன் வகையைச் சேர்ந்தது. நாயனார் பொதுப்பட மீனை எடுத்துக் காட்டிப் பல கருத்துக்களை விளக்கியுள்ளன ரேனும், அவற்றை எல்லாம் எடுத்துக்காட்டாமல் கயல் மீனைப் பற்றி யாது அறிவித்துள்ளார் என்பதை மட்டும் காண்போமாக. மாதர்களின் கண்களுக்குக் கயல் மீனை உவமை கூறுவது புலவர் மரபு. அம்மரபு பற்றித் திருவள்ளுவரும் கயல் மீனைத் தம் குறளில் எடுத்து ஆண்டு கொண்டனர். இதனைக் காமத்துப் பால், 'கனவு நிலை உரைத்தல்' என்னும் அதிகாரத்தில் **'கயல் உண் கண்'** என வரும் தொடரில் காண்க. இதன் பொருள் கயல் போன்று பிறழுவல்லதும், மை தீட்டப்பட்டதும் ஆகிய கண் என்பது. கயல் மீனும் எந்த நேரமும் பிறழ்ந்த வண்ணமாகவே இருக்கும். அவ்வாறே மாதர்களின் கண்ணும் அடிக்கடி பிறழவல்லது. இச்செயலினால் மாதர் கண்களுக்குக் கயல் மீன் உவமையாயிற்று. செயல் உவமைக்காக மட்டும் கயல் உவமை ஆனது அன்று; வடிவத்தாலும் கயல் மீன் மாதர் கண்களுக்கு உவமை ஆகும். இந்த உண்மையைக் கயல் மீனை வைத்துக் கொண்டு மாதர் கண்களுடன் ஒப்பு நோக்கினால் தெரியவரும். ஈண்டுத் திருஞான சம்பந்தர் **'அங்கயற்கண்ணி'** என்றும் பாடி இருப்பதை நினைவு கூர்க.

இதுவரையில் நீர் வாழ் உயிர் இனங்களை ஆய்ந்தோம். இனிப் புள் இன உயிர்களைப் (பறவை இனம்) பற்றி ஆய்வோமாக.

நாயனார் பறவைகளைப் பொதுவாகக் காட்டிப் பல கருத்துக்களை விளக்கிய இடங்களும் திருக்குறளில் உண்டு. ஆனால், சிறப்பாகக் குறிப்பிட்ட சில பறவைகளைப் பற்றி நமக்கு அறிவிக்கும் கருத்துக்களை மட்டும் சிந்திப்போமாக. நாயனார் சிறப்பு முறையில் எடுத்துக்காட்டும் பறவைகள் மயில், அன்னம், கொக்கு, காக்கை, கூகை, என்பன.

***மயில்:-*** இதனை நாயனார் பெண்களின் (சாயல்) மென்மைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளனர். இதனைத் தலைமகன் ஒருவன் தலைமகள் ஒருத்தியைக் கண்டு வியந்து கூறிய கூற்றில் வைத்துத் 'தகையணங்குறுத்தல்' என்னும் அதிகாரத்தில் 'ஆய்மயில் கொல்லோ?' என்று கூறியுள்ளார். மயில் கொல்லோ என்பதன் பொருள் மயில்தானோ என்பது. மயில் எவ்வளவு மெல்லிய சாயல் உடையதாக இருக்கிறது. இந்தத் தன்மைகள்




படிப்பகம்

www.padippakam.com

மயிலினிடத்தில் இருப்பதனால்தாம் மயிலைப் பெண்களுக்கு உவமை கூறினார் நாயனார்.

**அன்னம்:-** நாயனார் அன்னத்தின் தூவி (இறகு) மட்டும் எடுத்துக் கொண்டு அதன் வழி ஒரு கருத்தை அறிவித்துள்ளனர். அன்னத்தின் தூவி மிகமிக மெல்லியது. இந்த மென்மையினும் மிக மிக மென்மை யானது பெண்களின் அடிகள் (பாதங்கள்) என்று பெண்களின் அடியினைச் சிறப்பித் துள்ளனர். மாதர்களின் அடிகள் மிக மிக மென்மையாக இருப்பதனால் அவை அன்னத்தின் தூவிகள் மீது நடந்தாலும் அத்தூவிகள் அம்மாதர்களின் அடி களுக்கு நெருஞ்சி முள் போலத் தைக்கும். நாயனார் அன்னத்தின் தூவியின் மென் மையைக் கூறியதோடு நில்லாமல் மாதர் அடிகளின் மென்மை அத்தூவியின் மென் மையிலும் மென்மையானது என்று காட்டி இருப்பதை உற்று நோக்குக. இதனை 'நலம் புனைந்துரைத்தல்' என்னும் அதிகாரத்தில்,

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்**

என்னும் குறளில் காண்க. நெருஞ்சியின் முள் வன்மையாக இருத்தலின் அதனை நெருஞ்சிப் பழம் என்றார். இக்குறள் கருத் துக்களைத் தழுவி,

**தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத்**
**தண்அனிச்சப்**
**பூமேல் மிதிக்கின் பதைத்தடி பொங்கும்**

எனும் திருக்கோவையார் பாடலை நினைவு கூர்க.

**கொக்கு:-** இது ஒரு தந்திரமான பறவை. தனக்கு இரைவேண்டி இரையைத் தேட ஓடையருகே கரை ஓரம் அசைவின்றி வாடி இருக்கும். இவ்வாறு இருப்பதற்குக் கார ணம், பெரிய மீன்கள் வரும்போது கொத்தி உண்பதற்காகும். கொக்கின் இருப்பை அறியாமல் சிறுமீன்கள் அங்கு வந்து உலவும். பெருமீன்கள் அவற்றைத் தொடரும். உடனே கொக்கு ஒரு பெரு மீனைத் தன் அலகால் குத்திப் பற்றிக் கொள்ளும். இதனைத் திருக்குறள் காலமறிதல் என்னும் அதிகாரத்தில்,

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து**

என்று கூறுகின்றது. கொக்கை உவமை காட்டி நாமும் காலம் வரும் வரையில் அமைதியாக இருந்து முடிக்கும் காலம் வருமானால் உடனே சிறிதும் தாமதம் செய்யாமல் விரைந்து காரியத்தை முடிக்க வேண்டும் என்று திருவள்ளுவர் அறிவித்திருப்பதைக் காண்க.

**ஒடுங்கி இருந்தே உன்னியது முடிக்கும்**
**கொடுங்கால் கொக்கு**

என்னும் பெருங்கதையையும்,

**மடைத்தலையில், ஓடுமீன்ஓட உறுமீன்**
**வரும்அளவும்**
**வாடி யிருக்குமாம் கொக்கு**

என்னும் வாக்குண்டாம் பாடலையும் உற்று நோக்குக.

**காக்கையும், கூகையும்:-** காக்கையைக் கொண்டு இரண்டு கருத்துக்களைத் திருவள்ளுவர் கூறியுள்ளார். ஒன்றால் அதன் தந்திரத்தையும், மற்றொன்றால் அது தான் பெற்றதைத் தன் சுற்றமும் பெறவேண்டும் என்று கூவி அழைக்கும் பண்பையும் கூறி யுள்ளார். முதற்கண் அதன் தந்திரத்தைப் பார்ப்போமாக. காக்கைக்குப் பகலில் பார்வை நன்கு தெரியும், இரவில் தெரியாது. ஆகவே, அது தன் பகைவர்களை வெல்வதற்குப் பகற் காலத்தையே பயன்படுத்தும். காக் கைக்குப் பகைவர் கூகைகள் (கோட் டான்கள்). அக்கூகைகளுக்கோ பகலில் கண் தெரியாது. அதனால்தான் கூகைகளைப் பகற் குருடு என்றும், கூறுவர். ஆகவே, அவை இரவு நேரத்தில் காக்கைகளைக் கொன்று தின்றுவிடும். இதனால் காக்கைகள் பகைமை கொண்டு கூகைகளை அவற்றிற்குப் பார்வை தெரியாத காலமாகிய பகல் வேளையில் தாம் கொத்திக் கொன்று விடும். நாயனார் அரசர்களும் காலம் அறிந்து தம் பகைவர்களை அழிக்க வேண்டும் என்று அறிவித்துள்ளனர். இதனைக் 'காலம் அறிதல்' என்னும் அதிகாரத்தில் வரும்,





படிப்பகம்

www.padippakam.com


**பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது**

என்னும் குறளில் காண்க.

அடுத்துக் காக்கை சுற்றம் தழுவும் தன்மையைத் திருவள்ளுவர்,

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள**

என்று கூறியுள்ளார். இப்பாட்டின் திரண்ட பொருள்: காக்கைக்கு இரை கிடைக்குமானால், அதனைத் தானே உண்ண விரும்பாமல் தன் சுற்றத்தையும் கூவி அழைத்து அவற்றோடு உண்ணும் என்பது. அக் காக்கை போன்ற தன்மையுடையவர்களுக்குத்தான் பெருஞ்செல்வமும் உண்டாகும் என்பது. காக்கை கரவா கரைந்து உண்ணும் என்னும் கருத்தைத் தழுவித் தான் தாயுமானவரும் **"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்"** என்று கூறியுள்ளார்.

இனி, ஊர்வனவற்றைச் சார்ந்த உயிரினங்கள் தமிழ் மறையில் எப்படி ஆளப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்வோமாக. ஊர்வனவற்றுள் பாம்பையும், புழுவையும் மட்டும் திருவள்ளுவர் தம் நூலில் குறித்துள்ளனர். புழுவினை அழகாக **'என்பிலது'** என்கின்றார்.

**பாம்பு :-** பாம்பில் பலவகை உண்டு. நாயனார் சிறப்பு முறையில் பாம்பின் பெயர்களைக் குறிக்காமல் பொதுப்படப் பாம்பு என்று மட்டும் காட்டியுள்ளார். மூன்றிடங்களில் பாம்பின் குறிப்பு வருகின்றது. ஓர் இடம் 'படைமாட்சி' என்னும் அதிகாரம். மற்றோர் இடம் 'உட்பகை' என்னும் அதிகாரம். மூன்றாவது இடம் 'அலர் அறிவுறுத்தல்' என்னும் இடம்.

**காக்கைக்கு இரை கிடைக்குமானால், அதனைத் தானே உண்ண விரும்பாமல் தன் சுற்றத்தையும் கூவி அழைத்து அவற்றோடு உண்ணும் என்பது. அக் காக்கை போன்றதன்மையுடையவர்களுக்குத்தான் பெருஞ்செல்வமும் உண்டாகும்**

படைமாட்சி என்னும் அதிகாரத்து,

**ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும்**

என்னும் குறளில் நாகம் வருதல் காண்க. இக்குறளின் கருத்து எலியாகிய படை திரண்டு கடல் ஒலிபோல் ஓசை செய்யினும், ஒரு பாம்பு அவற்றின் முன் வந்து மூச்சு விட்டதும் அப்பகை எலிகள் ஓடிவிடும் என்பது. இந்தக் கருத்தின் உட்பொருள். வன்மைமிக்க ஒரு வீரன்முன் வன்மையற்ற பல வீரர்கள் வந்தாலும் பயன் இல்லை, என்பதாம். பாம்பை எடுத்துக்காட்டாக மொழிந்து அதன் வழி ஒப்பற்ற வன்மை மிக்க ஒரு வீரனது ஆண்மையினைப் புலப்படுத்தியவாறு காண்க. இக்கருத்தை ஒட்டியே கம்பர்,

**எலியெலாம் இப்படை அரவம் யான்என**
**ஒலியுலாம் சேனையை உவந்து கூவினன்**

என்று பாடியுள்ளனர்.

உட்பகை என்னும் அதிகாரத்தில் பாம்பின் குறிப்பு இருப்பதை,

**உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
**பாம்போ டுடனுறைந் தற்று**

என்னும் குறளில் காணலாம். இந்தக் குறளின் பொருள், மனப்பொருத்தம் இல்லா தவருடன் கூடிவாழும் வாழ்க்கை புற்றில் இருக்கும் பாம்புடன் ஒருவன் வாழ்வது போன்றது என்பது. இதன் கருத்து, பாம்புடன் பழகுபவன் கட்டாயம் அழிவான் என்பதாம். இதனால் தான் **'பாம்பொடு பழகேல்'** என்னும் பழமொழியும் எழுந்தது. ஆகவே நாயனார் உட்பகையுடையார்க்கு உவமையாகப் பாம்பைக் கூறிப் பாம்பின் கொடுமையை உணர்த்தியுள்ளனர்.

புழு:- இதனை வள்ளுவர் 'என்பிலது' என்பர். காரணம் புழுவின் உடலில் எலும்பு இன்மையால் என்க. எலும்பு இருந்தால்


படிப்பகம்

www.padippakam.com


வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் ஏற்படும். எலும்பு இல்லையேல், எலும்பு அற்ற புழு வெயிலில் சென்றதும் மடிந்து விடும். இதனைத்தான் தமிழ்மறை 'அன்புடைமை' என்னும் அதிகாரத்தில்,

**என்பில் அதனை வெயில்போலக் காயுமே**
**அன்பில் அதனை அறம்**

என்கிறது. வெயிலில் புழு மடிவதை உவமை கூறி அதன்வழி அன்பில்லாத உயிரை அறக் கடவுள் வருத்தும் என்று கூறினார் திருவள்ளுவர். இதனால் உயிர்க்கு அன்பு மிகமிக இன்றியமையாதது என்றும், புழு பிறரால் அழிக்கப்படாமலே வெயிலில் சென்றதும் தானே அழிவதுபோல அன்பிலாத உயிரும் அறத்தின் ஆற்றலால் துன்புறும் என்றும் உணர்த்தி இருப்பதைக் காண்க.

இதுவரையில் ஊர்வனவாகிய உயிர் இனங்களைப் பற்றி வள்ளுவர் வரைந்திருப்பதைக் கண்டனம். இறுதியாக விலங்குகளுள் எவ்வெவற்றை எடுத்துக் கூறி எவ்வெக் கருத்துக்களை மக்களுக்கு அறிவித்துள்ளார் என்பதையும் கூறி இக்கட்டுரையினை முற்றுவிப்போம்.

திருக்குறளில் விலங்கு என்று பொதுப் படக் கூறிய இடம் ஒன்றே ஆகும். அது 'கல்லாமை' என்னும் அதிகாரத்தில் உளது. கல்லாத மக்களை விலங்குக்கு உவமை ஆக்கினார். சிறப்பு முறையில் ஏறு, பெற்றம், பிணை (மான்), ஆ (பசு), களிறு (யானை), முயல், புலி, நரி என்பனவற்றை எடுத்து மொழிந்துள்ளனர்.

***ஏறு:-*** இது காளை மாட்டைக் குறிக்கும். ஏறு என்னும் சொல்லையும், ஏறு என்னும் பொருளைத் தரும் பகடு என்பதையும் திருவள்ளுவர் தம் குறளில் ஆண்டுள்ளனர். ஏறு பெருமித நடைக்கு உவமையாகும். இதனை வள்ளுவர் 'வாழ்க்கைத் துணை நல'த்தில் **'ஏறுபோல் பீடுநடை'** என்றனர். இல் வாழ்வானுக்குப் புகழைக் காக்கும் மனையாள் அமையவில்லையானால் அவனுக்குப் பெருமித நடை அமையாது, என்பது வள்ளுவர் கருத்து. ஈண்டு ஏறு என்னும் சொல்லிற்குப் பொருள் கூறுகை யில் உரையாசிரியர் களுக்குள் மாறுபாடு ஏற்பட்டுள்ளது. பரிதியார் ஏறு என்ப தற்குக் காளை என உரை எழுதியுள்ளனர். பரிமேலழகர் சிங்கம் என்று உரை எழுதி யுள்ளனர். ஏறு (சிங்கம்). சிங்கம் மிருகேந் திரன் எனப்படும். ஆகையினால் திருவள்ளுவர் அரசர்களுக்குள் சிறந்து விளங்குபவனுக்கு ஏற்றை உவமை கூறினார். அதாவது எவ்வரசன் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, கோட்டை என்னும் ஆறு உறுப்புக்களை யும் உடையவன் ஆக இருக்கின்றானோ அவ்வரசன்தான் அரசருள் ஏறுபோன்றவன் என்றனர். இதனை 'இறைமாட்சி' எனும் அதிகாரத்தில்,

**படைகுடி கவழ்அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு**

என்று சொல்லி இருப்பதைக் காணவும். ஆகவே, நாயனார் சிங்கத்தைச் சீரிய அரசனுக்கு உவமை கூறினார் என்க.

***ஆ:-*** இதன் பொருள் பசு. இச்சொல்லை ஈரிடத்தில் திருவள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். ஓர் இடம் 'கொடுங்கோன்மை' அதிகாரம். பசுவினால் நாம் பெறும் பயன்கள் பல. அவற்றுள் சிறப்பான பயன்கள் பால், தயிர், நெய் என்பன. இந்தப் பயனை மக்கள் பெறாது போகும் காலமும் ஒன்று ஏற்படும். அக்காலம் அரசன் நாட்டை ஒழுங்காகக் காவல் புரியாத காலமாகும். இதைத்தான் **"காவலன் காவான் எனின் ஆ பயன் குன்றும்"** என்றனர். நாயனார் அரசனது செங்கோன்மைக்கும், பசுவிற்கும் உள்ள தொடர்பைக் கூறிப் பசுவினால் ஏற்படும் பயனை அறிவித்துள்ளனர்.

மற்றோரிடம் 'இரவச்சம்' என்பதாகும். அங்குக் குறிப்பாகப் பசுவை நீரூட்டிக் காக்க வேண்டும் என்பது, கூறப்பட்டுள்ளது. ஆனால் திருவள்ளுவர் பிறரிடம் சென்று நீரைக்கூடக் கேட்டுப் பசுவைப் பருகுவித்தல் கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாக விளக்க வேண்டிப் பசுவிற்கு நீர் தேவை என்று கூடக் கேட்கக்கூடாது என்பார்,




படிப்பகம்

**ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்த தில்**

என்று பாடிக் காட்டியுள்ளனர்.

***களிறு:-*** இதன் பொருள் ஆண் யானை. இச்சொல்லை நாயனார் ஊக்கமுடைமை, படைச்செருக்கு, தகை அணங்குறுத்தல் என்னும் அதிகாரங்களில் ஆண்டுள்ளனர். அவற்றுள், ஓர் இடத்தை மட்டும் விளக்கிக் கூறுவோமாக. அந்த இடம் தகை அணங் குறுத்தல் என்பது. மாதர்கள் தம் மார்பகத் தின் மீது ஆடையை அணிந்துள்ளனர். அப்படி அணிந்திருப்பது களிற்றின் முகத் தின் மீது இடப்பட்ட முகபடாம் என்னும் துணியைப் போன்றது என்கின்றார்.

**கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்**
**படாஅ முலைமேல் துகில்**

என்ற குறளில் கூறினார்.

யானை என்னும் சொல்லையும், திருவள்ளுவர் தம் குறளில் ஊக்க முடைமை, வினை செயல்வகை, பொருள் செயல்வகை, படைச்செருக்கு எனும் அதிகாரங்களில் எடுத்தாண்டுள்ளனர்.

***நரி:-*** யானை சேற்று நிலத்தில் இருக்கும் போது நரி அதனைக் கொல்லும் என்பர் நாயனார். இதனை அவர் இடன் அறிதல் என்ற அதிகாரத்தில் ***"கால் ஆழ் களரின் நரி அடும்"*** என்று கூறுதல் காண்க. இவ்வாறு கூறுவதிலிருந்து யானைபோலப் பருத்து வன்மை கொண்டிருந்தாலும் தம் இடத்தை விட்டு எதிரிகள் இருக்கும் இடத்தில் அகப்பட்டுக் கொண்டால், அவ் வெதிரிகள் வன்மையில் குறைந்த சிறு படையினராயினும் பெரும்படையினரைக் கொல்வர் என்ற கருத்தை விளக்கினர்.

***தகர்:-*** தகராவது ஆடு. ஆடு பின்வாங்கி வாங்கிப் பாயும், என்பதை அறிவிக்க ஆட்டை எடுத்து ஆண்டனர். அப்படி ஆடு பின்வாங்குதல் தன் தோல்வியை ஒப்புக் கொள்வதற்காக அன்று. இறுதியில் வெல்வதற்காகவே, ஆகும். இத்தகைய ஆட்டைத் தான் ஊக்கமுடையான் சில சமயங்களில் அடங்கியிருப்பதற்கு உவமை கூறினார். இந்தக் கருத்தடங்கிய குறளே 'காலம் அறிதலி'ல்,

**ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேரும் தகைத்து**

என்று காணப்படுகிறது.

இந்தக் கருத்தைத்தான் பெருங்கதை என்னும் நூல்,

**பாடு பெயர்ந்து இடிக்கும் ஏடகம் போல**
**அகன்று பெயர்ந் தழிக்கும் அரும்பெறல் சூழ்ச்சி**

என்றும்,

**ஏற்ற காலம் வரும் அளவும்**
**எண்ணி இருக்க அதுமைந்த**
**வீற்றுச் சமர்க்குப் பின் வாங்கும்**
**வெற்றித் தகரே ஆகுமால்**

என்று விநாயக புராணமும் கூறுகின்றன.

***பிணை:-*** பெண்மானைப் பிணை என்பர். பெண்மானின் கண்ணினை, மாதர்களின் கண்ணுக்கு உவமை கூறுதல் புலவர் மரபு. இதனால்தான் நாயனார் பெண்ணின் கண்ணைப் பிணையோ என்று 'தகை அணங் குறுத்தல்' என்னும் தலைப்பின் குறள்களில் ஒன்றில் கூறியுள்ளார். பிணைக்கு விளக்கம் தந்த பரிமேலழகர் **'இயல்பாக வெருவுதல் உடைமையால் பிணையோ'** என்று விளக்கி னார்.

***முயல்:-*** ஒரு வேடன் தன் கையில் முயலை எய்த, அம்பை ஏந்துவதிலும் யானையைக் குறிபார்த்து, வேலை எய்து, அஃது அவ்வானையினை மாய்க்காததாக இருந்தாலும் அதனை ஏந்துதலே சிறப் புடைத்து என்பதை அறிவிக்கும்போது முயலை எடுத்து மொழிந்தனர். அம்முயல் எனும் உயிர் இனம் அடங்கிய தொடரே **'கான முயல் எய்த அம்பு'** என்பது. இது 'படைச்செருக்கு' என்னும் இடத்தில் வருகிறது.

***புலி:-*** யானையினும் புலி வீரத்தில் சிறந்தது என்பதை அறிவிக்கப் புலியை எடுத்து மொழிந்துள்ளனர். அஃதாவது யானை பருமனாக இருப்பினும் புலி





படிப்பகம்

www.padippakam.com


காளை சுமை ஏற்றப்பட்ட வண்டி சேற்றிலும், மணல் செறிந்த இடத்திலும் மேடு பள்ளமான இடத்திலும் செல்லவேண்டிய நிலையில் அது பற்றித் தளர்ந்து நின்றுவிடாமல் மூக்கை ஊன்றியும், தாள் தவழ்ந்தும் பக்கங்களில் உராய்ந்தும் வண்டியை இழுத்துச் செல்லும். அதுபோல மெய்வருத்தம் பாராமல் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வேண்டும்

தன்னைத் தாக்க வரும்போது அஞ்சுமாம். இதனைத்தான் 'ஊக்கம் உடைமை' என்னும் அதிகாரத்தில்,

**பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்**

என்று கூறியுள்ளார், வள்ளுவர். இப்புலி யின் மூலம் ஊக்கமுடையவன் உடல் சிறிய தாயினும் ஊக்கம் இல்லாப் பரு உடலனை யும் வெல்வன் என்று அறிவுறுத்தியுள்ளனர்.


**கல்லாமா:-** மா என்பது பொதுப்பட எல்லா விலங்குகளையும் குறிக்குமாயினும், ஈண்டுக் குதிரையைக் குறித்து நிற்கிறது. இந்தக் குதிரையினைக் கல்லாமா என் கிறார் வள்ளுவர். கல்லாமா என்பதற்கு பரிமேலழகர் ஐந்துவகை நடையினையும், பதினெட்டு வகைச் சாரிகளையும், (Gallops) கல்லாத என்றனர். இவ்வாறு இந்த மாவைத் திருவள்ளுவர் கூறியதன் கருத்து, போர் வராதபோதெல்லாம் வீரனைத் தாங்கி இருந்து போர் வந்தபோது போர்க்களத்தில் வீரனைத் தள்ளும் இயல்புடையது என்ப தாம். இக்கருத்தின் வழி இத்தகைய கல்லாமா போன்ற தீய நண்பர்களுடன் கூடி வாழ்த லினும், தனித்து வாழ்தலே சாலச் சிறப்பு என்பதை அறிவித்திருத்தல் காண்க. இக்கருத் தடங்கிய குறளே 'தீ நட்பு' என்னும் அதிகா ரத்தில் வரும்,

**அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை**

**கவரிமா:-** ஈண்டு மா என்பது மானைக் குறிக்கும் சொல்லாகும். மான்களில் பல வகை உண்டு. இங்குக் கூறப்பட்ட மா கவரிமா. கவரிமா என்பது தன் உடல் முழுதும் வெள்ளிய மயிரைக் கொண்டு இருப்பது. இந்த மயிர்த் தொகுப்புதான் கோவில்களில் இறைவன் உலாப்போகும் போது விசிறிபோல இரட்டப்படுகின்றது. இந்த மான் மிகவும் மானம் உடையது. தன் உடலில் உள்ள மயிர் நீங்கின் உயிர் துறக்கும். மானமுடையவர்கள் இதுபோன்ற தம் பெருமை சிதைய வரும்போது தம் உயிரை விடுவர் என்று வள்ளுவர் கூறுகின்றனர்.

**பகடு:-** இதன் பொருள் காளை. காளை சுமை ஏற்றப்பட்ட வண்டி சேற்றிலும், மணல் செறிந்த இடத்திலும் மேடு பள்ள மான இடத்திலும் செல்லவேண்டிய நிலை யில் அது பற்றித் தளர்ந்து நின்றுவிடாமல் மூக்கை ஊன்றியும், தாள் தவழ்ந்தும் பக்கங் களில் உராய்ந்தும் வண்டியை இழுத்துச் செல்லும். அதுபோல மெய்வருத்தம் பாரா மல் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்கிறார். அத்தகையவ னுக்கே இப்பகடு என்னும் விலங்கை உவமை ஆக்குகிறார். அதனை **'மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னான்'** என்று 'இடுக்கண் அழி யாமை' அதிகாரத்தில் கூறியிருத்தல் காண்க.

**பெற்றம்:-** இச்சொல் பசுவையும், குறிக் கும்; காளை மாட்டையும் குறிக்கும். திருக் குறளில் இச்சொல் பசு என்னும் பொரு ளில் ஆளப்பட்டுள்ளது. ஈண்டு நாயனார் வஞ்சகமான பசுவைக் கூறுகின்றார். இந்தப் பசுவை மேலுக்குத் துறவு வேடம் பூண்டு, கூடா ஒழுக்கம் மேற்கொண்டுள்ளவர் களுக்கு உவமை காட்டுகின்றார். அப்படிக் காட்டும்போது 'புலித்தோல் போர்த்த பசு புல்லை மேய்வது போல' என்று கூறுகின் றார். இதனைக் 'கூடா ஒழுக்கம்' அதிகாரத் தில் **'பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று'** என்று கூறி இருத்தலைக் காண்க.



ஆகவே இதுவரை எடுத்து மொழிந்த வாற்றால் திருக்குறளில் பல்வேறு துறை களில் உயிரினங்களைப் பற்றிய பற்பல கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை நன்கு உணரலாம்.


படிப்பகம்

www.padippakam.com


# வள்ளுவரின் வழிப் பயணம்

திருக்குறளார். வி. முனிசாமி

காலை நேரம்; கதிரவன் இளங் கதிர்களைப் பாய்ச்சி மக்களை ஊக்கப்படுத்துகின்றான். உறக்கம் நீங்கிய மக்கள் 'உழைப்பாளிக்கே இவ்வுலகம்' என்று கூறுவது போல் ஊர்ப் பாதைளில் நடந்து கொண்டிருக்கின்றனர். இயற்கைக் காட்சி, கன்னிவேளை போன்ற

அடிமை வாழ்வகற்றிப் பிறரிடம் கைகட்டி நில்லாது தன் மதிப்புடன் வாழ்பவர்கள் இந்த உழவர்களே ஆவர். இவர்கள் வாழ்க்கைதான் வாழ்க்கையாகும் என்றார் வள்ளுவனார்.

காலை வேளையில், 'எனது அழகைப் பாராட்டும் பாவலனைக் காணோமே' என்று அத்தகைய புலவன் ஒருவனை எதிர் பார்ப்பதுபோல் இருந்தது. சிற்றோடைகளில் சிலு சிலுவெனக் கேட்கும் ஓசை ஒரு புறம். இனிய குரல் எழுப்பும் சிறு சிறு பறவைகள் பறக்கும் நல்லதொரு வேடிக்கை. இத்தனையையும் பொருட்படுத்தாது, "அதோ இருக்கிறது என்னுடைய உயிர் - உலக மக்களின் உயிர் - நாட்டின் உயிர்நாடி" என்று உணர்த்துவது போன்று உழவர்கள் தங்களின் ஏர்க்கலப்பைகளுடன் வயற்புறம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.



'உழவு' - 'உழவர்', - "ஆ! இவ்வுலகம் இவர்கள் வசமல்லவோ இருக்கின்றது! இவர்களன்றி உலகம் ஏது? மக்கள் ஏது? வாழ்வேது? ஆட்சி ஏது?" - என்றெல்லாம் நினைக்கின்றது ஆசிரியர் வள்ளுவனார் உள்ளம்.

இயற்கையி லமைந்துள்ள நிலத்தை உழுது பயிரிட்டு, தமது சொந்த முயற்சியால் உழைத்துப் பயிர் செய்து 'உழுது உண்டு' வாழும் மக்களைப் பார்த்துப் பேசுகிறார்,

**உழுதுண்டு வாழ்வரே வாழ்வார்!**



அடிமை வாழ்வகற்றிப் பிறரிடம் கைகட்டி நில்லாது தன்மதிப்புடன் வாழ்பவர்கள் இந்த உழவர்களே ஆவர். இவர்கள் வாழ்க்கைதான் வாழ்க்கையாகும் என்றார் வள்ளுவனார்.


படிப்பகம்

www.padippakam.com


மரங்கள்! உண்மையறிவின் நுணுக்கங்களைப் புரிந்து கொள்ளாத மக்களுக்கு அவை வெறும் மரங்கள் தான்! ஊனக் கண்களுக்கு மரங்களேதான்! நாமும்தான் மரங்களைப் பார்க்கிறோம். நமக்குத் தோன்றும் எண்ணங்கள் வேறு; ஆனால் ஆசிரியர் உள்ளம் மக்கள் முன்னேற்ற மொன்றினையே குறிக் கொண்டு இருப்பதன்றோ! பேசுகின்றார்.

(இவ்வாறு உயர்த்திப் பேசப்பட்ட உழவர் தம்மை இன்று இழிதொழில் செய்பவர்கள் என்று நினைத்து அடிமை வாழ்வு செய்யும் பெரிய அதிகாரிகள் மிரட்டுவதும் விரட்டு வதும் தகுமா?)

உழவுத் தொழில் செய்யும் மக்களை வாழ்பவர்கள் - வாழ வேண்டிய தொழிலைச் செய்து வாழ்கின்ற அடிப் படையான மக்கள் என்று கூறி, ஏனைய மக்களை, அந்த உழவர்களை நாடிப் பிழைப் பவர்கள் என்று குறிக்கின்றார். அத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை ஆசிரியரின் வாக்கு! உழவர்கட்கு ஏற்றமளித்து மற்றவர் களைத் "தொழுபவர்கள், - "பின் செல்ப வர்கள்" என்றெல்லாம் உண்மையினை வெளிப்படையாகக் கூறிவிடுகின்ற அரிய குறட்பா ஒன்றினைத் தருகின்றார்.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்**

இங்ஙனம் போற்றப்பட்ட உழவர் களைக் கண்ட ஆசிரியரின் பார்வை, பயிரிடப்படும் வயல்களின் மேல் படுகின்றது. பாத்திகள் கட்டிவிடப்பட் டிருப்பதைக் காணுகின்றார். பாத்திகளில் நீர் விடப்படுவதையும் பார்க்கின்றார். ஆசிரியர் உள்ளம் அரிய உண்மையைத் தருவித்துக் கொடுக்கின்றது.

## 2

பயிர் வளரும் பாத்திகளைக் கண்ட ஆசிரியர் உள்ளம் உலக அனுபவத்தில் செல்கின்றது. அறிஞர்கள் கூட்டத்தினை எண்ணுகின்றார். சொற்பொழிவாற்றும் மேடை - அதன்மேல் ஒரு விரிவுரையாளர் நிற்பது - அறிவுரை கேட்கும் அறிஞர்கள் கூட்டம் - இத்தனையும் அரிய காட்சியாக வள்ளுவர் உள்ளத்தில் தோன்றுகிறது.

ஊனக் கண்கள் பயிர் வளரும் பாத்தியைக் காண அறிவுரையினைத் தருகிறது ஆசிரியர் உள்ளம். பயிர் வளரும் பாத்தி - பயிர் - நீர் இம்மூன்றினையும் பார்த்து, அவை (சபை) யறிந்து பேசும் அறிஞர்களுக்கு நல்லுரை தருகின்றார்.

பயிர் வளரும் பாத்தியில் தண்ணீர் விடும்பொழுது, தண்ணீர் விடுபவன் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. ஏன்? பயிர் வளரும் காட்சி அவனுக்குப் பெரும் நன்மை - சிறப்பு - பெருமையல்லவா? அளவுடனும் அவன் தண்ணீர் விட வேண்டும். அளவுக்கு மீறினால் பயிர் கெட்டு விடுமே! மேலும், நீர் விடுதல் மிகமிக அவசியமும் அல்லவா? அதுவும், பயிர் வளர்ந்து வரும் பாத்தியுள் நீர் விடாமல் இருந்தால் அறிவிலித்தனமுமாகும். நிற்க,

சொற்பொழிவு கேட்கும் மக்கள் பல திறப்பட்டவர்கள் ஆவர். கேட்கும் உரைகளை உணர்ந்தறியும் ஆற்றல் வாய்ந்த வர்கள் கூட்டத்தில் பேசும் வாய்ப்பு கிடைத்தல் மிகமிக அருமையுமாகும். பேசும் இடம் - கேட்கும் மக்கள் - பேசுகின்றவர் பேச்சு; இம்மூன்று பகுதிகட்கும் பாத்தி - பயிர் - நீர் விடுதல் என்ற இயற்கைத் தன்மையுடன் கலந்த உண்மையினை ஆசிரியர் கூறுகின்றார். பேச்சு வகை களைக் குறிக்கும்பொழுது, 'ஆற்றொழுக்கு போன்ற நடை' என்று கூறுவார்களே, அத்தன்மையினைக் கூறுவான் வேண்டி, 'நீர்விடும்' (நீர் சொரியும்) முறையினைக் குறித்துக் காண்பிக்கின்றார்.




படிப்பகம்

www.padippakam.com


**உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

இவ்வரிய குறட்பாவினைத் தந்து மேலும், இயற்கைக் காட்சிகளைக் கண்டு செல்லுகின்றார். மரக்கிளைகளைக் காணு கின்றார். பறவைகள் தோற்றம் தருகின்றன. பேசுகின்றது ஆசிரியர் உள்ளம்.

மரங்கள்! உண்மையறிவின் நுணுக்கங் களைப் புரிந்து கொள்ளாத மக்களுக்கு அவை வெறும் மரங்கள்தான்! ஊனக் கண்களுக்கு மரங்களேதான்! நாமும்தான் மரங்களைப் பார்க்கிறோம். நமக்குத் தோன்றும் எண்ணங்கள் வேறு; ஆனால் ஆசிரியர் உள்ளம் மக்கள் முன்னேற்ற மொன்றினையே குறிக்கொண்டு இருப்ப தன்றோ! பேசுகின்றார்.

மரங்களைக் கண்டு, ஒரு சில - ஏன் - பல்லாயிரக்கணக்கான மக்களையும் நினைக் கின்றார். சாதாரணமான மக்களைப் பற்றி நினைக்கின்றாரில்லை. படித்தவர்கள் - கல்வி மான்கள் - நல்ல அறிஞர்கள் - கூர்மையான புத்தியுள்ளவர்கள் - ஆன இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களின் நினைவு, மரங் களைக் கண்ட மாத்திரத்திலேயே ஆசிரியர் வள்ளுவனாருக்கு ஏற்படுகிறது என்றால் அது சிந்தனைக்குரியதுதான்.

'இவர்கள் மரத்தைப் போன்றவர்கள்' என்று பேசுகின்றார். அந்தோ! கல்வியும் அறிவுங்கூட ஒதுக்கப்பட்டுவிட்டனவே என்று நாம் எண்ணத்தான் செய்வோம். இருக்கலாம். மனித குணத்தினை - மக்கள் பண்பாட்டினையே தலைசிறந்ததாக வைத்துப் பேசும் ஆசிரியரோ மக்கள் பண்பு என்பதை நிறுத்திக் காட்டி அறவுரை புகட்டுகின்றார்.

கல்வியும் - அறிவும் இ , கண்கள் போன்றவைகள்தான்; இவ்விரண்டுமே, நற்குணம் - நல்ல ஒழுக்கம் என்பவைகள் இல்லாத மக்களிடத்தில் இருந்தால், சுடுகாட்டில் முளைத்த 'துளசி'ச் செடி போன்றதேயாகும். முளைக்காதே அங்கு என்றால், முளைத்ததாக நினைத்தால் எப்படியோ அப்படியென்றுதான் வைத்துக் கொள்ளுவோமே! ஆறறிவு படைத்த மனிதனையும் ஓரறிவு கொண்ட மரம் என்று கூசாமல் சொல்லிவிட்டார் வள்ளுவர்.



மக்களோடு மக்களாக - சரி சமத்துவ மாக - பேதாபேதமில்லாமல் - அன்பு நிறைந்த உள்ளத்துடன் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அறிவு படைத்துப் பழகத் தெரியாத - பழகவேண்டாத மக்கள், 'கூர்மையான அறிவு படைத்திருந்தும்' பெருமை யில்லாதவர்களே யாவார்கள்.

'மரம் போல்வர் மக்கள் பண்பு இல்லாத வர்கள்' என்றுதானே கூறவேண்டும். மரங் களோடு யார் பழகுவார்கள்? அதைப் போலத்தானே இப்படிப்பட்ட மக்களிட மும் யார் பழகப்போகிறார்கள்? ஒருவரும் இல்லைதான்! சில மரங்கள் நல்ல கனி களைக் கொடுக்கும். நாட்டிற்குப் பெருமை யைக் கூட உண்டாக்கும். ஏன்? சந்தன மரம், அகில், தேக்கு போன்றவை இல்லையா? இருந்தாலும் மரம்தானே, அதுபோலத் தான்!

'அரம் எல்லா உலோகங்களையும் அறுக் கின்றது. மிகக் கூர்மையானது. மக்களில் சிலருடைய புத்தியும் அரம்போல கூர்மை யாகத்தான் இருக்கின்றதாம். இருந்தும் யாது பயனாம்?

**அரம் போலும் கூர்மையரேனும்**

என்று சொல்லித்தான் ஆசிரியர் குறட் பாவினைத் தொடங்குகின்றார். புத்தி, கூர்மை யாக இருக்கலாம்! மக்கள் பண்பு இல்லாமல் இருந்தால் மரந்தான். நாட்டில் எவ்வளவோ பேர்கள் இப்படி இருக்கின்றார்களே! இவர் களெல்லாம் நல்வழியடைதல் கூடாதா என்று ஆசைப்பட்டு அந்த மரங்களின் காட்சியைக் காட்டுதற்போல இந்தக் குறட் பாவினைத் தருகின்றார்.

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள் பண்புஇல்லா தவர்.**

மரம் ஆயிற்று; மரத்தைக் காட்டி மனதைத் திருத்தும் வள்ளுவனார் ஆங்கு கிளைகளிலிருந்து 'கா-கா; கா-கா' என்ற


படிப்பகம்

www.padippakam.com


குரலோசையுடன் காற்றோடு காற்றாய்ப் பறக்கும் காகங்களைக் காணுகின்றார். ‘காகங்களிட மிருந்தாவது கற்றுக்கொள்ளப் படாதா இந்த மக்கள்’ என்கிறது ஆசிரியரின் உள்ளம்.

காகங்கள் பறந்தன; பறந்து போய் ஓரிடத் தில் கூட்டமாய்ச் சேர்ந்தன; மேலும் கரை கின்றன. (ஓசை இடுகின்றன.) வேறு பல காகங்களும் வந்து சேர்ந்தன; ‘இனப்பற்று’ தான் என்னே! என்ற பூரிப்படைகிறார் வள்ளுவர்; அவரது உள்ளம் மக்கள் கூட்டத்தில் நின்று நினைக்கின்றது; சுயநலக் கும்பல்களைக் கொண்டுவந்து காட்டுகிறது; “சுற்றம் வேண்டாம்; இனப் பற்று வேண்டாம். ஓரியாக நின்று நான் மட்டும் நன்றாக இருந்தால்போதும்” என்னும் ஈனத்தன்மை படைத்தவர்களை யும் எண்ணிப் பார்க்கின்றார், ஆசிரியர்.


“பேதைகளே! அந்தக் காகங்களைப் பாருங்கள்! உலக வாழ்க்கை அப்படித்தான் இருத்தல் வேண்டும். மக்கள் கூட்டத்தில் ஒன்றுபட்டுச் சுற்றத்தைத் தழுவி வாழ்ந்து பெருமையடையக் கற்றுக்கொள்ளக் கூடாதா? சுற்றத்தைப் பற்றிநில்லாத - இனப்பற்று நாடாத - சுயநல வாழ்க்கை, துன்பத்தைத் தந்துவிடும் என்றெல்லாம் நினைத்துத் தான் அரிய குறட்பா ஒன்றினை எழுது கின்றார்.

காக்கை தனது உணவினை மறைக்காது; பிறவற்றை அழைத்துத்தான் உண்ணும்; வலிய கூப்பிட்டு அழைக்கும்; இத்தன்மை யில் இருக்கும் மக்கள், சுற்றத்தால் பெருமை அடைவர்; பயனடைவர்; நல்ல ஆக்கமும் (செல்வாக்கும்) பெறுவர் -

**காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள**

(காகம் போன்று, சுற்றம் தழுவும் குணம் படைத்தவர்களுக்கே, செல்வாக்குப் பெருகும்)

காகங்களைக் கண்டு - மக்களை அழைத்து மாண்புறு செய்தி ஒன்றினைத் தந்தார் ஆசிரியர். அத்துடன் நின்று விடுமா வள்ளுவனார் உள்ளம்? உலக மக்களின் உயர்வைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் பேராசிரியரல்லவா? பறக்கும் பறவைகளைக் கண்டபின், பாதையோரமாக எதையோ கூர்ந்து கவனிக்கின்றார். சில ஆட்கள் மண்வெட்டி யுடன் வேலை செய்துகொண்டிருப்பதைப் பார்க்கின்றார். ஆ! எவ்வளவு அதியற்புத உண்மையினை அந்த நிகழ்ச்சி அவருக்குக் காட்டிவிடுகின்றது!



## 3

மண்வெட்டி கொண்டு ஆட்கள் பூமியைத் தோண்டுவதும் மண்ணை வாரிப் போடுவதுமாக இருக்கின்றனர். இதனை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றார் வள்ளுவனார். அவன் நிற்பதும் - பூமியைத் தோண்டுவதும் - பள்ளம் ஏற்படுவதும் ஆசிரியர் உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்களை - உண்மைகளைப் புலப் படுத்தி விடுகின்றன.

நிற்கும் அவனை மறுமுறையும் பார்க் கின்றார். அவன் பூமியின் மீதுதான் நிற்கின் றான். ஓங்கியோங்கி பலமாக வெட்டுகின் றான்; அவன் நிற்பதும் பூமியின் மீதுதான்; அவன் பலமாக வெட்டுவதும் அந்தப் பூமியைத்தான். அந்த இடத்தில் மண் வெட்டும் ஓசை தவிர்த்து வேறு ஒன்றும் காணோம்! பூமி என்ன செய்யும்? பொறுமை யுடனே தான் இருக்கின்றது.

பூமியைப் பார்த்த அவர் இந்தப் பூமியில் வாழும் மக்களுக்கு உயிர் போன்ற ஒரு நீதியைக் கூறுகின்றார். அந்தச் சிறு நிகழ்ச்சி பெரிய நன்மை தரக்கூடிய உண்மையைப் புலப்படுத்துகின்றது. உலக மேதையாயிற்றே நமது வள்ளுவனார்.

நிலத்தை வெட்டுபவன் - எல்லாக் காலத் திலும், எல்லா இடத்திலும் வெட்டிக் கொண்டிருப்பதுமில்லை; இருக்கட்டும்.

பொறுமை என்பது கடலிலும் பெரிது என்று தான் நாம் பேசுகின்றோம். ஆனால் பழக்கத்தில் கொண்டுவர முயற்சிக்கின்றோமோ?


படிப்பகம்

ஒருவரை ஒருவர் சிற்சில - அல்லது - பற்பல சந்தர்ப்பங்களில் இகழ்கின்றார்கள். பூமியைத் தோண்டும் வேலை செய்பவன் பெரும்பாலும் கூலிவேலை செய்பவனாகத் தான் இருக்க முடியும். பிறரை இகழ்ந்து பேசும் குணம் கொண்டவனும் எப்பொழுதும் இழி மகனாகத்தான் இருப்பான். பூமியைத் தோண்டுபவன் அந்தப் பூமியின் மீதே நின்றுகொண்டுதான் தோண்டுகின்றான். அதுவே போல, நம்முடைய ஆதரவிலும், நம்முடைய தயவிலும் காலந் தள்ளிக் கொண்டு வாழ்ந்துவரும் சிலரும் நம்மை இகழ்ந்து பேசவார்களாம். என்னே அற்ப குணம்!

அவனைத் தாங்குவதோடு - பொறுமை யுடனும் பூமி இருக்கிறது. அதுவே போன்று பெருமையுள்ள நற்குணம் வாய்ந்த பெரி யோர்களும் பொறுமை (பொறையுடைமை) என்ற குணத்துடன் வாழவேண்டும் என்கின் றார் ஆசிரியர்.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல**

என்ற குறளடிகள் அழகுற அமைந்திருக் கின்றன. பிறன் தோண்டுவதினால் பூமிக்குக் குறை ஏற்பட்டுவிடப் போகிறதில்லை. பெரு மையே உண்டாகுமாம்! நம்மை ஒருவன் இகழ் கின்றான் என்று நாம் பொறுமையுடன் இருப்போமேயானால் நமது பெருமையும் சிறப்பும் அளவு கடந்து மிளிரும் என்பதில் என்ன தடையிருக்க முடியும்! இந்த எளிய நிகழ்ச்சியைக் காட்டி அரிய உண்மை யினை நமக்களித்தார் ஆசிரியர்.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை**

இந்த நிகழ்ச்சியைக் கண்ணுற்ற ஆசிரியர் வழியே நடந்து செல்லுகின்றார். மாடுகள் கூட்டங் கூட்டமாகப் போவதைக் காணு கின்றார். மாடுகளை ஓட்டிச் செல்லும் ஆட்களையும் பார்க்கின்றார். உலக வாழ்க்கையின் உண்மையொன்று அவர் உள்ளத்தில் மலர்கிறது.

## 4

மாடுகள் பெருங்கூட்டமாகச் செல்லு கின்றன. ஓட்டிக்கொண்டு போகின்றான் ஒரே ஆள். அத்தனை மாடுகளையும் ஒருவன் தானே ஓட்டிச்செல்லுகின்றான். ஆம்; பகுத் தறிவில்லா மாடுகள்! பார்க்கின்றார் ஆசிரியர் வள்ளுவனார். சிந்தனையிலாழ்கிறது அவர் உள்ளம். சிந்தனைச் சிற்பியல்லவா?

விலங்குகள் (மிருகங்கள்) போன்ற மக்கள் உலகில் இல்லாமலா இருக்கின்றார்கள்? உண்டு. உண்டு! உண்டு, உழைத்து வீணே மடிந்து மறைகின்ற மக்கள் பலர் வாழ்கின் றார்கள். மனிதப் பிறவியாயிற்றே - நாம் ஆற்ற வேண்டிய தொண்டென்ன, அடையவேண்டிய புகழென்ன என்பதைக் கிஞ்சிற்றும் உள்ளத்தில் வாங்கி, நினைத்துப் பார்க்கும் மக்கள் பலர் இல்லையென்றும் சொல்லலாமே!

கல்வியில்லாதவன், கண்ணிருந்தும் குருடன்தானே! விலங்குகள் (மிருகங்கள்) போவதைக் கண்ட வள்ளுவனார்க்குக் கல்வியறிவில்லாத மக்கள் நினைப்பே வருகின்றது. கல்வியறிவில்லாத மக்களை - எண்ணிறந்த மக்கள் கூட்டத்தினை, அறிவுள்ள ஒருவன் அடக்கியாள முடியு மல்லவா? மக்களாகப் பிறந்தும், கல்வி பெறாத மக்கள் கூட்டம் விலங்குகட்குச் சமம் என்பதை வெளிப்படையாகக் குறித்துக் காட்டினார்.

**விலங்கொடு மக்கள் அனையர் —**

மக்களும் - கல்வியில்லாத அந்த மக்களும், விலங்குகளும் ஒன்றுபோலத் தான் கருதப்படல் வேண்டும். கற்றவர் களுக்கே, மக்கள் உணர்வு - வாழ்க்கை யின் குறிக்கோள் - மனித உணர்ச்சி என்பவைகள் இருக்க முடியும்.

கற்ற மக்களை, அதாவது நல்ல கல்வி யறிவுள்ள மக்களை ஒருபுறம் நிற்க வைத்துக் கொண்டும் - மக்களாகப் பிறந்தும் கல்வி யறிவில்லாதவர்களை மற்றொரு பக்கம் நிற்க வைத்துக்கொண்டும், பேசுகின்ற ஆசிரியர் வள்ளுவனார், மாடுகள் ஒரு





படிப்பகம்

www.padippakam.com


பக்கமும், மக்கள் ஒரு பக்கமும் நின்றால் எப்படியோ அப்படித்தான் என்கின்றார்.

**கற்றாரோடு ஏனையவர்—**

என்று குறட்பா முடிகின்றது. என்னே! ஆசிரியர் அருமையாக அமைத்துக் காட்டும் முறைமை!

கல்வியற்றவர்கள் வாழும் நாடு மக்க ளாட்சியுடையது யென்னும் பெருமைக்கு உரியதாக முடியாதல்லவா? கல்வியொன்றே மக்களை மக்களாக்க முடியும் என்பதே ஆசிரியரின் பெருநோக்கமாகும்.

கல்வியடைந்த மக்கள் கல்லாதாருடன் பழகுவதும் பேசுவதும் விலங்குகளுடன் பழகுவது போன்றதாகும் என்பதைச் சுட்டிக் காட்டி, அத்தன்மையினை நாட்டிலிருந்து போக்க, கற்றவர்களே பாடுபடல் வேண்டும் என்பதையும் குறிப்பாக உணர்த்தினார் ஆசிரியர். அந்த மாடுகளின் காட்சி ஆசிரியருக்கு அரிய உலக உண்மையினை உணர்த்த, சீரிய குறட்பாவினைத் தருகின் றார்.

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.**

இவ்வாறான ஒரு காட்சியினைக் கண்ட வள்ளுவனார் பாதையோரத்தில் இருவர் நடந்து வருவதைக் காணுகின்றார். சற்று நேரம் உற்றுப் பார்த்தார். அவர்கள் நன்றாகக் குளித்து விட்டு, தூய்மையான வெண்ணிற வேட்டிகளைக் கட்டிக் கொண்டு, சமய ஆசாரங்களுடன் காட்சியளித்தனர். புறத் தூய்மையினைக் காணுகின்றார் ஆசிரியர். ஆம்; நீர்மூழ்கி தூய உடல் தோற்றத்துடன் தான் இருக்கின்றார். ஆனால், அவர்கள் மனமும் அப்படியே தூய்மையாக இருக் குமா என்ற ஐயம் ஆசிரியருக்கு உண்டா கின்றது.

மனத்தில் தீய எண்ணங்களையும் அழுக் கையும் வைத்துக்கொண்டு வெளிக்கு மட்டும் நீர் மூழ்கிப் பெரும் பக்தர்கள் போல் பலர் காட்சியளித்து உலகில் மக்களை ஏமாற்றி வருகின்றார்களே என்று எண்ணுகின்றார் ஆசிரியர்.

எண்ணுவது மட்டுமல்ல; இப்படியே உலகில் பலர் இருந்து வருகின்றார்கள் என்றும் திட்டமாகக் கூறிவிடுகின்றார். இப்படி வெளி வேடம் போட்டுக் காண பிப்பதால், மற்ற மக்கள் இவர்களுடைய கள்ளத்தனத்தை அறிய முடியாதவாறு, மறைத்துக் கொண்டு வாழ்கின்றார்கள் என்றும் சிறிதும் தயங்காமல் குறிக்கின்றார். பொதுமக்களுக்கு எச்சரிக்கையும், நீர்மூழ்கித் தூய்மையாக வெளிக்கு மட்டும் காட்டிக் கொண்டு மனத்தில் (மாசு) தீயப் பழக்கங் களை வைத்து வாழ்பவர்களுக்கு நல்வழியும் காட்ட அரிய குறட்பாவினை அருளுகின் றார்.

**மனத்தது மாசுஆக மாண்டார் நீராடி**
**மறைந்தொழுகும் மாந்தர் பலர்.**

பார்ப்பவர்களுக்குப் பெருமையுள்ளவர்கள் போலக் காட்டிக்கொள்ளும் எண்ணத் துடன் நீராடி பாவனை செய்யும் மக்கள் என்பதற்காக "மாண்டார் நீராடி" என்று அமைத்தார். (மாண்டார் - மாட்சிமை யுடையார் போல)

இவ்வாறு நல்வழிகாட்டி நல்லுரை தந்த ஆசிரியர் உலகப் பயணத்தில் தொடர்ந்து செல்லுகின்றார்.




படிப்பகம்

www.padippakam.com


# தெய்வ நெறியாளர் போற்றிய திருக்குறள்

## ம.ரா.போ. குருசாமி



திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் வாய்த்த பெருமை வேறு பிற நூலுக்கும் புலவர்க்கும் வாய்க்க வில்லை. 'எல்லாப் பொருளும் இதன்பால் உள. இதன்கண் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்று ஒரு திருவள்ளுவ மாலைச் செய்யுள் போற்றும். வையத்தார் உள்ளுவன எல்லாம் வள்ளுவனார் ஓர்ந்து அளந்தார் என்று பேசும் மற்றொரு செய்யுள். பண்டைக் காலத்திலேயே ஒரு நூலைப் பாராட்டும்வகையில் ஒரு தொகுப்பு நூல் எழுந்தது என்றால், அது திருக்குறளைப் பாராட்டிப் போற்றிய திருவள்ளுவ மாலை யாகும்.

திருக்குறள் தோன்றியபின் எழுந்த நூல்களில் திருக்குறளின் சுவடு பதியாத நூலொன்றைத் தேடிப் பிடித்தாலும் இயலாது; அந்த அளவுக்கு எப்பாலும் தன் செல்வாக்கை முப்பால் பதித்துள்ளது.

திருவள்ளுவர் சைவரே என்றும், சைவ சித்தாந்தக் கருத்துகள் குறள் நூலில் இடம் பெற்றுள்ளன என்றும் சைவப் புலவர் பெருமக்கள் போற்றுவதுண்டு. திருவள்ளுவரைக் குறிப்பிட்ட எந்தச் சமயச் சிமிழுக்குள்ளும் அடைக்காமலிருப்பதே அறம்; எனினும், தொன்று தொட்டு வழங்கும் சைவம் மட்டுமேயன்றி, இம்மண்ணில் மிகப் பிற்காலத்தே வந்துற்ற கிறித்தவமும் கூடக் குறளாசிரியரை உரிமை கொண்டாடுவதைக் காணுகிறோம்.

சுருங்கச்சொல்லின் - காலம், சமயம் போன்ற எல்லைகளைக் கடந்து திருக்குறள் எல்லோராலும் போற்றப்படுகின்றது.

சைவத் திருமுறைகளுள் முதல் மூன்றை அருளிய திருஞானசம்பந்தரின் திருப்பாடல்களிலே குறள் பெற்றுள்ள இடத்தைச் சில எடுத்துக்காட்டுகளால் விளக்கும் நோக்கத்தோடு இக்கட்டுரை எழுகின்றது.

எங்கணும் ஒலிக்கும் திருக்குறள் ஆளுடைய பிள்ளையார்க்கும் உகப்பாக அமைவதில் வியப்பில்லையே!



ஒலிகளுக்கெல்லாம் மூலம் அகரம் ஆகும். அகர ஒலி இன்றேல் அக்கரங்கள்


படிப்பகம்

www.padippakam.com


(எழுத்துகள்) இல்லை. எழுத்துகள் யாவும் அகரத்தையே முதலாக (காரணமாக)க் கொண்டவை; அகர எழுத்தே எல்லா எழுத்துகளுக்கும் பிறப்பிடம். பிறப்பிடமாக மட்டுமன்றி எவ்வெழுத்தின் ஓசைக்கும் இயக்கும் சக்தியாகவும் அகரமே உள்ளது, அமைகின்றது. ஓசைகளைப் பொறுத்தவரையில் அகரம், கலந்தும், கரந்தும், கடந்தும் உள்ளது என்பது மிகையாகாது. இதன் விரிவையெல்லாம் சிவஞான முனிவர், திரு.வி.க. போன்ற சான்றோர் நூல்கள்வாயிலாகக் காண வேண்டும்.

பொதுவாக -

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

என்ற முதற் குறளை அறியாதவர்கள் இல்லை எனலாம். எப்படி அகர எழுத்து எல்லா எழுத்துகட்கும் காரணமாக அமைந்து இயக்குகிறதோ, அப்படியே உலகங்கள் யாவற்றுக்கும் காரணமாக இருந்து ஆதி பகவன் இயக்குகிறான்.

இந்தக் கருத்து இறை நம்பிக்கை கொண்ட எச்சமயத்தவர்க்கும் உடன்பாடானது. எனவே, சைவத்துக்கும் உடன்பாடானதே.

மதுரைக்கு மிக அண்மையில் உள்ள திருவாப்புடையார் கோயில் என்ற ஊருக்குத் திருஞானசம்பந்தர் எழுந்தருளி, ஆப்பனூர்க் காரணரைப் பதிகத்தால் வழிபட்டார். (திருவாப்பனூர் என்ற பெயர் இப்போது திருவாப்புடையார் கோயில் என வழங்குகிறது). அந்தத் திருப் பதிகத்துள் சிவபிரான் 'அகர முதலான்' என்று குறிக்கப்படுகிறார்.

தகரம் என்ற நறுமணச் சாந்தின் மணம் கமழுகின்ற ஒரு பெருமலையைச் சிவபிரான் வில்லாக ஏந்தினார். அந்த வில்லை ஏந்தியும், அதன் உதவி இல்லாமலே முப்புரத்தை எரித்தழித்தார். மூன்று நகரங்களின் அழகெல்லாம் குன்றும்படியாக அழித் தருளி உகந்தவர் சிவபிரான். அவர் அகர முதலி; ஆப்பனூரில் எழுந்தருளியவர். அகர முதல்வராய் ஆப்பனூரில் கோயில்



**மூன்று நகரங்களின் அழகெல்லாம் குன்றும்படியாக அழித் தருளி உகந்தவர் சிவபிரான். அவர் அகர முதலி; ஆப்பனூரில் எழுந்தருளியவர். அகர முதல்வராய் ஆப்பனூரில் கோயில் கொண்டுள்ள அவர் திருநாமத்தைச் சொல்லும் நாட்டம் உடையவர்கள் வினைப் பயனையும் பற்றையும் அறுத்தவர்கள் ஆவார்கள்.**

கொண்டுள்ள அவர் திருநாமத்தைச் சொல்லும் நாட்டம் உடையவர்கள் வினைப் பயனையும் பற்றையும் அறுத்தவர்கள் ஆவார்கள். அதாவது, மல பரிபாக முற்றுப் பற்று அற்றமையால் வீடுபேறு பெற்றவர் ஆவார்கள்.

**தகர மணியருவித்**
**தடமால் வரை சிலையா**
**நகரம் ஒருமூன்றும்**
**நலம்குன்ற வென்றுகந்தான்**
**அகர முதலானை**
**அணிஆப்ப னூரானைப்**
**பகரும் மனமுடையார்**
**வினைபற் றறுப்பாரே**

'அகர முதலான்' என்று சிவபிரானைக் குறித்த இத்திருப்பாடற் கருத்தினை ஏற்றுக் கொண்டுள்ள மாதவச் சிவஞான யோகிகள் தம் சோமேசர் முதுமொழி வெண்பாவிலே இக்கருத்தைக் குறட்பாவினை இணைத் தோதி விளக்குகிறார்:

**சீர்கொளிறை ஒன்றுண்டு அத்**
**தெய்வம்நீ என்று ஒப்பால்**
**சோர்வுஇல் அடையால் தெளிந்தோம்**
**சோமேசா - ஓரில்**


படிப்பகம்

www.padippakam.com



**அகர முதல**
**எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே**
**உலகு**


சைவத் திருமுறைகளிலும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும் திருக்குறளின் செல்வாக்குப் பலபடியாகக் காணப்படு கின்றது.

அகரம் போல் காரணமாவது சிவ பரம்பொருள்; இது ஒப்புமையால் வந்த தெளிவு; 'ஆதி பகவன்' என்ற தொடரில் வரும் 'ஆதி' என்ற அடையால் சிவ பரம் பொருளே ஆதி - அகரம்போலவே. உவமை கொண்டும் அடைமொழி கொண்டும் முதற் குறளில் சிவதரிசனம் கண்டவர் சிவஞான முனிவர். 'அகர முதலான்' என்ற தொடரில் வரும் எதிரொலிக் குறிப்பால் குறளாட்சி கொண்டு சிவதரிசனம் பெற்று உகந்தார் திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

இப்படிப் பல திருப்பாடல்களில் திருக்குறள் இடம் பெற்றுச் சிறப்புச் செய்வதைக் காணலாம்.

'தேசியம்' என்பதற்குச் சூழல்கள் நோக்கிப் பல்வேறு வகையில் விளக்கம் சொல்வார்கள். பாரதநாடு உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, வெள்ளை அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ந்து போராடுவது 'தேசியம்' எனச் சொல்லப் பட்டது. நாட்டிலுள்ள ஆட்சியை எதிர்ப் போர் 'ராஜத்துரோகி'கள் என்று சொல்வது ஒரு சூழ்நிலை; வெள்ளையர் ஆட்சியை எதிர்த்தவர்களைப் பிரிட்டிஷ் அரசு அப்படித்தான் 'சட்டப்படி' சொல்லிக் கொண்டிருந்தது. ஆனாலும், அயலவரின் மேலாண்மைக்கு இடம் வகுத்த அந்த அரசை எதிர்ப்பதே 'தேசியம்' என்ற வரலாறு ஏற்றது.

இன்று 'தமிழ்த் தேசியம்' என்று ஒரு தொடரை அரசியல் வட்டாரங்களிலே கேட்கிறோம். 'மொழிவழி இனம்' என்ற கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது மொழிவழித் தேசியம். மொழிவழித் தேசியம் பிரிவினை வாதத்தை ஏற்காது; ஏற்பதாயின், பாரத ஒருமைப்பாட்டுக்கு இடம் இல்லை. பாரதச் சிந்தனைக்கு எதிரணி வகுக்காத எல்லையில் தமிழின



உணர்வோடு பேசுவது தமிழ்த் தேசியம் ஆகிறது.

இப்படிச் சூழ்நிலைக்கு ஏற்ப விளக்கங்கள் பலவாக விரியும். ஒரு கூட்டத்தில் பிரிவுகள் பல இருக்கலாம்; அப்படிப் பிரிந்துள்ள குழுவினர் யாவர்க்கும் பொருத்தமான ஒன்றைத் 'தேசியம்' என அடையாளம் காண்பார்கள். எடுத்துக்காட்டாக, தமிழரிடையே சைவர் உண்டு, வைணவர் உள்ளனர், கிறித்தவர் உளர், மற்றும் இஸ்லாமியர், பவுத்தர், சமணர்... இப்படிப் பல பிரிவுகள் இருந்தாலும் மொழி அடிப்படையில் அத்துணைப் பேரும் தமிழர் ஆகிறார். சமய வழியிலே பலப்பல நூல்களைத் தனித் தனியே போற்றினாலும் 'சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது' என்று உணர்த்திய திருக்குறளைச் சமயவாதிகள் எல்லோருமே ஏற்றுப் போற்றியுள்ளனர். இவ்வகையிலே திருக்குறளைத் 'தேசிய நூல்' என்று கொள்வது பொருத்தமே. இதுபோலவே வெவ்வேறு சூழ்நிலை விளக்கப் பின்னணியில் சிலப்பதிகாரம், பெரிய புராணம், கம்ப ராமாயணம் ஆகிய தமிழ்ப் பெருநூல்களைத் தேசியக் காப்பியங் களாக ஆராய்ந்து எழுதியவர்கள் உளர்.

**ஒன்றே பொருளெனின்வேறென்ப வேறெனின்**
**அன்றென்ப ஆறுசமயத்தார் - நன்றெனவே**
**எப்பா லவரும்இயைபவே வள்ளுவனார்**
**முப்பால் மொழிந்த மொழி**

எனச் சமய எல்லை கடந்த அதன் தேசியக் கூறு கல்லாடனாரால் நெடுங்கால முன்பே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

சைவத் திருமுறைகளிலும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும் திருக்குறளின் செல்வாக்குப் பலபடியாகக் காணப்படு கின்றது. ஏனைச் சமய நூல்களிலும் காண, காட்ட முடியும். இங்கே வைணவரிடையே திருக்குறள் போற்றப்படுவதைமட்டும் சில சான்றுகள் வழியே காண முயல்வோம்.

திருமாலின் வாமன அவதாரத்தையும் வள்ளுவரின் திருக்குறளையும் ஒப்பிட்டுக் காட்டும் பழக்கம் பழமையானது.



படிப்பகம்

www.padippakam.com


குறுகிய வடிவினராகிய வாமனர் ஈரடியால் மூவுலகும் அளந்தவர். 'மூவுலகும் ஈரடி யால் முறை திறம்பா வகை முடியத் தாவிய சேவடி' என்று சிலம்பு பேசும்.

**மாலும் குறளாய்**
**வளர்ந்திரண்டு மாணடியால்**
**ஞாலம் முழுதும்**
**நயந்தளந்தான் - வாலறிவின்**
**வள்ளுவரும் தம்குறள்வெண்**
**பாவடியால் வையத்தார்**
**உள்ளுவஎல் லாம்அளந்தார்**
**ஓர்ந்து**

என்று ஈரடியால் மூவுலகு அளந்த கதை யினைத் திருக்குறள் ஈரடியால் வையத்தார் கருத்தை அளந்த செயலோடு ஒப்பிட்டுக் காட்டியது திருவள்ளுவமாலைச் செய்யுள்.

திருவரங்கம் பெரியகோயிலின் அறையர் சேவை சமய உணர்வுடையோரால் பெரிதும் போற்றப்படவேண்டிய ஒன்றாகும். இருபது நாட்களில் ஆழ்வார் அருளிச்செயல்கள் அவ்வளவையும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வழியிலும் ஓதும் சேவை அரிதினும் அரிதாய ஒரு திருப்பணி. அந்தத் தெய்விகப் பணியிடையே 'மண்ணளந்த தாளாளா' என்ற தொடரினை விளக்கும் போது அறையர் அந்தக் கதையினைக் கூறக் கேட்கலாம். அந்தக் கதை நெடு கிலும் வாமனனைத் 'திருக்குறளப்பன்', 'திருக்குறளப்பன்' என்றே அறையர் குறிப் பிடுவார்.

திருவரங்கம் அறையர் சேவையில்மட்டு மன்றிக் கம்பரின் வாக்கிலும் இந்த ஒப்பீட்டுச் செய்தியினைக் காணமுடிகிறது.

**காலம் நுணித்துணர்**
**காசிப னுக்கும்**
**வால திதிக்கும் ஓர்**
**மாமக வாகி**
**நீலநி றத்தொரு**
**நேமியன் வந்துஒர்**
**ஆலமர் வித்தின்**
**அருங்குறள் ஆனான்**

என்பது கம்ப சூத்திரம், (சூத்திரம் என்பது செறிவாற்றலால் பொலிவது. இக்கம்ப சூத்திரத்தை இங்கே விளக்க இடம் இல்லை)

கம்பரும் ஆழ்வார்களின் ஈரத்தமிழ் காட்டிய வழியை நினைத்தே வாமனன் தோற்றத்தைத் திருக்குறளை நினைவூட்டும் வகையில் சுட்டினார். திருவள்ளுவமாலை வாமனனைத் தனியாகவும் திருக்குறளைத் தனியாகவும் வைத்து, உவமையணியால் பிணைத்துக் காட்டியது. கவிச் சக்கரவர்த்தி கம்பரோ, வாமனன் கதையைமட்டும் சொல் வார்போலத் திருக்குறளையும் குறிப்பாகச் சுட்டினார். 'மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிது' என்ற பழமொழிக்கு இலக்கிய மாகிய வாமனன் கதையைச் சொல்லும் போதே சொல்லாட்சியின் செட்டினாலும் செறிவினாலும் திருக்குறள் நினைப்பு உடன் எழுமாறு செய்தார் கம்பர்.

திருமங்கையாழ்வார் பல இடங்களில் வாமனனைக் 'குறள்' என்ற சொல்லாற் குறிப்பிடுகின்றார்.

**ஒருகுறளாய் இருநிலமூ வடிமண் வேண்டி**
**உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்**
**தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த**
**தாடாளன்**

என்றும்,

**கண்டவர்தம் மனம் மகிழ மாவலிதன் வேள்விக்**
**களவில்மிகு குறளாய்.....**

என்றும்,

**தொழுநீர் வடிவில் குறளுருவாய்**

என்றும்,

**தானவன் வேள்விதன்னில்**
**தனியே குறளாய் நிமிர்ந்து**

என்றும்,

**வெந்திறல் வாணன் வேள்வி யிடமெய்தி**
**அங்கோர் குறளாகி**

என்றும், வருவன திருமங்கை மன்னன் அருளிப்பாடுகள்.



'ஆழ்வார்' என்று வாளா சொன்னாலே வைணவ மரபு உணர்ந்தோர் குருகூர்ச் சடகோபராகிய நம்மாழ்வாரையே நினைவர். 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்று


படிப்பகம்

www.padippakam.com


சொல்லாமல் வைணவச் சடங்கு ஏதும் தொடங்காது. திருமால் புகழ் பாடிய சான்றோர்க்குத் தந்த சிறப்பையே நம்மாழ்வாரை மட்டும் பாடிய மதுரகவியா ருக்கு வழங்குவது வைணவ மரபு. நூற்றுக் கணக்கில் ஆயிரமாயிரமாகப் பாடித் திருமாலைச் சிறப்பித்தவர்களும் ஆழ்வார் களே; பதினொரு பாடல்மட்டும் பாடி, நம்மாழ்வாரைச் சிறப்பித்தவரும் ஆழ்வாரே; அதுவும் 'மதுரகவி ஆழ்வார்'! ஆழ்வார்கள் பிறர் படைப்புக்கு இல்லாத சிறப்பு 'மதுரகவி' என்ற சிறப்பிற் சிறப்பு.

**வேறொன்றும் நானறியேன்**
**வேதம் தமிழ்செய்த**
**மாறன் சடகோபன்**
**வண்குருகூர் - ஏறுஎங்கள்**
**வாழ்வாம்**

என்று ஏத்தப்படுகின்ற நம்மாழ்வாரின் பாசுரம் ஒன்று வருமாறு:

**வைகுந்தா மணிவண்ண னேயென்**
**பொல்லாத் திருக்குறளா என்னுள் மன்னி**
**வைகும் வைகல்தோறும்**
**அமுதாய வானேறே**
**செய்குந் தாவருந் தீமையுள் அடியார்க்குத்**
**தீர்த்து அசுரர்க்குத் தீமைகள்**
**செய்குந்தா உன்னைநான்**
**பிடித்தேன்கொள் சிக்கெனவே**

இதில் வாமனைத் 'திருக்குறளா' என்றே விளித்துப் போற்றுகிறார் ஆழ்வார்.

இரண்டு அடிகளால் உலகு அளந்தவர் திருமால்; ஈரடிகளும் சமமானவை. ஆயின், திருக்குறளோ ஓரடிமுக்கால் என்றபடி ஒன்றே முக்கால் அடியளவினது. அஃதாவது ஈரடியில் ஓரடி சிற்றடி. இதை நினைந்து மாதொரு பாகனின் திருவுருவத்தை நினைவூட்டியவர் களும் தமிழுலகிலே உண்டு. பெண்களைச் சீறடியார் (சிறிய அடிகளை உடைய வர்கள்) என்பர். உமையொருபாகனின் இடப்பக்கத்துத் திருவடி சிறியது. எனவே, திருக்குறள் அடியமைப்புக்குச் சிவபிரான்



அடியமைப்பே பொருந்தும் என வாதிடுவார் போல 'எம் அடிகள் நேர் வெண்குறள் வெண்பா' என்று பாடுவார் சிவப்பிரகாசர்.

திருக்குறளை உரிமை கொண்டாடுவதில் அப்படி ஒரு போட்டி, போட்டிதான். ஆனாலும் வன்முறை வயப்படாத போட்டி.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்**

- இது திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் மூன்றாவது குறள். 'இறைவ னுடைய திருவடியை அடைந்தவர்கள் நிலவுல கத்தில் நீடூழி வாழ்வார்கள்' என்பது இதன் திரண்ட பொருள். மேற்போக்காகப் பார்க்கும் போது திருக்குறளின் இந்தப் பாடல் விளங்கி விட்டதுபோல் தோன்றுகிறது. ஆனால், சற்று நிதானித்துக் குறளில் உள்ள தொடர் களை நோக்கினால், பொருள் விளங்கிவிட்ட தாகச் சொல்ல முடியவில்லை.

இறைவன் திருவடியைச் சேர்ந்தவர் களுக்கு நிலவுலக வாழ்க்கையே இல்லையே! 'மலர் மிசை ஏகினான் ஆகிய இறைவனின் மாட்சிமை கொண்ட திருவடியைச் சேர்ந்த வர்கள் இந்நிலவுலகில் நெடிது வாழ் வார்கள்' என்று திருவள்ளுவர் சொல்லி யிருப்பரா?

சமயத் துறையினர் - குறிப்பாகச் சைவர்கள் - இறைவன் திருவடியைத் திருவருளின் குறியீடாகக் கொள்வர். இறைவன் திருவருளைப் பெற்றவர்கள் (மலர்மிசை ஏகினானின் திருவருளைப் பெற்றவர்கள்) அந்த அருளாற்றலால் நிலமிசை நெடிது வாழ்வார்கள் - என்று கொள்ளும்போது குறளின் பொருள் தெளிவாகின்றது.

'மலர்மிசை ஏகினான்' என்பது பல சமயத் தவர்களும் தத்தம் சமய மூலவர்களைக் குறிப்பதாகக் கொள்வார்கள்.

**மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லது**
**என் தலை மிசை உச்சி தான் அணிப் பெறாஅ**

என்பது சிலப்பதிகாரம் (நாடுகாண் காதை 204 - 5). இங்கே சமணர் வழிபடும் அருக தேவனைக் குறிக்கிறது. கவுதம


படிப்பகம்

www.padippakam.com

புத்தர் உலகில் தோன்றியபோது நீலத் தாமரை மலர்மீது ஏழு அடி நடந்தார் என்று ஒரு வரலாறு உண்டு; இந்தக் குறிப்பை வைத்து நோக்கினால், 'மலர்மிசை ஏகினான்' என்பது புத்தபெருமானைக் குறிப்பதாகக் கொள்ளலாம். 'மலர்மிசை நடந்த மலரடி' எனத் திருமாலின் திருவடியை நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் பாடுகிறது. 'போது (மலர்) உகந் தேறும் புரிசடையான்' எனச் சிவபிரானைச் சிறப்பிப்பது திருமந்திரம். எனவே, 'மலர்மிசை ஏகினான்' என்ற தொடர் பொதுமைப் பண்புடையதாய் இறைவனைக் குறிக்கிறது என்பது தெளிவு. அவனுடைய திருவருள் பெற்றோர் நெடிய ஆயுள் பெறுவர் என்பது திருவள்ளுவர் கருத்தாகிறது.

திருக்குறள் கருத்து ஒருபுறம் இருக்க, இத்தொடர் திருஞான சம்பந்தரின் திருப் பாடலிலே இடம் பெற்றிருப்பதை இங்கு நினைவுகூர்வோம். காவிரியின் தென்கரை யில், கும்பகோணத்துக்கு அருகில் இருப்பது சிவபுரம் என்ற திருத்தலம். அந்தத் திருத்தலம் பற்றிய பதிகம் ஒன்றில் வரும் ஒரு பாடலில் திருக்குறளில் உள்ள தொடர் சிவபிரானைக் குறிப்பதாக வருகிறது.

அப்பாடலில் யோகக் குறிப்பும் உள்ளது. சினம் முதலான ஆறு பகைகள் ஆன்ம சாதகனுக்கு எதிரானவை; அவை ஐம்பொறி களைத் தம் வயப்படுத்திச் சாதகனின் நெறியைக் கெடுப்பன. அந்தப் பொறிகளின் மேலாதிக்கத்தை அழிப்பதற்கு உதவுவது யோக நெறி.

**ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறிஅது வாமே**

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**
**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்**

'அகத்தெழு வளி' என்று இந்தக் 'காற்றை'த் தொல்காப்பியர் குறிப்பிடு வார். வாசியோகம் கைவந்தால், அந்த யோகப் பயனாய் ஐம்பொறி அடங்கும்; நெடிய முதுமையிலும் இளமைப் பொலிவு ஏறும். சிவபிரான் திருவுருவமே (சாரூபம்) கிடைத்துவிடும். சக்தியின் திருவருளால் இவையெல்லாம் வாய்க்கும்.

இப்போது திருஞானசம்பந்தப் பிள்ளை யாரின் பாடலைக் காண்போம்:

**சினமலி அறுபகை சிதைதரு**
**வகைவளி நிறுவிய**
**மனனுணர் கொடுமலர் மிசை எழுதருபொருள்**
**நியதமும் உணர்பவர்**
**தனதெழில் உருவதுகொடு அடைதகு பரன்**
**உறைவது நகர்மதின்**
**கணமரு வியசிவ புரம்நினை பவர்கலை**
**மகள்தர நிலைவரே**

(சிதைதருவகை - சிதைந்திடும் முறையில், வளி நிறுவிய யோகப் பயிற்சியால் காற்றை அடக்கிய; மனன் - மனம்; மலர்மிசை எழுதருபொருள் - மலர்மீது எழுந்தருளும் பரம்பொருள்; நியதமும் - நிதமும்; உணர்பவர் - நினைப்பவர்; தனது எழில் உருவதுகொடு அடைதகுபரன் - (நினைப் பவரை) தன் அழகிய உருவத்தோடு அடை கின்ற சிவன்; அதாவது நினைப்போர் சிவனுருவை அடைவர். மதில்கணம் - மதில் களின் கூட்டம்)

திருக்குறள் தொடரைத் தமக்குக் கைவந்த யோக அனுபவத்தோடு இணைத்துச் சாரூப நிலையினைப் பெறும் நெறியினை இத்திருப்பாடலில் சுட்டுகிறார், திருஞான சம்பந்தர்.



படிப்பகம்

www.padippakam.com


# திருக்குறளும் - கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களும்

ஆர்.கே. அழகேசன்



திரையிசைக் கவிஞர்களுள் கண்ணதாசன் ஒருவரைத்தான் குறளின் பல்வேறு கொள்கைகளையும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலின் வழியாகத் திரையிசை கீதங்களாக்கியவர் என்று தீர்மானிக்கலாம். உதாரணத்திற்கு எத்தனையோ பாடல்கள் உண்டு. அவரது பாடல்களை அகர முதலாவதாகச் சொல்ல வேண்டும் என்றால் 'சரஸ்வதி சபதம்' (1966) திரைப் பாடலை நாம் மறந்திருக்க முடியாது.

**''அகர முதல எழுத்தெல்லாம்**
**அறிய வைத்தாய் தேவி**
**ஆதியகவன் முதலென்றே**
**உணர வைத்தாய் தேவி''**

என்று முதற்குறளையே அதில் எடுத்தாள்வார்.

குருதட்சணை (1969) படத்தில்

**''எழுத்தறிவித்தவன் இறைவனாகும்**
**எண்ணும் எழுத்தும் கண்ணாகும்''**

என்பார். இப்பாடல் வரிகளுக்குத் தொடக்கம் திருக்குறளே.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப** **(குறள் - 392)**

என்றதன் சாயல் இது.

***குறள் - பொது வாழ்த்து***

திருக்குறளைப் பொதுப்படையாக வாழ்த்தியவர்களில் குறிப்பிடத் தக்கவர் கவியரசு. அதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

**''வள்ளுவர் குறளினைப் பாடிடுவோம் - நம்**
**மன்னவர் வாழ்கெனப் பாடிடுவோம்''**

**(குருதட்சணை - 1969)**


படிப்பகம்

www.padippakam.com


**"தீபத்தை வைத்துக் கொண்டு**
**திருக்குறளும் படிக்கலாம்''**

**[கடவுளைக் கண்டேன் 1963]**

**"அன்பும் அறனும் உடையவர் வாழ்வில்**
**பண்பும் பயனும் சேரும் - இதை**
**அறிந்தவர் காண்பர் ஆனந்தம் என்றே**
**திருக்குறள் நூலும்''** **[ஆனந்த ஜோதி 1963]**

மெட்டுக்குப் பாட்டா; பாட்டுக்கு மெட்டா என்றிருந்த தமிழ் சினிமாவின் பாட்டுலகத்துள் பழம்பெருங் கருத்தை எல்லோரும் ஏற்குமாறு வடித்தவர், கண்ணதாசன்.

'கலங்காதிருமனமே' என்ற பாடலால் (கன்னியின் காதலி - 1948) தமிழ்த் திரைப்படத்திற்கு அறிமுகமாகியவர் கண்ணதாசன், "சினிமா பாடல்களின் அமைப்பு முறையினையே நான் பல இடங்களில் மாற்றினேன்" என்று பிரகடனப்படுத்தியிருந்தார். (கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள், தொகுதி 1, முன்னுரை)

அப்படி மாற்றுகிறபோது "முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல்" போற்றுதற்குக் குறளைத் தகுமிடங்களில் எடுத்தாண்டார்.

**நிம்மதி எங்கே**

1330 குறளினைத் திணித்து இரண்டே குறளில் சொல்ல வேண்டுமென்றால்......

**"யாதெனின் யாதெனின் நீங்கியான்"**
**- குறள் 341**

**"அவா இல்லார்க்கு இல்லாகுந் துன்பம்"**
**- குறள் 368**

என்ற ஈரடியாற் கூறலாம். இக் குறட்பாக்களின் கருத்தமைதியைப் "பாமாவிஜயம்'' (1967) என்ற சினிமாவில் அழகுற கண்ணதாசன் சேர்த்திருப்பார்.

**"வரவு எட்டணா செலவு பத்தணா"**

என்று தொடங்குகிற பாடலுள்,

**நிலைமைக்கு மேலே நினைப்பு வந்தா**
**நிம்மதி இருக்காது - ஐயா**
**நிம்மதி இருக்காது**
**அளவுக்கு மேலே ஆசை வந்தா**
**உள்ளம் நிலைக்காது''**

என்பதாக வெளிப்படுத்தியிருப்பார்.

**இங்கிலீஷு வள்ளுவரும்:**

நீதியை, நியாயத்தை எவர் சொன்னாலும் ஏற்கவேண்டுமென்பது அவரது கட்சி. அதனால்தான்,

**"இப்படித்தான் சொல்லி வச்சார்**
**இங்கிலீஷு வள்ளுவரும்**
**இப்படித்தான் இந்தியிலே**
**சொல்லி வச்சார் வள்ளுவரும்''**

என்று "லட்சுமி கல்யாணம்" (1968) படத்திற்காக அவரால் எழுத நேர்ந்தது.

**மூலகாரணம் :**

'மன்னாதி மன்னன்' - 1960 படத்திற்காக

**"பதறிச் சிவந்ததே நெஞ்சம் வழி**
**பார்த்துச் சிவந்ததே கண்கள்''**

என்றொரு பாடலை இயற்றியிருப்பார். குறளின் குரலைத் தரும் பாடல் இது. சாந்தி (1965) படத்தின்

**"காலையில் உறங்கி மாலையில் எழுந்தால்**
**கண்களிரண்டில் நிம்மதி ஏது''**

என்ற பாடலையும் நாம் கேட்டிருப்போம். இவையன்றி

**"இன்றுநாளை என்று நாளை எண்ணுகின்றேனே**
**என்றும் உந்தன் எல்லையிலே வந்திடுவேனே''**

**"நீயில்லாத உலகத்திலே நிம்மதியில்லை - உன்**
**நினைவில்லாத இதயத்திலே சிந்தனையில்லை.''**

என்று வாழும் வரிகளையும் நாம் மறந்திருக்க மாட்டோம். கண்ணதாசனின் இப்படிப் பட்ட சிந்தனைகட்கெல்லாம் மூலகாரணம்,

**"வாளற்றுப் புற் கொண்ட கண்ணும்''** **[குறள் - 126]**
**"ஒரு நாள் எழுநாட் போல் செல்லும்'' [குறள் - 1269]**
**"நெருநற்றுச் சென்றார் எங்காதலர் யாமும் எழுநாளேம்"**
**[குறள் - 1278]**



என்பனவாக வள்ளுவம் குறிப்பிட்டதே ஆகும்.



படிப்பகம்

தெரியாத திருக்குறள் வரிகளை கண்ண தாசன் இங்ஙனமாகத் திரைப்படத்துள் செருகினார். இலக்கிய இன்பத்தை நுகர்வது புலவர்களது தொழில் மட்டுமன்று; பூலோகத்திலுள்ள அனைவராலும் இயலக் கூடிய ஒன்று என்பதைத் தனது திரையிசைப் பாடல்கள்வழி வெளிச்சமாக்கினார். மேலும்,

**"கண்கள் எங்கே நெஞ்சமும் அங்கே**
**கண்ட போதே சென்றன அங்கே"**

என்ற பாடல், குறள்போல இனிமை உடையது இப்பாடல்

**"கண்ணும் கொளச் சேறி நெஞ்சே"**

**(குறள் - 1244)**

என்ற குறளை உள்வாங்கித் தந்ததாகக் கணிக்கலாம்.

***மேலும் சில சான்றுகள்***

ஒருவரது நினைவும் தூக்கமும் காதலின் வருகையால் முறை பிறழ்ந்தது என்ற உண்மையைத் துக்கத்திலும் துள்ளலிலு மாகக் கவிதை எழுதினார் கண்ணதாசன். அவரே சொன்னது போல "நான் சங்கடத் தில் இருக்கும்போது எழுதிய கவிதைகளை நீங்கள் சந்தோஷமாகப் பாடிக் கொண்டிருக் கிறீர்கள்" என்ற நினைவுடன் கீழ்க்கண்ட பாடல் வரிகளைக் குறள் ஞாபகத்தோடு பொருத்திப் பார்க்கவும்.

**"இரவும் இல்லை பகலும் இல்லை**
**இருவர் ஆடும் ஆட்டம்**

**(நீலகிரி எக்ஸ்பிரஸ் - 1968)**

**காதலுக்குத் தூக்கமில்லை**
**கண்கலந்தால் வார்த்தையில்லை**

**(தாயைக்காத்த தனயன் - 1962)**

**நீரில் குளித்தாலும் நெருப்பாகக்**
**கொதிக்கின்றன**

**(எதிரிகள் ஜாக்கிரதை - 1967)**

**மலர் பஞ்சணை மேலே**
**உடல் பள்ளி கொள்ளாது - அது**
**பள்ளி கொண்டாலும்**
**துயில் கொள்ள விடாது**

**(இதயக்கமலம் - 1965)**

**பாலிருக்கும் பழமிருக்கும்**
**பசியிருக்காது**

**(பாவமன்னிப்பு - 1961)**

**"ஏக்கம் வரும்போது**
**தூக்கம் என்பதேது"**

**(சித்தி - 1969)**

**"இரவு பகல் என்று எதுவுமில்லை இன்று**
**உறவில் இன்பங்கண்டு உருகிடுவோம்"**

**(இருவர் உள்ளம் - 1963)**

மேற்காட்டிய திரையிசை கீதங் களுக்கு 'வாராக்கால் துஞ்சா' (குறள் 1179), 'மாலையோ அல்லை' (குறள் - 1221), 'நீங்கின் தெறூஉம்' (குறள் 1104) என்னும் குறட் பாக்களைத் தொடர்புபடுத்தி மகிழலாம்.

## யாரைத் தேர்ந்தெடுப்பது?

நாடு தேர்தலைக் காண இருக்கிறது... 'இனிய செல்வ, வாக்காளர்களின் தரம் உயர்ந்தால்தான் ஆட்சியின் தரம் உயரும். திருவள்ளுவர் வாக்களிப்பதற்குமுன் வாக்காளர்கள் சிந்திக்க வேண்டிய திருக்குறள் ஒன்றைத் தந்துள்ளார்.

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்."**

என்பதுதான் அந்தத் திருக்குறள். இனிய செல்வ, "இதனை" என்பது என்ன? இன்றைய நாட்டின் நலனே என்று கொள்ளலாம்... இனிய, நல்ல, பலமுள்ள நாட்டின் நிலைமைகளைச் சீர்செய்யக் கூடிய அரசை அமைக்க வேண்டும். தேர்தலுக்குப் பிறகு தாம் பொறுப்பேற்று அமைக்க இருக்கும் அரசைக் கருவியாகக் கொண்டு வளமான நாடு காணவும், வேலை வாய்ப்புப் பெருகி வளரவும் தூய்மையான உயர்நோக்குடைய அரசை எந்த அணி அமைக்கும் என்பதை ஆராய்ந்து வாக்குகள் அளிக்க வேண்டும்."

– தவத்திரு குன்றக்குடி அடிகளார்

*(குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொகுதி 3; திருக்குறள், மணிவாசகர் பதிப்பக வெளியீடு)*

www.padippakam.com


# அற இலக்கியம் : மார்க்சிய ஆய்வுகள்

## (1)

"கோவைவாணன்"
(சு. துரை)



சமுதாய அமைப்புகளில் மாற்றம் நிகழும் பொழுதெல்லாம் இலக்கியத்தின் வடிவங்களும் பாடுபொருளும் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. காதல் வாழ்வையும், போரின் பெருமிதத்தையும், இயற்கை அழகினையும் சங்க இலக்கியங்கள் பெரிதும் பேசின. ஆனால் சங்க இலக்கியத்தை அடுத்துத் தோன்றியவை அற இலக்கியங்களாக அமைந்துள்ளன. சங்க காலச் சமூக அமைப்பு மாறுதலுக்கு உள்ளானதை இப்போக்கு உணர்த்துகிறது.

"புராதனப் பொது உடைமைச் சமூகத்தின் குணங்கள், அடுத்து வரும் சமூகச் சூழலிலும் தெரிந்தன. ஈகை, விருந்து, அன்பு முதலிய பெயர்களில் தொடர்ந்தன. முன்னை சமூகத்தின் பொதுமை அறம், சான்றோர் போற்றும் அறமாக நிலைபெற்றது. அன்பின் வழி தொடரும் களவு மணத்தைப் புலவர்கள் போற்றினர். அறம் என இதைக் குறிப்பிட்டனர். மாறிய சமூகச் சூழலில் திருக்குறள் முதலிய அறநூல்களுக்குத் தேவை ஏற்பட்டது. தனி உடைமையும், அரசு அதிகாரமும் சமூகத்தில் தம் ஆதிக்கத்தை நிலைப்படுத்திய பொழுது சங்க இலக்கியம் இனித் தொடர இயலாது என்ற நிலை ஏற்பட்டது."[1] என்னும் கூற்று இக்கால கட்டச் சமூக மாறுதலை உணர்த்துகின்றது.

"சங்கம் மருவிய காலப்படைப்புகள் வெளிப்படையாகவே நீதி போதனைக் குறிக்கோளைப் பறைசாற்றுவன. சங்கம் மருவிய காலம் அறநூற்காலம்"[2] என்றும், "தொல்காப்பியத்தை ஒட்டியும், பின்னுமே அறவியல் நூல்கள் - அதுவும் மதம் சாராமல் (Secular) உருவாக்கப்பட்டன"[3] என்றும் மார்க்சியர் கருதுவதன் மூலம் சங்க இலக்கியத்திற்குப் பின் அற இலக்கியப் போக்கு முகிழ்த்தது என்பதில் மார்க்சியர்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை என்பது புலனாகிறது.

சங்கம் மருவிய நூல்களில் அறம் முதன்மைப் பொருள் ஆனதற்கான கார


படிப்பகம்

www.padippakam.com



**சங்கம் மருவிய நூல்களில் அறம் முதன்மைப் பொருள் ஆனதற்கான காரணங்கள் ஆய்வுக்குரியவை. சங்க காலத்தில் மன்னர்களுக்கிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. போரினால் நாட்டில் வறுமை அதிகரித்தது. பாரி முதலிய வள்ளல்கள் அழிந்தனர். அரசு வலிமை பெற்றது. வணிகம் பெருகியது. செல்வப்பெருக்கம் காரணமாக சூது, கள், பரத்தமை மிகுந்தன. வாழ்க்கையில் தடுமாற்றங்கள் ஏற்பட்டன. இதற்கு எதிராக அறம் பற்றிய கருத்துக்கள் உருவாயின. இச்சூழலில்தான் சமணம், பௌத்தம் முதலியவை தமிழகச் சூழலில் வலுப்பெற்றன. அறம் முதன்மைப் பொருளானது இச் சூழலில்தான்.**

ணங்கள் ஆய்வுக்குரியவை. சங்க காலத்தில் மன்னர்களுக்கிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. போரினால் நாட்டில் வறுமை அதிகரித்தது. பாரி முதலிய வள்ளல்கள் அழிந்தனர். அரசு வலிமை பெற்றது. வணிகம் பெருகியது. செல்வப்பெருக்கம் காரணமாக சூது, கள், பரத்தமை மிகுந்தன. வாழ்க்கையில் தடுமாற்றங்கள் ஏற்பட்டன. இதற்கு எதிராக அறம் பற்றிய கருத்துக்கள் உருவாயின. இச்சூழலில்தான் சமணம், பௌத்தம் முதலியவை தமிழகச் சூழலில் வலுப்பெற்றன. அறம் முதன்மைப் பொருளானது இச் சூழலில்தான்.

## காலம்

நீதி நூற்காலம் கி.பி. 600 முதல் கி.பி. 850 வரையிலானது[4] என்னும் எஸ். வையாபுரிப் பிள்ளையின் கணிப்பை மார்க்சியர் ஏற்பர். "கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரை தோன்றியவை நீதிப் பாடல்கள்"[5] என்பார் ராஜ்கௌதமன். அறம் உரைப்பதற்கென்றே பிற்காலத்தில் தனி நூல்கள் தோன்றினவெனினும் தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் 'அறம்' என்ற சொல்லும் அறவியல் சிந்தனைகளும் வெளிப்பட்டுள்ளன.

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு (தொல். 1038). 'அன்பே அறனே இன்பம் நாணொடு' (தொல்.1161). 'அந்நிலை மருங்கின் அற முதலாகிய' (தொல். 1361). 'அறம்புரி நெஞ்சமொடு' (தொல் 1093).



'அறம்புரி சுற்ற மொடு கிழவனும் கிழத்தியும்' (தொல். 1138) என்னும் அடிகளில் 'அறம்' என்னும் சொல்லைத் தொல்காப்பியர் ஆழமான பொருளில் பயன்படுத்தியுள்ளார் என்பது கவனிக்கத் தக்கது. மேலும் பிற்காலத்தில் அறநூல்கள் தோற்றம் கொள்வதற்கு முது மொழி, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ எனத் தொல்காப்பியர் குறிப்பிட்ட துறை களும் காரணமாக அமைந்தன.

அகத்திணை இயலில் கூறப்படும் 'அறத்தொடு நிற்றல்' என்னும் துறையும் ஆற்றல் மிக்க துறை ஆகும். சங்க காலத்து 'அறங்கூறு அவையம்' பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன. அகம், புறம் ஆகிய இலக்கியங்களில் ஒரு பொருளாகப் பேசப்பட்ட அறம் என்பது சங்கம் மருவிய நூல்களில் முதன்மைப் பொருள் ஆயிற்று.

## அற இலக்கியம்

அறத்தை மட்டும் நுவல்வது இலக்கியம் ஆகுமா என்ற வினா எழுவதும் உண்டு. எத்துறைக் கருத்துக்களையும் செய்யுள் வடிவிலேயே படைப்பது தமிழில் மரபாக இருந்து வந்துள்ளது. எனவே அறவியல் கருத்துக்களையும் செய்யுள் வடிவத்திலேயே படைத்துள்ளனர். இவற்றை முழுமையாக இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ள இயலாவிடினும் சில (திருக்குறள்) இலக்கிய நயம் பொதுள அமைந்துள்ளன.


படிப்பகம்

www.padippakam.com


இலக்கியம் பற்றிய பார்வை தற்போது மாறி உள்ளது. இலக்கியத்தில் அறவியல் கருத்துக்கள், பாலில் நெய்போலும், விறகில் தீ போலும் உள்ளுறைந்து காணப்படல் வேண்டும். 'நீதி போதனை' செய்யும் நூற்களை இலக்கியம் என்று ஏற்பதில் தூய இலக்கியவியலார் தயக்கம் காட்டுவர்.

"இலக்கிய உலகிலும் இருவகைக் கூறுகள் உள்ளன. அவற்றை அறிவு இலக்கியம் (Literature of Knowledge), ஆற்றல் இலக்கியம் (Literature of Power) என்று பாகுபடுத்துவர். அறிவு இலக்கியம் அறிவுறுத்துவதை நோக்க மாகக் கொண்டது. ஆற்றல் இலக்கியம் மனித னின் உள்ளத்தை நெகிழச்செய்வது. இவற்றுள் அறிவு இலக்கிய வகையைச் சேர்ந்தது நீதி இலக்கியம்"[6] எனக் கல்வியியலாளர் அறநூல்களையும் இலக்கியமாகவே மதிப்பிட்டுள்ளனர்.

திருக்குறள் முதலிய அறநூல்கள் இலக்கி யங்கள் அல்ல என்று க. நா. சுப்பிரமணியம் போன்ற தூய இலக்கியவாதிகள் கருதினர். ஆனால் க. த. திருநாவுக்கரசு போன்ற கல்வியியலாளர்களும் க. கைலாசபதி போன்ற மார்க்சியரும் அறநூல்களை இலக்கியங்கள் என்றே ஏற்பர். சமூக அறம் பற்றி மார்க்சியர் அதிகம் ஆர்வம் கொள்கின்றனர். இந்நிலையில் அறக்கருத் துக்களை உள்ளடக்கிய நூல்களை இவர்கள் இலக்கியம் என்றே கொள்வதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

**1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**


**'அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி**
**அறம்பொருள் இன்பம் அடுக்கியவ்வகைத்**
**திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்'**

என்று கீழ்க்கணக்கு நூலுக்குப் பன்னிரு பாட்டியல் (542) இலக்கணம் வகுத்துள்ளது. எனவே கீழ்கணக்கு நூல்கள் அறம், பொருள், இன்பம் ஆகியன பற்றி எண்ணிக்கையில் குறைந்த அடிகளில் கூறுவன என்பதை அறிகிறோம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகம் பற்றியன ஆறு நூல்கள். அவை: ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது, கைந்நிலை ஆகியன. புறம் பற்றியது களவழி நாற்பது என்னும் ஒரு நூலே. எஞ்சி யுள்ள பதினொரு நூல்கள் அறத்திற்கு முதன்மை அளிப்பன. அவை : திருக்குறள், நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், ஏலாதி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நாலடியார், பழமொழி நானூறு, முதுமொழிக் காஞ்சி, ஆசாரக்கோவை என்பனவாகும்.

**2. சமூக மாற்றமும் அறமும்**

அறவியல் கருத்துகளின் உருவாக்கத் திற்கு அவ்வக்காலச் சமுதாய வாழ்நிலையே காரணமாகின்றது. சமூக மாறுதலுக்கு ஏற்ப சில அறவியல் கருத்துகளும் மாறுதலுக்கு உள்ளாகும் வாய்ப்பு உண்டு. எல்லா அறக் கருத்துக்களும் மாறிவிடும் என்று சொல்வதற்கில்லை.



**சங்கம் மருவிய நூல்களில் அறம் முதன்மைப் பொருள் ஆனதற்கான காரணங்கள் ஆய்வுக்குரியவை. சங்க காலத்தில் மன்னர்களுக்கிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. போரினால் நாட்டில் வறுமை அதிகரித்தது. பாரி முதலிய வள்ளல்கள் அழிந்தனர். அரசு வலிமை பெற்றது. வணிகம் பெருகியது. செல்வப்பெருக்கம் காரணமாக சூது, கள், பரத்தமை மிகுந்தன. வாழ்க்கையில் தடுமாற்றங்கள் ஏற்பட்டன. இதற்கு எதிராக அறம் பற்றிய கருத்துக்கள் உருவாயின. இச்சூழலில்தான் சமணம், பௌத்தம் முதலியவை தமிழகச் சூழலில் வலுப்பெற்றன. அறம் முதன்மைப் பொருளானது இச் சூழலில்தான்.**


படிப்பகம்

www.padippakam.com


**தனி உடைமை, அரசு அதிகாரம் நிலை கொண்ட சமூகத்தில் அறக்கருத்துக்கள் தோன்றுகின்றன. உழைப்பு, தியாகம் முதலியவற்றைச் சான்றோர்களின் இச்சூழலில் வற்புறுத்திக் கூறுவர். இத்தகைய சிறந்த அறங்கள் தொல்பொதுமைச் சமுதாயத் தின் எச்சங்கள் என்றும் கூறலாம். உடைமை வர்க்கம் இருக்கிற வரைக்கும் சோசலிசம் தான் அறமாக வற்புறுத்திக் கூறப்படும்.**

எனவே நிலையான அறங்கள் என்று சிலவற்றையும் சமூக அமைப்புக்கேற்ப மாறிவிடும் அறங்கள் என்று சிலவற்றையும் குறிப்பிடலாம்.

நிலையான அறத்தை 'முதலறம்' என்றும் மாறுதலுக்கு உள்ளாகும் அறத்தை 'சார்பறம்' என்றும் பிரித்து மார்க்சியர் அணுகுவர். "முதலறம் காலம், தேசம், சூழல் ஆகியவற்றால் கட்டுப்படாதது. மனித குல நல நாட்டம் (Humanism) என்று இந்த முதலறத்தைக் குறிப்பிடலாம். இந்த முதலறத்திலிருந்து கிளைத்தும் வேறுபட்டும் செல்வதே சார்பறம் ஆகும். எக்காலத்துக்கும் ஒத்து இயலும் முதலறத்தைச் சமுதாய வாழ்வு என்ற உலகியல் உண்மையோடு பொருந்தச் செய்து, பல்வேறு நிலையில் உள்ள மக்களுக்கு நடைமுறை விதிகளை வகுப்பது சார்பறம். சமுதாயவாழ்வு மாறுவதால், சார்பறமும் மாறும்"[7] என்பார் எஸ். இராமகிருஷ்ணன்.

மேல்கட்டுமானத்தின் ஒரு பகுதிதான் அறவியல் என்பது மார்க்சியர்களின் கருத்து. மேல்கட்டுமானத்தை அடிக்கட்டுமானம் தீர்மானிக்கிறது. எனவே அடிக்கட்டுமானத்தின் அமைப்புக்கேற்பவே அறவியல் கருத்துகள் அமையும். நிலையான அறங்கள் என்று எதுவும் இருக்க இயலாது எனச் சில மார்க்சியர் கருதுவர். "ஆன்மீகப் பண்புகள் அனைத்தும் காலத்துக்குக் காலம் மாறுபவை. வளர்பவை. பொருளாதார அடிப்படைக்கேற்பவே அவை எழுகின்றன, மறைகின்றன. வர்க்க வித்தியாசங்களின் காரணமாக அறவியலில் வேறுபாடுகளும் காண முடிகிறது. நிரந்தரமான அறவியல் கருத்துகள் என்று எதுவும் கிடையாது"[8] என்றும் "நல்லவை, தீயவை என்பவையெல்லாம் ஒப்பீட்டு ரீதியானவை தான். தூலமாக மட்டுமே இவற்றைப் பார்க்க வேண்டும். எல்லாக் காலத்திற்குமான நல்லவை, எல்லாக் காலத்திற்குமான தீயவை என்றெல்லாம் ஒன்றுமில்லை"[9] என்றும் மார்க்சியர் கருதுவர்.

உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் தான் அறக்கருத்துக்கள் தோன்றுகின்றன என்னும் மார்க்சியர், அவ்வாறு உருவாகும் அறக்கருத்துக்கள் உடைமைச் சமூகத்திற்கு ஆதரவானவையாகவே அமைந்திருக்கும் என்றும் கருதுவர். "குழுச் சமுதாயத்திலிருந்து உடைமைச் சமூக உருவாக்கம் பெற்றபோது அறநெறிக் கருத்துக்கள், குழுச் சமூதாயத்தின் மதிப்பீடுகளை எதிர் மறைகளாக்கி உடைமைச் சமூகத்திற் கான ஒரு ஒழுக்கவியல் சட்டத்தை ஏற்படுத்தித் தந்ததைக் கண்டோம்"[10] என்பார் ராஜ் கௌதமன். இது உண்மையில் ஒரு பகுதியாகத்தான் இருத்தல் வேண்டும். உடைமைச் சமூகத்திற்கு எதிரான அறவியல் கருத்துகளும் தோன்றியதுண்டு, தோன்றும். அடிக்கட்டுமானத்திற்கு அழுத்தம் கொடுக்கும் மரபு மார்க்சியர்களின் தாக்கம் இக்கூற்றில் உள்ளது.

அறம் முதலிய ஆன்மீகக் கருத்துக்களை மேல்கட்டுமானத்தின் பகுதி என்றும் அடித்தளமே மேல்கட்டுமானத்தைத் தீர்மானிக்கிறது என்றும் வரலாற்றுக் கட்டங்கள் மாறும் பொழுதெல்லாம் அறக்கருத்துக்களும் மாறுகின்றன என்றும் பெரும்பாலான மார்க்சியர் கருதுகின்றனர். ஆனால் இதற்கு மாறாக வரலாற்றுக் கட்டங்கள் மாறினாலும்


படிப்பகம்

www.padippakam.com


நிலையாக என்றும் சில அறக் கருத்துக்கள் தொடர்கின்றன என்ற கருத்தையும் சில மார்க்சியர் வெளிப்படுத்துகின்றனர்.

தனி உடைமை, அரசு அதிகாரம் நிலை கொண்ட சமூகத்தில் அறக்கருத்துக்கள் தோன்றுகின்றன. உழைப்பு, தியாகம் முதலிய வற்றைச் சான்றோர்கள் இச்சூழலில் வற்புறுத்திக் கூறுவர். இத்தகைய சிறந்த அறங்கள் தொல்பொதுமைச் சமுதாயத் தின் எச்சங்கள் என்றும் கூறலாம். உடைமை வர்க்கம் இருக்கிற வரைக்கும் சோசலிசம் தான் அறமாக வற்புறுத்திக் கூறப்படும்.

### 3. அறவியலும் மார்க்சியமும்

அறவியல் கோட்பாடுகளில் ஒன்றாக மார்க்சியத்தைக் கருதுவாரும் உளர். "மார்க்சின் கோட்பாட்டில் அறத்திற்கு இட மில்லை. மார்க்சியம் அறச் சிந்தனையற்ற ஒருவகையான நாத்திகம்தான். மார்க்ஸ் தம்முடைய கோட்பாட்டைச் சமயவாத மென பிறர் குறைத்து மதிப்பிடுவார்களோ என அஞ்சி அவர் அறத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இது விடுபட்டதால் ஏற்படவிருக்கும் விளைவுகளைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை. கிழக்கத்திய அறவகை நாத்திகத்தைப்பற்றி (மகாவீரர், புத்தர் போன்றவர்கள்) இவர் அறிந்திருந் தால் ஏன் இந்தச் சமூகச் சீர்திருத்த வாதிகள் அறத்திற்கு இவ்வளவு அழுத்தம் கொடுத்தார்கள் என்பதைச் சிந்தித் திருப்பார்"[11] என்று எஸ். என். நாகராசன் கூறுவார்.

இவ்வாறு கூறிய அந்நியமாதல் மார்க் சியர், "மார்க்சிடம் அறம் இல்லை என்று அடித்துக் கூறமுடியாது. ஆனால் அறம் பற்றிய இலக்கணத்தையோ அதன் வரை யறைகளையோ மார்க்ஸ் பேசவில்லை"[12] என்று பிறிதோரிடத்தில் கூறுவர். கடும் சுரண்டலுக்கு உள்ளாகித் துயரப்படும் மானிடக் கூட்டத்தின் ஒரு பகுதியின ரான உழைக்கும் வர்க்கத்தின் நல் வாழ்வுக்காகச் சிந்தித்தும் செயல்பட்டும் வாழ்ந்த மார்க்சின் மனிதநேயம் அறவுணர்ச்சியின் அடிப்படையில்தான் மலர்ந்திருக்க வேண்டும். எனவே தான், "பொதுமை - பொது உடைமை என்பதுதான் மார்க்சியத் திற்குள் ஆழப் பதிந்திருக்கிற அறம் - அற உணர்வு நீதி"[13] என்று ஞானி கூறுவார்.

### 4. திருக்குறள்

அறநூல்களாகிய பதினொரு நூல்களில் திருக்குறளை (காமத்துப்பால் நீங்கலாக) மட்டுமே மார்க்சியர்கள் ஆய்வு செய்துள் ளனர்.

## காலம்

திருக்குறளின் காலத்தை வரையறை செய்வதில் புலமை நெறியாளர் மிகுந்த கவனம் செலுத்தினர். ஆனால் மார்க்சியர் குறளின் கால ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. எஸ். இராமகிருஷ்ணன், "சங்க காலத்தைத் தொடர்ந்து நீதி நூல்களும் இரட்டைக் காப்பியங்களும் தோன்றிய சங்கம் மருவிய காலத்தில் (கி.பி. 300 - 600) முதற்கண் எழுந்தது திருக்குறள் என்பதே ஏற்புடை யது"[14] என்பார். சமுதாய இயக்கம் குறித்த வர்க்க ஆய்வுக்கே முதன்மைதரும் மார்க்சியர் கால ஆராய்ச்சியில் ஈடுபாடு காட்டவில்லை என்று கருதலாம்.

## சமயக் கருத்துகள்

திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்து பற்றி முரண்பட் முடிவுகளுக்கு மார்க்சியர் வந்துள்ளனர். "பண்பாட்டு வடிவங்களுள் ஒன்றாகிய மதம் மக்களை அடிமைப்படுத்தி - அச்சப்படுத்தி வைத்திருந்தது. இந்த அச்சத்தை நன்கு உணர்ந்தவர் வள்ளுவர். கடவுளோடு மன்னனையும் இணைத்து மக்கள் மனத்தில் நிலப்பிரபுத்துவத்தின் தலைவனை நிலைப்படுத்துகிறார்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும் (388)**

வள்ளுவர் மக்களை நிலப்பிரபுத்துவ அரசியலின் ஆதிக்கத்தின் அடித்தளத் தில் தள்ளி விடுகிறார்''[15] என்கிறார் தி.ச. இராசாமணி.




படிப்பகம்


மதம் பற்றிய இவரது பார்வை ஆய்வுக் குரியது. நீதி தவறாமல் ஆட்சி செய்யும் மன்னவன் கடவுளுக்கே நிகரானவன் எனப் பொருள்படும் இக்குறள், மக்களை நிலப் பிரபுத்துவ அரசியலின் ஆதிக்கத்தில் அடித் தளத்தில் தள்ளுகிறது என்னும் இவரது கருத்து ஆய்வுக்கு உரியது.

கடவுள் வாழ்த்து பற்றி பிறிதொரு மார்க்சியர், “கடவுள் வாழ்த்துக் கருத்துகள் மனிதகுலநலக் கொள்கைக்கும் மானிட மேன்மையிலுள்ள நம்பிக்கைக்கும் அரண் செய்வன. தெய்வப்பண்புகள் பேரொளி வீசும் வகையில் வையத்துள் நீடுவாழ்ந்து மண்ணை விண்ணாக்க வேண்டும் என்னும் வள்ளுவரின் கருத்துக்கு ஏற்ற பாயிரமாகக் கடவுள் வாழ்த்து அதிகாரம் அமைகிறது”[16] என்பர்.

“வள்ளுவர் வர்ணிக்கும் கடவுளை ஆழ்ந்து பார்க்கும்போது அங்கே ஒரு மனிதனையே காண்கிறோம்”[17] என்னும் கூற்றைக் கடவுள், மதம், புராணம் முதலியவற்றின் தோற்றத்தை வரலாற்றுச் சூழலில் வைத்து இயங்கியல் அடிப்படையில் ஆய்வோர் ஒப்புக் கொள்வர்.

தமிழர் சிந்தனை பண்டைக்காலந்தொட்டு ஏதாவதொரு சமயம் சார்ந்ததாகவே விளங்கி வருகிறது என்றும் திருக்குறளும் இதற்கு விதிவிலக்கு அன்று என்றும் மார்க்சியர் கருதுவர். “திருக்குறளில் வரும் ஒழுக்க வியல் சிந்தனைகள் கூட மதச்சார்பினவே. குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்தவை யாக இல்லாதிருக்கலாம். ஆனால் அந்த ஒழுக்கநெறிகள் பாரம்பரிய மதங்கள் சுட்டும் அற அடிப்படை வழியாகவே வருவன”[18] என்பர்.

**முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல் [559]**



**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின் [560]**

ஆகிய குறள்களை ஆதாரமாகக் கொண்டு “இறைமைக்குரிய செங்கோலைச் செலுத்த வேண்டிய வேந்தன் கொடியோனாகச் செய லாற்றும்போது, பிரபஞ்சத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் இறைமைக்குரிய சக்திகள் கலகம் செய்து அவனுக்கு இறுதி சூழும் என்பது வள்ளுவம்”[19] என்பர். அறிவுக்கு அப்பாற்பட்ட விளக்கத்தை இக்குறட் பாக்கள் தருகின்றன என்று மார்க்சியர் கருதுகின்றனர்.

அந்நியமாதல் மார்க்சியர் வள்ளுவரை வேறு கோணத்தில் அணுகியுள்ளனர். “சமயத்தின் எல்லைக்குள் வள்ளுவரைச் சிறைப்படுத்த முடியாது. இறைவனை ஆதாரமாக வைத்து வள்ளுவர் நமக்கான அறத்தை வகுக்கவில்லை. துறவிகளின் சூளுரைக்குள் வள்ளுவர் நம்மைத் தள்ள வில்லை. விதியின் காலடியில் வள்ளுவர் நம்மைக் கிடத்தவில்லை. கொடுங்கோல னுக்கு எதிரான போரில் நாம் ஈடுபடுவதை வள்ளுவர் விரும்புகிறார்”[20] என்று ஞானி மதிப்பிட்டுள்ளார்.

“வள்ளுவருக்குள் சமய உணர்வுகள் ஊடாடின என்பதை நாம் மறுக்காமலேயே, வள்ளுவரை சமயவாதத் திற்குள் அடக்கும் முயற்சியிலிருந்து வள்ளு வரை நம்மால் விடுவிக்க முடியும்”

வள்ளுவரை வைதீகச் சிமிழுக்குள் அடைப்பதோ, அல்லது நாத்திகராகக் காட்ட முயல்வதோ இரண்டும் வள்ளு வத்தைச் சென்றடையத் தடைகளாகவே இருக்கும். “வள்ளுவருக்குள் சமய உணர்வுகள் ஊடாடின என்பதை நாம் மறுக்காமலேயே, வள்ளுவரை சமயவாதத் திற்குள் அடக்கும் முயற்சியிலிருந்து வள்ளு வரை நம்மால் விடுவிக்க முடியும்”[21] என்ற ஞானியின் கூற்று இவ்விடத்தில் சிந்திக்கத் தக்கது ஆகும்.

கருத்து முதல்வாதக் கருத்துகள் குறளில் உண்டு என்று கருதும் மார்க்சியர்களும் உளர். “மக்களுக்குரிய

www.padippakam.com


உணர்ச்சிகளும் அறிவும் புறப்பொருட்களால் அன்றி, மனத்தினால் ஏற்படுபவை என்னும் பொருளில் 'மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி" (குறள் : 453) என்னும் குறளின் கருத்து, கருத்து முதலியல் சார்பைக் கொண்டது"[22] என்பர்.

பொருள் முதல்வாதக் கருத்துகளும் குறளில் உண்டு என அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

**'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு' (760)**

**'அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்' (754)**

"பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்பட்டுத்தான் வரும் என்பது சங்க காலத்தில் நிலவிய கருத்து முதலியல் கொள்கை. 'சிறப்புடைய மரபில் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம்' (புறம் : 31) ஆனால் பொருளின்வழி அறமும், இன்பமும் வரும் என்பது திருவள்ளுவ ருடைய பொருள் முதலியல் கொள்கை"[22] என்பார் கு.ச. ஆனந்தன்.

மேலும், "திருவள்ளுவமும் இந்த உலகை, அதன் பொருட்களை, உயிர்களை, 'கடவுள்' என்ற ஒரு புறஆற்றல் படைத்துக் காத்து அழிப்பதாகக் கூறுவதில்லை... வாழ்க்கை ஏற்புக் கொள்கையை வலியுறுத்தி, பொருள் முதலியல் அடிப்படையில் புதியதொரு சமனிய சமுதாயத்தைத் திருவள்ளுவம் படைத்தளிக்கிறது"[23] என்பார் கு.ச. ஆனந்தன்.

அந்நியமாதல் மார்க்சியர்களின் கருத்து களை அரண் செய்வதாக கு.ச. ஆனந்தனின் கருத்துகள் அமைவதைக் காண முடிகிறது. முழுமையான பொருள் முதல்வாதி என்ற பெருமையை வள்ளுவர்க்கு நாம் அளித்திட முயற்சி செய்யவேண்டியதில்லை. அதே சமயம் கருத்து முதல்வாதி என்று அவரை ஒதுக்கிவிடவும் வேண்டியதில்லை. முரண் பட்ட இரண்டு போக்குகளும் அவருக்குள் வினை புரிந்துள்ளன என்பதைக் குறள்களின் வழி அறிய முடிகிறது.



## வர்க்கச் சார்பு

வர்க்கச் சமுதாயத்தில் கலைஞர்கள் ஆதிக்க வர்க்கத்தைச் சார்ந்து இயங்குவர் என்பது மார்க்சியர்களின் கருத்து. வள்ளுவ ரும் ஆதிக்க வர்க்கச் சார்போடுதான் குறளைப் படைத்துள்ளார் என்று மார்க்சியர் ஆய்வு செய்துள்ளனர். தனியுடைமையைப் போற்றி, 'அரசு' என்னும் அமைப்பைப் பாதுகாக்க வேண்டியுள்ளார் என்னும் மார்க்சியர் உளர்.

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு (731)**

என்ற தனியுடைமையினை வாழ்த்தி, மக்களைப் புறக்கணித்தும்,

**உறுபொருளும் உல்கு பொருளும் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள் (756)**

என்று செல்வக் குவிவுக்கு வழிகளைக் கூறியும்,

**செய்கபொருளைச் செருநர் செறுக்கு அறுக்கும்**
**எஃகுஅதனிற் கூரியது இல் (759)**

என்று பொருளுடைமையின் பலத்தினை யும் கூறியும் அக்கால அரசினைப் பாது காத்தலில் முன்னின்றதைக் காண முடியும்"[25] என்பர் மரபு மார்க்சியர்.

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும் (380)**

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும் (619)**

"இந்த இரண்டு குறள்களில் இரண்டு முரண்பாடான நீதிகள் போதிக்கப்படு வதைப் பார்க்கலாம். இந்த முரண்பாடு என்பது வெளித்தோற்றம்தான். இரண்டுக்கும் பின்னால் உள்ளது பொருளுடைமை வர்க்க நீதிதான். பொருளை ஈட்ட முயற்சி செய்தால் ஈட்டமுடியும் என்று மனித முயற்சியிலும், சக்தியிலும் நம்பிக்கை கொள்கிற குறள், பொருள் ஈட்ட முடியாதவர்களுக்குத் தலைவிதி என்றும் போதிக்கிறது. இது உடைமை வர்க்கத்தாரின் இரட்டை நீதி"[26] என்பர் மரபு மார்க்சியர்.


படிப்பகம்

www.padippakam.com


இம்மார்க்சியர் பிறிதோரிடத்தில், "வள்ளுவரின் முக்கியமான தத்துவ போதனைகளுக்குப் பின்னே ஒரு எதார்த்த மான வாழ்க்கைப் பார்வை ஒளிந்து நிற்கிறது. அதுவே பொருளுடைமையாள ரின் வாழ்க்கைப் பார்வை. அன்றையச் சமுதாயத்தில் உருவாகி வந்த புதிய பொரு ளுடைமையாளர்க்குத் தர்மநீதி வகுத்து நியாயம் கற்பிப்பதுதான் இந்தக் குறட்பாக் களில் பொதிந்திருக்கும் குறிக்கோள்"[27] என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சமுதாயத்திலிருந்து பெற்ற கருத்து களுக்கு வடிவம் கொடுப்பதில் ஆசிரியர்கள் - எழுத்தாளர்கள் - கவிஞர்கள் இருவகை யில் இடம்பெறுவதாக மார்க்சியர் கருதுவர்.

1. சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு ஒருவரைச் சில கருத்துகளை வெளி யிடவும் அக்கருத்துகளின் பின்னால் அவர் போன்றோரை அணிவகுத்து நிற்கவும் செய்கிறது. அவர்கள் அக் கருத்துகளுக்குத் தம்மை அர்ப்பணித் திருக்கிறோம் என்ற உணர்வில்லாம லேயே அதனைச் செய்கின்றனர்.

2. சமுதாயத்தில் நிலவும் வர்க்க வேறு பாடுகளில் - ஏதாவது ஒரு வர்க்கத்தின் கருத்துகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டு அவ்வர்க்க நலனை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தி அதன் நடை முறையை நியாயப்படுத்தும் முயற்சி யில் ஈடுபடுவர். இவர்கள் ஒரு வர்க் கத்துக்காகத் தன்னைத் தியாகம் செய்வார்கள்.

வள்ளுவர் இரண்டாம் வகையைச் சார்ந்தவர்[28] என்பது மரபு மார்க்சியரின் நிலைப்பாடு ஆகும். சொத்துடைமையுள்ள தனிமனிதனின் நலன் எதுவோ அதுவே சமுதாய நலனாக வள்ளுவம் சித்திரித்துக் காட்டுகிறது என்று மார்க்சியர் கருதி யுள்ளார்.

அரசுக்கும் நிலவுடைமை அமைப்புக்கும் சேவை செய்தவர் வள்ளுவர் என்று மாத்தளை செல்வா மதிப்பிட்டுள்ளார்.



**"வள்ளுவர் காலத்தில் அரசு தோன்றி விட்டது. நிலவுடைமை அமைப்பு நிலைத்துவிட்டது. வள்ளுவர். அரசுக்கும் நிலவுடைமை அமைப்புக்கும் சேவை செய்பவ ராகவே விளங்கி னார். நிலவுடைமை அமைப்பை உடைக்க அவர் விரும்பியதில்லை. அதை நிலை நாட்ட அரசனுக்கும் நிலவுடைமை யாளருக்கும் அறிவுரை கூறினார். அது உடைந்து விடாது காப்பதற்கு அறம் வகுத்தார். இவற்றால் நிலவுடைமைச் சமுதாயத்தைப் பேணுவதற்குத் திருக்குறள் இலக்கண நூலாக விளங்குகிறது"**

"வள்ளுவர் காலத்தில் அரசு தோன்றி விட்டது. நிலவுடைமை அமைப்பு நிலைத்துவிட்டது. வள்ளுவர். அரசுக்கும் நிலவுடைமை அமைப்புக்கும் சேவை செய்ப வராகவே விளங்கி னார். நிலவுடைமை அமைப்பை உடைக்க அவர் விரும்பிய தில்லை. அதை நிலை நாட்ட அரசனுக்கும் நிலவுடைமையாள ருக்கும் அறிவுரை கூறினார். அது உடைந்து விடாது காப்பதற்கு அறம் வகுத்தார். இவற்றால் நிலவுடைமைச் சமுதாயத்தைப் பேணுவதற்குத் திருக்குறள் இலக்கண நூலாக விளங்குகிறது"[29] என்பார் மாத்தளை செல்வா.

நிலவுடைமையாளர்க்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் வள்ளுவர் என்று சில மார்க் சியர் மதிப்பிடுவர். "அன்று வளர்ந்த பொரு ளுடைமையுடன் நிலவுடைமை வர்க்க சமுதாய அமைப்பிற்குத் தேவையான நீதி களைக் கூறுகிறது திருக்குறள்"[30] என்றும் "நிலவுடைமைப் பொருளியல் அடித்தளத் தையும் நிலவுடைமை உற்பத்தி உறவுகளையும் வலுப்படுத்த எழுந்தது திருக்குறள் ஆகும். பல்வேறு துறைகளிலும் நிலவுடைமை அமைப்பைக் காக்க


படிப்பகம்

**அமைப்பில் அடிப்படையில் திருக்குறளை ஒரு பிரதி (Text) என்று கொள்ளலாம். இப்பிரதிக்குப் பல்வேறு உரைகள் தோன்று வதற்கு வாய்ப்பு உண்டு. இவ்வடிப்படையில் மாக்சிய நோக்கில் ஓர் உரை சொல் வதற்கும் மார்க்சியர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் ஆழ்ந்திருக்கும் கவி உள்ளம் காணாமல் தம் நோக்கிற்கு ஏற்றபடி குறளின் கருத்தைத் திரித்துக் கூறி வள்ளுவரை உடைமைவர்க்கச் சார்பாளராகக் காட்ட மார்க்சியர் முயன்றுள்ளனர்.**

வள்ளுவர் தத்துவார்த்த முறையில் அறம் சொல்லியதையும் குறள் வழியாக உணரலாம். திருக்குறள் நிலவுடைமையின் சித்தாந்த வடிவம் ஆகும்''[31] என்றும் மார்க்சியர் உரைப்பர்.

வணிக வர்க்கத்துக்குச் சார்பாகப் பேசியவர் வள்ளுவர் என்ற கருத்தும் மார்க்சியர்களிடையே உண்டு. "வணிக வகுப்புக்குரிய ஒழுக்கவியல் மாதிரிகளையே திருக்குறள் நூல் வடிவில் வடித்துக் காட்டியது''[32] என்றும் "வறுமையை அதிகப்படவிடாது அதனைக் குறைக்க முயன்றால் செல்வனுக்கு அதுவே உதவியாயமையும் என்று உபதேசம் பண்ணினார் வள்ளுவர்''[33] என்றும் "வள்ளுவரின் குறள், கொடுங்கோல் மன்னர்களை எதிர்த்த ஒடுக்கப்பட்டோரின் குரல். குறிப்பாக வணிகர் குல மக்களின் குரல்''[34] என்றும் வள்ளுவரை வணிக வர்க்கச் சார்பினராகக் காட்ட மார்க்சியர் முயன்றுள்ளனர்.

இவர்களது கூற்றை அந்நியமாதல் மார்க்சியர் மறுத்துரைப்பர். "வள்ளுவர், நிலவுடைமை வர்க்கத்திற்கு எதிராக, வணிக வர்க்கத்திற்குச் சார்பினராக இருந்தார் என்ற கருத்து, ஐரோப்பிய வரலாற்றில் மிகப் பிற்காலத்தில் காணப்படும் நிலைமைகளைத் தமிழக வரலாற்றில் மிக முற்காலத்தில் ஏற்றிப் பார்ப்பதே யாகும்''[35] என்பர்.

அரசுக்கும், நிலவுடைமைக்கும், வணிக வர்க்கத்திற்கும் ஆதரவாக வள்ளுவர் செயல்பட்டுள்ளார், தனியுடைமையைப் பாது காக்கும் நெறியை, மக்கட்சார்பின்றிப் பின்பற்றி உள்ளார் என்னும் முடிவுகளுக்கு மரபு மார்க்சியர் வந்துள்ளனர். வள்ளுவரை மக்கட் சார்பாளராக அந்நியமாதல் மார்க்சியர் மதிப்பிட்டுள்ளனர்.

## பொருள் திரிபு

அமைப்பில் அடிப்படையில் திருக்குறளை ஒரு பிரதி (Text) என்று கொள்ளலாம். இப்பிரதிக்குப் பல்வேறு உரைகள் தோன்று வதற்கு வாய்ப்பு உண்டு. இவ்வடிப்படையில் மாக்சிய நோக்கில் ஓர் உரை சொல் வதற்கும் மார்க்சியர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் ஆழ்ந்திருக்கும் கவி உள்ளம் காணாமல் தம் நோக்கிற்கு ஏற்றபடி குறளின் கருத்தைத் திரித்துக் கூறி வள்ளுவரை உடைமைவர்க்கச் சார்பாளராகக் காட்ட மார்க்சியர் முயன்றுள்ளனர்.

**இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு [752]**

என்று பொருள் உடைமையைப் போற்றி விட்டு, அப்பொருளுரிமைக்குப் பாதுகாப் பாக,

**உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல் [282]**

என்று சொத்துரிமைக்கு அரண்செய்து விடுகின்றதைக் காணலாம். வணிக வர்க்கத் தினரின் தத்துவம் இத்தகையதே. அறம் என்ற போர்வைக்குள் பல்லவர் காலச் சமுதாயத்திற்கும் வணிக வர்க்கத்தினருக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடு தோன்றுகிறது''[36] என்பர் மார்க்சியர்.



உடைமை வர்க்கத்திற்குச் சார்பானவர் வள்ளுவர் என்பதை மெய்ப்பிக்க இவ்வாறு குறளுக்குப் பொருள் காண்பர் மார்க்சியர். 'பிறர்பொருளை உள்ளத்தால் எண்ணுவதும் குற்றமே' என்பது இக்குறளின் நேர் பொருள். 'பிறன் பொருள்' என்பதற்கு 'மற்றவர்களின் உழைப்பில் விளைந்த உபரி' என்று உழைக்கும் வர்க்கத்திற்குச்

www.padippakam.com


சார்பாகவும் இக்குறளுக்கு உரைசொல்ல முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல் [314]**

என்னும் குறளுக்கு மார்க்சியர் கூறும் விளக்கம் ஆய்வுக்குரியது.

"உடைமையாளர் செய்த துன்பத்தையோ - உழைப்பாளி செய்த நன்மையையோ உழைப்பாளி நினைத்துக் கொண்டிருக்கக் கூடாதாம். உடனே இரண்டையும் மறந்து விட வேண்டுமாம். மறக்காவிடில் யாருக்குத் தீமை? உடைமை வர்க்கத்துக்குத்தானே! வள்ளுவர்தான் உடைமை வர்க்க நலன் பேணுபவராயிற்றே!"[37] என்பர்.

'இன்னா செய்தார்' என்பதற்கு மார்க்சியர் கொள்ளும் பொருள் ஆய்வுக்குரியது. புரட்சிக்குப் பிறகு லெனினும், மாவோவும் நிலவுடைமையாளர்களையும் அரசமரபினரையும் மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும் என்று கூறினர் என்பதை இவ்விடத்தில் நினைவுகூரவேண்டும்.

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும் [1039]**

என்னும் குறளுக்கு "நிலக்கிழார் தன் நிலத்தில் கண்ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும். உழைப்போர்களை நம்பி, விட்டுவிடுதல் கூடாது. அவ்வாறு விட்டுவிட்டால் நிலத்தில் விளைவு குன்றும்"[38] என்று பொருள் உரைப்பர் மார்க்சியர்.

'நிலத்திற்கு உரியவன் நிலத்தைச்சென்று பார்க்காமல் வாளா இருந்தால், அந்நிலம் அவனுடைய மனைவியைப் போல வெறுத்து அவனோடு பிணங்கிவிடும்' என்பது இக்குறளின் நேர் பொருள். ஆனால் இக்குறளில் வரும் 'கிழவன்' என்னும் சொல்லுக்கு 'நிலக்கிழார்' (நிலவுடைமையாளர்) என்று பொருள் கொள்கின்றனர். 'உழவு' என்னும் அதிகாரத்தில் இப்படிப் பொருள் கொள்ள வாய்ப்பு இல்லை. 'உழுவார்', 'உழுதுண்டு வாழ்வார்', 'கரவாது கை செய்தூண்மாலையவர்', 'உழவினார்' என உழுதொழிலாளர்களையே இவ்வதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"உழைப்பவனுக்கே நிலம் என்ற தெளிவான உணர்வு, கொள்கை வடிவாக வெளிப்பட்டு இயக்கமாய் உருவெடுக்க முடியாத புறநிலைச் சூழ்நிலைகள் அன்றிருந்தன. அவ்வாறு மேலோங்கிய உணர்வு நிலையை - செயல்வடிவைப் பேராசை என்று கூறுகிறது குறள். 'கனவினால் கன்றிய காதல்' (286) என்றும், 'களவென்னும் காரறிவாண்மை' (287) என்றும் வள்ளுவரால் குறிக்கப்பட்டன"[39] என்பர் மார்க்சியர். இவ்வதிகாரத்தில் வரும் 'கள்ளாமை' என்னும் சொல்லை, வள்ளுவர் உடைமை வர்க்கத்திற்குச் சார்பானவர் என்ற முறையில் பொருள் கொள்கின்றனர். இவர்கள் உரைக்கும் கருத்துகளுக்கு முரண்பட்ட பொருளையும் இச்சொல் மூலம் நாம் உரைக்க முடியும்.

"உழைப்பாளி உரிமை பெறத் துடிப்பது நிலவுடைமையரின் இலாபத்தைக் குறைக்கும் முயற்சியாகும். எனவே இவ்வருத்தத்தைச் செய்த உழைப்பாளி தண்டனைக்கு உரியவன் என்பது வள்ளுவர் கருத்து. அவனைக் கொடியவன் என்று குறிப்பிடுவார். அவனுக்கு என்ன தண்டனை? கொலைதான் தண்டனை என்கிறார். அக்கொலை பல்வேறு முறைகளில் நிறைவேற்றப் படலாம். கொடியாரைக் கொலையின் (கொலை செய்தவன் வழியாக). ஒறுத்தல் (தண்டித்தல்) வேண்டும் என்கிறார். (குறள் : 550) நிலவுடைமைச் சமுதாயத்தில் ஆளும் வர்க்கத் தலைமைக்கு - மன்னனுக்கு வள்ளுவர் தரும் அறிவுரை இது"[40] என்பர் மார்க்சியர். இக்குறட்பாவில் உள்ள 'கொடியார்' என்னும் சொல்லுக்கு 'உழைப்பாளி' 'புரட்சியாளர்' என்னும் பொருள்களைக் கூறி வள்ளுவரை ஆளும் வர்க்கத்திற்குச் சார்பாக நிறுத்துவர் மார்க்சியர்.



இத்தகைய ஆய்வுகளைச் செய்பவர்களைப் பிறிதொரு மார்க்சியர் கீழ்வருமாறு மதிப்பிடுவார்:


படிப்பகம்

www.padippakam.com


"சிலர் திருவள்ளுவர் நிலவுடைமை யாளரின் பாதுகாவலர் என்ற மாதிரி ஆராய்ச்சி வெடிகுண்டுகளைப் போட்டு விட்டு அதற்கான ஆதாரங்களைக் குறட் பாக்களுக்குத் தாம் தரும் வக்கிரமான வியாக்கியானங்களிலேயே தேடுவார்கள்"[41]

முன் முடிவுகளோடு ஒரு படைப்பை அணுகுவது என்னும் போக்கு மார்க்சியர் களிடையே இருந்து வந்துள்ளது என்ப தற்கு இத்தகைய ஆய்வுகளைச் சான்றாகக் கூறலாம்.

### சான்றெண் விளக்கம்


1. ஞானி, படைப்பியல் நோக்கில் தமிழ் இலக்கியம், ப. 52.
2. ந. இரவீந்திரன், தேசிய இலக்கியமும் கட்சி இலக்கியமும், சமகாலச் சமூகப் பார்வைகள், ப. 107.
3. பொ. வேல்சாமி, தொல்காப்பிய உருவாக்கத்தின் பண்பாட்டு அரசியல், மேலும், பிப்ரவரி – மே, 1992, ப. 20.
4. மேற்கோள் : கா. சிவத்தம்பி, தமிழில் இலக்கிய வரலாறு, ப. 259.
5. ராஜ்கௌதமன், பொய் + அபத்தம் = உண்மை, ப. 9.
6. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப. 61.
7. டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன், திருக்குறள் ஆய்வுரை, ப. 508.
8. மருதமுத்து, இந்திய வாழ்க்கையும் மார்க்சியமும்: விமர்சனம், சிகரம், சூலை. 77.
9. அ. மார்க்ஸ், மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும், ப. 201.
10. ராஜ்கௌதமன், பொய் + அபத்தம் = உண்மை, ப. 26.
11. எஸ்.என். நாகராஜன், பொதுவுடைமை இயக்கத்தின் நெருக்கடி, நிகழ், அக்டோபர், 1990, ப. 53.
12. எஸ். என் நாகராஜன், கீழைமார்க்சியம், நிகழ், மார்ச், 1991, ப. 32.
13. ஞானி, படைப்பியல் நோக்கில் தமிழ் இலக்கியம், ப. 177.
14. எஸ். இராமகிருஷ்ணன், முன்னுரை, திருக்குறள் ஆய்வுரை, ப. XVIII.
15. தி.ச. இராசாமணி, வள்ளுவர் காத்த வர்க்கம், ப. 10.
16. எஸ். இராமகிருஷ்ணன், மு.கு.நூ., ப. 7.
17. மருதமுத்து, 'உறங்கி விழித்தது போல...' கணையாழி, டிசம்பர் 1995.
18. கா. சிவத்தம்பி, தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும், ப. 30.
19. எஸ். இராமகிருஷ்ணன், மு.கு.நூ., ப. 302.
20. ஞானி, அறிஞர் கு.ச. ஆனந்தன் அவர்கள் காணும் திருக்குறளின் உண்மைப்பொருள், அ.வ.க., ப. 10.
21. ஞானி, மு.கு.க., ப. 11.
22. குணா, தமிழர் மெய்யியல், ப. 22.
23. கு.ச. ஆனந்தன், வளரும் வள்ளுவம், ப. 234.
24. கு.ச. ஆனந்தன், மு.குநூ., ப. 223.
25. எஸ். இராஜேந்திரன், இலக்கியத்தில் சமூகக் கட்டுப்பாடு குறித்துப் பேராசிரியர் க. கைலாசபதியின் கருத்துக்கள் பன்முக ஆய்வில் கைலாசபதி, பக். 227, 228.
26. கே. முத்தையா, தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம், ப. 61.
27. கே. முத்தையா, சமுதாய வாழ்வில் குறளின் குரல், ப. 76.
28. தி.ச. இராசாமணி, பாட்டில் தெறித்தபொறி – 5, குமரன், மே 15, 1975.
29. மாத்தளை செல்வா, முன்னுரை, தி.ச. இராசாமணி, வள்ளுவர் காத்த வர்க்கம், ப.இ.
30 கே. முத்தையா, தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம், ப. 78.
31. தி.ச. இராசாமணி, வள்ளுவர் காத்த வர்க்கம், ப. 17.
32. குணா, தமிழர் மெய்யியல், ப. 36.
33. க. கைலாசபதி, அடியும் முடியும், பக். 347, 348.
34. கே. முத்தையா, தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம், ப. 47.
35. ஞானி, மார்க்சியமும் தமிழ் இலக்கியமும், ப. 318.
36. க. கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 98.
37. தி.ச. இராசாமணி, மு.கு.நூ., ப. 30.
38. தி.ச. இராசாமணி, மு.கு.நூ., ப.4.
39. தி.ச. இராசாமணி, மு.கு.நூ., ப. 18.
40. தி.ச. இராசாமணி, மு.கு.நூ., ப. 28.
41. சி. சிவசேகரம், மரபும் மார்க்சியவாதிகளும், ப. 21.





படிப்பகம்

www.padippakam.com


# வள்ளுவம் 2000

(கட்டுரை அடைவு எண்கள் : தொகுதி : பக்க எண்)


**அகமுடைநம்பி, க.சி.**
*திருக்குறள் கட்டமைப்பைச் சிதைத்து ஓர் உரையாக்கம் 9: 94-95 வாழ்தல் என்பது 11:31-34 சாதிசமயங்களுக்கு அப்பாற் பட்டவர் வள்ளுவர் 12:13-17*

**அப்துல்கலாம், ஏ.பி.ஜே.**
*புயலைத் தாண்டினால் தென்றல் 9:59-63*

**அப்துல் ரகுமான்**
*இல்லையென்று சொல்லாமல் கொடு 12:86-89*

**அரங்கசாமி, பூ.**
*கட்டளைக்கல் 9:49-54*

**அரங்க இராமலிங்கம்**
*இருபத்தோராம் நூற்றாண்டிற்கும் வள்ளுவம் 7:37-42*

**அரவிந்தன், மு.வை.**
*திருக்குறளில் நாம் அறிந்த சொற்களும் அறியவேண்டிய வரலாறும் 7:26-27*
*திருவள்ளுவர் ஆத்திசூடி 12:73-75*

**அருணை வடிவேல் முதலியார், சி.**
*திருக்குறளில் வழிபாடு 12:45-49*

**அவினாசிலிங்கம், தி.சு.**
*திருக்குறள் வாழ்க்கைத் தத்துவம் 8:49-58*

**அழகேசன், ஆர்.கே.**
*திரைப்படங்களில் திருக்குறளும் திருவள்ளுவரும் 11:23-26*

**அறவாணன், க.ப.**
*திருவள்ளுவர்தம் சமுதாயக்கோட்பாடுகள் 7:55-59*
*வள்ளுவம் - சில பின்னணிச் செய்திகள் 9:13-22*
*வள்ளுவம் சில சிந்தனைகள் 12:18-22*

**அறிஞர் அண்ணா**
*குறள் ஏந்திச் செல்வோம் 12:7-12;*

**அன்பழகன், க.**
*ஆல்பர்ட் சுவைட்சர் வியந்த திருக்குறள் 9:5-12;*

**ஆதிரை**
*எட்டாவது அதிகாரம் 7:20*

**ஆறுமுகம், அ.**
*வாழ்வியல் வள்ளுவம் 7:83-85*
*வறுமையும் வளமையே 11:27-30*

**ஆனந்தன், கு.ச.**
*உலகத்தின்மூலம் 11:6-9*

**இந்திரசித்து, க. சக்கரபாணி, க.**
*உடுமலை நாராயணகவியின் பாடல்களில் திருக்குறளின்தாக்கம் 11:73-75*

**இரத்தினசாமி, எம்.**
*அரசியலில் நடுவுநிலைமை வள்ளுவர்க்கு உடன்பாடா? 7:43-45*

**இரத்தினம், ஆ.**
*பெண்ணியம் பேசும் வள்ளுவம் 11:19-22*

**இளங்குமரன், இரா.**
*திருக்குறளும் என்வாழ்வும் 10:64-71*

**இளங்கோவன், பொன்.**
*அருட்பாவில் குறட்பாக்கள் 7:28-31*

**கணபதி ஸ்தபதி, வை.**
*வள்ளுவர்க்கு ஓர் இலக்கண வடிவம் 11:10-14*

**கலைஞர்**
*அய்யன் வள்ளுவன் 7:1-4*

**காயத்ரிதேவி, சீ.**
*திருவள்ளுவரும் அரிசுடாட்டிலும் காட்டும் தன்னடக்கம் என்னும் அறக்கோட்பாடு 11:47-49*

**குருசாமி, ம.ரா.போ.**
*வள்ளுவப்பிரகாசர் 9:64-71*

**குழந்தைவேலு, இரா.**
*வள்ளுவத்துக்கு ஒருவர் வ.சுப.மா. 8:74-78*

**கொடுமுடி சண்முகன்**
*அளவளாவு 8:59-61*






படிப்பகம்

www.padippakam.com


**சண்முகம், செ.வை.**
குறளின் மூலபாடம் 7:6-14, 8:27-40
கருத்துப்புலப்பாடும் இலக்கியவகையும் 11: 40-43
கருத்துப்புலப்பாடும் யாப்பும் 12:61-65

**சத்தியம், தி.சு.**
திருவள்ளுவ மாலை - ஓர் இனப்பார்வைத் திறனாய்வு 10:37-46

**சதாசிவம், மு.**
ஊழலை ஒழிக்க வள்ளுவம் கூறும் வழிகள் 9:55-58

**சந்திரா, ச.**
நாவலர் கலைஞர் திருக்குறள் உரைகளில் திராவிடவியல் - ஒப்பீட்டாய்வு 11:76-78

**சரளா இராசகோபாலன்**
திருக்குறளில் ஒருமுரண்பாடு 10:59-63

**சாந்தி, ஏ.ஆர்**
நூல் மதிப்புரை 12:82-85

**சாமிநாதையர், உ.வே.**
அடுத்தகுறள் 11:15-18

**சாமிபழனியப்பன்**
வாழ்வாங்குவாழவைக்கும் 8:96

**சாலமன் பாப்பையா**
வள்ளுவரும் கடவுள் நம்பிக்கையும் 10:13-15

**சாலமன்பாப்பையா, கு. ஞானசம்பந்தன், மேலாண்மை பொன்னுசாமி**
புதுநூற்றாண்டில் வள்ளுவம் - ஒருவிவாதம் 11:85-91

**சிதம்பரனார், சாமி**
வள்ளுவர்கால அரசியல் 12:29-35

**சிவலிங்கனார், ஆ.**
திருக்குறட்சிந்தனைகள் 12:23-28

**சீனிவாசவரதன், டி.**
பரிமேலழகர் கருத்துக் குறிப்பு 10:90-91

**சீனிவேங்கடசாமி, மயிலை**
பௌத்தமதமும் திருக்குறளும் 11:53-57

**சுந்தரம், மெ.வி.**
உழைப்பவர் பார்வையில் வள்ளுவரின் குறள் நெறி 8:67-73

**சுந்தரமூர்த்தி, இ.**
திருக்குறள் சுகாத்தியர் பதிப்பு 8:79-90
புலவர் குழந்தை திருக்குறள் பதிப்பு 9:72-84
குறள் மொழிநடையில் புதுமைப் போக்குகள் 10:72-78
திருக்குறளில் உருவகமொழிநடை 12:50-60
திருக்குறள் பதிப்புகள் 7 :94,95, 11:92-94; 12:90-93

**சுப்பிரமணியன், ச.வே.**
நூல்மதிப்புரை 12:76-81

**சுப்பிரமணியன், வ.அய்.**
திருக்குறள் ஆய்வு 8:5-13

**செங்கோலரசு**
குறள் தரும் பொருள் 9:41-45

**செந்தமிழ்ப்பாவை, சே.**
திருக்குறள் காட்டும் மருத்துவநெறி 11:50-52

**செல்வகணபதி, இரா.**
வள்ளுவத்தில் போர்முறைகள் 7:32-36

**சோதிவாணன், இரா.**
திருக்குறளில் தண்டனை இயல் 11:44-46

**சோமசுந்தரபாரதியார்**
வள்ளுவர் கடவுட் கொள்கை 8:62-66

**ஞானன், செ.**
திருவள்ளுவரின் சீற்றம் 11:79-84

**தமிழ்நாடன்**
திருக்குறள் ஆவணங்கள் 9:85-89 குறள்மரபு 10 :47-49

**தமிழன்பன்**
கதவுமூடாத கருத்துநிறுவனம் 8:1-2;
எழுத்தை உவமையாக்கிய முதல் எழுத்தாளன் 9:1-2
வசந்தத்தின் மொழி புதைகுழிகளுக்குப் புரியுமா? 10:1-2
விலைமாதர்கள் வள்ளுவரிடம் கேட்ட வினாக்கள் 11:1-2
வள்ளுவர் வழங்கும் விடுதலை 12:1-2

**மாறன், கு.**
திருவள்ளுவர் தவச்சாலை 10:35-36


படிப்பகம்

www.padippakam.com


**திருவேங்கடசாமி, கே.ஆர்.**
*திருக்குறளும் பொருளும் 10:9-12*

**நாச்சிமுத்து, கி.**
*மலையாளத்தில் திருக்குறள் 11:35-39*

**நாச்சியப்பன், நாரா.**
*அறவாளர் நெறிநிற்றல் 10:96*
*சொல்லாததுண்டோ 12:69*

**நாராயணசாமி, ஜெ.**
*திருவள்ளுவரின் குறள்நூல் 9:23-24*
*இரு வேறு நூல்கள் 10:30-34*
*வள்ளுவத்தில் சமுதாயக் கண்ணோட்டம் 12:66-72*
*நிகழ் தொகுப்பு (ஞானி, ஆதி, முத்துக்குமரன் பஞ்சாங்கம்) வாழ்வியல் வழிவள்ளுவம் 10:20-29*

**நெடுஞ்செழியன், க.**
*காமத்துப்பாலும் தமிழ் அளவையியலும் 7:46-54*

**பரந்தாமனார், அ.கி.**
*திருக்குறள் ஒருபண்பாட்டுக் களஞ்சியம் 10:50-53*

**பழநிசாமி, கருவை**
*காமத்துப்பாலின் புறத்திணைக் கூறுகள் 9:46-48*

**புவியரசு**
*காத்திருப்பு 7:96*

**பொற்கோ**
*திருக்குறளில் மொழிச்சிந்தனைகள் 7:89-91*
*வள்ளுவ நெறியும் வைதிகநெறியும் 8:14-26*

**மரன்**
*வாழும் வள்ளுவம் 7:75-76*

**மருதநாயகம், ப.**
*பல்கலைச் செல்வர் தெ.பொ.மீயின் திருக்குறள் பணிகள் 8:59-70*

**முத்துக்குமாரசாமி, இரா.**
*குறளும் அயோத்திதாசரும் 9:90-93*

**முருகேசபாண்டியன், ந.**
*திருவள்ளுவர் என்ற மனிதர் 9:35-41*

**முருகரத்தனம், தி.**
*வள்ளுவர்க்குச் சிலையும் செம்பதிப்பும் 7:71-74*

**முருகவேள், நா.ரா.**
*திருவள்ளுவரின் சிறப்பியற்கொள்கைகள் 10:78-89*

**மெய்யப்பன், ச.**
Y2K சந்திப்பில் ஒருநூற்றாண்டுத் திருக்குறள் *கல்வி 1980 - 2000, 7:86-88*

**வரதராசன், மு.**
*மனவலிமைவேண்டும் 12:40-41*

**வளன் அரசு, பா.**
*திருக்குறள் ஓர் உலக இலக்கியம் 10:16-19*

**விசுவநாதம், கி.ஆ.பெ.**
*அகரமுதல எழுத்தெல்லாம் 10:6-8*

**வீரமணி, பா.**
*வள்ளுவரும் பெண்களும் 7:15-19, 8:41-48 11:58-63*

**வீராசாமி, தா.வே.**
*வள்ளுவர் உவமையும் வாழ்வியலும் 11:64-72*

**வெங்கட் சுவாமிநாதன்**
*யார் இந்த வள்ளுவர் 7:77-82*

**வேங்கடேசபாரதி**
*வாழ்வாங்கு வாழ்க 11:96*

**வேழவேந்தன்**
*குறள் விளக்கு 9:96*

**வை.கோ**
*வரலாற்றுச்சின்னம் வள்ளுவர் சிலை 8:91-95*

**ஸ்ரீசந்திரன், ஜெ.**
*பிறவிப்பெருங்கடல் 10:54-58*



படிப்பகம்

www.padippakam.com


# திருக்குறள்பதிப்புகள் - ஆண்டுநிரல்

இ. சுந்தரமூர்த்தி

| தொடர் எண் | ஆண்டு | நூல் | பதிப்பு வகை | பதிப்பாசிரியர் பதிப்பாளர் | வெளியீடு அச்சகம் | மறு பதிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 146 | 1956 | வள்ளுவர் வாய்மொழியும் தெளிவுரையும் | புத். | | தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை | |
| 147 | 1956 | திருக்குறள் பரிமேலழகர் உரை | பரிமே. | | சைவ.சி.நூ.ப. கழகம், சென்னை | |
| 148 | 1957 | திருக்குறள் உரை வேற்றுமை - அறத்துப்பால் | உ.தொ. | இரா. சாரங்கபாணி | செல்வி பதிப்பகம், காரைக்குடி | 1963 |
| 149 | 1957 | திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால் | ‘’ | தி. பட்டுச்சாமி ஓதுவார் | காசிமடம் வெளியீடு, திருப்பனந்தாள் | 1958<br>1960<br>1969 |
| 150 | 1957 | திருக்குறள் விரிவுரை அறத்துப்பால் - தொகுதி 2 இல்வாழ்க்கை இயல் | புத். | திரு.வி. கலியாண சுந்தரனார் | சாது அச்சுக் கூடம். சென்னை<br>3 ஆம் பதி. | 1957 |
| 151 | 1957 | Thirukural | மொ.பெ. மலையாளம் | S.Ramakrishna Pillai | திருவனந்தபுரம் | |
| 152 | 1957 | திருக்குறள் பரிமேலழகர் உரை | பரிமே. | | சக்தி காரியாலயம், சென்னை. | |
| 153 | 1957 | திருக்குறள் காமத்துப்பால் விளக்கவுரை கோவை | உரை | வீ. முனிசாமி | கன்னி வெளியீடு. | |
| 154 | 1958 | திருக்குறள் உரைக் கொத்து காமத்துப்பால் | உ.தொ. | தி. பட்டுச்சாமி ஓதுவார் | காசிமடம் வெளியீடு, திருப்பனந்தாள் | 1961<br>1970 |
| 155 | 1958 | Tirukkural | மொ.பெ. ஆங் | Rev. G.U. Pope, Rev, H.W. Drew, Rev.John Lazarus and Mr. F. W. Ellis | சைவ.சி.நூ.ப. கழகம் | |
| 156 | 1958 | Tiruvalluvar Kural | Trans. | Wandy Dynowskie | | |
| 157 | 1959 | திருக்குறள் பொருள் விளக்கம் | புத். | செ.ரே. இராமசாமிப் பிள்ளை | சைவ.சி.நூ.ப.கழகம் சென்னை | |
| 158 | 1959 | திருக்குறள் எளிய பொழிப்புரை | புத். | சி. இலக்குவனார் | வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை | |
| 159 | 1959 | திருக்குறள் தெளிவான உரை உரையுடன் | | இரா. மீனாட்சி சுந்தரம் பிள்ளை | ஸ்ரீ வாணி விலாச அச்சகம், திருப்பாதிரிப் புலியூர் | |
| 160 | 1959 | திருக்குறள் தெளிவுரை | புத். | சுந்தரசண்முகனார் | புதுச்சேரி | |
| 161 | 1959 | திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் | பரிமே. | | அருணா பதிப்பகம், மதுரை | |
| 162 | 1959 | திருக்குறள் பொருள் விளக்கம் | புத். | சாமி. சிதம்பரனார் | ஸ்டார் பிரசுரம், சென்னை | 1962<br>1965<br>1968 |
| 163 | 1959 | திருக்குறள் உரைக் கொத்து - பொருட்பால் | உ.தொ. | தி. பட்டுச்சாமி ஓதுவார் | காசிமடம் வெளியீடு, திருப்பனந்தாள் | 1960 |
| 164 | 1959 | திருக்குறள் பரிமேலழகர் உரை | பரிமே. | | அழகுப் பதிப்பகம், காரைக்குடி | |
| 165 | 1959 | திருக்குறள் மூலம் | மூலம் | | வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை | |


படிப்பகம்

www.padippakam.com


| தொடர் எண் | ஆண்டு | நூல் | பதிப்பு வகை | பதிப்பாசிரியர் பதிப்பாளர் | வெளியீடு அச்சகம் | மறு பதிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 166 | 1960 | திருக்குறள் இனிய எளிய உரை | புத். | மயிலை. சிவமுத்து | மாணவர் மன்றம், சென்னை | |
| 167 | 1960 | திருக்குறள் எளிய உரை | ,, | அரசுமணி | அருணோதயம் வெளியீடு, சென்னை | |
| 168 | 1960 | திருக்குறள் காமத்துப்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் | உரை விளக்கம் | சுந்தரேச வாண்டையார் | பாண்டியன் அச்சகம், சிதம்பரம் | |
| 169 | 1960 | திருக்குறள் புது உரைச் சுருக்கம் | புத். | நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை | கவிஞர் பதிப்பகம். கோயமுத்தூர் | |
| 170 | 1960 | திருக்குறள் உரை வேற்றுமை - பொருட்பால் | உ.தொ. | இரா. சாரங்கபாணி | செல்வி பதிப்பகம், காரைக்குடி | |
| 171 | 1961 | திருவள்ளுவ நாயனாரின் (Dharma Kandam) | உ.நூ. மலை. | டாக்ட Bhaskara Nair | Trivandrum | |
| 172 | 1961 | திருக்குறள் | புத். | புலவர் குழந்தை | இளங்கோ புத்தக சாலை. ஈரோடு | |
| 173 | 1961 | Tirukkural in Sanskrit Slokas | மொ.பெ. வட மொழி | S.N. ஸ்ரீராம தேசிகன் | சென்னை | |
| 174 | 1962 | திருக்குறள் பொருட்பால் உரை | புத். | வெ. கண்ணையன் | கே. இராமநாதன் வெளியீடு, சென்னை | |
| 175 | 1962 | Bhasha Tirukkural (Dharma Kandam) | மொ.பெ. மலை | Tiruvallam Bhaskara Nair | Trivandrum | |
| 176 | 1962 | திருக்குறள் உரை | புத். | மு.ரா. கந்தசாமிப் பிள்ளை | விவேகாநந்தா அச்சகம், மதுரை | |
| 177 | 1962 | திருக்குறள் | மூலம் ஆங்கில மொழி பெயர்ப் புடன் | திருவாசகமணி K.M. பால சுப்பிரமணியம் | சென்னை | |
| 178 | 1962 | திருக்குறள் நயவுரை | புத். | மு. கோவிந்தசாமி | பாரி நிலையம், சென்னை | |
| 179 | 1962 | பொய்யாமொழிக்குப் பொழிப்புரை | ,, | | தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை 2ஆம் பதி. | 1962 |
| 180 | 1962 | திருக்குறள் அறத்துப்பால் 150 உரை | ,, | வெ. கண்ணையன் | கே. இராமநாதன் வெளியீடு, சென்னை | |
| 181 | 1963 | திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு | உ.தொ. | கி.வா. ஜகந்நாதன் | ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம், பெரிய நாயக்கன் பாளையம் | |
| 182 | 1963 | திருக்குறள் பரிமேலழகருரை | பரிமே. | | பாரதி பதிப்பகம், சென்னை | |
| 183 | 1964 | Kural | மொ.பெ. ஆங். | Rajagopalachari | பாரதீய வித்யாபவன் பம்பாய் | |


படிப்பகம்

www.padippakam.com


| தொடர் எண் | ஆண்டு | நூல் | பதிப்பு வகை | பதிப்பாசிரியர் பதிப்பாளர் | வெளியீடு அச்சகம் | மறு பதிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 184 | 1964 | NaTirukurala | மொ.பெ. பிஜி | Samuel, Berwich | Sri Ramakrishna Mission Nadi, Fiji Islands | |
| 185 | 1964 | திருக்குறள் உரை வேற்றுமை - காமத்துப்பால் | உ.தொ. | இரா. சாரங்கபாணி | செல்வி பதிப்பகம், காரைக்குடி | |
| 186 | 1964 | Sri Geeya | மொ.பெ. சிங். | Charles de Sipra | Sri Lankan Sahitya Madalaya, Colombo | |
| 187 | 1964 | திருக்குறள் பரிமேலழகருரை | பரிமே. | பழநியப்பா பிரதர்ஸ், | பழநியப்பா பிரதர்ஸ், சென்னை | |
| 188 | 1964 | திருக்குறள் | மொ.பெ. பர்மிய மொழி | ஊமியோதாண்ட் | கம்பை தனவைசியர் கல்விக் கழக வெளியீடு, இரங்கூன் | |
| 189 | 1965 | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் | பரிமே. | வை.மு. கோபால க்ருஷ்ணமாச் சாரியார் | சென்னை | |
| 190 | 1965 | Kural | மொ. பெ. உருது | Hasrat Suhar Wardy | Sahitya Akademi, New Delhi | |
| 191 | 1966 | Tiruvalluvar | மொ.பெ. ஆங். | S. Somasundara Bharathiyar | Navalar Somasundara Bharathiyar Edn. Trust, Madras | |
| 192 | 1966 | திருக்குறள் தெளிவு | உரை | சுந்தரசண்முகனார் | புதுச்சேரி | |
| 193 | 1966 | திருக்குறள் மூலம் | மூலம் | | | |
| 194 | 1966 | Sri Padulu(Kural) | மொ.பெ. தெலுங்கு | Sri Pathy Sastri | சென்னை | |
| 195 | 1967 | திருக்குறள் தெளிவான உரை | புத். | செந்துறை முத்து | வானதி பதிப்பகம். சென்னை | |
| 196 | 1967 | திருக்குறள் குழந்தையுரை | புத். | புலவர் குழந்தை | | |
| 197 | 1967 | The Kural or Tirukkural of Tiruvalluvar | மொ.பெ. சீனம் | C.H'engghsi | Department of Indian Studies University of Malaya, Kualalumpur | |
| 198 | 1967 | திருக்குறள் மணிவிளக்க வுரை (தொகுதி 1) | புத். | கா. அப்பாத் துரையார் | அலமேலு நிலையம், சென்னை | |
| 199 | 1967 | Tirukkural (Sastra Kelasik Tamyang Agon) | மொ.பெ. மலேயா | Ismail Hussain (Di. Terjemhkanleti) | Jabatan Pengajjan University of Malaya, Kulalumpur | |
| 200 | 1967 | திருக்குறள் - மாணவர் பதிப்பு | புத். | ரா.வே. ருத்திரப்பா | ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில் | |
| 201 | 1967 | திருக்குறள் மூலம் | மூலம் | | ஸ்ரீமகள் கம்பெனி, | |
| 202 | 1967 | The Kural Gems (Kural in English) | மொ.பெ. ஆங். | V. Chinnarajan | சென்னை | |
| 203 | 1967 | 108 Gems from the Sacred Kural . | மொ. பெ. ஆங். | T.V. Parameswara Aiyar | Karol Bagh, New Delhi | |
| 204 | 1968 | திருக்குறள் விளக்கம் உரையுடன் | புத். | எஸ்.பி.எஸ். | எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளைப்பப்ளிஷர்ஸ் திருநெல்வேலி | |


படிப்பகம்

www.padippakam.com


| தொடர் எண் | ஆண்டு | நூல் | பதிப்பு வகை | பதிப்பாசிரியர் பதிப்பாளர் | வெளியீடு அச்சகம் | மறு பதிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 205 | 1968 | திருக்குறள் உரைக் களஞ்சியம் | ” | ஆர். கன்னியுப்ப நாயக்கர் | வானதி பதிப்பகம், சென்னை | |
| 206 | 1968 | திருக்குறள் இனிய எளியஉரை | ” | மயிலை சிவமுத்து | மாணவர் மன்றம், சென்னை 2 | |
| 207 | 1968 | திருக்குறள் தெளிவுரை | ” | மு. வரதசாரன் | சைவ.சி.நூ.ப. கழகம், சென்னை | |
| 208 | 1968 | முப்பது குறளின் மெய்ப் பொருள் | ” | அ.கு. ஆதித்தர் | சாந்தி நூலகம் சென்னை | |
| 209 | 1968 | திருக்குறள் பரிமேலழகருரையுடன் | பரிமே. | | காசிமடம் வெளியீடு, திருப்பனந்தாள் | |
| 210 | 1968 | திருக்குறள் மணிவிளக்க உரை (தொகுதி 2) | புத். | கா. அப்பாத்துரை | அலமேலு நிலையம், சென்னை | |
| 211 | 1968 | Tirukkural with English Couplets | மொ.பெ. ஆங். | Yogi Suddanantha Bharathi | சைவ.சி.நூ.ப. கழகம், சென்னை | |

## மெய்யப்பன் தமிழாய்வக வெளியீடுகள்

**முனைவர் சு. அமிர்தலிங்கம்**
சங்க இலக்கியக் களஞ்சியம் 200.00

**புலவர் வே. அண்ணாமலை**
சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் (2 தொகுதிகள்) 150.00

**முனைவர் ச.வே. சுப்பிரமணியன்**
பத்துப்பாட்டு மூலம் 35.00

**முனைவர் சரோஜினி பாக்கியமுத்து**
விவிலியமும் தமிழும் 70.00

**முனைவர் இரா. திருமுருகன்**
கம்பன் பாடிய வண்ணங்கள் 40.00

**முனைவர் இரா. குமரவேலன்**
தமிழ்க் கவிதை நாடகம் 35.00

**பி.எஸ். ராமையா**
மணிக்கொடி காலம் (சாகித்திய அகாதமி பரிசு பெற்றது) 70.00

**பெ.சு. மணி**
சங்ககால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும் 75.00

**ஏ.வி. சுப்பிரமணியன்**
தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி 40.00

**புலவர் இரா. இளங்குமரன்**
தமிழிசை இயக்கம் 50.00

**சுந்தர சண்முகனார்**
கெடிலக்கரை நாகரிகம் 75.00
அகராதிக் கலை 75.00

**க. ரத்தினம்**
தென்னிந்திய மானிட இனவியல் 75.00

**கா. அப்பாத்துரை**
தென்னாட்டுப் போர்க்களங்கள் 100.00

**முனைவர் ப. கிருஷ்ணன்**
தமிழ் நூல்களில் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு 75.00

**முனைவர் ச. அகத்தியலிங்கம்**
இந்திய மொழிகள் - I 70.00

**முனைவர் ச. சுபாஷ்சந்திரபோஸ்**
சொல்லியல் ஆய்வுகள் 40.00

**தமிழமல்லன்**
தேவநேயப் பாவாணரின் மொழியியல் வரலாற்றுக் கொள்கை 50.00

**மயிலை சீனிவேங்கடசாமி**
மறைந்துபோன தமிழ் நூல்கள் 60.00
பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் 75.00
கிறித்துவமும் தமிழும் 25.00

**டேவிட் சித்தையா**
நாவல் வளர்ச்சி – கிறிஸ்துவ இலக்கியம் 100.00

**பி.எம். சுந்தரம்**
மங்கல இசை மன்னர்கள் 100.00

மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

படிப்பகம்

www.padippakam.com

# மணிவாசகர் பதிப்பகத்தின்
# திருக்குறள் வரிசை

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

| | |
|---|---|
| திருக்குறள் கட்டுரைகள் தொகுதி I | 75.00 |
| திருக்குறள் கட்டுரைகள் தொகுதி II | 65.00 |
| திருக்குறள் கட்டுரைகள் தொகுதி III | 100.00 |

**முனைவர் இரா. சாரங்கபாணி**

திருக்குறள் பரிமேலழகர் உரை பாடநுண் பதிப்பு

| | |
|---|---|
| அறத்துப்பால் | 60.00 |
| பொருட்பால் தொகுதி I | 60.00 |
| பொருட்பால் தொகுதி II | 60.00 |
| காமத்துப்பால் | 50.00 |

**முனைவர் தமிழண்ணல்**

வாழ்க்கை வெற்றிக்கு வள்ளுவம்

| | |
|---|---|
| இன்பவாழ்வுக்கு இனிய வழி | 8.00 |
| தன்னம்பிக்கை | 5.00 |
| தன்முயற்சித்துவம் | 6.00 |
| துன்பத்தைத் துன்புறுத்துக | 6.00 |

**ஆ. சிவலிங்கனார்**

| | |
|---|---|
| திருக்குறட் சிந்தனைகள் | 30.00 |
| திருக்குறள் மூலம் | 5.00 |
| திருக்குறள் மூலம் | 7.50 |
| திருக்குறள் மூலம் | 10.00 |
| திருக்குறள் தெளிவுரை | 15.00 |
| திருக்குறள் தெளிவுரை | 20.00 |
| திருக்குறள் தெளிவுரை, வ.சு.ப. மாணிக்கம் | 15.00 |
| திருக்குறள் ஆங்கிலம் மொழிபெயர்ப்பு (லாசரஸ்) | 30.00 |

31, சிங்கர் தெரு,
சென்னை – 600 108.
தொலைபேசி : 5361039

12–பி, மேல சன்னதி,
சிதம்பரம் – 608 001.
தொலைபேசி : 30069

படிப்பகம்

www.padippakam.com


# திருக்குறள் உரையாசிரியர்கள்

## தொகுப்பு : முனைவர் பா. வளன்அரசு

1. மணக்குடவர்
2. பரிதியார்
3. பரிப்பெருமாள்
4. காலிங்கர்
5. தருமர்
6. தாமத்தர்
7. நச்சர்
8. திருமலையர்
9. மல்லர்
10. பரிமேலழகர்
11. மு. அருணாசலக் கவிராயர்
12. அரசஞ் சண்முகனார்
13. கா. சுப்பிரமணியனார்
14. சு.அ. இராமசாமிப்புலவர்
15. மு.இரா. கந்தசாமிக்கவிராயர்
16. கே.வீரராகவனார்
17. ச. தண்டபாணிதேசிகர்
18. வ.உ.சிதம்பரனார்
19. வேங்கடராமய்யா
20. மயிலை சிவமுத்து
21. பாலூர் கண்ணப்பர்
22. சே. கிருட்டிணன்
23. திருச்சிராப்பள்ளி வரதராசன்
24. பா.சு. சுப்பிரமணியனார்
25. சகதேவனார்
26. நாமக்கல் வெ. இராமலிங்கம்
27. புலவர் குழந்தை
28. பாவேந்தர் பாரதிதாசன்
29. பால்வண்ணனார்
30. சாமி சிதம்பரனார்
31. பேராசிரியர் சி. இலக்குவனார்
32. முனைவர் வ.சு.ப. மாணிக்கனார்
33. முனைவர் மு. வரதராசனார் ,
34. பேராசிரியர் மு. கோவிந்தசாமி
35. வெ. கண்ணையனார்
36. தி.பொ. பழநியப்பனார்
37. வீரமாமுனிவர்
38. பண்டிதமணி மு. கதிரேசனார்
39. இராமானுஜர்
40. கவிராசபாண்டிதர்
41. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்
42. பொன்னம்பலம் இராமநாதன்
43. ஞான பூபதியார்
44. ஈக்காடு சபாபதியார்
45. ந.சி. கந்தையா
46. மு.கு.சுப்பிரமணியனார்
47. திரு.வி.கலியாணசுந்தரனார்
48. மதுரை செகவீரபாண்டியனார்
49. திருக்குறளார் வீ.முனுசாமி
50. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை
51. மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர்
52. சரவணப்பெருமாள்
53. களத்தூர் வேதகிரியார்
54. சுகாத்தியர்
55. சுந்தரனார்
56. காயாமொழி குமரகுருபரர்
57. சுப்பிரமணியசாத்திரியார்
58. ச. வெள்ளைச்சாமி
59. வீரபாகு
60. அரசுமணி
61. மு. இராமசாமி
62. இரா. இளங்குமரனார்
63. நாவலர் இரா. நெடுஞ்செழியன்
64. கலைஞர் மு. கருணாநிதி
65. பேராசிரியர் அ.ச. வள்ளிநாயகம்
66. பேராசிரியர் எசு. இராமகிருட்டிணன்
67. வழக்கறிஞர் கு.ச. ஆனந்தன்
68. முனைவர் கு. மோகனராசு
69. முனைவர் இரா. சாரங்கபாணி
70. கு.மா. பாலசுப்பிரமணியன்
71. சுத்தானந்த பாரதியார்
72. ஐயன்பெருமாள்
73. பட்டுசாமி ஓதுவார்
74. தி. மாணிக்கவாசகம்
75. சங்கரராசுலு
76. பாவலர் க. பாலகிருட்டிணன்
77. புலவர் செந்துறை முத்து
78. ஆ. அரங்கநாதன்
79. பேராசிரியர் சாலமன் பாப்பையா
80. முனைவர் நவராசு செல்லையா
81. முனைவர் பா. வளன்அரசு
82. புலவர் அ. மாணிக்கம்
83. முனைவர் அர. சிங்கார வடிவேலன்
84. முனைவர் ஸ்ரீ சந்திரன்




படிப்பகம்

www.padippakam.com


# வள்ளுவருக்கு ஆயுள் சந்தா



இன்றைக்கும்....
திருவள்ளுவர்
இந்த உலகத்திற்குத்
தேவைப்படுகின்றார்
ஆம்!
என்ன சொன்னாலும் கேட்காத
இயந்திர மனிதனாக இருக்கும்
இரும்பு மனிதனைக்
கரும்பு மனிதனாக்க
இன்றும் வள்ளுவம் தேவை

புல், பூண்டு, மரம், செடி, கொடி
ஊர்வன, பறப்பன, விலங்கு, மனிதன்
அத்தனைக்கும் ஒருநாள்
ஆயுள் அழியும்

எங்கள் வள்ளுவ
உனக்கு மட்டும்...
உனக்கே மட்டும்...
ஆயுள் இன்று வரை கூடியிருந்தால்...
எப்படி இருக்கும்! எண்ணிப் பார்க்கின்றேன்.

ஆடிப்போயிருக்கும் மனிதனை
அடித்து நொறுக்கினாலும் கேட்காத மனிதனை
இரண்டே அடிக்குள் அடக்கினாய்
அப்போது நாங்கள் இருந்திருந்தால்...
உன் ஆயுளுக்கு மட்டும் – நாங்கள்
எங்கள் ஆயுளையும்
சந்தாவாகக் கட்டியிருப்போம்

அன்று
எங்கள் பெருங்குடி மக்கள்
விலைமகளையும்
குலமகளையும்
மோதவிட்டு
வேடிக்கையை வாடிக்கையாக்கி
வேண்டிய மட்டும் சுகமாய் வாழ்ந்தனர்




படிப்பகம்

www.padippakam.com


வேடிக்கையை வாடிக்கையாக்கியவரை
'பரத்தனே' – என முதல்முதலில் பரிகசித்து
பரத்தையர் தொடர்பைத் துண்டித்தாய்
ஆம்! கண்டித்தாய்...
முறைத்த ஆண்மகனிடம் – இதுதான்
முறையென முழக்கமிட்டாய்
புதிய சமூகக் கட்டிடத்திற்கும்
எங்கள் சுயமரியாதை வீட்டிற்கும்
அடிக்கல் நாட்டினாய்
ஆனந்தம் எங்களுக்கு

'ஒழுக்கம் விழுப்பம் தரும்' – எனப்
பொதுவாகக் கூறினாய்
ஆனால் .... இன்று ....
ஆணொழுக்கத்தை அறவே மறந்தனர்
பெண்ணொழுக்கம் மட்டும்
பேணவேண்டும் என்று முழங்கினர்
எனவேதான் நீ
எங்களால் மட்டுமே
இவ்வையம் மழையால் தழைக்கும்
என்றாயோ!

ஒருகை தட்டினால் ஓசை கேட்குமா?
இருகை தட்டினால்தான் ஓசை கேட்கும்
என்றான் உனக்குப் பின்னால் வந்த
எங்கள் பாரதி
ஆம்!
ஆணுக்கும் பெண்ணுக்கும்
ஒழுக்கத்தினைப் பொதுவாய் வைத்தான்
எங்கள் பாரதி

இன்று ....
ஒரு கையும் தட்டவில்லை
இரு கையும் தட்டவில்லை
சத்தம் சத்தியமாய்க் கேட்காததால்
புது நோயின் வல்வரவு
நல்வரவாகி விட்டது.

புதிய பிரபஞ்சத்தை உருவாக்க
புதுப்பிறவி ஒன்று
எடுப்பாயா?
எங்கள் வள்ளுவ.

– சு. நாகம்மை


படிப்பகம்

www.padippakam.com

வள்ளுவத்திற்கு நல்வாழ்த்துக்கள்

தரமும் சிறப்பும் வாய்ந்த தயாரிப்புகளுக்கு

# EMPEROR KNITTINGS

25,M.G.R.NAGAR,
8TH STREET,
P.N.ROAD,
TIRUPUR - 641 602.



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்